451

# தமிழ் இலக்கிய மாலை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 JUN 1949
MADRAS

முதற் புத்தகம்

TB
031 (91)
N49
136885

வர்தா பதிப்புக் கழகம், சென்னை.

# தமிழ் இலக்கிய மாலை

## முதற் புத்தகம்

நான்காம் பாரத்திற்கு உரியது

தொகுத்தவர் :
பண்டித. வித்துவான்
லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்
தமிழ் விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 JUN 1949
MADRAS

வர்தா பதிப்புக் கழகம்
திருவல்லிக்கேணி :: சென்னை

முதற் பதிப்பு 1949

பதிப்புரிமை

விலை ரூ. 1-4-0

136885
சென்னை-600 008.

KABEER PRINTING WORKS, TRIPLICANE, MADRAS.

# முன்னுரை

சொற்சுவை பொருட்சுவை செறிந்த இனிய பல செய்யுட்களும், அறிஞர்பெருமக்களின் உயர்ந்த கருத்துக்கள் அடங்கிய சிறந்த பலவகைக் கட்டுரைகளும் இம்மாலைக்கு அழகு செய்கின்றன.

சென்னை அரசியலார் அண்மையில் திருத்தி அமைத்துள்ள பாடத்திட்டத்திற்கு ஏற்ப இம்மாலை வெளிவருகின்றது. நான்காம் பாரத்தில் 4 பிரிவேளை (Period) தமிழ் பயிலும் எல்லா மாணவரும், அவ் வகுப்பில் சிறப்பாக 8 பிரிவேளை (Period) தமிழ் பயிலும் மாணவரும் படிப்பதற்கு அரசியலார் குறிப்பிட்ட அளவினும் சிறிது மிகுதியாகவே செய்யுட் பகுதியும், உரைநடைப் பகுதியும் இதன்கண் உள்ளன.

செய்யுட் பகுதிக்கு வேண்டும் அளவு குறிப்புரையும் இறுதியிற் சேர்த்துள்ளேன்.

இதன்கட் காணப்படுஞ் செய்யுட்களையும், கட்டுரைகளையும் சேர்த்து வெளியிட உடன்பாடளித்த பெரியோர்கள், அகில இந்திய வானொலி நிலையத்தார், பதிப்பாளர்கள் ஆகியோரின் பெயர்க் குறிப்பும் இதன் பின் சேர்க்கப் பெற்றுள்ளது. உடன்பாடு வழங்கிய அப் பெருந்தகையாளர்கட்கு நான் மிகவும் நன்றி செலுத்தும் கடப்பாடுடையேன்.

இந்நூல் உருவாகும் வகையில் அன்பு கூர்ந்து எனக்கு உதவிய புலவர் திரு. மீ. முத்துசாமி பிள்ளை அவர்கட்கும் என் நன்றி உரியதாகும்.

அண்ணாமலை நகர்
10-3-'49.

லெ. ப. கரு. இராமநாதன்.

# இசைவு வழங்கியவர்கள்

## செய்யுட் பகுதி

| செய்யுள் | இசைவு வழங்கியவர்கள் |
| --- | --- |
| மனோன்மணீயம் | சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. |
| ஆசிய ஜோதி மலர்கள் | கவிமணி திரு. சி. தேசிக விநாயகம் பிள்ளை. |
| ,, ,, | புதுமைப் பதிப்பகம், காரைக்குடி. |
| சுப்பிரமணிய பாரதியார் பாடல் | பாரதி பிரசுராலயம், திருவல்லிக் கேணி. |
| தனிச் செய்யுள் திரட்டு | The Educational Society, Tirunelveli. (The Madura Diraviyam Thayumanavar Hindu College.) |
| தமிழன் இதயம் | தமிழ்ப் பண்ணை, தியாகராயநகர். |

## உரைநடைப் பகுதி

| உரைநடை | |
| --- | --- |
| ஆலூர் மூலங்கிழார்<br>பண்டைத் தமிழ்க் கலைகள் | பழநியப்பா பிரதர்ஸ், திருச்சி. |
| உப உணவின் உபயோகங்கள்<br>விஞ்ஞான முன்னேற்றம் | அகில இந்திய வானொலி நிலையம், சென்னை. |
| கல்வியில் சீர்திருத்தம் | கல்வி அமைச்சர் கனம் தி. சு. அவிநாசிலிங்கஞ் செட்டியார், பி. ஏ., எம். எல். |
| ,, | ஆசிரியர், கலைமகள், மயிலாப்பூர். |
| சுவாமி இருக்கிறார் | திரு. எஸ். கலியாணசுந்தரமையர். |
| நம் பண்டைய நீதிநூலாசிரியர் | அகில இந்திய வானொலி நிலையம், திருச்சி. |
| ரோவால்ட் அமண்சன் | சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. |

பிற செய்யுட்களுக்கும், பிற கட்டுரைகளுக்கும் உரிமையுடைய அவைகளின் ஆசிரியர்கள் இசைவு வழங்கியுள்ளார்கள்.

# உள்ளுறை

## செய்யுட் பகுதி


| எண் | பொருள் | | பக்கம் |
| --- | --- | --- | --- |
| I | கடவுள் வாழ்த்து | | |
| 1. | தேவாரம் | ... | 1 |
| 2. | நாலாயிர திவ்யப் பிரபந்தம் | ... | 1 |
| 3. | திருப்புகழ் | ... | 2 |
| 4. | திருவருட்பா | ... | 2 |
| 5. | கலைமகள் வாழ்த்து | ... | 2 |
| 6. | தமிழ்த்தாய் வாழ்த்து | ... | 2 |
| II | அறவுரை | | |
| 1. | திருக்குறள் | ... | 3 |
| 2. | நாலடியார் | ... | 5 |
| 3. | திரிகடுகம் | ... | 6 |
| 4. | நான்மணிக் கடிகை | ... | 6 |
| 5. | சிறுபஞ்சமூலம் | ... | 7 |
| 6. | நீதி நூல் | ... | 7 |
| III | காதை | | |
| 1. | நளவெண்பா | ... | 8 |
| 2. | வில்லி புத்தூரார் பாரதம் | ... | 11 |
| 3. | குசேலோபாக்கியானம் | ... | 16 |
| 4. | இரட்சணிய யாத்திரிகம் | ... | 19 |
| 5. | மனோன்மணீயம் | ... | 21 |
| 6. | ஆசிய ஜோதி | ... | 23 |
| 7. | பாஞ்சாலி சபதம் | ... | 27 |


OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 JUN 1949
MADRAS

| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| IV | சிறு நூல்கள் | | |
| 1. | அழகரந்தாதி | ... | 28 |
| 2. | திருவாரூர் நான்மணி மாலை | ... | 29 |
| 3. | பாரதியார் பாடல்கள் | ... | 31 |
| 4. | என் தாய் | ... | 32 |
| 5. | தமிழ் நாடு | ... | 32 |
| 6. | தமிழன் இதயம்—ஜவஹர்லால் நேரு | ... | 32 |
| V | புனைந்துரை | | |
| 1. | நாடு | ... | 33 |
| 2. | நகர் | ... | 33 |
| 3. | கொடி | ... | 33 |
| 4. | தென்றல் | ... | 33 |
| 5. | மலர்கள் | ... | 34 |
| VI | பல் சுவை | | |
| | சிலேடை முதலியன | ... | 35 |

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 JUN 1949
MADRAS

## உரைநடைப் பகுதி


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | இறையனுர் அகப்பொருள் உரை ... —நக்கீரர் | 37 |
| 2. | அமரர் காந்தி ... —திரு. நாரண-துரைக்கண்ணன் | 39 |
| 3. | அமெரிக்காப் பிரயாணம் ... —டாக்டர் திரு. ஆர். கே. சண்முகம் செட்டியார், பி. ஏ., பி. எல்., டி. லிட் | 43 |
| 4. | ஆவூர் மூலங்கிழார் ... —வித்துவான் திரு. க. நயினுர் முகமது | 47 |
| 5. | இருவர் சாட்சி ... —திரு. ஆர். பி. சேதுப் பிள்ளை, பி. ஏ., பி. எல். | 52 |
| 6. | உப உணவின் உபயோகங்கள் ... —திருவாட்டி. இராசம்மாள் தேவதாஸ், எம். எஸ். ஸீ. | 57 |
| 7. | ஊர் வாழ்க்கை ... —திரு. நீ. கந்தசாமி பிள்ளை, எம். ஆர்., ஏ. எஸ். | 62 |
| 8. | ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு ... —டாக்டர் திரு. அ. சிதம்பரநாதச் செட்டியார், எம். ஏ., பி. எச். டி. | 67 |
| 9. | கல்வியில் சீர்திருத்தம் ... —கல்வி அமைச்சர் கனம் தி. சு. அவிநாசிலிங்கஞ் செட்டியார், பி. ஏ., எம். எல். | 72 |
| 10. | சுவாமி இருக்கிருர் ... —மகாமகோபாத்தியாய டாக்டர். உ. வே. சாமிநாதையர் | 77 |
| 11. | நம் பண்டைய நீதிநூலாசிரியர் ... —மகாமகோபாத்தியாய பண்டிதமணி திரு. மு. கதிரேசச் செட்டியார் | 80 |

| எண் | பொருள் | | பக்கம் |
| --- | --- | --- | --- |
| 12. | நனவே கனவு<br>—டாக்டர் திரு. மு. வரதராசன், எம். ஓ. எல்., பி. எச். டி. | ... | 86 |
| 13. | பண்டைத் தமிழ்க் கலைகள்<br>—வித்துவான் திரு. மா. இராசமாணிக்கம் பிள்ளை, எம். ஓ. எல்., எல். டி. | ... | 94 |
| 14. | பெண் கல்வி<br>—திருவாட்டி. ஆர். இராசாமணி அம்மையார், எம். ஏ., எல். டி. | ... | 102 |
| 15. | போக்குவரத்தும் பொருளாதாரமும்<br>—டாக்டர் திரு. பி. நடராஜன், எம். ஏ., டி. லிட். | ... | 107 |
| 16. | மருகனுக்கு அறிவுரை (கடிதம்)<br>—புலவர் திரு. பு. செல்வராஜ் | ... | 113 |
| 17. | ரோவால்ட் அமண்சன்<br>—சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் | ... | 116 |
| 18. | விஞ்ஞான முன்னேற்றம்<br>—திரு. பெ. நா. அப்புசாமி ஐயர், பி. ஏ., பி. எல். | ... | 126 |
| 19. | வீர வரிசைகள்<br>—யோகி திரு. சுத்தானந்த பாரதியார் | ... | 131 |
| | குறிப்புரை | ... | 141 |

# தமிழ் இலக்கிய மாலை

## முதற் புத்தகம்

## செய்யுட் பகுதி

## I கடவுள் வாழ்த்து

### 1. தேவாரம்

திருத்தாண்டகம்

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கி னுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தஞ் சிரத்தின் மேலான்
ஏழண்டத் தப்பாலான் இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதி னுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றி னுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத் துச்சி யுள்ளான்
காளத்தி யானவனென் கண்ணு ளானே.

—திருநாவுக்கரசர்

### 2. நாலாயிர திவ்யப் பிரபந்தம்

திருமாலை

பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமர ரேறே ஆயர்தங் கொழுந்தே யென்னும்
இச்சுவை தவிர யான்போ யிந்திர லோக மாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகரு ளானே.

—தொண்டரடிப்பொடியாழ்வார்

## 3. திருப்புகழ்

அபகார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநானி னைந்தருட் பெறுவேனே
இபமா முகன்றனக் கிளையோனே
இமவான் மடந்தையுத் தமிபாலா
செபமாலை தந்தசற் குருநாதா
திருவாவி னன்குடிப் பெருமாளே.

—அருணகிரிநாதர்

## 4. திருவருட்பா

கண்ணெலா நிரம்பப் பேரொளி காட்டிக்
கருணைமா மழைபொழி முகிலே
விண்ணெலாம் நிறைந்த விளக்கமே யென்னுள்
மேவிய மெய்ம்மையே மன்றுள்
எண்ணெலாங் கடந்தே யிலங்கிய பதியே
இன்றுநீ யேழையேன் மனத்துப்
புண்ணெலாந் தவிர்த்துப் பொருளெலாங் கொடுத்துப்
புகுந்தென துளங்கலந் தருளே.

—இராமலிங்க அடிகள்

## 5. கலைமகள் வாழ்த்து

இமையவர்கள் மௌலி யிணைமலர்த்தாள் சூடச்
சமையத் தொறுநின்ற தையல்—சிமைய
மலைமடந்தை வாச மலர்மடந்தை யெண்ணெண்
கலைமடந்தை நாவலோர் கண்.

—தண்டியலங்கார மேற்கோள்

## 6. தமிழ்த்தாய் வாழ்த்து

வைய மீன்றதொன் மக்க ளுளத்தினைக்
கையி னுலுரை காலம் இரிந்திடப்
பைய நாவை அசைத்த பசுந்தமிழ்
ஐயை தாள்தலை கொண்டு பணிகுவாம்.

—நீ. கந்தசாமி பிள்ளை

# II அறவுரை

## 1. திருக்குறள்

### அறன் வலியுறுத்தல்

ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல். (1)

அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை. (2)

### அடக்கமுடைமை

எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வந் தகைத்து. (3)

யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. (4)

### ஒழுக்கமுடைமை

ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். (5)

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கந் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும். (6)

### அழுக்காறாமை

கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉம்
உண்பதூஉ மின்றிக் கெடும். (7)

அழுக்கற் றகன்றாரும் இல்லையஃ தில்லார்
பெருக்கத்திற் றீர்ந்தாரும் இல். (8)

### தீவினையச்சம்

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும். (9)

அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல். (10)

## அறிவுடைமை

சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு. 11)

அறிவுடையா ரெல்லா முடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர். (12)

## பெரியாரைத் துணைக்கோடல்

அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல். (13)

தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில். (14)

## ஊக்கமுடைமை

ஆக்க மதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை. (15)

உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து. (16)

## இடுக்கணழியாமை

இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில். (17)

இன்னாமை யின்ப மெனக்கொளி னாகுந்தன்
ஒன்னார் விழையுஞ் சிறப்பு. (18)

## சொல்வன்மை

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை யறிந்து. (19)

பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்றா தவர். (20)

### நன்றியில் செல்வம்

கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க் கடுக்கிய
கோடியுண் டாயினும் இல். (21)
நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று. (22)

—திருவள்ளுவர்

## 2. நாலடியார்

### சினமின்மை

காவா தொருவன்தன் வாய்திறந்து சொல்லும்சொல்
ஓவாதே தன்னைச் சுடுதலால்—ஓவாதே
ஆய்ந்தமைந்த கேள்வி அறிவுடையார் எஞ்ஞான்றும்
காய்ந்தமைந்த சொல்லார் கறுத்து. (1)

### பொறையுடைமை

வேற்றுமை யின்றிக் கலந்திருவர் நட்டக்கால்
தேற்றா வொழுக்க மொருவன்க ணுண்டாயின்
ஆற்றுந் துணையும் பொறுக்க பொறானாயின்
தூற்றாதே தூர விடல். (2)

### பழவினை

பல்லாவு ளுய்த்து விடினுங் குழக்கன்று
வல்லதாந் தாய்நாடிக் கோடலைத்—தொல்லைப்
பழவினையும் அன்ன தகைத்தேதற் செய்த
கிழவனை நாடிக் கொளற்கு. (3)

### தாளாண்மை

நல்ல குலமென்றுந் தீய குலமென்றுஞ்
சொல்லள வல்லாற் பொருளில்லை—தொல்சிறப்பின்
ஒண்பொரு ளொன்றோ தவங்கல்வி யாள்வினை
என்றிவற்றா னாகுங் குலம். (4)

### மானம்

கடமா தொலைச்சிய கானுறை வேங்கை
இடம்வீழ்ந்த துண்ணா திறக்கும்—இடமுடைய
வானகங் கையுறினும் வேண்டார் விழுமியோர்
மான மழுங்க வரின். (5)

—சமண முனிவர்

## 3. திரிகடுகம்

### ஒருவன் பெறத்தக்க நண்பர்கள்

தாளாளன் என்பான் கடன்படா வாழ்பவன்
வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்
கோளாளன் என்பான் மறவாதான் இம்மூவர்
கேளாக வாழ்தல் இனிது. (1)

### நல்லவர் கொள்கைகள்

வருவாயுட் கால்வழங்கி வாழ்தல் செருவாய்ப்பச்
செய்தவை நாடாச் சிறப்புடைமை—எய்தப்
பலநாடி நல்லவை கற்றல் இம்மூன்றும்
நலமாட்சி நல்லவர் கோள். (2)

### உள்ளனபோலக் கெடுவன

கிளைஞர்க் குதவாதான் செல்வமும் பைங்கூழ்
விளைவின்கட் போற்றா னுழவும்—இளையனாய்க்
கள்ளுண்டு வாழ்வான் குடிமையும் இம்மூன்றும்
உள்ளன போலக் கெடும். (3)

—நல்லாதனார்

## 4. நான்மணிக்கடிகை

### மேலானவை

கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை கொண்டானின்
துன்னிய கேளிர் பிறரில்லை மக்களின்
ஒண்மையவாய்ச் சான்ற பொருளில்லை ஈன்றாளோ(டு)
எண்ணக் கடவுளு மில். (1)

### கீழ்மக்கள் தன்மை

மாசு படினும் மணிதன்சீர் குன்றாதாம்
பூசிக் கொளினும் இரும்பின்கண் மாசொட்டும்
பாசத்து ளிட்டு விளக்கினுங் கீழ்தன்னை
மாசுடைமை காட்டி விடும். (2)

### இன்னது வேண்டின் இன்னது செய்க

இன்னாமை வேண்டின் இரவெழுக இந்நிலத்து
மன்னுதல் வேண்டின் இசைநடுக தன்னொடு
செல்வது வேண்டின் அறஞ்செய்க வெல்வது
வேண்டின் வெகுளி விடல் (3)

—விளம்பி நாகனார்

## 5. சிறுபஞ்சமூலம்

### கற்றவர்—கல்லாதவர்

தேவரே கற்றவர் கல்லாதார் தேருங்கால்
பூதரே முன்பொருள் செய்யாதார்—ஆதரே
துன்பமிலேம் பண்டு யாமே வனப்புடையேம்
என்பார் இருகால் எருது. (1)

### கடமை உணர்வு

தான்பிறந்த இல்நினைந்து தன்னைக் கடைப்பிடித்துத்
தான்பிற ராற்கருதற் பாடுணர்ந்து—தான்பிறரால்
சாக எனவாழான் சான்றோரால் பல்யாண்டும்
ஆக எனவாழ்தல் நன்று. (2)

### அறிவுடையார் அறிவில்லார்

பூத்தாலும் காயா மரமுமுள நன்றறியார்
மூத்தாலும் மூவார்நூல் தேற்றாதார்—பாத்திப்
புதைத்தாலும் நாறாத வித்துள பேதைக்
குரைத்தாலும் செல்லா துணர்வு. (3)

—காரியாசான்

## 6. நீதி நூல்

### பரிதானம் (லஞ்சம்)

வலியினு லிலஞ்சங்கொள் மாந்தர் பாற்சென்று
மெலியவர் வழக்கினை விளம்பல் வாடிய
எலிகண்மார்ச் சாலத்தி னிடத்தும் மாக்கள்வெம்
புலியிடத் துஞ்சரண் புகுத லொக்குமே. (1)

### பொறுமை

மாங்கனி வாயிற் கவ்வி மரத்திடை யிருக்கு மந்தி
பாங்கர்நீர் நிழலை வேறோர் பழமுணுங் குரங்கென் றெண்ணித்
தாங்கரு மவாவிற் றாவிச் சலத்திடை யிறந்த தொப்ப
நீங்கரும் பொறாமை யுள்ளோர் நிலத்திடைக் கெடுவார்
நெஞ்சே. (2)

—வேதநாயகம் பிள்ளை

# III காதை

## 1. நளவெண்பா

### சுயம்வர காண்டம்

நளன் பூஞ்சோலை புகுதல்

வாங்குவளைக் கையார் வதன மதிபூத்த
பூங்குவளைக் காட்டிடையே போயினான்—தேங்குவளைத்
தேனாடி வண்டு சிறகுலர்த்து நீர்நாடன்
பூநாடிச் சோலை புக. (1)

சோலையில் நளனுக்கு எதிரில் அன்னப்பறவை தோன்றுதல்

நீணிறத்தாற் சோலை நிறம்பெயர நீடியதன்
தாணிறத்தாற் பொய்கைத் தலஞ்சிவப்ப—மாணிறத்தான்
முன்னப்புட் டோன்று முளரித் தலைவைகும்
அன்னப்புட் டோன்றிற்றே யாங்கு. (2)

அன்னத்தைப் பிடித்துத் தருமாறு நளன் சேடியை ஏவுதல்

பேதை மடவன்னந் தன்னைப் பிழையாமல்
மேதிக் குலமேறி மென்கரும்பைக்—கோதிக்
கடித்துத்தான் முத்துமிழும் கங்கைநீர் நாடன்
பிடித்துத்தா என்றான் பெயர்ந்து. (3)

சேடியர் அன்னத்தைப் பிடித்துக் கொடுத்தல்

காடிமட வன்னத்தை நல்ல மயிற்குழாம்
ஓடி வளைக்கின்ற தொப்பவே—நீடியநற்
பைங்கூந்தல் வல்லியர்கள் பற்றிக் கொடுபோந்து
தங்கோவின் முன்வைத்தார் தாழ்ந்து. (4)

நளனைக் கண்டு அன்னம் வருந்துதல்

அன்னந் தனைப்பிடித்தங் காயிழையார் கொண்டுபோய்
மன்னன் திருமுன்னர் வைத்தலுமே—அன்னம்
மலங்கிற்றே தன்னுடைய வான்கிளையைத் தேடிக்
கலங்கிற்றே மன்னவனைக் கண்டு. (5)

நளன் அன்னத்திற்குத் தேறுதல் சொல்லுதல்

அஞ்சல் மடவனமே உன்றன் அணிநடையும்
வஞ்சி யனையார் மணிநடையும்—விஞ்சியது
காணப் பிடித்ததுகா ணென்றான் களிவண்டு
மாணப் பிடித்ததார் மன். (6)

நளன் சொல்லைக்கேட்டு அச்சம் நீங்கிய அன்னம், தமயந்தியின் இருப்பை அறிவிக்க, அவன், 'அவள் யார் மகள்?' எனக்கேட்க, அன்னம் விடைகூறுதல்

எழுவடுதோள் மன்ன இலங்கிழையேர் தாண்டக்
கொழுநுதியிற் சாய்ந்த குவளை—உழுநர்
மடைமிதிப்பத் தேன்பாயு மாடொலிநீர் நாடன்
கொடைவிதர்ப்பன் பெற்றதோர் கொம்பு. (7)

தமயந்தியினிடம் விருப்பம் மிகுந்த நளன், அவளிடம் அன்னத்தைத் தூதுவிடுப்ப, அது சென்று அவன் சிறப்பியல்புகளைக் கூறுதல்

செம்மனத்தான் தண்ணளியான் செங்கோலான் மங்கையர்கள்
தம்மனத்தை வாங்குந் தடந்தோளான்—மெய்ம்மை
நளனென்பான் மேனிலத்து நானிலத்து மிக்கான்
உளனென்பான் வேந்தன் உனக்கு. (8)

தூதுசென்ற அன்னம் மீண்டுவந்து நளனுக்குத் தமயந்தியின் நிலையை உரைப்ப, அவன் அறிவழிதல்

கொற்றவன்றன் ஏவலினாற் போயக் குலக்கொடிபால்
உற்றதுவு மாங்கவள்தான் உற்றதுவும்—முற்றும்
மொழிந்ததே அன்னம் மொழிகேட் டரசற்(கு)
அழிந்ததே உள்ள அறிவு. (9)

நளன், தமயந்தியின் சுயம்வரச் செய்திகேட்டு விதர்ப்ப நாட்டின் தலைநகரை அடைதல்

சடைச்செந்நெல் பொன்விளைக்குந் தன்னாடு பின்னாக்
கடற்றானை முன்னாகக் கண்டான்—அடற்கமைந்த
வில்லியரும் பொற்றுமு வீமன் திருமகளாம்
நல்லுயிரும் வாழும் நகர். (10)

### சுயம்வரம் குறித்து அரசர் பலரும் மணமண்டபத்தில் கூடுதல்

முரைசெறிந்த நாளேழும் முற்றியபின் கொற்ற
வரைசெறிந்த தோள்மன்னர் வந்தார்—விரைசெறிந்த
மாலை துவள முடிதயங்க வால்வளையுங்
காலை முரசுங் கலந்து. (11)

### தமயந்தி சுயம்வர மண்டபம் புகுதல்

மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள்—மின்னிறத்துச்
செய்யதாள் வெள்ளைச் சிறையன்னஞ் செங்கமலப்
பொய்கைவாய்ப் போவதே போன்று. (12)

### சேடியொருத்தி அரசர் பலரையும் தமயந்திக்குக் காட்டுதல்

மன்னர் குலமும் பெயரும் வளநாடும்
இன்ன பரிசென் றியலணங்கு—முன்னின்று
தார்வேந்தன் பெற்ற தனிக்கொடிக்குக் காட்டினாள்
தேர்வேந்தர் தம்மைத் தெரிந்து. (13)

### நளன்வடிவில் வந்திருந்த இந்திரன் முதலியோரைக் கண்டு தமயந்தி உள்ளங் கலங்குதல்

காவலரைத் தன்சேடி காட்டக்கண் டீரிருவர்
தேவர் நளனுருவாச் சென்றிருந்தார்—பூவரைந்த
மாசிலாப் பூங்குழலாள் மற்றவரைக் காணாகின்(று)
ஊசலா டுற்றாள் உளம். (14)

### உண்மை நளனுக்கு மணமாலை சூட்ட அருளுமாறு தமயந்தி தெய்வத்தை வேண்டல்

மின்னுந்தார் வீமன்றன் மெய்ம்மரபிற் செம்மைசேர்
கன்னியா னாகிற் கடிமாலை—அன்னந்தான்
சொன்னவனைச் சூட்ட அருளென்றாள் சூழ்விதியின்
மன்னவனைத் தன்மனத்தே வைத்து. (15)

நளன் வடிவில் வந்திருந்த தேவர்களிலிருந்து
உண்மை நளனை வேறு பிரித்தறிதல்

கண்ணிமைத்த லாலடிகள் காசினியில் தோய்தலால்
வண்ண மலர்மாலை வாடுதலால்—எண்ணி
நறுந்தா மரைவிரும்பு நன்னுதலே யன்னுள்
அறிந்தாள் நளன்றன்னை ஆங்கு. (16)

நளனுக்குத் தமயந்தி மாலை சூட்டுதல்

விண்ணரச ரெல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்கக்
கண்ணகன் ஞாலங் களிகூர—மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினுள் பொன். (17)

—புகழேந்திப் புலவர்

## 2. வில்லி புத்தூரார் பாரதம்

ஆரணிய பருவம்

### பழம் பொருந்துசருக்கம்

திரௌபதி ஒரு நெல்லிக்கனியைக் காணுதல்

அங்கெடு வனத்திற் சின்னுள் அகன்றபின் அமித்தி ரன்பேர்
என்னுமா முனிவற் கென்றே யாவரு மருகு செல்லா
நன்னல மிகுத்த நெல்லி நறுங்கனி யொன்று கண்டாள்
கன்னலும் புளிக்கு மின்சொற் கயிரவங் கருகும் வாயாள். (1)

நெல்லிக்கனியைப் பறித்துத் தருமாறு திரௌபதி
அருச்சுனனை வேண்டுதல்

இக்கனி யெனக்கு நீகல் கென்றுவில் லிறுத்துக் கொண்ட
மைக்கனிக் களவு மானும் வடிவுடை விசய னேடு
மெய்க்கனி வுடைமை தோன்ற விளம்பினுள் வீசு தென்றல்
முக்கனி கமழுஞ் சோலை முகில்தவழ் நாடன் பாவை. (2)

### உடனே அருச்சுனன் நெல்லிக்கனியை வீழ்த்துதலும் கண்டவர் கூறுதலும்

சோமகர்க் கரசன் பாவை சொல்லுமுன் வில்லு வாங்கி
மாமுனிக் குணவாய் நின்ற மதுரவா மலகந் தன்னை
ஏமுறை தொடுத்து வீழ்த்தி ஈதலு மாங்கட் கண்டோர்
ஏமுறக் காணில் இப்போ தென்படும் இறுத்தோ னென்றார். (3)

### அருச்சுனன் அக்கனியைத் தருமன்முன் வைத்துத் தான் அறியாது எய்ததற்கு வருந்திக் கூறுதல்

கண்டவம் முனிவர் சொல்லக் கடவுளர் கோமான் மைந்தன்
கொண்டவக் கனியை மூத்த கொற்றவன் திருமுன் வைத்து
மண்டழற் பாவை சொல்லால் மதியிலே னெய்தே னென்றுன்
திண்டிறற் றேவர்க் காகத் திதிமைந்த ராவி கொண்டான். (4)

### தருமன் வருந்திக் கூறுதல்

காடுறை வாழ்க்கை யெய்திக் காய்கனி மூலந் தின்று
நீடுறு காலம் போக்கி நீங்கலா திருக்கு மெம்மை
நாடொறும் இடையூ றன்றி நண்ணுவ தில்லை யாயின்
ஏடுறு தாராய் செய்வ தென்கொலென் றியம்பி னானே. (5)

### முனிவன் சபித்தற்கு முன்பே செய்யவேண்டுவது இன்னதென வீமன் கூறுதல்

அவ்வுரை வீமன் கேட்டாங் கமித்திரன் வந்த போதே
இவ்வுரை கேட்கி னம்மை யெரியெழச் சபித்தல் திண்ணம்
வெவ்வுரை யுரையா முன்ன மெய்ம்முனி தன்னைப் போற்றிச்
செவ்வுரை கூறி னம்மைச் சீறுமோ சீறல் செய்யான். (6)

பொறுத்திடு மேலி டாவைம் புலத்தின னாத லாலே
மறுத்திடான் ஐய நின்தன் மாசிலா வாய்மை யென்ன [வைச்
நிறுத்திடுந் துலையோ டொப்பான் நினைவி னுக் கிசையத் தெவ்
செறுத்திடு விசயன் மீளச் செப்பினன் செப்ப மாக. (7)

அருச்சுனன் கூறுதல்

செய்தவ னினிது மாந்தத் தேவர்நா ளொன்றுக் கொன்றும்
கைதவ மில்லா நெல்லிக் கனியினைக் கருது ருமல்
எய்தவன் தன்னை யன்றி யாரையு மிடான்வெஞ் சாபம்
மெய்தவ ருத சொல்லாய் வெருவுதல் என்கொ லென்றான். (8)

தருமனின் விடை

வேந்தனம் மாற்றங் கேட்டு வில்வலான் தன்னை நோக்கி
ஏந்திழை சொல்ல வோரா தினியவிக் கனியின் நீர்ந்தாய்
மாந்தரின் மடங்க லொப்பாய் வருத்தநீ யுழக்க யாமோ
பேர்ந்துபோய்ப் பிழைப்போ மென்றான் பிதாவினுங் கருணை
மிக்கான். (9)

நகுலன் கூறுதல்

அம்முனி வந்த வாபத் ததனினுங் கொடிதிக் கானத்
திம்முனி யுணவு கொண்ட தெனவெரீஇ நகுலன் தானும்
வெம்முனி வகற்றி நாமும் மேம்பட வேண்டி னின்னந்
தெம்முனி திகிரி யானைச் சிந்தனை செய்தி யென்றான். (10)

சகாதேவன் கூறுதல்

விளைதவ முனிவன் கண்டு வெகுளுமு னவன்தாள் போற்றிக்
கிளைபடு நெல்லி வாசக் கேழுறு கனிமுன் வைத்தால்
உளைவுற முனியா னம்மை யுறுதிமற் றிதுவே யென்னு
இளையவன் தானுந் தம்மு னினைவினுக் கேற்பச் சொன்னான்.(11)

அப்போது தருமன் நினைக்க, அங்கு வந்த கண்ணன்,
நிகழ்ந்தது கேட்டுக் கூறுதல்

திண்மையா லுயர்ந்த நீவிரை விருமித்
தீயிடைப் பிறந்தசே யிழையும்
உண்மையா னெஞ்சி னிகழ்ந்தபட் டாங்கீண்
டுரைத்திடக் கோட்டின்மீண் டொன்றும்
வண்மையா லுயர்ந்தீ ரென்றுசெம் பவள
வாய்மலர்ந் தருளினன் மாயோன்
தண்மையார் கருணைத் தராபதி முதலோர்
சாற்றுவார் தம்மனத் தியல்பே. (12)

பாண்டவர் ஐவரும் முறையே தம் கருத்துக்களைத் தெரிவித்தல்

தருமன்

வெல்லுக அறமும் மெய்மையும் பொறையும்
மேகமே னியனும்வெல் லாமற்
செல்லுக பாவம் பொய்மொழி கோபக்
தயித்தியர் குலமெனத் தெளிவுற்(று)
அல்லும்வெம் பகலும் என்மன நிகழும்
அலகையாம் அன்னையை முன்னங்
கொல்லுதல் புரிந்தோய் என்றனன் முரசங்
கோட்டிய கொற்றவெங் கொடியோன். (13)

வீமன்

பிறர்மனை வியரைப் பெற்றதா யெனவும்
பிறர்பொரு ளெட்டியே யெனவும்
பிறர்வசை யுரைத்தல் பெருமையன் றெனவும்
பிறர்துய ரென்துய ரெனவும்
இறுதியே வரினும் என்மனக் கிடக்கை
யெம்பிரா னிவையென வுரைத்தான்
மறலியு மடியு மாறுமல் லியற்கை
வலிமைகூர் வாயுவின் மைந்தன். (14)

அருச்சுனன்

ஊனமே யான ஊனிடை யிருக்கும்
உயிரினைத் துறந்துமொண் பூணும்
மானமே புரப்ப தவனிமே லெவர்க்கும்
வரிசையுந் தோற்றமு மரபும்
ஞானமே யான திருவடி யுடையாய்
ஞாலமுள் ளளவுநிற் றலினால்
ஈனமே உயிருக் கியற்கையா தலினால்
என்றனன் வீமனுக் கிளையோன். (15)

நகுலன்

குலமிக வுடையர் எழில்மிக வுடையர்
குறைவில்செல் வமுமிக வுடையர்
நலமிக வுடையர் என்னினுங் கல்வி
ஞானமற் பமுமிலா தவரை
வலமிகு திகிரிச் செங்கையாய் முருக்கின்
மணமிலா மலரென மதிப்பேன்
சலமிகு புவியில் என்றனன் வாகைத்
தார்புனை தாரைமா வல்லான். (16)

சகாதேவன்

ஒருமொழி யன்னை வரம்பிலா ஞான
முற்பவ காரண னென்றுந்
தருமமே துணைவன் கருணையே தோழன்
சாந்தமே நலனுறு தாரம்
அரியதிண் பொறையே மைந்தன்மற் றிந்த
அறுவரு மல்லதா ருறவென்(று)
இருவரி லிளையோன் மொழிந்தனன் தன்பே
ரிதயமா மலர்க்கிடை யெடுத்தே. (17)

திரௌபதியும் தன் கருத்தைத் தெரிவித்தபின் நெல்லிக்கனி முன் இருந்த கொம்பைச் சேர்தல்

அறுவரு மிவ்வா றுண்மையே யுரைத்தார்
ஆதலால் நிரைநிரைப் படியே
மறுவணி துளப மார்பனுங் கேட்டான்
மாமுனிக் கோதன மான
நிறைசுவை யமுத நெல்லியின் கனியும்
நின்றகொம் பணைந்ததால் என்றும்
பெறுமுறை பெறுமே உள்ளவா றுரைத்தால்
பெரியவர் பேசும்வா சகமே. (18)

—வில்லிபுத்தூரார்

## 3. குசேலோபாக்கியானம்

குசேலர் வரவை வாயில் காவலர் கண்ணனுக்கு அறிவித்தல்

மாமறைத் தலைவ போற்றி மதிக்குல விளக்கே போற்றி
காமரிந் திரன்முன் னோனோர் காண்பதற் கரியாய் போற்றி
தாமரைக் கண்ண போற்றி தரியல ரேறே போற்றி
தோமறு செல்வம் வாய்ந்த துவாரகைக் கிறைவ போற்றி. (1)

ஆதிகா லையில் நின்னோ டருங்கலை கற்று ளானும்
போதவுஞ் சிறந்த நட்புப் பூண்டுகொண் டவனுங் கந்தை
மேதகக் கொண்ட நீரான் மெய்ம்மறை யவர்கு லத்தான்
கோதறு குணத்தின் மிக்கான் குசேலனென் றியம்பி னுன்பேர். (2)

வற்றியென் பெழுந்த யாக்கை மாதவன் நின்மேல் வைத்த
பற்றினை யெம்ம னோரோ பகுத்தறிந் தளக்க வல்லார்
இற்றைநாள் வந்து வாயி லிருக்கின்றான் எதிர்ந்த போரில்
வெற்றிகொள் கழற்கால் வேந்தே விண்ணப்ப மிதுவே
யென்றார். (3)

கண்ணன் குசேலரை அழைத்துவரச் சொல்லுதல்

என்றலு முவகை விம்ம எழில்முக மலர்ச்சி காட்டப்
பொன்றலில் கருணை பொங்கிப் பொழிதர விரைவி னிற்சென்(று)
இன்றுநம் வாயில் வந்த இருந்தவத் தலைவன் தன்னை
மன்றவிங் கழைப்பீ ரென்று வாய்மலர்ந் தருளி னானே. (4)

வாயில் காவலர் குசேலரையடைந்து கூறுதல்

நின்னுடை வரவு ரைத்தேம் நிருபனுக் கப்போழ் தற்ற
பன்னருங் களிப்பை யாமோ பகர்ந்திட வல்லம் ஐய
முன்னமங் கிருந்த இன்பம் முழுவது மறந்து நின்றான்
நன்னர்நெஞ் சுடைய நீரார் நட்பினிற் சிறந்த துண்டோ. (5)

தாயது வருகை கேட்ட தனியிளங் குழவி போன்று
நேயமிக் குடைய னாகி நெஞ்சினுள் உவகை பூப்பப்
போயழைத் திடுமி னின்னே போயழைத் திடுமி னின்னே
போயழைத் திடுமி னின்னே யெனவிரை பொருளிற்
சொற்றான். (6)

என்று காவலர் கூறக்கேட்ட குசேலர், தம்வரவை எதிர்பார்த்திருக்கும் கண்ணனைக் காண்டல்

வருந்துமோர் மிடியன் சேம
 வைப்பெதிர் கண்டாற் போலும்
அருந்துண விழந்தோன் விண்ணோர்
 அமுதெதிர் கண்டாற் போலும்
பரிந்துவெப் புழலு வோன்கற்
 பகமெதிர் கண்டாற் போலுஞ்
சரிந்தபற் றினன்மெய் யாசான்
 தனையெதிர் கண்டாற் போலும். (7)

எண்ணனைக் கிலங்கு மார்பம்
 ஈந்தருள் பிரானை நீல
வண்ணனைத் திகிரி சங்கம்
 வலமிட முறக்கொண் டானை
மண்ணனைத் தும்பு ரக்கும்
 வாசுதே வனைம ணக்குந்
கண்ணனைத் துளவத் தாமக்
 கண்ணனைக் கண்ணிற் கண்டான். (8)

குசேலர் வரவால் பெருமகிழ்வடைந்த கண்ணன், உபசாரங்கள் செய்து அவரைப் பாராட்டல்

மன்னுடைய மறையனைத்தும் வகுத்துணர்ந்த மாதவனே!
உன்னுடைய தரிசனத்தால் உடம்புபூ ரித்தனன்யான்
மின்னுடைய விளங்கொளிவேல் வேந்தருளும் தேவருளும்
என்னுடைய பெறலரும்பே றியார்பெற்றார்? யார்பெறுவார்? (9)

கண்ணன், குசேலருடைய மனைவி மக்களின் நலங்கேட்டல்

நின்னுடைய மனைக்கிழத்தி நிரம்புபெரு நீர்மையளே?
மன்னுடைய சொற்காத்துச் சோர்விலா மாண்பினளே?
தன்னுடைய வுயிராநின் தனைப்பேணுந் தன்மையளே?
உன்னுடைய வருவாய்க்குத் தக்கசெல வுஞற்றுவளே? (10)

பைங்குதலை வாய்மைந்தர் பலர்பிறக்க வேண்டுமே ?
எங்குமரும் புகழுடையாய் ! எத்தனைமைந் தர்பிறந்தார் ?
அங்கவரைப் பேரவையோர் அணிதரச்செய் செயலனைத்துஞ்
சிங்கலறப் புரிந்தனையோ ? செய்தனையோ உபநயனம் ? (11)

இவர்தந்தை யென்னேற்று னென்றறிஞ ருரைக்கும்வகை
இவர்கின்ற மனத்தினராய் இருங்கலைகற் றுணர்வாரே ?
உவர்கொண்ட கடலாடை புடையுடுத்த உலகமெலாம்
உவர்கொண்ட குணமெவர்க்குண் டெனமொழிய உயர்வரே? (12)

மேலும் கண்ணன், தம் இளம்பருவ நிகழ்ச்சிகளைக் குசேலருக்கு நினைவூட்டி 'எனக்கு நீ கொண்டுவந்த சிற்றுண்டி யாது'? எனல்

பந்தனை யகன்ற மேலோய் பற்பல நாட்குப் பின்பு
வந்தனை யெனக்கென் கொண்டு வந்தனை அதனை யின்னே
தந்தனை யாயி னன்று தருசுவைப் பக்க ணத்தென்
சிந்தனை நின்ற தென்றான் தெரிவரும் வஞ்சக் கள்வன். (13)

இனியசிற் றுணவே தேனும் இன்றிநீ வருவாய் கொல்லோ
இனியநின் னுள்ள மின்றே எண்ணியா னறிதல் வேண்டும்
இனியநின் மனைவி வாளா ஏகிவா வென்ப ளோமற்(று)
இனியவெற் கன்றி யார்க்குக் கொண்டுவந் திருக்கின் றாயே. (14)

குசேலர், தாம் கொண்டுவந்த அவலை நாணத்தால் கொடாதிருப்பக் கண்ணன், தானே கண்டு அதனை எடுத்து உண்ணல்

மலிதரும் அன்பின் வந்த வண்பொதி யவிழ்த்து நோக்கி
வலிதரு மவற்றுள் நன்று வாய்த்தது நமக்கி தென்னு
ஒலிதரு கழற்கா லையன் ஒருபிடி யவலைக் காதல்
பொலிதர எடுத்து வாயிற் போகட்டுக் கொண்டான் மாதோ. (15)

செறிதரு சுவைத்தி தென்றுந் தேவர்க்கு மரிய தாகும்
அறிதரு விருப்பி னில்லின் அமைத்ததே பழைது மன்று
குறிதரு விலைப்பாற் சென்று கோடலிவ் வளத்த தோவென்(று)
உறியலை வாரி யுண்டோன் ஒருபிடி யவல்தின் றானே. (16)

முன்னுமிவ் வவலொன் றேனும் முனைமுறிக் கதுவு மின்று
பின்னுமுட் டையுமின் றாகும் பட்டவங் கையும ணக்குங்
கொன்னும்வாய் செறிப்பி னம்ம குளமும்வேண் டுவதின் றென்னா
உன்னுபல் லுலகு முண்டோன் ஒருபிடி யவல்தின் றானே. (17)

குசேலர், அன்றிரவு கண்ணன் கோயிலில் தங்கியிருந்து,
மறுநாள் காலையில் தம் ஊர்க்குப் புறப்படல்

கதிருதிக்குங் காலையெழீஇக் கடன்பலவும் முற்றியடர்
முதிர்புலன்செற் றருஞானம் முயன்றடைந்தோன் ஆதலினால்
மதிகுலத்து மன்னவன்பால் வாய்திறந்தொன் றுங்கேளான்
நிதியமிகப் பெற்றவனாய் நினைந்தூர்க்கு வழிக்கொண்டான். (18)

—வல்லூர் தேவராசப் பிள்ளை

## 4. இரட்சணிய யாத்திரிகம்

### ஆத்தும வேதனை

இயேசுநாதரும் அடியரும் கெதுசேம் என்னும் சோலையை
அடைதல்

இனையன வளங்கொண் டோங்கி இறும்புசூழ் கிடந்த வந்தப்
புனைமரக் காவின் பாங்கர் பொலங்கெழு கெதுசே மென்னும்
நனிசிறந் தொப்பி கந்த நறுமலர்ச் சோலை கண்ணுற்(று)
அனகனு மன்பின் மிக்க அடியரு மாண்டுப் புக்கார். (1)

சோலையில் தேன் சோரிதலின் காட்சி

செழுமலர்ச் சோலை யோங்கு சினைதொறும் நிறையப் பூத்த
கொழுமுகை யவிழ்ந்து செந்தேன் குளிர்நறுந் துளிவார் காட்சி
அழகிய மணவா ளன்தன் அகத்துவந் தடையு மான்மக்
கழிதுயர்க் கிரங்கிச் சிந்துங் கண்ணினீர்த் தாரை போலும். (2)

இயேசுநாதர் ஆத்தும வேதனையுறுதல்

கிரிமிசை முன்னர்த் தம்மைக் கேழ்கிளர் மகிமை யோடு
தரிசனஞ் செய்த மூன்று தாசரை யுடன்கொண் டேகி
ஒருசிறை யுற்றுத் துன்பம் உறுவதற் குரிய தான
கரசுபா வத்திற் பாடு நயந்தனு பவிக்க லுற்றார். (3)

வாக்கினுக் கதீத மான மகிமையை யிழந்துங் கன்னி
பாக்கிய வயிற்றிற் கர்ப்பப் பையுளே பழங்க ணுற்றும்
ஆக்கமற் றேழை யாகி யலைந்துஞ்சற் றவியா தோங்கி
மீக்கிளர் தேவ நீதி வெந்தழல் குளிப்ப தானார். (4)

வெந்துய ரென்னுந் தாப மிகுகனல் மூள மூளச்
சுந்தரக் குமர னாவி துடித்துள முடைந்து சோர்ந்து
நைந்தனன் மெழுகு போல வுருகியே குடரி னுப்பண்
சிந்திய தென்னே யேது பாவியேம் தீமை யன்றோ. (5)

முழங்கெரி நடுவ ணுய்த்த முருகுலாம் அலங்கல் போலும்
தழங்குவெண் திரைவா யுற்றுத் தளர்ந்துழல் திரணம் போலும்
பழங்கணுக் குடைந்து தேம்பிப் பரிவுறீஇப் பாருக் கின்பம்
வழங்குவான் துணிந்து வந்த மாநுவேல் வருந்தி னரால். (6)

இயேசுநாதர் ஆண்டவன் திருவருளை வேண்டல்

காலிணை முடக்கி யந்தக் கரணத்தை யொடுக்கி யன்பின்
சீலமே திகழுங் கஞ்சத் திருமுக நிலத்திற் சேர்த்திக்
கோலமார் தடக்கை கூப்பிக் கும்பிட்டு விழிநீர் சோரச்
சாலவும் பணிந்து தீன தயாளரின் னருளை நாடி. (7)

அப்பனே யெல்லா மும்மா லாகுமிவ் வவத்தை யார்ந்த
கைப்புறு பாத்தி ரத்தைக் கழித்திடக் கருத்துண் டாயின்
அப்படி யாக அன்றேல் ஐயவென் சித்த மன்று
மெய்ப்படு முமது சித்தம் விழைந்ததே யாக வென்றார். (8)

தேவதூதன் இயேசுநாதரைத் தேற்றிப் போதல்

இம்முறை யாக மேனி இரத்தவே ரொழுகு மாறு
செம்முறை திறம்பாத் தூய சிந்தையுள் ளுடைந்து தேம்பி
மும்முறை பிதாவைக் கிட்டிச் செபித்தனர் முனிவொன் றின்றி
எம்முறை பாட்டுக் குள்ள மிரங்கியா தரிக்கு மீசன். (9)

அத்தனைக் கருதிக் கூவு மளவையி லடுத்தோர் தூதன்
சித்தசஞ் சலத்தை யாற்றித் தேற்றினன் சென்றா னாக
இத்தரா தலத்து மாந்தர் எவரையும் புரக்க வந்த
வித்தகப் புனித மூர்த்தி எழுந்தனர் விமலற் போற்றி. (10)

—கிருஷ்ண பிள்ளை

## 5. மனோன்மணீயம்

மனோன்மணிக்கு விரைந்து மணமுடித்தல் வேண்டும் எனவும், மணமக னாதற்கு உரியவன் சேரநாட்டரசன் புருடோத்தமனே யெனவும், மணம் பேசி முடித்தற்குரியவன் நடராசனே எனவும் சுந்தரமுனிவர் கூறக்கேட்ட சீவக வழுதி, வாணியின் தந்தை கூறிய குற்றங்களால் நடராசனிடத்து வெறுப்புக் கொண்டு, முனிவர் மொழியை ஏற்றுக்கொள்ளாமல் குடிலன் என்னும் அமைச்சனை அழைத்து அவனோடு ஆராய்ந்தனன்; அவன், தன்னலங் கருதுவோன் ஆதலின், சேரநாட்டரசன் வழுதியின் மருமகனாக வருதலில் அச்சம் கொண்டும், மனோன்மணியும் அரசாட்சியும் தன்மகன் பலதேவ னுக்குக் கிடைக்க வேண்டும் என்னும் பேராசை வைத்தும் முனிவர் கூறிய மணத்தைத் தடுக்கத் துணிந்து சில சூதுரைகள் மொழிந்தனன். அரசன் அவற்றை நம்பிச் சேரநாட்டரசன்பால் அவன் உட்கோள் அறிந்துவர அக்குடிலன் மகன் பலதேவனைத் தூதாக அனுப்பினான்; அப்போது நடராச னின் நண்பன் நாராயணன் பின்வருமாறு எண்ணுகின்றான் :

*ஐயோ ! இதற்கு என்செய்வன் ! அரசன்*
*உறுதியா நம்பினன். சிறிதும் பிறழான்.*
*வெளுத்த வெல்லாம் பாலெனும் மெய்மை*
*உளத்தான். களங்கம் ஓரான். குடிலனோ*
*சூதே உருவாய்த் தோற்றினன். அவன்தான்*
*ஓதுவ வுன்னுவ செய்குவ யாவும்*
*தன்னயங் கருதி யன்றி மன்னனைச்*
*சற்றும் எண்ணான். முற்றுஞ் சாலமா*
*நல்லவன் போலவே நடிப்பான். பொல்லா*
*வஞ்சகன். மன்னன் அருகுளோர் அதனை*
*நெஞ்சிலும் நினையார். நினையினும் உரையார்.*
*இறைவன் குறிப்பிற்கு இசைய அறைவர்*
*வடித்து வடித்து மாற்றொலி போன்றே.*
*தடுத்து மெய்மை சாற்றுவர் யாரே ?*
*என்னே அரசர் தன்மை ! மன்னுயிர்க்கு*
*ஆக்கமும் அழிவும் அவர்தம் கடைக்கண்*
*நோக்கில் உண்டாம் வல்லமை நோற்றுப்*
*பெற்றார் ; பெற்றஅப் பெருமையின் பாரம்,*
*உற்றுநோக் குவரேல் உடல்நடுங் காரோ ?*
*கருப்போ தேனோ என்றுஅவர் களிப்பது*

நெருப்பா றும்மயிர்ப் பாலமும் அன்றோ ?
விழிப்பா இருக்கிற் பிழைப்பர். விழியிமை
கொட்டில் கோடி பிறழுமே. கொட்டும்
வாலால் தேளும் வாயால் பாம்பும்
காலும் விடமெனக் கருதி யாவும்
அடிமுதல் முடிவரை ஆய்ந்தா ராய்ந்து
பாரார் ஆளும் பார்என் படாவே ?
யாரை யான்நோவ ! அதிலும் கொடுமை !
அரசர்க்கு அமைச்சர் அவயவம் அலரோ ?
உறுப்புகள் தாமே உயிரினை உண்ண
ஒருப்படில் விலக்குவர் உளரோ ? தன்னயம்
மறந்து மன்னுயிர்ச் சுகமே மதித்தங்கு
இறந்தசிந் தையனோ இவனோ அமைச்சன் ?
குடிலன் செய்யும் படிறுகள் வெளியாப்
பொய்யும் மெய்யும் புலப்பட உரைக்க
என்றால், நோக்க நின்றார் நிலையில்
தோன்றும் சித்திர வொளிபோல் யார்க்கும்
சான்றொடு காட்டும் தன்மைய அலவே.
சித்திரப் பார்வை யழுந்தார்க்கு எத்தனை
காட்டினுங் கீறிய வரையலாற் காணார்.
என்செய ? இனியான் எப்படிச் செப்புவன் !
நிந்தையா நடேசனைப் பேசிய குறிப்பும்
சிந்தனை செய்ததாய்ச் செப்பிய செய்தியும்
ஓரில் யாதோ பெரிய உறுகண்
நேரிடும் என்றுஎன் நெஞ்சம் பதறும்.
என்னே யொருவன் வல்லமை !
இன்னும் பிழைப்பன் மன்னன் விழிக்கிலே.

—சுந்தரம் பிள்ளை

# 6. ஆசிய ஜோதி

## புத்தரும் ஏழைச் சிறுவனும்

அரண்மனையிலிருந்து வெளிப்பட்டுச் சென்ற புத்தர், வழி நடந்த களைப்பால் சோர்ந்து கிடந்தார். அவரைக் கண்ட ஓர் இடைச்சிறுவன், தான் தாழ்ந்த குலத்தினனாதல்பற்றி, தன் கலயத்தில் பால் கறந்து அவருக்குக் கொடுக்கத் தயங்கினான். பிறப்பினால் உயர்வு தாழ்வுகள் பாராட்டலாகாது என்று புத்தர் அவனுக்குப் போதித்த வரலாறு இதனுள் கூறப்படுகிறது.

### புத்தர் மயங்கி வீழ்தல்

*புண்ணிய மூர்த்தி புத்தமா முனிவன்*
*உண்மையை உணர்ந்திவ் வுலகினி லென்றும்*
*அழியா இன்பம் அடையும் அவாவினால்*
*மன்னர் வாழ்வையும் மறுத்தவ னாகித்*
*தந்தையை மறந்து தனயனைத் துறந்து*
*மங்கை அசோதை மதிமுகம் நீத்து*
*நள்ளிர வதனில் நன்னகர் நீங்கி*
*உண்ணும் உணவும் உறக்கமும் இன்றி*
*இரவும் பகலும் இடைவிடா தெங்கும்*
*நடந்து மெலிந்து நலிவுற் றொருநாள்*
*வேனில் வெயிலில் வெந்தெரி கானலில்*
*கைகால் தளர்ந்து கண்களும் மூடி*
*மூச்சும் அடங்கி முகமும் வெளிறி*
*உயிரும் உடம்பில் ஊச லாட*
*விஞ்சிய மயக்கால் வீழ்ந்து கிடந்தனன்.*

### சிறுவன் காணுதல்

ஆடுகள் மேய்த்துவரும்—ஒருவன்
ஆயர் குலச்சிறுவன்
வாடிக் கிடந்தவனைச்—செல்லும்
வழியின் மீதுகண்டான். (1)

### அவன் செயல்

வையகம் வாழ்ந்திடவே—பிறந்த
மாதவச் செல்வன்முகம்
வெய்யிலில் வெந்திடாமல்—தழைகள்
வெட்டி யருகில்நட்டான். (2)

தெய்வ குலத்திவனை—எளியேன்
தீண்டலும் ஆகாதினிச்
செய்வதும் யாதெனவே—சிறிது
சிந்தை தயங்கிநின்றான். (3)

உள்ளம் தெளிந்துடனே—வெள்ளாடு
ஒன்றை யழைத்துவந்து
வள்ளல் மயக்கொழிய—மடுவை
வாயில் கறந்துவிட்டான். (4)

நட்ட தழைகளெல்லாம்—வளர்ந்து
நாற்புற மும்கவிய
கட்டிய மாளிகைபோல்—வனத்தில்
காட்சி யளித்தஅம்மா. (5)

பூவொடு காய்கனியும்—தளிரும்
பொலிந்து நிரம்பியங்கே
மேவு பலமணிகள்—இழைத்த
விதானமும் ஆனஅம்மா. (6)

ஐயனை இவ்வுலகம் காணுதற்கு
அரியவோர் தெய்வமெனக்
கைகள் தொழுதுநின்றான்—சிறுவன்
களங்க மிலாவுளத்தான். (7)

புத்தர் எழுந்து பால் கேட்டல்

நிலத்திற் கிடந்தஐயன்—மெல்ல
நிமிர்ந்து தலைதூக்கிக்
"கலத்தினிலே கொஞ்சம்—பாலைக்
கறந்து தருவாய்" என்றான். (8)

சிறுவன் மறுத்தல்

"ஐயையோ! ஆகா" தென்றான்—சிறுவன்
"அண்ணலே! யானும்உனைக்
கையினால் தீண்டவொண்ணு—இடையன்ஓர்
காட்டு மனிதன்" என்றான். (9)

புத்தர் அறிவுறுத்தல்

உலகம் புகழ்பெரியோன்—இந்த
உரையினைக் கேட்டந்நாள்
அலகில் கருணையினால்—சொன்ன
அமுத மொழிஇதுவாம். (10)

"இடர்வ ரும்போதும்—உள்ளம்
இரங்கி டும்போதும்
உடன்பி றந்தவர்போல்—மாந்தர்
உறவு கொள்வரப்பா. (11)

ஓடும் உதிரத்தில்—வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பார்த்தாலும்—சாதி
தெரிவ துண்டோஅப்பா. (12)

எவர்உ டம்பினிலும்—சிவப்பே
இரத்த நிறமப்பா
எவர்விழி நீர்க்கும்—உவர்ப்பே
இயற்கைக் குணமப்பா. (13)

பிறப்பி னல்எவர்க்கும்—உலகில்
பெருமை வாராதப்பா
சிறப்பு வேண்டுமெனில்—நல்ல
செய்கை வேண்டுமப்பா. (14)

நன்மை செய்பவரே—உலகம்
நாடும் மேற்குலத்தார்.
தின்மை செய்பவரே—அண்டித்
தீண்ட ஒண்ணுதார்.'' (15)

சிறுவன் பால் தருதல்

நிலத்து யர்ஞானி—இவை
நிகழ்த்தி "என்தம்பீ!
கலத்தினி லேகொஞ்சம்—பாலைக்
கறந்து தா'' என்றான். (16)

ஆயர் சிறுவனும்—கலத்தில்
அளிக்க வாங்கியுண்டு
தாயி னும்இனியன்—கொண்ட
தளர்ச்சி நீங்கினனே. (17)

—தேசிக விநாயகம் பிள்ளை

# 7. பாஞ்சாலி சபதம்

[துரியோதனன் அழைப்புக்கு இணங்கிப் பாண்டவர் அத்தினபுரத்திற்கு வந்தனர். அப்பொழுது அவர்கட்கு மாநகரத்தார் அளித்த வரவேற்பு இங்குக் குறிக்கப்படுகிறது.]

*அத்தினமா நகரத்தினில் வந்தனர் வந்தனர்*
*ஆரியப் பாண்டவ ரென்றது கேட்டலும்,*
*தத்தி எழுந்தன ஒண்ணருங் கூட்டங்கள் ;*
*சந்திகள் வீதிகள் சாலைகள் சோலைகள்*
*எத்திசை நோக்கினும் மாந்தர் நிறைந்தனர்*
*இத்தனை மக்களும் எங்க ணிருந்தனர்*
*இத்தின மட்டும் எனவியப் பெய்துற*
*எள்ளு விழற்கிட மின்றி யிருந்தார்.*
*மந்திர கீத முழக்கினர் பார்ப்பனர் ;*
*வன்றடக் தோள்கொட்டி ஆர்த்தனர் மன்னவர் :*
*வெந்திறல் யானையும் தேரும் குதிரையும்*
*வீதிகள் தோறு மொலிமிகச் செய்தன ;*
*வந்தியர் பாடினர், வேசைய ராடினர் ;*
*வாத்தியங் கோடி வகையி னொலித்தன ;*
*செந்திரு வாழும் நகரினி லத்தினஞ்*
*சேர்ந்த ஒலியைச் சிறிதென லாமோ*
*வாலிகன் றந்ததோர் தேர்மிசை ஏறிஅம்*
*மன்னன் யுதிட்டிரன் தம்பியர் மாதர்கள்*
*காலிய லாம்படை யோடு நகரிடை*
*நல்ல பவனி எழுந்த பொழுதினில்,*
*சேலியல் கண்ணியர் பொன்விளக் கேந்திடச்*
*சீரிய பார்ப்பனர் கும்பங்க ளேந்திடக்*
*கோலிய பூமழை பெய்திடத் தோரணங்*
*கொஞ்ச நகரெழில் கூடிய தன்றே.*

—சுப்பிரமணிய பாரதியார்

# IV சிறு நூல்கள்

## 1. அழகரந்தாதி

நம்பிநின் றேனுன் சரணா
  விந்தத்தை நன்னெஞ் சென்னுஞ்
செம்பிநின் றேபொறித் தேனுனக்
  காளென்று தெய்வக்குழாம்
பம்பிநின் றேசெறிக் கும்பதங்
  காணப் பதறுகின்றேன்
கொம்பிநின் றேன்சொரி யுஞ்சோலை
  மாமலைக் கொற்றவனே. (1)

கொற்றவி ராவணன் பொன்முடி
  வீழக் கொடுங்கண் துஞ்சல்
உற்றவி ராவணன் மாளவெய்
  தோனெண் பரதனுக்குச்
சொற்றவி ராவணன் மாலிருஞ்
  சோலை தொழுதுவினை
முற்றவி ராவண நற்றமிழ்
  மாலை மொழிந்தனனே. (2)

மொழித்தத்தை கொஞ்சு மலையலங்
  காரன்முன் னூற்றுவரை
அழித்தத்தை மைத்தர்க் கரசளித்
  தோன்அடி நாட்டொடர்ந்தெ
னுழித்தத்தைச் செய்தன் றிப் போகா
  வினையை யொருநொடியில்
கழித்தத்தை யென்சொல்லு கேன்தனக்
  காட்பட்ட காலத்திலே. (3)

கால மலைக்கும் புவனங்
  களைக்கரந் தாயுதிரங்
கால மலைக்குமைத் தாயழ
  காகம லத்துப்பஞ்சார்

கால மலைக்கும் புவிக்குமன்
பாவுயிர் காயம்விடுங்
கால மலைக்குங் கடுங்கூற்றைக்
காய்ந்தென்னைக் காத்தருளே. (4)

அருளக் கொடியிடைப் பூமாது
நீயும்வந் தாளினுமாம்
இருளக் கொடிய நமன்வருங்
காலத் திகழினுமாங்
கருளக் கொடியமழ காவலங்
காரவன் கஞ்சனெஞ்சத்
துருளக் கொடிய வுதைத்தாய்
என துயி ருன்னுயிரே. (5)

—பிள்ளைப் பெருமாளையங்கார்

## 2. திருவாரூர் நான்மணிமாலை

### நேரிசை ஆசிரியப்பா

தானமால் களிறும் மாநிதிக் குவையும்
ஏனைய பிறவும் ஈகுநர் ஈக
நலம்பா டின்றி நாண்துறந் தொரீஇ
இலம்பா டலைப்ப ஏற்குநர் ஏற்க
புரவலர் புரத்தலும் இரவலர் இரத்தலும்
இருவே றியற்கையும் இவ்வுல குடைத்தே

அதான்று

ஒருகா லத்தில் உருவமற் றொன்றே
இடப்பால் முப்பத் திரண்டறம் வளர்ப்ப
வலப்பால் இரத்தல் மாநிலத் தின்றே
விண்தொட நிவந்த வியன்துகிற் கொடிகள்
மண்டலம் போழ்ந்து மதியக டுடைப்ப
வாணிலா வமுதம் வழங்கியக் கொடிகள்
வேனிலிற் பயின்ற வெப்பம தாற்றுபு
கொடியா ரெத்துணைக் கொடுமை செய்யினும்

மதியார் செய்திடும் உதவியை யுணர்த்தும்
பன்மணி மாடப் பொன்மதிற் கமலைக்
கடிநகர் வைப்பினிற் கண்டேம்
வடிவ மற்றிது வாழிய பெரிதே. (1)

## நேரிசை வெண்பா

பெருமான் தமிழ்க்கமலைப் பெம்மான்கைம் மானும்
கருமா னுரிய தளுங் கச்சும்—ஒருமானும்
சங்கத் தடங்காதுந் தார்மார்புங் கண்டக்கால்
அங்கத் தடங்கா தவா. (2)

## கட்டளைக் கலித்துறை

வாவியம் போருகஞ் சூழ்கம லேசர்புள் வாய்கிழித்த
தூவியம் போருகத் தோறுநின் றோர்துணைத் தாளடைந்த
ஆவியம் போருகந் தாயிரங் கூற்றுடன் றாலும்அஞ்சேல்
காவியம் போருக நன்னெஞ்ச மேயவர் நாமங்களே. (3)

## அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

நாம வேற்படைக் கடவுளைப் பயந்தருள்
நங்கைதென் கமலேசர்
வாம பாகத்தைக் கொளவலப் பாகநீர்
மங்கைகொண் டனள்போலாம்
தாம நீற்றொளி தன்னிறங் காட்டவெண்
தலைநிரை நுரைகாட்டக்
காமர் பூங்கொடி மடந்தையர் மதர்விழிக்
கய லுலா வரலாலே. (4)

—குமரகுருபரர்

# 3. பாரதியார் பாடல்கள்

## புதுமைப்பெண்

உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேரவும்
ஓது பற்பல நூல்வகை கற்கவும்
இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவுஞ் சென்று புதுமை கொணர்ந்திங்கே
திலக வாணுத லார்நங்கள் பாரத
தேச மோங்க உழைத்திடல் வேண்டுமாம்
விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை
வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பராம். (1)

சாத்தி ரங்கள் பலபல கற்பராம்
சவுரி யங்கள் பலபல செய்வராம்
மூத்த பொய்மைகள் யாவும் அழிப்பராம்
மூடக் கட்டுக்கள் யாவுந் தகர்ப்பராம்
காத்து மானிடர் செய்கை யனைத்தையும்
கடவு ளர்க்கினி தாகச் சமைப்பராம்
ஏத்தி யாண்மக்கள் போற்றிட வாழ்வராம்
இளைய நங்கையின் எண்ணங்கள் கேட்டிரோ. (2)

## தமிழ்

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
உண்மைவெறும் புகழ்ச்சி யில்லை
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம் ஒருசொல் கேளீர்
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர். (3)

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்

மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதைவணக்கம் செய்தல் வேண்டும். (4)

—சுப்பிரமணிய பாரதியார்

## 4. என் தாய்

விருத்தவய தால்நரைத்துன் மேனிதளர் காலம்
திரைத்தவுன்நற் கைக்கெனது செங்கை—பரித்திடூஉம்
ஊன்றுகோல் போலுதவ உன்வருத்த மாற்றிடுவேன்
ஈன்றுகாத் திட்டஎன்தா யே.

—வெ. ப. சுப்பிரமணிய முதலியார்

## 5. தமிழ் நாடு

'யாதும்மூர் எவருங்கேளிர்' என்றுணர்ந்த நாடு
'எவ்வுயிர்க்கும் அன்புசெய்க' என்றிசைத்த நாடு
ஒது'குலக் தெய்வமொன்றே' என்றுகொண்ட நாடு
'ஒக்குமுயிர் பிறப்பென்னும்' ஒருமைகண்ட நாடு
நாதன்அன்பு நீதிஇன்பு நட்'பென்ற நாடு
'நாமார்க்குங் குடியல்லோம்' என்றிருந்த நாடு
'தீதில்லா மொழி'வளர்க்கத் தெளிவுபெற்ற நாடு
'செந்தண்மை' விருந்தளிக்குந் தெய்வத்தமிழ் நாடே.

—திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

## 6. தமிழன் இதயம்

### ஜவஹர்லால் நேரு

மன்னுயிரைப் போர்க்களத்தில் கொன்று வீழ்த்தி
மலைமலையாய்ப் பிணக்குவியல் குவித்த தாலே
மன்னரெனப் பலர்வணங்கத் தருக்கி வாழ்ந்தோர்
மாநிலத்தில் எத்தனையோ பேரைக் கண்டோம்
தன்னுயிரை மன்னுயிர்க்கே தத்தஞ் செய்து
தருமநெறி தவறாத தன்மைக் காக
இன்னுயிர்கள் மனங்குளிர்ந்தே இளங்கோ வென்று
எதிர்கொள்ளும் மன்னனெங்கள் ஜவஹர் லாலே.

—வெ. இராமலிங்கம் பிள்ளை

# V புனந்துரை

## நாடு

அள்ளற் பழனத் தரக்காம்பல் வாயவிழ
வெள்ளத்தீப் பட்ட தெனவெரீஇப்—புள்ளினந்தன்
கைச்சிறகாற் பார்ப்பொடுக்குங் கவ்வை யுடைத்தரோ
நச்சிலைவேற் கோக்கோதை நாடு. (1)

—முத்தொள்ளாயிரம்

## நகர்

முன்னைத்தஞ் சிற்றில் முழங்கு கடலோத மூழ்கிப் போக
அன்னைக் குரைப்பன் அறிவாய் கடலேயென் றலறிப் பேருந்
தன்மை மடவார் தளர்ந்துகுத்த வெண்முத்தந் தயங்கு கானல்
புன்னை யரும்பேய்ப்பப் போவாரைப் பேதுறுக்கும் புகாரே
[யெம்மூர். (2)

—தண்டியலங்கார மேற்கோள்

## கொடி

மையறு மலரி னீங்கி
யான்செய்மா தவத்தின் வந்து
செய்யவ ளிருந்தா ளென்று
செழுமணிக் கொடிக ளென்னும்
கைகளை நீட்டி யந்தக்
கடிநகர் கமலச் செங்கண்
ஐயனை யொல்லை வாவென்
றழைப்பது போன்ற தம்மா. (3)

—கம்பர்

## தென்றல்

பொங்கரி னுழைந்து வாவி புகுந்துபங் கயந்து ழாவிப்
பைங்கடி மயிலை முல்லை மல்லிகைப் பந்தர் தாவிக்
கொங்கலர் மணங்கூட் டுண்டு குளிர்ந்துமெல் லென்று தென்றல்
அங்கங்கே கலைகள் தேரும் அறிவன்போல் இயங்கு மன்றே. (4)

—பரஞ்சோதி முனிவர்

## மலர்கள்

வண்டின் வரவெதிர் பார்த்துநிற்போம்—நல்ல
வாசனை வீதியில் வீசிநிற்போம்.
உண்டு களிக்க மதுவளிப்போம்—சற்றே
உட்காரப் பீடமும் இட்டுவைப்போம்.
மங்கைய ரோடு குமரரையும்—மனம்
வாய்த்த மணஞ்செய்து வாழவைப்போம்.
தங்கமும் பொன்னும் மணிகளுமே—எம்மைத்
தாழ்ந்து வணங்கமேல் தங்கிடுவோம்.
ஈசன் அடியில் பணித்திருப்போம்—அவர்
ஏந்து முடிமீதும் ஏறிநிற்போம்.
பூசனை செய்யும் அடியவரின்—உள்ளம்
பொங்கு களிப்பெலாம் காட்டிநிற்போம். (5)

—தேசிக விநாயகம் பிள்ளை

# VI பல்சுவை

## பாம்புக்கும் எள்ளுக்கும் சிலேடை

ஆடிக் குடத்தடையும் ஆடும்போ தேயிரையும்
மூடித் திறக்கின் முகங்காட்டும்—ஓடிமண்டை
பற்றிப் பரபரெனும் பாரிற்பிண் ணாக்குமுண்டாம்
உற்றிடுபாம் பெள்ளெனவே யோது. (1)

—காளமேகப் புலவர்

## சிவன் அரைக்கண்ணன்

முக்கண்ண னென்றரனை முன்னோர் மொழிந்திடுவார்
அக்கண்ணற் குள்ள தரைக்கண்ணே—தொக்க
உமையாள்கண் ணொன்றரைமற் றான்வேடன் கண்ணொன்(று)
அமையுமித னாலென் றறி. (2)

—காளமேகப் புலவர்

## நாகதேவனிட்ட உணவைக் குறித்து உரைத்தது

வாயிலொன்று கல்லுமொன்று நெல்லுமான அன்னமும்
வாடலாக ஆறுமாதம் வைத்திருந்த கத்தரிக்
காயிலிட்ட கறியும்உப்பி லாதகஞ்சி வண்ணமும்
காம்பொடிந்த ஓரகப்பை கைப்பிடித்த வண்ணமும்
தூயதாய்த் துலக்கலின்றி அழுக்கடைந்த பாத்திரத்
தூக்கியுள் ளசுத்தநீர் துறுத்துவந்த சேர்த்தியும்
ஓயலின்றி ஈக்கள்வீழ்ந்து மொலுமொலென்ற சட்டியும்
உடன்கொணர்ந்த நாகதேவன் ஊண்மறப்ப தில்லையே. (3)

—அந்தகக்கவி வீரராகவ முதலியார்

## பெருமாள் செட்டியாருக்கு எழுதிய சீட்டுக் கவி

கணிகொண்ட பஞ்சலட் சணமும்ரா மாயணக்
கடலையு முணர்ந்தபுலவன்
கவிராசர் புகழ்கின்ற காழியரு ணாசலக்
கவிராய னெழுதுமோலை
மணிகொண்ட மார்பிலிங் கப்பமகி பாலன்
மகிழ்ந்தசுதன் வணிகாதிபன்
வருசீர் படைத்தநற் பெருமாள் நரேந்திரன்
மனமுவந் தினிதுகாண்க
அணிகொண்ட தியாகேசர் வண்ணமுரை செய்ததும்
அதற்குவெகு மதிசெய்ததும்
அதுசமக் குபகார மானதுவு மிப்புவியில்
அறியாத பேருமுளரோ
பணிகொண்ட ராமகீர்த் தனையுமப் படியே
பரிந்துநீ கேட்கவேண்டும்
பாரில்ஒ ராயிரம் பிறைகண்டு நீபொருள்
படைத்துவாழ்ந் திடுகமாதோ. (4)

—அருணசலக் கவிராயர்

# உரைநடைப் பகுதி

## 1. இறையனார் அகப்பொருள் உரை

(நக்கீரர்)

அக்காலத்துப் பாண்டியனாடு பன்னீரியாண்டு வற்கடஞ் சென்றது. செல்லப் பசி கடுகுதலும், அரசன் சிட்டரையெல்லாங் கூவி, 'வம்மின்; யானுங்களைப் புறந்தரகில்லேன்; என் தேயம் பெரிதும் வருந்துகின்றது; நீயிர் போய் நுமக்கறிந்தவாறு புக்கு, நாடு நாடாயின ஞான்று என்னை உள்ளி வம்மின்' என்றான். என, அரசனை விடுத்து எல்லோரும் போயினபின்றைக் கணக்கின்றிப் பன்னீரியாண்டு கழிந்தது. கழிந்த பின்னர், நாடு மலிய மழை பெய்தது. பெய்த பின்றை அரசன், 'இனி நாடு நாடாயிற்றாகலின், நூல் வல்லாரைக் கொணர்க' என்று எல்லாப் பக்கமும் ஆட் போக்க, எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து, 'பொருளதிகாரம் வல்லாரை எங்கும் தலைப்பட்டிலேம்' என்று வந்தார். வர, அரசனும் புடைபடக் கவன்று, 'என்னை! எழுத்தும் சொல்லும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறேமெனின் இவை பெற்றும் பெற்றிலேம்' எனச் சொல்லா நிற்ப, மதுரை ஆலவாயில் அழல் நிறக் கடவுள் சிந்திப்பான்: 'என்னை பாவம்! அரசற்குக் கவற்சி பெரிதாயிற்று; அதுதானும் ஞானத்திடைய தாகலான், யாம் அதனைத் தீர்க்கற்பாலம்' என்று இவ்வறுபது சூத்திரத்தையும் செய்து, மூன்று செப்பிதழகத்தெழுதிப் பீடத்தின்கீழிட்டான்.

இட்ட பிற்றைஞான்று, தேவர்குலம் வழிபடுவான், தேவர் கோட்டத்தை எங்கும் துடைத்து, நீர் தெளித்து, பூவிட்டு, பீடத்தின்கீழ்ப் பண்டென்றும் அலகிடாதான் அன்று தெய்வத் தவக்குறிப்பினான், 'அலகிடுவன்' என்று உள்ளங்குளிர அலகிட்டான். இட்டாற்கு அவ்வலகினோடும் இதழ் போந்தன. போதரக் கொண்டுபோந்து நோக்கினாற்கு வாய்ப்புடைத் தாயிற்றோர் பொருளதிகாரமாய்க் காட்டிற்று; காட்டப், பார்ப்பான், சிந்திப்பான்: 'அரசன் பொருளதிகாரம் இன்மையின் கவல்கின்றான் என்பது பட்டுச் செல்லா நின்றது உணர்ந்து நம்பெருமான் அருளிச் செய்தானாகும்' என்று தன்னகம்

புகாதே, கோயில் தலைக்கடைச் சென்று நின்று, கடை காப்பார்க்கு உணர்த்த, கடைகாப்பார் அரசற்குணர்த்த, அரசன், 'புகுதருக' என்று பார்ப்பானைக் கூவ, சென்று புக்குக் காட்ட, கொண்டு நோக்கி, 'இது பொருளதிகாரம்! நம் பெருமான் நமது இடுக்கண் கண்டு அருளிச்செய்தானாகற் பாலது' என்று அத் திசை நோக்கித் தொழுதுகொண்டு நின்று, சங்கத்தாரைக் கூவுவித்து, 'நம்பெருமான் நமது இடுக் கண் கண்டு அருளிச்செய்த பொருளதிகாரம்! இதனைக் கொண்டுபோய்ப் பொருள் காண்மின்' என, அவர்கள் அதனைக் கொண்டுபோந்து, கன்மாப் பலகை ஏறியிருந்து ஆராய்வுழி, எல்லாரும் தாந்தாம் உரைத்த உரையே நன்றென்று சில நாளெல்லாஞ் சென்றன.

செல்ல, 'நாம் இங்ஙனம் எத்துணை யுரைப்பினும் ஒரு தலைப்படாது; நாம் அரசனுழைச் சென்று, 'நமக்கோர் காரணிகனைத் தரல் வேண்டும்' என்று கொண்டுபோந்து, அவனாற் பொருளெனப் பட்டது பொருளாய், அன்றெனப் பட்டது அன்றாய் ஒழியக் காண்டும்' என, எல்லாரும் ஒருப் பட்டு அரசனுழைச் சென்றார். செல்ல, அரசனும் எதிர் எழுந்து சென்று, 'என்னை? நூற்குப் பொருள் கண்டீரோ?' என, 'அது காணுமாறு எமக்கோர் காரணிகனைத் தரல் வேண்டும்' எனப், 'போமின்! நுமக்கோர் காரணிகனை எங்ஙனம் நாடுவேன்? நீயிர் நாற்பத்தொன்பதின்ம ராயிற்று; நுமக்கு நிகராவார் ஒருவர் இம்மையி னின்றே' என்று அரசன் சொல்லப் போந்து, பின்னையும் கன்மாப்பலகை ஏறி யிருந்து, 'அரசனும் இது சொல்லினான்; யாங் காரணி கனைப் பெறுமாறு என்னைகொல்'! என்று சிந்தித் திருப்புழிச், 'சூத்திரஞ் செய்தான் ஆலவாயில் அவிர்சடைக் கடவுளன்றே; அவனையே காரணிகனையும் தரல்வேண்டுமென்று சென்று வரங் கிடத்தும்' என்று சென்று வரங் கிடப்ப, இடையாமத்து, 'இவ்வூர் உப்பூரி குடிகிழார் மகனாவான் உருத்திரசன்மன் என்பான், பைங்கண்ணன், புன்மயிரன், ஐயாட்டைப் பிராயத் தான், ஒரு மூங்கைப்பிள்ளை உளன்; அவனை அன்னன் என்று இகழாது கொண்டுபோந்து, ஆசன மேல் இரீஇக் கீழிருந்து சூத்திரப் பொருளுரைத்தால், கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர்

சிலிர்க்கும் மெய்யாயின உரை கேட்டவிடத்து; மெய்யல்லா உரை கேட்டவிடத்து வாளா இருக்கும்; அவன் குமார தெய்வம்; அங்கோர் சாபத்தினல் தோன்றினன்' என முக்கால் இசைத்த குரல் எல்லார்க்கும் உடன்பாடாயிற்ருக, எழுந்திருந்து, தேவர் குலத்தை வலங்கொண்டு போந்து, உப்பூரி குடி கிழாருழைச் சங்கமெல்லாம் சென்று, இவ் வார்த்தையெல்லாம் சொல்லி, 'ஐயனுவான் உருத்திர சன்மனைத் தரல் வேண்டும்' என்று வேண்டிக் கொடுபோந்து, வெளியது உடீஇ, வெண்பூச் சூட்டி, வெண்சாந் தணிந்து, கன்மாப்பலகை ஏற்றி, இரீஇக், கீழிருந்து சூத்திரப் பொருள் உரைப்ப, எல்லாரும் முறையே உரைப்பக் கேட்டு வாளா இருந்து, மதுரை **மருதனிளநாகனுர்** உரைத்த விடத்து ஓரோவழிக் கண்ணீர் வார்ந்து, மெய்ம்மயிர் நிறுத்தி, பின்னர்க் **கணக்காயனுர் மகனுர் நக்கீரனுர்** உரைத்த விடத்துப் பதந்தொறும் கண்ணீர் வார்ந்து, மெய்ம்மயிர் சிலிர்ப்ப இருந்தான். இருப்ப, ஆர்ப்பெடுத்து, 'மெய்யுரை பெற்ரும் இந்நூற்கு'! என்ருர்.

---

## 2. அமரர் காந்தி

[திரு. நாரண—துரைக்கண்ணன்]

அக்டோபர் மாதம் இரண்டாம் தேதி நமது 'பாரத தேசத்தின் தந்தை' யான மகாத்மா காந்தி பிறந்தநாள் கொண்டாட்டம். சென்ற ஆண்டுவரை இந்த அக்டோபர் மாதம் இரண்டாம் தேதியை—நம்முடைய நாட்டுக்கும் சமுதாயத்துக்கும் என்றுமில்லாத பெருமையை வாங்கித் தந்த காந்தியடிகளாரின் பிறந்தநாளை—மகிழ்ச்சியாகக் கொண்டாடினேம். ஆனல் இன்ருே? நினைத்தாலே நெஞ்சம் கரைகிறது. கொடிய அரக்கர்களையும் நல்லவர்களாக்கிவிட்ட கோட்ஸே என்னும் கொலைஞனின் கொடும்பாதகச் செயலால், இதுவரை திருவிழாவாகக் கொண்டாடுதற்குரியதாயிருந்த திருநாள் துக்கதினமாக மாறிவிட்டது.

பிறந்தநாள் கொண்டாட்டமா யிருந்தாலும், ஆயிரம் வருடங்களுக் கொருமுறைகூடப் பிறக்கக் கூடாத பெரிய மகா

னின் காலத்தில் வாழ்கிறோம் என்று நாம் பெருமை கொள்ள. இருந்த மகாத்மா காந்தி இன்று நம்மிடையே இல்லை; 'நூற்றிருபத்தைந்து வருடங்கள் உயிர் வாழ்வேன்' என்று உறுதி கூறிய காந்தியடிகள் நம்மைவிட்டுப் போய்விட்டார்; அதுவும் அவருடைய தவ உடம்பு நம் கண்களை விட்டு மறைந்து எட்டு மாதங்களுக்குமேல் ஆய்விட்டது என்று எண்ணும்போது, இப் பிறந்தநாளே துயரத்தைத் தூண்டிவிடும் துக்கதினமாய் விடுவதில் வியப்பென்ன இருக்கிறது? அதிலும் நம்முடைய நாட்டை நாமே ஆளும் சுதந்தரம் பெற்றிருக்கும் இந்நாளில், அச்சுதந்தரத்தை நாம் பெற்று மகிழ்வதற்கு வழிவகை செய்த காந்தியடிகள் இல்லை என்ற நிலையில், அவர் பிறந்ததினக் கொண்டாட்டத்தை மகிழ்ச்சியாகக் கொண்டாடுவதற்கு எப்படி மனம் வரும்? ஆனாலும், எவ்வளவோ மன வேதனையிலும் நாம் மகாத்மாவின் பிறந்ததினத்தைக் கொண்டாடத்தான் கடமைப் பட்டிருக்கிறோம். இப் பிறந்ததினத்தைக் கொண்டாடுவதன் வாயிலாக, நாம் காந்தியடிகளுடைய இலட்சியத்தையும், அவர் நமக்கு வகுத்துக் கொடுத்துச் சென்ற சிறந்த கொள்கைகளையும், நாட்டு உயர்வுக்கான நிர்மாண வேலைத் திட்டங்களையும் நினைவு கூர்ந்து நிறைவேற்ற முயலவேண்டும். அவ்வகையில் அவர் திருப்பெயரை எங்கும் ஒலிக்கச் செய்யவேண்டும்.

மகாத்மா காந்தி! இந்தப் பெயருக்குத்தான் என்ன மகத்துவம்! என்ன மந்திர சக்தி! என்ன கவர்ச்சி! என்ன பிரசித்தி! இன்று உலக முழுதும் இந்தத் திருநாமம் நாதம் செய்துகொண்டிருக்கிறது. இப்பெயர் ஒலிக்காத இடம் இல்லை; ஊர் இல்லை; நாடு இல்லை; தேசம் இல்லை. எங்கும் மகாத்மா காந்தி என்ற பெயர் முழங்கிக்கொண்டிருக்கிறது. எல்லா மக்களின் உள்ளங்களிலும் குடிகொண்டிருக்கிறது. உலகம் தோன்றியநாள் தொட்டு, எத்தனையோ மகான்கள், அறிஞர்கள், வீரர்கள் தோன்றித் தங்கள் அரும்பெருஞ் செயல்களாலும், தியாகங்களாலும் புகழை நிலைநாட்டிப் பிரசித்தி பெற்றிருந்தாலும், மகாத்மா காந்தியைப் போன்று அகண்ட பிரசித்தியைப் பெற்றிருந்ததாகத் தெரியவில்லை. கிருஷ்ணபரமாத்மா, இராமபிரான், புத்த பகவான் முதலியவர்கள் பெரும் பிரசித்தி அடைந்திருப்பதாக நாம் அறிகிறோமாயினும், உலகமெங்கணுமுள்ள

சமய தத்துவ ஆராய்ச்சிக்காரர்கள், அறிஞர்கள் இடையே தான் அவர்களுடைய பெயர்கள் வழங்கி வந்திருக்கின்றன. சகப் பிரசித்தி பெற்ற வீரன் என்று வருணிக்கப்பட்டுவரும் நெப் போலியன் பெயர்கூட ஐரோப்பாவிலும், அவன் படையெடுத்த இதர இடங்களிலும்தான் பிரசித்தி பெற்றிருக்கிறது. அவ் வளவு ஏன்? இன்று நாம் வசிக்குங் காலத்தில் எவ்வகை யாகவோ உலகப் பிரசித்தி பெற்றுவிட்ட ஹிட்லரின் பெயர்தான் என்ன? உலக விவகாரங்களில்—அரசியலில் கவனம் செலுத்தி வரும் மக்களுக்குத்தான் ஹிட்லரைப்பற்றி ஓரளவு தெரிந்திருக் கிறதே யொழிய, மற்ற மக்களுக்குத் தெரியவே தெரியாது.

இவ்விதம் கிருஷ்ணபரமாத்மா, இராமபிரான், புத்தர் பெருமான், ஏசுகிறிஸ்து, நெப்போலியன், ஹிட்லர் முதலி யோரைப்பற்றித் தெரியாதவர்கள், அவர்களுடைய பெயர்களைக் கேட்டுக்கூட அறியாதவர்கள் எத்தனையோபேர் இன்னும் இருக்கின்றனர். ஆனால், மகாத்மா காந்தியின் பெயர் அப்படி யன்று. அவர் பிறந்து வாழ்ந்த இந்தியாவில், அறிவு தெளிந்த சிறுவர்முதல் வயோதிகர் வரை—வெளியுலகத்தையே பாராது அடுப்பங்கரையே கதியாகக் கிடக்கும் பெண்மணிகள் உட்பட அனைவருக்கும் மகாத்மா காந்தியைப் பற்றி நன்கு தெரியும். மற்றத் தேசங்களிலும் எல்லாக் கண்டங்களிலுமே அவரைக் குறித்து எல்லோருக்கும் தெரியும். உலகத்தில் இந்தியா என்று ஒரு தேசம் இருப்பதாக அறியாதவர்கள்கூட அந்நாட்டில் உதித்த மகாத்மா காந்தியைப்பற்றி அறிந்திருக்கிறார்கள். இந்தி யாவில் பிறந்த காந்தி என்று சொல்லவேண்டியது போய், காந்தி பிறந்த இந்தியா என்று சொல்லவேண்டிய நிலைக்கு வந்துவிட்டது. இதிலிருந்து மகாத்மா காந்தியின் பெயர் எவ் வளவு தூரம் பிரசித்தி பெற்றிருக்கிறது, செல்வாக்குப் பெற்றிருக்கிறது என்று தெரிந்துகொள்ளலாம்.

ஒருவர் எவ்வகையிலாயினும் பிரசித்தி பெற்றிருக்கிறார் என்றால், அவர் எத்துறையில் புகழ்பெற்றிருக்கிறாரோ அதில் பற்றுடையவர்கள்தாம் அவரை அறிந்திருப்பார்கள்; பாராட்டு வார்கள். ஆனால், மகாத்மா காந்தி இதிலும் விதிவிலக்காக இருக்கிறார். அவரைக் காங்கிரஸ்காரர்களோ இந்துக்களோ மட்டும் புகழவில்லை. எல்லா வகுப்பினரும், மதத்தினரும்,

அரசியல்கட்சியினரும் பாராட்டுகிறார்கள். படித்தவர்கள், படிக்காதவர்கள், பணக்காரர்கள், ஏழைகள், முதலாளிகள், தொழிலாளிகள், ஆஸ்திகர்கள், நாஸ்திகர்கள் அனைவரும் காந்தியடிகளை மதிக்கிறார்கள் ; போற்றுகிறார்கள்.

மகாத்மா காந்தி கோடீசுவரர் அல்லர் ; கோடீசுவரர் வழி வந்தவரும் அல்லர் ; சாதாரண செல்வரின் குமாரர்தாம். ஆனாலும், கோடீசுவரர்களும், லட்சாதிபதிகளும், அவரைச் சூழ்ந்திருந்து அவருக்கு ஏவல் செய்கிறார்கள். அவர் சர்வகலாசாலைப் பட்டங்கள் பல பெற்றவரும் அல்லர். பழைய மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறிப் பின் இங்கிலாந்தில் சட்டம் படித்துப் பாரிஸ்டர் ஆனவர்தாம் ; ஆனாலும் படேபடே பட்டதாரிகளும் மேதாவிகளும் அவருடைய பேரறிவைக்கண்டு தலைவணங்குகிறார்கள். ஆங்கிலேயர்களால்கூடப் பேசவோ எழுதவோ முடியாத அவ்வளவு இனிமையாகவும் எளிமையாகவும் ஆங்கிலத்தில் பிரசங்கஞ் செய்தும், கட்டுரைகள் எழுதியும் வந்ததைக் கண்டு அறிஞர்களெல்லாம் வியந்து பாராட்டுகிறார்கள்.

காந்தியடிகள் எந்த மதத்துக்கும் தலைவருமல்லர் ; ஆயினும் சைனம், பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் முதலிய பல மதங்களைச் சார்ந்த குருமார்கள் அனைவரும் அவருடைய ஆத்மார்த்த ஞான போதனைகளைப் பொன்னே போல் போற்றுகிறார்கள். உலகில் நிலவும் எல்லா மதங்களின் அடிப்படையான தத்துவங்களையும், நுட்பங்களையும் நன்கு அறிந்து சமரச சன்மார்க்கத்தைப் பரப்பிவரும் அவருடைய பரந்த மனோபாவத்தைக் கண்டு, சமயச்சார்புடைய அன்பர்கள் எல்லோரும் அவருக்கு வணக்கஞ் செலுத்துகிறார்கள்.

இவ்விதம் போற்றிப் புகழத் தக்கவாறு மகாத்மா காந்தியிடம் என்ன மகத்துவம் இருந்தது? என்ன மந்திர சக்தி இருந்தது? அவர், சிலர் சொல்வதுபோல்—நம்புவதுபோல்—தேவாம்சமா? அவதார புருஷரா? இல்லை, இல்லை. அவர் நம்மைப் போன்ற மனிதர்தாம். அவர் நம்மைப் போலவே பிறந்து, வாழ்ந்து, இறந்தார். ஆனால், அவர் மேற்கொண்டு ஒழுகிய நல்லொழுக்கமும், உயர்ந்த குறிக்கோளும், கொள்கைகளும் அவரை மற்ற மனிதர்களினின்றும் வேறுபடுத்

திக் காட்டின ; அதிமனிதராக (Super man) இலட்சிய புருஷ ர்ாக (Ideal man)ப் பிறர் அவரைக் கருதச் செய்தன.

மகாத்மா க்ாந்தி அறிவறிந்த நாளிலிருந்து சத்தியத்தை யும் அகிம்சையையும் அடிப்படையாகக் கொண்டு தம் வாழ்க்கையை நடத்திவரலானர் ; அவருடைய வாணுளில் அடுத்தடுத்து ஏற்பட்ட சத்திய சோதனைகள் அனைத்திலும் பிறழ்ந்து போகாது உறுதியாக இருந்து, வெற்றிப் பாதையை அடைந்திருக்கிருர். மிகக் கடுமையான சோதனைகள் வாழ்க் கையில் குறுக்கிட்ட காலத்திலும் அவர் சத்தியத்தையும் அகிம் சையையும் நெகிழவிட்டதில்லை என்பது அவருடைய வாழ்க்கை வரலாற்றைக் கூர்ந்து நோக்கினுல் நன்கு விளங்கும்.

“ உள்ளத்தால் பொய்யா(து) ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன் ”

என்ற தமிழ் மறைமொழிக்கு மகாத்மா காந்தி இலக்கியமாகத் திகழ்கிருர். அவர் இவ்வுலக வாழ்வை நீத்துச் சென்று எட்டு மாதங்கள் ஆகியும் அவர் நினைவு எல்லோருடைய உள்ளங்களி லும் எள்ளளவும் நீங்காது, பசுமையாக இருந்து வருகிறது. இப் பெருநிலைக்கு அவரது சத்திய பலமும் அகிம்சா சக்தியும் தான் காரணம் என்பதை நாம் அறிய வேண்டும். அவருடைய இப் பிறந்ததினவிழாவில் தமிழராகிய நாம் அனைவரும் காந்தி யடிகளின் இத்தத்துவ உண்மையை முன் எப்போதையும்விட நன்கு உணர்ந்து மேற்கொண்டொழுக முயல்வோமாக.

---

# 3. அமெரிக்காப் பிரயாணம்

[டாக்டர் திரு. ஆர். கே. சண்முகம் செட்டியார், பி. ஏ., பி. எல்., டி. லிட்.]

சில தினங்களுக்கு முன்பு என்னுடைய நண்பர் ஒருவர், என்னைச் சந்தித்தபோது, ‘நீங்கள் அமெரிக்காப் போயிருப்ப தாகக் கேள்விப்பட்டேனே! இதற்குள் திரும்பி வந்துவிட்டீர் களா?’ என்று கேட்டார். ஆம்! இரண்டு மாதங்களுக்குள் இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்குப் புறப்பட்டுப் போய், அங்கே ஒரு முக்கிய வேலையை முடித்துக்கொண்டு, ஊருக்குத்

திரும்பியாய்விட்டது. சாதாரணமாக இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்குப் போய் வருவதென்றால், போகவும் வரவும் 40 நாட்கள் கடற் பிரயாணம் செய்யவேண்டும். இப்போதோ வென்றால், இந்தியாவை விட்டால் மூன்று நாளில் அமெரிக்கா, கோயமுத்தூரிலிருந்து டில்லிக்குப் போவதற்கு எவ்வளவு நாளாகின்றதோ, அவ்வளவு நாள்தான் கராச்சியிலிருந்து அமெரிக்காப் போவதற்கும். விஞ்ஞானத்தின் மகிமை உலகத்தையே சிறிதாக்கிவிட்டது.

சென்ற ஜூன்மாதம் ஒருநாள் காலை 8 மணிக்கு நான் கோயமுத்தூரில் என் வீட்டிலிருந்தபோது, கவர்னர் அவர்களுடைய ஆபீசிலிருந்து டெலிபோனில் என்னைக் கூப்பிடுவதாகச் செய்தி வந்தது. என்னவென்று விசாரித்ததில், அமெரிக்காவில் ஓர் உலக மகாநாடு சமீபத்தில் கூடப்போவதால், அந்த மகாநாட்டிற்கு இந்திய கவர்ன்மெண்டின் பிரதிநிதிகளில் ஒருவராக நானும் போக முடியுமா என்று கேட்டார்கள். நானும் சரி என்று ஒப்புக்கொண்டேன். ஆகாயக் கப்பல் வழியாகப் பிரயாணத்திற்குத் தயாராக இருக்கவேண்டுமென்றும் சொன்னார்கள். பிரயாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை உடனே முடித்துவிட்டேன். அமெரிக்காவுக்கு ஆகாயக் கப்பல் மார்க்கமாகப் பிரயாணம் செய்வதற்குச் சாமான் தயாரிப்பது வெகு சுலபம். கோயமுத்தூரிலிருந்து சென்னைக்குப் போவதற்கு எவ்வளவு சாமான்களைக் கட்டவேண்டுமோ அதில் பகுதியும்கூடத் தேவையில்லை. அமெரிக்காப் பிரயாணத்திற்குப் படுக்கையும் உணவுப் பாத்திரமும் வெள்ளிக் கூஜாவும் வேண்டாம்; ஆகாயக் கப்பலில் 65 ராத்தல் எடைக்குமேல் எடுத்துக் கொண்டு போகமுடியாது. உடுப்புகள் அடங்கிய ஒரு பெட்டியும், சில புத்தகங்கள், பேனா, காகிதம் முதலியவைகள் அடங்கிய ஒரு சிறுபையும் இருந்தால் போதும். படுக்கை அவசியமில்லையா என்று ரயில்வே ஸ்டேஷனில் ஒரு நண்பர் கேட்டார். மேல்நாட்டுப் பிரயாணங்களுக்கு இது அவசியமில்லை. கப்பலோ, ரயிலோ, ஓட்டலோ, நண்பர்களுடைய வீடுகளோ எங்கே போனாலும் படுக்கைவசதி அவ்விடமே இருக்கும். உடுப்புகளின் எண்ணிக்கையும் அதிகமாக வேண்டியதில்லை. ஓர் ஊருக்குக் காலை நேரத்தில் போய்ச் சேர்ந்தவுடன், அழுக்

கடைந்த ஆடைகளைச் சலவைக்குக் கொடுத்தால் வெகு நேர்த்தியான சலவையுடன் அன்று மாலையிலேயே ஆடைகள் திரும்பி வந்துவிடும். இந்த வசதி யிருக்கும்போது, சில ஆடைகள் மட்டும் கைவசமிருந்தால் போதும்.

அமெரிக்காவுக்குப் போகும் விமானம் கராச்சியிலிருந்து புறப்படுகின்றது. சென்னையிலிருந்து கராச்சிக்குப் போக, விமான வழியாகவே ஏற்பாடு செய்திருந்தார்கள். ஒருநாள் பகல் 2 மணிக்குச் **சென்னை**யிலிருந்து புறப்பட்டேன். அன்று மாலை 5 மணிக்கெல்லாம் **ஐதராபாத்** போய்ச் சேர்ந்துவிட்டேன். அன்றிரவு ஐதராபாத்தில் தங்கிவிட்டு மறுநாள் காலை $7\frac{1}{2}$ மணிக்குப் புறப்பட்டதும், பகல் $12\frac{1}{2}$ மணிக்குப் **பம்பாய்** வந்தாகிவிட்டது. பம்பாயிலிருந்து பகல் 2 மணிக்குப் புறப்பட்டு மாலை 5 மணிக்குக் **கராச்சி**யும் சேர்ந்தாகிவிட்டது. மறுநாள் காலை அமெரிக்காவுக்குப் புறப்படும் விமானத்தில் நானும் என்னுடனிருந்த நண்பர்களும் ஏறினோம். 25 பிரயாணிகள் உட்காரும்படியான பெரிய விமானம் அது. விமானத்தை ஓட்டும் மாலுமி, இஞ்சினியர் முதலியவர்கள் 6 பேர். இதல்லாமல், ஏராளமான சாமான்களும் நிரம்பியிருந்தன. இவ்வளவு பாரத்தையும் எடுத்துக்கொண்டு, அதிகாலையில் 7 மணிக்குக் கராச்சியை விட்டுக் கிளம்பிற்று விமானம்.

ஆகாயத்திலே தரைமட்டத்திலிருந்து 12,000 அடிகளுக்குமேல் விமானங் கிளம்பிவிட்டது. கடலையும், மலைகளையும், பிரதேசங்களையும் தாண்டி மேகமண்டலத்திற்குமேல் விமானம் மணி ஒன்றுக்கு 225 மைலுக்கு மேலே போய்க்கொண்டிருந்தது. **கராச்சி**யை விட்டதும், அடுத்த தங்கல், அரேபியாவின் கோடியிலுள்ள **ஏடன்** பட்டினத்தில். கராச்சியிலிருந்து இந்தப் பட்டினம் 1500 மைல் தூரம். கப்பலில் போகவேண்டுமென்றால், 5 நாட்களாகும். காலையில் கராச்சியைவிட்டுப் பகல் சாப்பாட்டிற்கு ஏடன் சேர்ந்தாகிவிட்டது. சாப்பாட்டை முடித்துக்கொண்டு **ஏடனை** விட்டுப் புறப்பட்டதும், அன்று இரவுச் சாப்பாடு **கார்டூன்** என்னும் பட்டினத்தில். இது ஆப்பிரிக்காவின் மத்திய பாகத்திலுள்ள ஒரு முக்கிய பட்டினம்.

கார்டூன் பட்டினத்தில் இரவுச் சாப்பாடு முடிந்தவுடன், அங்கே இராத்தங்கல் ஏற்படும் என்று நினைத்திருந்தோம்.

ஆனால் இராத் தங்குவது என்னும் ஏற்பாடில்லை. இரவு 9 மணிக்கே கார்டூனிலிருந்து விமானங் கிளம்பிவிட்டது. ஆகாயத்திற் பறப்பதற்குப் பகலாயிருந்தாலென்ன, இரவாயிருந்தாலென்ன? ஆகாயத்தில் விமானத்திலிருக்கிறோம், 12,000 அடிகளுக்குக் கீழ் ஆப்பிரிக்கா கண்டத்தின் அடர்ந்த காடுகளும் விரிந்த வனாந்தரங்களும், உயர்ந்த மலைகளும்! எங்கு பார்த்தாலும் பயங்கரமான இருள்! இரவு முழுதும் விமானம் போய்க்கொண்டே இருக்கிறது. நாங்கள் உட்கார்ந்திருந்த நாற்காலியிலேயே சிறிது சாய்ந்து கண் அயர்ந்தோம். விமானம் இருளில் போய்க்கொண்டிருந்தது. சூரிய வெளிச்சம் தோன்றினவுடன் கீழே பார்த்தால், ஒரே வனாந்தரம்! காலை 9 மணிக்கு ஆப்பிரிக்காவின் மேல்பாகத்திலுள்ள ஆக்ரா என்னும் பட்டினத்தில் விமானம் இறங்கிற்று. கார்டூனிலிருந்து ஆக்ராவுக்கு 2300 மைல் தூரம். இவ்வளவு தூரத்தையும் ஒரே இரவில் கடந்தாகிவிட்டது.

ஆக்ராவைவிட்டால், அதற்குமேல்புறம், அட்லாண்டிக் கடலைத் தாண்டவேண்டும். ஒருகரையில் ஆப்பிரிக்காக் கண்டம், மறுகரையில் தென் அமெரிக்காக் கண்டம். இவை இரண்டிற்கும் நடுவில் 2800 மைல் ஒரே கடல் மயம்! இந்தக் கடலின் மத்தியில் அசென்ஷன் என்னும் ஒரு சிறிய தீவு உண்டு. ஆக்ராவிலிருந்து அசென்ஷன் தீவுக்கு 1300 மைல். பகலில் ஆக்ராவை விட்டவுடன் கடலைத்தாண்டி, அந்தத் தீவுக்கு அன்று மாலையிலேயே வந்தாகிவிட்டது! அன்றிரவு அந்தத் தீவில் பட்டாளங்கள் இருக்கும் சிறிய குடிசைகளில் நாங்களும் தங்கினோம். மறுநாள் காலை அசென்ஷன் தீவிலிருந்து புறப்பட்டுத் தென் அமெரிக்காவில் உள்ள நெட்டால் என்னும் பட்டினத்தைச் சேர்ந்தோம். தென் அமெரிக்காவிலிருந்து வட அமெரிக்காவுக்கு ஒரே நாளில் பிரயாணம் முடிந்துவிட்டது.

சனிக்கிழமை காலை 7 மணிக்குக் கராச்சியிலிருந்து புறப்பட்டோம். செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு அமெரிக்காவிலுள்ள மியாமி என்னும் பட்டினத்தை அடைந்தோம்.

மூன்று நாளில், ஆசியாக் கண்டம், ஆப்பிரிக்காக் கண்டம், அமெரிக்காக் கண்டம் ஆகிய மூன்று கண்டங்களையும், இரண்டு பெரிய கடல்களையும் கடந்து பிரயாணத்தை முடித்தாகிவிட்டது.

ஆகாயக் கப்பலின் மகிமையால் உலக சரித்திரமே மாறு பாடடையும். மனித வாழ்க்கையும் மனப்பான்மையும் புரட்சி யடையும். இந்தியாவிலிருந்து ஆப்பிரிக்காவுக்கு ஒரே நாளில் போவதென்றால், இந்தியர்களும், ஆப்பிரிக்கர்களும் அண்டை வீட்டார் போல் ஆகிவிட்டார்கள்! உலக மக்கள் எல்லோரும், ஒரு நாட்டின் மக்களைப்போன்ற நிலைமைக்கு வந்துவிட்டார்கள். 'மக்கள் எல்லோரும் ஒரு கடவுளின் புதல்வர்கள்' என்னும் தத்துவம், விஞ்ஞானத்தின் மகிமையால் வாழ்க்கையின் உண்மை யாகவே ஆகிவிட்டது.

---

# 4. ஆவூர் மூலங்கிழார்

[வித்துவான் திரு. க. நயினார் முகமது]

## 1. கல்வியும் மணமும்

**ஆவூர் :**—ஆவூர் என்பது சோழ நாட்டுச் சிவத்தலங்களுள் ஒன்று. அது கும்பகோணத்துக்குத் தென்மேற்கே நான்கு கல் தொலைவிலுள்ள பட்டீசுவரத்துக்குத் தென்மேற்கில் நான்கரைக் கல் தொலைவில் உள்ளது. அது, கி. பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஞானசம்பந்தரால் மிகவும் சிறந்த சிவத்தலமென்று பாராட்டப்பட்டுள்ளது. அங்குள்ள சிவன் கோவிலுக்குப் 'பசுபதி ஈசுவரம்' என்பது பெயர். சம்பந்தர் காலத்தில் ஆவூரில் இசை நடனக் கலைகள் நன்கு வளர்ந்து வந்தன என்பது தெரிகிறது. இக்குறிப்பினால் ஆவூர், சிறந்த கல்விமான்களும் கலைவாணரும் நிரம்பி இருந்த பழம்பதி என்பதை உணரலாகும். ஆவூர் காவிரியாற்றுப் பாய்ச்சலைப் பெற்றிருப்பதால் செழும் பதியாகும்.

**மூலன் :**—**மூலன்** என்ற பெயர் மூல நட்சத்திரத்திற் பிறந்த காரணத்தால் இடப்பட்ட பெயராகும். இங்ஙனம் பெயர்கள் இட்டழைத்தல் பண்டை மரபாகும். நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவர் **திருமூலர்** எனப் பெயர் பெற்றிருந்தனர். திருவாங்கூர்ச் சீமையை ஆண்டுவரும் சித்திரைத் திருநாள் மகாராஜா அவர்களின் முன்னோர் ஒருவர் '**மூலம்** திரு

நாள் மகாராஜா' என்ற பெயருடன் இருந்ததைக் காண்க. ஆதலின், இப்பெயர் இக்காலத்திலும் வழக்கில் இருத்தலை அறியலாம்.

**கிழார் :—கிழார்** என்பது வேளாளர்க்குரிய பெயர். மல்லி **கிழான்,** அம்பர் **கிழான்** நாகன், வல்லங் **கிழான்** மாறன் என வரும் பண்டைப் பெயர்களையும் காண்க. 'கிழார்' என்பது 'உரிமை உடையவர்' என்னும் பொருள் பட்டுப் பின்பு நிலவுரிமை யுடைய வேளாளரைக் குறித்ததுபோலும்! எனவே, 'ஆவூர் மூலங் கிழார்' என்பதற்கு 'ஆவூரைச் சேர்ந்த மூலன் என்ற பெயருடைய வேளாளர்' என்பது பொருளாகும்.

**கல்விப் பயிற்சி :—**ஆவூர், பல கலைகட்கும் இருப்பிடமாக இருந்ததால் அங்குச் சான்றோர் பலர் வசித்திருந்தனர் என்பது வெளிப்படை. அச் சான்றோருள் ஒருவர்க்குச் செல்வ மைந்தராகப் பிறந்தவர் நம் மூலங்கிழார் ஆவர். இவர் ஆவூரிலேயே இருந்த சிறந்த தமிழ்ப்புலவர் ஒருவரைஅடுத்து, இலக்கண, இலக்கிய நூல்களை முறையாகப் படித்துச் சில ஆண்டுகளில் நிறைந்த புலமை பெற்றனர்; நினைத்தவுடன் பைந்தமிழ்ப் பாக்களைப் பாடும் வன்மை பெற்றிருந்தனர். புலவருடைய தமிழ்ப் புலமை, ஒழுக்கம், தெய்வ பக்தி முதலிய நற்பண்புகளைக் கண்ட சான்றோர் அவரை அறிஞராகக் கொண்டு பழகிவந்தனர். புலவர் அச்சான்றோர் கூட்டத்திற் சேர்ந்து சமயம், அரசியல் முதலிய பிற துறை அறிவையும் பெற்றுச் சான்றோராய்த் திகழ்ந்தனர்.

**இல்லறம்:—**மூலங்கிழார் உரிய வயது வந்தவுடன், 'ஒத்த கல்வியும் ஒத்த குணமும் ஒத்த பண்பும்' உடைய நங்கையார் ஒருவரை மணந்துகொண்டார். அவ்வம்மையார் கணவர் கருத்துப்படி நடந்துவந்த காரிகையார் ஆவர்; வருவாய்க்குத் தக்கவாறு குடித்தனம் செய்யும் கொள்கையினர்; அடக்கம், அமைதி முதலிய நற்குணங்கள் நிறைந்தவர். இத்தகைய நற்குண-நல்லொழுக்கம் கொண்ட நங்கையாருடன் நற்றமிழ்ப் புலவர் இல்லறம் என்னும் நல்லறத்தை நன்கு நடத்தலாயினர். சில ஆண்டுகளில், அவர்கள் அன்பினை வளர்க்கவும், இல்லற இன்பத்தைப் பெருக்கவும் ஓர் [1] ஆண்மகவு பிறந்தது. பெற்றோர், அதற்கு

---

[1] இவ் வாண்பிள்ளையே **பெருந்தலைச் சாத்தனார்** என்ற சங்ககாலப் புலவராவர்.

அக்காலத்துத் தெய்வப் பெயர்களுள் ஒன்ருன '**சாத்தன்**' என்பதை இட்டு வழங்கினர்.

**வறுமைப் பிணி:**—கல்வியறிவு உடையவர் செல்வம் உடையராய் இராமையும், செல்வராவாரிடம் கல்வி மிகுதியாக விளங்காமையும் பண்டு தொட்டே இருந்துவரும் உலகியற்கை ஆகும். இதனுற்ருன் பேரரசர், சிற்றரசர், பிரபுக்கள் போன்ருரைப் புலவர் நாடவேண்டியவர் ஆயினர்; அவர்களைப் பாடி அவர்கள் பால் பரிசுபெற்று வாழலாயினர். இங்ஙனம் புலவர், அரசர் முதலியோரைப் பாடினமையாற்ருன், அரசர் முதலியோர் வரலாறுகளை நாம்அறிய முடிகின்றது. புலவர், இயல்பாகவே செல்வம் படைத்த பெருமக்களாக இருந்திருப்பாராயின், அவர்கள் தம் வீட்டை விட்டு வெளிச் சென்றிரார்; அரசர் முதலியோரைப் பாடியிரார்; அதனுல் நாமும் பண்டைத் தமிழகத்தின் வரலாற்றை இன்று அறிகின்ற அளவிலேனும் அறிந்திருத்தல் முடியாது. இங்ஙனம் பார்ப்பின், அவர்களது வறுமை நமது செல்வமாக அமைந்த தென்னலாம்.

இக் கொடிய வறுமைப்பிணி, இல்லற இன்பத்துக்குத் தடையாகும். இப் பிணி நம் ஆவூர் மூலங்கிழாரது இல்லத்திற் புகுந்தது. புலவர் வறுமையை அகற்றி, இன்ப வாழ்வு வாழ விரும்பினர்; யாரைச் சென்று பார்க்கலாம் என்று யோசிக்கலானுர். முடிவில் தமது சோணுட்டின் பெரும் பகுதியை ஆண்டுவந்த **கிள்ளிவளவன்** என்ற சோழ வேந்தனைக் காணப் புறப்பட்டார்.

## 2. புலவரும் கிள்ளிவளவனும்

**கிள்ளிவளவன்:**—இவன் உயர் குணங்கட்கு இருப்பிடமானவன்; சிறந்த கல்விமான்; கவிபாடும் ஆற்றல் பெற்றவன்; விரிந்த நோக்கமும் பரந்த சிந்தையும் உடையவன்; மிக்க வீரமும் கொண்டவன்; புலமை மிக்கவன்; ஆதலால் தமிழ்ப் புலவர்களை ஆதரித்து, அவர்களோடு நெருங்கிப் பழகிக் கவி இன்பத்தில் ஆழ்ந்து வந்தான். பாணர்—பாடினியர்—விறலியர்—கூத்தர் இவர்கட்கு வளவனது அரண்மனை மாமியார் வீடு போன்றது என்னலாம்; யார் எதனை வேண்டி வரினும் 'பெறுக' என்று சொல்லி, அவர் 'போதும்' என்று சொல்லும்வரை வரையாது

வழங்கும் வள்ளலாக விளங்கினன். இத்தகைய வியத்தகு கொடைத் திறத்தால் தமிழ்ப் புலவர் பலர் வளவனைப் பாடி வளம் பெற்றனர்; அவனைக் கண்கண்ட தெய்வமாகக் கொண்டாடினர். இங்ஙனம் இப் பெருமகனைப் பாடிய புலவர் யாவர்? ஆலத்தூர் கிழார், வெள்ளைக்குடி நாகனர், மாறோக்கத்து நப்பசலையார், கோவூர்கிழார், இடைக்காடனர், ஆடுதுறை மாசாத்தனர், ஐயூர் முடவனர், நல்லிறையனர், எருக்காட்டூர்த் தாயங்கண்ணனர் முதலிய சங்ககாலப் புலவர் பெருமக்கள் இப்பெருமகனைப் பாடிப் பேறு பெற்றோர் ஆவர்.

**புலவரும் வளவனும்:**—இங்ஙனம் தமிழ்ப் புலவர் பலரால் ஏத்தெடுக்கப் பெற்ற கிள்ளிவளவன் சிறப்பை ஆவூர் மூலங்கிழார் பலகாலும் கேள்விப்பட்டவர்; ஆதலால், அக்கொடையாளியைக் கண்டு தம் வறுமைப்பிணியைப் போக்கலாம் என்று எண்ணியவராய் உறையூரை அடைந்தார்; ஊரின் நடுநாயகமாக இலங்கிய அரண்மனையைக் குறுகினர்; வாயில் காவலர்க்குத் தமது வருகையைத் தெரிவித்தார். 'புலவர்' என்ற சொல்லைக் கேட்டதும் காவலர் உடனே வழிவிட்டனர். புலவர் அரசனிடம் அழைத்துச் செல்லப்பட்டார். அரசன் அவரை எழுந்து வரவேற்று, முகமன் கூறி, 'நீர் எங்கிருப்பவர்?' என்று பரிவோடு கேட்டான்.

மூலங்கிழார் அரசனது கேள்விக்கு விடையளிப்பவராய்,

"மலைபோன்ற மதயானைகள்மீது பலநிறக் கொடிகள் பரக்கக் கடல்போலப் பரந்து செல்லும் பெரும்படை யுடைய வேந்தே! நீ முனிந்து பார்க்கும் இடம் தீப் பறக்கும்; நீ அருளுடன் பார்க்கும் இடம் பொன் பொலியும். சிவந்த சூரியனிடத்தில் நிலவை விரும்பினும், சந்திரனிடத்தில் வெயிலை விரும்பினும்—நீ விரும்பியவாறு பெறத்தக்க வலிமை உடையவன். பொற் பூக்களை யுடைய கற்பகக் காவைத் தன் அகத்தே பெற்றுள்ள விண்ணுலக வாழ்வினரும், தாம் முன்பு செய்த நல்வினைப் பயனல் பெற்ற இன்பத்தை நுகர்கின்றனர்; ஆனல் வறியவர்க்கு ஒன்று ஈதலைப் பெற்றாரில்லை; வறிஞர் அங்குச் சென்று அவர்களை இரத்தலும் இல்லை. ஆதலின், 'வறியவர்க்கு வழங்கி, அவர்களை இன்பப் படுத்தி, அவர்களுடன் இன்பமாக வாழும் வாழ்க்கையே சிறந்தது; அது தேவலோக

வாழ்க்கையினும் மேம்பட்டது' என்ற சிறந்த கொள்கையை யுடைய நின்னைப் பகைவர் நாட்டுப் புலவரும் நாடி வருகின் றனர். நினது நாடு வற்றாத வள முடையது; "செவிலித்தாய் என்ன ஓம்பும் தீம்புனல் கன்னி" பாயப்பெற்றது. இத்தகைய நாட்டில் நினது நிழற்கண்ணே பிறந்து, நினது நிழற்கண்ணே வளர்ந்த எமது நாட்டைச் சொல்லவும் வேண்டுமோ? சொல்ல வேண்டாவன்றே!"

என்று வளவனது வெற்றிச் சிறப்பையும், வரையாது கொடுக்கும் ஈகைத் திறத்தையும், சோழ நாட்டின் சோற்றுச் சிறப்பையும், தாம் அவனது வளநாட்டினரே என்பதையும் வளமுற வகுத்துக் கூறினார்.

வளவன் தமிழ்ப் புலவன் ஆதலால், புலவர் புகன்றவற்றைக் கவனமாகக் கேட்டு மகிழ்ந்தான்; அவர் தமது நாடு இன்னது என்பதை வெளிப்படையாகக் கூறாது குறிப்பாக உணர்த்திய திறத்தையும் பாராட்டினான்; அவரைத் தன்னுடன் இருத்தி உண்பித்து, அவர்க்கு வேண்டும் பரிசில் நல்கி, சிலநாள் தன் னுடன் இருந்து போகுமாறு வேண்டினான். புலவரும் அதற்கு இசைந்து, அவனுடன் தங்கி அளவளாவிக்கொண்டிருந்தார். கற்றறிந்தார் நட்பு வளர்பிறைபோல வளர்வதன்றோ இயல்பு! வளவனுடைய புலமையும் நல்லியல்புகளும் புலவர் உள்ளத்தைக் கொள்ளைகொண்டன.

ஒருநாள் மூலங்கிழார் வளவனை வாயார வாழ்த்த விரும்பி, "மன்னர் பெருமானே, நீ பகைவரால் பாதுகாக்கப்பட்ட அரண்களை அழிப்பவன்; பகைவரைக் கொன்று குவிப்பவன்; அவர்தம் பசும்பொன்னாலான மணி மகுடங்களை அழித்துக் காலில் வீரக் கழலாகச் செய்து அணிபவன்; வலிய ஆண்மையை உடையவன். வெற்றி பொருந்திய வேந்தனே! நின்னை இழித்துக் கூறுவோர் நமன் உலகம் அடைவர்; பாராட்டிப் பேசுவோர் பொலிவு பெற்று வாழ்வர். பெருமானே, ஒரு பெண்யானையைக் கட்டும் இடத்தில் ஏழு ஆண்யானைகளைக் காக்கும் நெல் விளையத்தக்க வளநாட்டை உடையவனே! நீ எந் நாளும் புலவர்க்கு இனிய முகத்துடன் காட்சி அளிப்பாயாக! இரவலர்க்கு எளியனாக இருப்பாயாக! பறவைகட்கு அடைக் கலம் அளிக்கும் பழுத்த மரம்போலப் புலவர்க்கு அடைக்கலம்

அளிக்கும் புரவலனைப் பொலிவாயாக!'' என வாழ்த்தி, என்றும் பைந்தமிழ்ப் புலவர்களைப் பாதுகாக்குமாறு வேண்டு கோள் விடுத்தார்.

வளவன் புலவரைத் தழுவி மகிழ்ந்து, தன் அன்பைக் காட்டினன்; அவர்க்கு மேலும் பலவகைப் பொருள்களைத் தந்தான். புலவர் பெருமானை மூலங்கிழார் புரவலர் பெருமானை கிள்ளிவளவனிடம் பிரியா விடைபெற்று, ஆவூரை அடைந்தார். அடைந்து, இல்லத்திற் குடிகொண்டிருந்த வறுமை என்ற பிணிக்கு வளவன் தந்த செல்வம் என்ற மருந்தைக் கொடுத்தார். பிணி அக்கணமே அவரது இல்லத்தினின்றும் விடைபெற்று மறைந்தது. வளவனால் வளம்பெற்ற புலவர் வறுமையின்றி இல்லறத்தை இன்பமாக நடத்தி வாழலானார்.

---

## 5. இருவர் சாட்சி

[திரு. ஆர். பி. சேதுப் பிள்ளை, பி. ஏ., பி. எல்.]

தேனடைந்த சோலைத் திருநாட்டைத் துறந்து, கானகம் போந்த இராமன் அங்கு அருந்தவ முனிவர் பலரைக் காணும் பேறு பெற்றான். அன்னவருள் ஒருவர் அகத்திய முனிவர். அவர் முத்தமிழும் முழுதுணர்ந்த வித்தகர். அம்முனிவர் இராமனைக் கண்டு அகமகிழ்ந்தார்; அன்புடன் வரவேற்றார்; அறம் திறம்பிய அரக்கரை அழிப்பதற்குப் படைக்கலம் அளித்தார்; சீதையோடும், தம்பியோடும் இராமன் சிலகாலம் தங்கியிருத்தற்குக் கோதாவரி ஆற்றின் கரையிலுள்ள பஞ்சவடிச் சோலையே ஏற்றதாகும் என்றெண்ணி அதன் செழுமையை எடுத்துரைத்தார்.

முனிவர் காட்டிய வழியே மூவரும் நடந்து சென்று பஞ்சவடிச் சோலையை அடைந்தார்கள். அதன் இயற்கை அழகு அவர் கருத்தை முற்றும் கவர்ந்தது. அடுக்கடுக்காக ஓங்கி உயர்ந்த பெருமலையின் அடிவாரத்தில், மாசறத் தவழ்ந்து சென்ற ஆற்றின் அருகே, நறுமணம் கமழ்ந்து நின்றது அப் பூஞ்சோலை. இலக்குவன் அப்பருவச் சோலையில் ஓர் இனிய பர்ணசாலை கட்டி முடித்தான்.

"அனையதோர் தன்மை யால்அவ் வருவிீர் ஆற்றின் பாங்கர்ப்
பனிதரும் படிவப் பஞ்ச வடியெனும் பருவச் சோலைத்
தனியிடம் அதனை நண்ணித் தம்பியால் சமைக்கப் பட்ட
இனியபூஞ் சாலை எய்தி இருந்தனன் இராமன் இப்பால்."

பஞ்சவடிச் சோலையில் அமைந்த பூஞ்சாலையைக் கண்டாள் அரக்கர்கோன் தங்கையாகிய சூர்ப்பணகை; அச்சாலையுள் இருந்த சீதையின் அழகைக் கண்டு வியப்பும் திகைப்பும் உற்றாள்; இராமன் வெளியே சென்றிருந்த வேளைபார்த்து நலமெலாம் ஒருங்கே வாய்ந்த அந்நங்கையை அரக்கர் கோமானிடம் எடுத்துச் செல்லத் தலைப்பட்டாள். அப்பொழுது பர்ணசாலையின் புறத்தே நின்று காவல் புரிந்த இலக்குவன் விரைந்து போந்து வன்னெஞ்சக் கள்ளியின் மூக்கறுத்துச் சீதையை விடுவித்தான். இங்ஙனம் சூர்ப்பணகை இழந்த மூக்கே அரக்கர் குல நாசத்திற்கு அடிப்பலி கொடுத்தவாறாயிற்று.

மூக்கற்ற சூர்ப்பணகை இராவணனிடம் போந்து தன் குறையை முறையிட்டாள். தங்கையின் வாயிலாகப் பஞ்சவடிச் சாலையில் வாழ்ந்த சீதையின் அங்க நலங்களை அறிந்து வெறியுற்ற வேந்தன் அவளைப் பெறுதற்குரிய வழிகளை நாடினான்; மாமனாகிய மாரீசனைப் பொன்மானாக்கிப் பஞ்சவடிச் சோலையிற் போக்கினான். அம்மானின்மீது ஆசை வைத்தாள் சீதை. அதை அறிந்த இராமன் பொன்மானைப் பற்றித் தரக் கருதி அதன் பின்னே சென்றான். சென்றவிடத்தில் கணவனுக்குத் தீங்கு நேர்ந்தது என்று கருதிக் கலங்கினாள் மங்கை. அவள் பணித்தவாறே இராமன் சென்ற திசையை நோக்கி இலக்குவனும் சென்றான். ஒருவர் காவலுமின்றித் தன்னந் தனியளாய் இருந்த சீதையைக் கவர்ந்து செல்ல விரும்பி அரக்கர்கோன் பஞ்சவடிச் சாலையை அடைந்தான்; ஆயினும் கற்பின் செல்வியாய சீதையின் திருமேனியைத் தீண்டினால் தன் தலைவெடிக்கும் என்றஞ்சிப் பர்ணசாலையைப் பெயர்த்தெடுத்தான்; அதனை விமானத்தில் ஏற்றி இலங்கையை நோக்கி விரைந்து சென்றான்.

அரக்கனது வஞ்சனையறிந்த சீதை, நெஞ்சம் துடித்தாள்; நெடுங் கண்ணீர் வடித்தாள். 'என்னைக் காப்பவர் யாருமில்லையோ' என்று கதறினாள். அக்குரல்கேட்ட கழுகரசனாகிய சடாயு பறந்தோடி வந்தான். அரக்கனது விமானத்தைத் தடுத்

தான்; பெருஞ் சிறகால் அவன் தலையில் அறைந்தான். ஆயினும் அரக்கனது வாளாண்மையின் எதிரே கழுகின் தாளாண்மை செல்லாதாயிற்று. சிவன் தந்த வாளால் சடாயுவின் சிறகினை அறுத்தெறிந்து இலங்கையை அடைந்தான் இராவணன்.

பொன் மானின் பின்னே சென்ற இராமனும், அவன் பின்னே சென்ற இலக்குவனும் மாயமானாக வந்தவன் அரக்கனே என்று அறிந்து மனக்கவலை கொண்டனர்; பஞ்சவடியை நோக்கி விரைந்தோடினர்; பர்ணசாலையைக் காணாது மனம் பதைத்தனர். மானமும் சீற்றமும் அவர் மனத்தை அறுத்தன. சிறிது தூரம் கால் சென்ற வழியே நடந்து சென்று குற்றுயிராய்க் குருதியிலே குழைந்து கிடந்த கழுகரசனைக் கண்டார்; கண்ணீர் சொரிந்து நின்றார். அப்பொழுது இராவணன் இழைத்த தீமையைக் கழுகரசன் எடுத்துரைத்தான்.

"வடுக்கண்வார் கூந்த லாளை இராவணன் மண்ணி னோடும்
எடுத்தனன் ஏகு வானை எதிர்ந்துஎனது ஆற்றல் கொண்டு
தடுத்தனன் ஆவ தெல்லாம் தவத்துஅரன் தந்த வாளால்
படுத்தனன் இங்கு வீழ்ந்தேன் இதுஇன்று பட்ட தென்றான்."

சடாயுவின் வாய்மொழியால் இராவணன் சீதையைப் பர்ண சாலையோடு பெயர்த்தெடுத்துச் சென்றான் என்று அறிந்து வீரர் இருவரும் பெருந் துயரில் ஆழ்ந்தார்கள்.

சீதை யிருந்த பர்ணசாலையை அசோக வனத்தில் இறக்கி வைத்தான் இராவணன். அதனைச் சுற்றி அரக்கியர் பல்லாயிரவரைக் கண்ணும் கருத்துமாகக் காவல் புரியப் பணித்தான். கருமனத் தரக்கிய ரிடையே, மாற்றாத ஆடையும், மாசடைந்த மேனியும் உடைய சீதை, ஊண் உறக்கமற்று, எண்ணரிய நலம் வாய்ந்த இராமனையே எண்ணியெண்ணிக் கண்ணீர் வடித்துக் கடுந்தவம் புரிந்திருந்தாள். இத் தவக்கோலத்தைக் கண்டனன் இராம தூதனாய அநுமன்; ஆனந்தமுற்று ஆடினான்; ஆண்டும் ஈண்டும் பாய்ந்து ஓடினான்.

"பேணநோற் றதுமனைப் பிறவி பெண்மைபோல்
நாணம்நோற் றுயர்ந்தது நங்கை தோன்றலால்
மாணநோற் றீண்டிவள் இருந்த வாறெலாம்
காணநோற் றிலன்அவன் கமலக் கண்களால்."

என்று மனமுருகிப் பாடினான்.

காவல் புரியும் அரக்கியர் கண்ணயர்ந்து உறங்கும் வேளை பார்த்து அநுமன் சீதையின் முன்னே தோன்றினன்; துவண்டு நின்று தொழுதான்; இராம தூதன் என்று தன்னை அறிவித்தான்; தலைவன் சொல்லி அனுப்பிய அடையாள மொழிகளைத் தெரிவித்தான். அநுமனது அன்பின் திறத்தையும் ஆற்றலையும் அறிந்த சீதை இராவணன் இயற்றிய வஞ்சனையை அவனிடம் எடுத்துரைத்தாள். பஞ்சவடிச் சோலையில் அரக்கன் மாயமானை விடுத்தவாறும், காத்தற்குரியார் இருவரும் கையகன்ற நிலையில் பர்ணசாலையோடு தன்னை யெடுத்து வந்து சிறையிட்டவாறும் சீதை சுருக்கமாக உரைத்தாள்; அன்று முதல் அப்பர்ணசாலையிலேயே தான் இருப்பதை இராம தூதனுக்குப் பாங்குடன் காட்டினள்.

> " ஆண்டு நின்றும் அரக்கன் அகழ்ந்துகொண்டு
> ஈண்டு வைத்தது இளவல் இயற்றிய
> நீண்ட சாலை யொடுநிலை நின்றது
> காண்டி ஐய! நின் மெய்யுணர் கண்களால்."

என்று வேண்டினள். சீதை பணித்தவாறே அநுமன் சுற்றுமுற்றும் நோக்கினன். அரக்கன் ஆதரித்து வளர்த்த அசோக வனத்தின் இடையே அமைந்த பர்ணசாலை அவன் கண்ணிலும் கருத்திலும் பதிந்தது.

மீண்டும் பெருங்கடல் கடந்து அநுமன் இராமனிடம் போந்தான்; அவன் மனத்தி லமைந்த ஐயத்தையும், அருந்துயரத்தையும் அகற்றுமாறு, " கண்டனன் கற்பினுக் கணியைக் கண்களால்" என்று செவி குளிரப் பேசினன்; கருங்கடல் சூழ்ந்த இலங்கையில் கற்பின் செல்வி இருந்த கோலத்தைச் செஞ்சொற்களால் எடுத்துரைத்தான்; " ஐயனே! இலங்கை மாநகரில் காலையென்றும் மாலையென்றும் வேற்றுமை அறியவொண்ணாத விழுமிய சோலையில், இளைய பெருமாள் தம் திருக்கரத்தால் தொடுத்தமைத்த தூய பர்ணசாலையில் இருந்தாள் அருந்தவச் செல்வி" என்று இனிதுரைத்தான்.

> " வேலையுள் இலங்கை என்னும் விரிநகர் ஒருசார் விண்தோய்
> காலையும் மாலை தானும் இல்லதோர் கனகக் கற்பச்

சோலையங் கதனின் உம்பி புல்லினல் தொடுத்த தூய
சாலையின் இருந்தாள் ஐய! தவஞ்செய்த தவமாம் தையல்.''

என்னும் அழகிய கவியில் பஞ்சவடிப் பூஞ்சாலை படமெடுத்துக் காட்டப்படுகின்றது.

பஞ்சவடிச் சோலையில் இருந்த சீதையின் மெய்தீண்டி அரக்கன் எடுத்துச் சென்ருன் என்று வடமொழிக் காவியம் கூறும் முறையை மாற்றிப் பர்ணசாலையோடு அவன் மங்கையைக் கவர்ந்து சென்ருன் என்றமைத்துக்கொண்டார் கம்பர். அச் செய்தி படிப்போர் மனத்தில் மாருமல் பதிந்திருக்கும் வண்ணம் பலவிடங்களில் நயமாகக் குறிப்பிடுகின்ருர். சீதையைப் பஞ்சவடியினின்றும் இராவணன் எடுத்துச் செல்லும் பொழுது வழியிலே கண்டவன் கழுகரசன். இராம லட்சுமணர் வருமளவும் அவன் உயிர் தாங்கியிருந்து 'மண்ணோடு மங்கையை எடுத்துச் சென்ருன் இராவணன்' என்று மறவாமற் கூறினன். அதனைச் சொல்லி முடித்த பின்னர் அவன் நல்லுயிர் பிரிந்து போயிற்று. ஆதலால் சடாயுவின் மரண வாய்மொழி ஒரு சிறந்த சாட்சி. இலங்கை மாநகரிலும் சீதை பர்ணசாலையில் இருந்தாளே யன்றி அரக்கரது நிலத்தில் அடிவைத்தா ளில்லை என்பதற்கு அநுமன் திருமொழி அமைந்த சான்று. ஆகவே கடல் சூழ்ந்த இலங்கை மாநகரில் கற்பின் காவலே யன்றிப் பிறிதொரு காவல் இன்றி,

'' இரக்கமென்று ஒன்று தானே ஏந்திழை வடிவம் எய்தித்
தருக்கிய சிறையுற் றன்ன தகையள்அத் தமியள் அம்மா!''

என்று கண்டோர் வியக்கும் முறையில் சிறைச் சாலையைத் தவச் சாலை யாக்கிய சீதையின் கோலத்தை இருவர் சாட்சியால் அறிந்து இன்புறுகின்ருேம்.

# 6. உப உணவின் உபயோகங்கள்*

[திருவாட்டி. இராசம்மாள் தேவதாஸ், எம். எஸ். ஸீ.]

உணவு என்பது யாது? நம் உடலாகிய இயந்திரம் பழுதற்று இயங்கச் சக்தி யளிப்பதும், அந்த இயந்திரத்தின் பல பாகங்களும் வளருவதற்கு ஊட்ட மளிப்பதும், அவை தேய்ந்து மழுங்குங்கால் மீண்டும் புதுப்பிப்பதும், அவை தம் தொழில்களைச் சரிவரச் செய்வதைக் கண்காணிக்கும் 'Hormone' என்னும் பொருட்களைத் தருவதும், உடல் நலத்தைக் காப்பதும் ஆகிய ஐந்தொழில்களையும் செய்வது உணவாகும்.

உணவியல் வல்லார் உணவைப் பல வகைகளாகப் பாகுபடுத்தி, அவற்றின் தன்மைகளை ஆராய்ந்துள்ளனர். பிரதான உணவு, உப உணவு என்ற பாகுபாட்டின்மீது நாம் ஆராய்வோம். உப உணவு என்பதின் பொருளென்ன? நம் நாட்டின் பிரதான உணவு அரிசி. அரிசியின் இனத்திலேயே சேர்ந்த கோதுமை, கேழ்வரகு, மக்காச்சோளம் முதலிய தானியங்கள் உப உணவுகள் என்று கூறலாம். அல்லது எல்லாத் தானியங்களையும் பிரதான உணவாகக் கொண்டு, அவற்றுடன் சேர்த்து உண்ணும் காய், கனி, கீரை, கிழங்கு, கொட்டை வகைகளை உப உணவென்று கொள்ளலாம்.

உப உணவின் உபயோகத்தை உணர்வதற்கு உணவின் முக்கிய அம்சங்களை அறிந்துகொள்ளுதல் இன்றியமையாததாகும். அந்த அம்சங்களாவன :—பிசிதம் அதாவது (Protein) கொழுப்பு, மாச்சத்து, உலோகச் சத்து, உயிர்ச்சத்து முதலியன. இவற்றில் பிசிதம் உடல் வளர்ச்சிக்குத் தேவை. தினமும் $2\frac{1}{2}$ முதல் 3 அவுன்ஸ் பிசிதம் நமது உணவில் சேரவேண்டும். மாச்சத்தும் கொழுப்புச் சத்தும் உடலுக்குச் சக்தியளிக்கும் காலரிகளைத் தருவதற்கு இன்றியமையாதனவாகும். இவற்றில், நாம் கொழுப்புச் சத்தை மிகுதியாக உட்கொள்ள முடியாது. ஆகவே உணவில் முக்கியபாகம் மாச்சத்தே யாகும். அரிசியில் மாச்சத்து மிகுதியாக உள்ளது. அரிசியை நாம் மிகுதியாக உபயோகிப்பதற்குக் காரணம் இதுவே. உலோகச் சத்துக்களும் உயிர்ச்சத்துக்களும் உடல்கட்டு, வளர்ச்சி ஆகியவற்றிற்

* சென்னை அகில இந்திய வானொலியில் பேசப்பெற்றது.

கும், இன்னும் சில முக்கிய தொழில்களுக்கும் இன்றியமை யாதனவே.

முக்கிய உணவாகிய அரிசியின் தன்மையைச் சிறிது ஆராய்ந்தால்தான் உப உணவின் உபயோகம் தெளிவாகும். நமது நாட்டினர் மட்டுமன்றி உலகமக்கள் தொகையிலேயே பாதிக்கு மேற்பட்டவர்கள் முக்கிய உணவாக உண்பது அரிசி. தென்னிந்தியாவிலோ, உணவு என்றாலே அது அரிசியைத்தான் குறிக்கும் என்பது மிகையாகாது. அரிசியில் பலவகைகள் இருந்தாலும், அதன் அடிப்படைக் குணங்களும், குறைபாடு களும், எல்லா வகைகளுக்கும் பொதுவானவையே. உடல் நலத்திற்கு இன்றியமையாத பிசிதம், உலோக உப்புக்கள், உயிர்ச் சத்துக்கள் ஆகியவை அரிசியில் மிகமிகக் குறைந்த அளவில் உள்ளன. எல்லாத் தானியங்களையும்விடக் குறைந்த அளவு பிசிதங் கொண்டது அரிசியே. ஆகவே அரிசியையே பிரதான மாகச் சாப்பிடுவோர், போதிய அளவு பிசிதம் சேர்வதற்காக, அரிசியை மிகமிக உட்கொள்ள வேண்டியிருக்கிறது. இவ்வாறு மிகுதியாக அரிசியைச் சாப்பிட்டால், பருப்பு முதலிய மற்ற உணவுகளை உண்பதற்கும், உண்டாலும் அவை செரிப்பதற்கும் இடையூறு ஏற்படுகின்றது. மேலும் பெருத்த வயிறு, செரி யாமை முதலிய கோளாறுகளும் உண்டாகும். ஆனால், அரிசி யின் அளவைக் குறைத்து வேறு ஏதாகிலும் ஓர் உப உணவைச் சேர்த்து உண்ணும்போது அரிசி சிறந்த உணவாகிறது. அரிசியையே பிரதான உணவாக உண்ணும் சென்னை மாகாண மக்களிடையே குன்றிய உடல் வளர்ச்சி, உணவினால் உண் டாகும் சீர்கேடுகள் முதலியவற்றை மிகுதியாகக் காண் கின்றோம். ஆராய்ச்சிச் சாலைகளில், இவ்வுணவுக்கு 'ஏழ்மை யான மதராஸ் உணவு' என்ற ஏளனப் பெயருங் கிடைத்து விட்டது.

இனி, அரிசிக்கு உப உணவுகளாக நமக்குக் கிடைக்கும் கோதுமை, கேழ்வரகு, மக்காச்சோளம், சோளம், கம்பு முதலிய வற்றைக் காண்போம். கோதுமையைப்பற்றி இப்போது மிகுதியாகச் சொல்லவேண்டிய அவசியமில்லை. சென்னை சர்க்கார் உணவு இலாகா, மத்திய சர்க்கார் உணவு இலாகா ஆகியவற்றின் ஆதரவிலேயே கோதுமைக்குப் பலமான பிரசாரம்

நடந்து வருகிறது. பங்கீடு முறையிலும் அரிசிக்குப் பதிலாகக் கோதுமை தரப்படுகிறது. அதன் விலை அரிசியின் விலையை விடக் குறைந்தது மாகும். இவ்வளவு வசதிகள் ஏற்பட்டிருந்தும், அதை விரும்பி உண்போர் பலரில்லை. பெரும்பான்மையோர் அதை வெறுத்துப் புறக்கணித்துக் கோதுமைப் பங்கை வாங்காமலே இருந்து விடுகின்றனர். இதற்குக் காரணம் கோதுமையின் ஊட்டச் சக்தியை நாம் இன்னும் சரிவர உணராததேயாகும். பஞ்சத்தைத் தவிர்ப்பதற்காக அதை உபயோகித்துத்தான் ஆகவேண்டியிருக்கிறது என்று பொதுமக்கள் எண்ணுகிறார்களே ஒழிய அதன் நன்மைகளை உணரவில்லை. நமது நாட்டில் தேகக்கட்டிலும், வீரத்திலும் இணையற்று விளங்கும் சீக்கியரின் நிலையான உணவு கோதுமையாகும் என்பதே அதன் சிறந்த பண்புகளுக்குப் போதிய சான்றாகும். பிசிதத்திலும், உயிர்ச்சத்துக்களிலும், உலோக உப்புக்களிலும் அரிசியைவிடப் பன்மடங்கு சிறந்தது கோதுமை. முழுக் கோதுமையை உபயோகிப்பதைவிட அதை உடைத்து மாவாக்கி ரொட்டி முதலிய பண்டங்கள் சமைப்பது எளிதாகும். ஆனால் மாவை மிக்க நாட்களுக்கு வைத்திருந்தால் கெட்டுவிடும். கோதுமை மிகவும் உஷ்ணமான உணவு என்று சிலர் அஞ்சுகின்றனர். எந்தப் பிரதான உணவையும் தனியாக உண்டால் உஷ்ணம்தான் உண்டாகும். ஆனால் நாம் கோதுமையைத் தனியாக உண்ண வேண்டிய அவசியமே இல்லை. அரிசியுடனும், மற்ற பருப்பு, காய் வகைகளுடனும் உண்டால் நன்மை மிகுதியாகும்.

கேழ்வரகும் தானியங்களில் சத்து நிறைந்தது. கோதுமையை விட மிகுதியான உயிர்ச்சத்துக்கள் 'ஏ' யும் 'பி' யும் சுண்ணும்புச் சத்தும் அதில் உள்ளன. மேலும் மற்ற தானியங்களைப் போல் அதைத் தீட்ட வேண்டியதில்லை. விலையும் சாதாரண காலங்களில் மிகவும் குறைவுதான்.

சோளம், மக்காச்சோளம், கம்பு முதலிய தானியங்கள் அரிசியைவிடச் சிறிது மேம்பட்டவையாயினும் மாச்சத்தை மிகுதிப்படுத்தவே பயன்படுகின்றன. மேற்கண்ட தானியங்களனைத்தையும், காய், கீரை, கனி, பருப்பு முதலிய மற்ற உப உணவுகளின்றித் தனியாக உண்ண முடியாது. பிசித, கொழுப்பு, உலோக, உயிர்ச்சத்துக்களுக்காக, நாம் இவற்றைச்

சேர்த்துக்கொள்ளுதல் அவசியமாகும். இந்த உப உணவுகள் மாமிச உணவு என்றும், தாவர உணவு என்றும் இருவகைப் படுகின்றன. மாமிச உணவு விலங்குகளிடமிருந்து கிடைக்கின்றது. ஆனால் விலங்குகள் உண்பதே தாவர உணவுதான். ஆகவே ஊட்டத்தைத் தரும் உணவுக்கெல்லாம் அடிப்படை தாவரங்கள்தான்.

மாமிச உணவை உட்கொள்வோருக்கு மாமிசமே போதிய பிசிதத்தைத் தருகிறது. மற்றவர்கள் பருப்பு வகைகளை மிகுதியாகச் சேர்க்க வேண்டும். உட்கொள்ளும் அரிசியின் அளவில் ஐந்திலொரு பங்காவது பருப்பாக இருத்தல் வேண்டும். பருப்பு, பயறுகள், அவரை போன்ற விதைகள் முதலியன சிறந்த பிசித உணவுகள். இவை சில உயிர்ச்சத்துக்களையும் அளிக்கின்றன.

உயிர்ச்சத்துக்களைப் பெறுவதற்காகக் காய்களையும் கனிகளையும் உண்பது அவசியமாகும். மேனாட்டார் பச்சையாகவே பல காய்களை உண்கின்றனர். இங்கும் தக்காளி, வெள்ளரி, முட்டைக்கோஸ் முதலியவற்றைப் பச்சையாகச் சாப்பிடலாம். கூடிய வரையில் காய்களைச் சமைக்காமல் சாப்பிடப் பழகவேண்டும். சமைத்தாலும் மிகச் சிறிது நேரமே அடுப்பில் வைக்கவேண்டும். சமைத்த நீரை அகற்றவும் கூடாது. அரிவதற்கு முன்னரே காய்களைக் கழுவி விடவேண்டும். காய்களைப் பெரிய துண்டுகளாக நறுக்கவேண்டும். இம்முறைகளால் உயிர்ச்சத்துக்கள் மிகுதியாகக் கெடுவதில்லை.

கீரைகள் நமது நாட்டில் எளியவருக்கும் எளிதில் கிடைக்கக் கூடிய சிறந்ததோர் உணவு. சிறிதளவு சேர்த்தாலும் பெரிய நன்மை கிடைக்கிறது. அகத்தி, முருங்கை, பண்ணை முதலிய சாதாரணக் கீரைகளில் சுண்ணும்புச் சத்தும், உயிர்ச்சத்து 'ஏ' யும், 'சி' யும் மிக அதிகமாக உள்ளன. பழமில்லாத உணவு நிறைவாகாது. முக்கனியின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ள தமிழ்நாட்டவருக்கு உணவுடன் பழங்களைச் சேர்க்க வேண்டுமென்று புதிதாகக் கூறவேண்டியதில்லை.

உணவில் கொழுப்புச்சத்து சேர்வதற்காக எண்ணெய்ச் சத்து நிறைந்த கொட்டைகளையும், எண்ணெய்களையும், நெய், பால், வெண்ணெய் முதலியவற்றையும், மாமிச பதார்த்தங்களையும் சேர்க்கவேண்டும்.

உற்சாகமும் ஊக்கமும் பெற, நாம் பழக்கமாகப் பருகும் காப்பி, தேனீர் முதலிய பானங்களும், சுவையையும், மணத்தையும் பெருக்க நாம் சேர்க்கும் மசாலைப் பொருள்களும், உணவுச் சத்து இல்லாததால், உணவுகளாகமாட்டா.

இனி, ஒரு நாளைக்குத் தேவையான சக்தி எவ்வளவு என்பதைப் பார்த்தால்தான், உப உணவு எவ்வளவு உட்கொள்ள வேண்டுமென்பது புலனாகும். எவ்வளவு உண்பது என்ற அளவை வரையறுக்க உணவியல் அறிஞர் 'காலரி' என்ற அளவை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதாவது உணவை, அது தரக்கூடிய உஷ்ணத்தின் அளவால் கணக்கிடுவது. இந்த அளவுப்படி நாம் நாள்தோறும் வேலை செய்வதற்கு, 2500-3000 காலரிகள் வரை நாள்தோறும் அளிக்கக்கூடிய உணவு தேவையாகும். இதிலேயே, 2½ அவுன்ஸ் பிசிதமும், அதே அளவு கொழுப்புச் சத்தும், மற்ற சத்துக்களும் அடங்கியிருக்க வேண்டும்.

உணவுப் பங்கீடு அமுலுக்கு வந்த ஆரம்ப காலத்தில் நாளொன்றுக்கு, ஒரு ஆளுக்கு 16 அவுன்ஸ் அரிசி கொடுக்கப்பட்டது. இந்த அளவில் கிடைத்துவந்த சத்துக்கள் பின்வருமாறு: காலரிகள் 1568; பிசிதம் 1 அவுன்ஸ். மற்ற சத்துக்கள் மிகக் குறைவாக இருந்தன. ஆகவே அப்பொழுதே போதுமான சத்துக்கள் கிடைக்காமல் இருந்தன. இப்போது கிடைக்கும் 12 அவுன்ஸில் 1176 காலரிகளும், ¾ அவுன்ஸ் பிசிதமும் கிடைக்கின்றன. ஆகவே, இதனோடு போதிய சத்துக்களைப் பெற நாம் சில உப உணவுகளைச் சேர்க்கவேண்டும். 10 அவுன்ஸ் அரிசியும், 2 அவுன்ஸ் கோதுமையுமாகப் பெற்றால், காலரிகள் அதிகப்படாவெனினும் பிசிதம் 1 அவுன்ஸ் ஆகும். இதனால், தேவையான காலரிகளைப் பெற, முதலாவது மாச்சத்துள்ள உணவொன்றையும், அடுத்தபடியாகக் கொழுப்புச் சத்துள்ள உணவொன்றையும், சேர்த்த லவசியமாகும். 4 அவுன்ஸ் மக்காச்சோளமோ, 10 அவுன்ஸ் சர்க்கரைவள்ளிக்கிழங்கோ சேர்த்தால் 400 காலரிகள் மிகுதியாகக் கிடைக்கின்றன. இதனால் செலவும் மிகாது. இன்னும், கொழுப்பு, பிசிதச் சத்துக்களையும், காலரிகளையும், ஒருங்கே மிகுதிப்படுத்த நிலக்கடலை தினமும் 4 அவுன்ஸ் சேர்த்தோமானால் 600 காலரிகளும், 1 அவுன்ஸ் பிசிதமும், 1½ அவுன்ஸ் கொழுப்பும் மிகுதியாகக்

கிடைக்கின்றன. நிலக்கடலையை நன்ருக வேக வைத்துப் பின்னர்ச் சமைத்தால் அது செரிப்பது எளிதாகும்.

மேற்சொன்ன உணவுகளில், உயிர்ச்சத்துக்கள் கிடைக்க ஏதுவில்லை. ஆதலால், நாள்தோறும் காய், கிரை, பழம் முதலியவற்றைச் சேர்க்கவேண்டும். அந்தந்தப் பருவத்தில் குறைந்த விலைக்குக் கிடைக்கக்கூடிய காய்களையும் கனிகளையும் வாங்குதலே போதும். கூட, பருப்போ, பயருே சேர்த்தால், உணவின் சத்து மிகும். இதற்குமேல், பணமுள்ளவர்கள், பால், பாற்பண்டங்களையும், ஊனுண்போர், அவ்வுணவு வகைகளையும் சேர்த்துக் கொண்டால் சீருணவு சிரமமின்றிக் கிடைக்கும்.

இன்று, அரிசி பற்ருக்குறை ஏற்பட்டுள்ளதால், உப உணவுகளை மிகுதியாக உபயோகிப்பது அவசியமாகியுள்ளது. இது, நிலைமையின் நிர்ப்பந்தத்தால் ஏற்பட்டதெனினும், உண்மையில் எப்போதும் நன்மையே பயப்பதாகும். பிரதான உணவுடன் உப உணவுகள் மிகச்சேரச் சேரச்சீருணவு பெற முடிகின்றது.

---

## 7. ஊர் வாழ்க்கை

[திரு. நீ. கந்தசாமி பிள்ளை, எம். ஆர். ஏ. எஸ்.]

நமது உயிரும் உடலும் ஒன்று சேர்ந்து நிலைத்திருப்பதற்கு உணவு இன்றியமையாது வேண்டப்படுவது ஒன்றென உலகம் அறியும் ஆகலின், அவ்வுணவுப் பொருளை நல்கும் உழவுத் தொழிலின் உயர்வு சொல்லாமையே அமையும். உழவுத் தொழில் நிகழ்வதற்கு ஊர் வாழ்க்கையே இன்றியமையாததாகும். அவ்வூர் வாழ்க்கை முற்காலத்தில் எவ்வாறு நடந்ததென்று தெரிவிப்பதே இச் சிற்றுரையின் நோக்கமாகும். நாகரிகம் என நாம் கருதுகிற பலவகையான புதுமைகள் தோன்றியுள்ள இக்காலத்தில் வாழும் நம்மைப் பார்க்கினும் முற்காலத்தில் வாழ்ந்துவந்த நம் முன்னோர்கள் மன நிலையில் பெரிதும் இன்புற்றிருந்தவர்களாகவே தோன்றுகிறபடியாலும், மக்கள் வேண்டுவது இன்பம் என்பதே தெளிந்த பொருள் ஆதலாலும், அம் முன்னோர்களின் வாழ்க்கை வர

லாற்றை ஒரு சிறிது தெரிந்துகொள்வதும் பயனுடையதென்றே கருதப்படும்.

பழங்காலத்தில் ஒவ்வோர் ஊருக்கும் இன்றியமையாது வேண்டப்பட்டனவற்றுள், கோயிலும், குளம் ஆறு வாய்க்கால் முதலிய நீர்வளங்களும், ஊரார் கூடும் பொதுவிடமும் முதன்மையானவை. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையான தெய்வத் தன்மையோடு தொடர்பு படுத்தப்பட்டு மக்களால் பாதுகாக்கப் படுவனவாயின. மக்கள் தரத்திற்கேற்பக் கடவுள் நிலையும் பலதிறத்தனவாய்க் கருதப்பட்டதும் உண்டு. அன்புருவாய கடவுளும் உண்டு. அச்சமே உருவாய கடவுளும் உண்டு. மக்கள் உடல் நலத்திற்குத் தூய்மையான நீர் வேண்டப்படுவது ஆகலின், நீர் நிலைகளும் ஒருவகையான தெய்வத்தன்மையை உடையனவாகவே கருதப்பட்டன. ஒழுக்கம், உடல்நலநெறி (Sanitation) முதலிய இம்மை இன்பத்திற்கு இன்றியமையாதன எல்லாம் சமயத்தோடு இயைபு படுத்தப்பட்டிருந்தன.

ஊரிலுள்ளோர் எல்லாரும் கூடும் பொதுவிடத்திற்கு மன்றம் எனவும், அம்பலம் எனவும் பெயர். அது ஊர் நடுவே ஒரு பெரு வெளியிலே அமைந்திருக்கும் ஒரு மரத்தடியாகும். அம்மரம் பெரும்பாலும் ஆலமரமாகவே இருக்கும். ஊரில் உள்ளவர்களுடைய பெரு வழக்கைத் தீர்த்துக் கொள்வது முதல், இளஞ்சிறூர்கள் விளையாடுவது வரையில் இந்த மரத்தின் நிழலிலே நிகழ்வனவாகும். வழக்கைத் தீர்க்குங் காலத்தில் கரி கூறுவார் எவரேனும் பொய் கூறுவாராயின் அம் மரம் தளிர் வாடிப் பொய்க் கூற்றை வெளிப்படுத்தும் என்று கருதினார்கள். இது "கரிபொய்த்தான் கீழிருந்த மரம்போலக் கவின்வாடி" (கலித்தொகை) என்பதனால் விளங்கும். இம்மரத்தடியில் இளம் பருவத்தே விளையாடும் சிறுவர்கள், இயற்கை எழில் தங்கள் உள்ளத்தை இன்புறச் செய்யவும், உயர்ந்த பல கருத்துக்களும் உள்ளத்தே எழுந்து உறுதி செய்யவும் பெற்றவர்களாய்த் திகழ்ந்தார்கள். இம்மரத்தடியில் விளையாடும் சிறூர்கள் தங்களை அறியாதே அம்மரத்திடத்து ஒருவகைப் பற்றுடையவர்களானார்கள் என்பது,

> "ஊன்விளை யாடும் வைவேல் உறுவலி சிந்தித்து எற்பத்
> தான்விளை யாடி மேனாள் இருந்ததோர் தகைநல் ஆலத்

தேன்விளை யாடும் மாலை அணிந்துபொற் பீடம் சேர்த்தி
ஆன்விளை யாடும் ஐந்தூர் அதன்புறம் ஆக்கி னானே''

என்னும் சீவகசிந்தாமணிச் செய்யுளால் விளங்கும். இம்மரத்தின் நிழல் பயன்படுவதைக் கண்ட சிறுர், தாமும் அவ்வாறே பயன் பட வேண்டும் என்னுங் கருத்தைக் கொண்டனர்; தன்னைக் குறைப்பார்க்கும் நிழல் கொடுக்கும் தன்மையைக்கொண்டு, தமக்குக் கெடுதி செய்தவர்க்கும் தாம் நன்மையே செய்ய வேண்டும் என்னும் பாடத்தைப் படித்தனர். பெருமரம் வலி யிழந்த காலத்து அதன் விழுதுகள் பலவகையானும் நிலத்தில் காலூன்றி நின்று பாதுகாப்பதைக் கண்டு, தாமும் தமது குடியோ நாடோ நலிவெய்தின் தாங்கல் கடன் என்று ஓர்ந்து கொண்டார்கள்.

"தூங்குசிறை வாவலுறை தொன்மரங்க ளென்ன
ஓங்குகுலம் நையஅதன் உட்பிறந்த வீரர்
தாங்கல்கட னாகும்தலை சாய்க்கவரு தீச்சொல்
நீங்கல்மட வார்கள்கடன் என்றெழுந்து போந்தான்''
(சீவக சிந்தாமணி)

இவ்வாறே பற்பல உயர்ந்த நெறிகளை நமது முற்காலத்து ஊர்ச் சிறுவர்கள் எழுத்தறியாத இளம்பருவத்திலேயே கற்று மன வுறுதி அடைந்து பெரும் வீரர்களாய்த் திகழ்ந்து தமக்கும் தம் நாட்டுக்கும் பெருமையை நாடுவார் ஆயினர்.

முற்காலத்தில் நம் ஊர்களில் கைத்தொழில் யாவும் கவின் பெற விளங்கின. நம் மனத்தாலும் கருதுதற்கு இயலாத மெல் லிய ஆடைகளை நெய்தார்கள். அவ் ஆடைகளைப் பற்றிப் பழம் புலவர்கள் கூறும்போது, புகையைப் போன்ற மாசில் தூவுடை என்றும், மூங்கில் தாளைப் போன்ற அறுவை என்றும், பாம்பின் சட்டை உரிக்கப்பட்டது போன்ற அறுவை என்றும், இந்திர கோபம் என்னும் பூச்சி போன்ற சாயம் தோய்க்கப்படாமலே நிறம் அமைந்த துகில் என்றும் பல படியாகக் கூறினர்.

உழவுத் தொழிலே தலைசிறந் திருந்தது. தங்கள் முயற்சியால் வேலி ஒன்றுக்கு ஆயிரக் கலக் கணக்கில் கண்டுமுதல் செய் தார்கள்.

வாணிபம் செய்பவர்கள் தங்கள் பொருளையும் பிறர் பொருளையும் ஒன்றாகவே கருதித் தொழில் நடத்திப் பெரும் பொருளை ஈட்டினர். பெண்மக்கள் வீண் செலவின்றியும், விருந்தினரைப் புறந்தருவதில் குறைபாடின்றியும் விளங்கினார்கள். பாலும் தயிரும் நெய்யும் விற்ற பணத்தைக் கொண்டு தங்களுடம்பில் அணிய, அணிகலங்கள் செய்வதற்குப் பசும் பொன் வாங்காமல் பயன் தரத்தக்க கறவைகளை வாங்குவார்கள் என்று ஒரு பழஞ்செய்யுள் கூறுகின்றது.

இனி, எவ்வாறு ஊர் அலுவல்கள் நடைபெற்றுவந்தன என்பதைப் பார்ப்போம்: ஒவ்வோர் ஊரிலும் பண்டு ஒவ்வோர் அவை இருந்தது என்றும், அந்த அவையிலுள்ள உறுப்பினரை அவ்வூரில் உள்ளவர்களே தேர்ந்தெடுப்பது வழக்கம் என்றும் தெரிகிறது. அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுவதற்கு உரியவர்கள் நல்ல நூல்களைக் கற்றவர்களாகவும், தூய வாழ்க்கையை உடைய வர்களாகவும், கால் வேலி நிலமும் சொந்த மனையும் உடையவர்களாகவும், 35 வயதுக்கு மேல் 75 வயதுக்கு உட்பட்டவர்களாகவும் இருக்க வேண்டும். பிறர் பொருளைக் கவர்ந்தோரும், ஊர்க் குற்றப் பதிவுப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டோரும், கள்ளக் கையெழுத்து இட்டவரும், ஏதேனும் குற்றம் செய்து அதனால் கழுதைமீது ஏற்றப்பட்டவரும், ஏதேனும் கையூட்டுப் (லஞ்சம்) பெற்றுப் பொதுக் காரியங்களுக்கு இடையூறு செய்தோரும், அவர்களுடைய உறவினரும் எக்காலத்தும் கிராம சபையில் உறுப்பினராகும் தகுதியுடையர் ஆக மாட்டார்கள். உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக ஊர்களில் கூட்டம் நடைபெறும்; அக் கூட்டத்தில் ஊரகத்திலுள்ள வகுப்பார் எல்லோரும் கூடி, அவரவர் வகுப்புக்குத் தகுதி உடையவர்களில் எவரெவரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று கருதுகிறார்களோ அவர்களுடைய பெயரை ஓர் ஓலை நறுக்கில் எழுதி, அச் சபை நடுவே வைக்கப் பெற்றிருக்கும் ஒரு குடத்தில் போடுவார்கள். இந்த நறுக்குகளைப் போடுவதற்கு முன்பு அக் குடத்தில் ஒன்றும் இல்லையென, அக் கூட்டத்தில் உள்ள வயதில் முதிர்ந்தார் ஒருவர் கவிழ்த்துக் காட்டுவார். கூட்டத்தில் உள்ளார், தங்கள் தங்கள் நறுக்குகளைக் குடத்தில் போட்ட வுடன், குடத்தைக் குலுக்கி, அங்குள்ள அறியாச் சிறுவன்

ஒருவனைக் கொண்டு ஊர்ச் சபைக்கு எத்தனை உறுப்பினர்கள் வேண்டுமோ, அத்தனை நறுக்குகளை எடுக்கச் சொல்லுவார்கள். இவ்வாறு எடுக்கப்பட்ட உறுப்பினர்கள் தாம், அந்த ஊர்ச் சபையார் ஆவார்கள். இவ்வாறு கிராம சபை உறுப்பினர்கள் ஒவ்வோர் ஆண்டும் தெரிந்தெடுக்கப்படுவார்கள். மூன்று ஆண்டுகளுக்குள் எந்தச் சபையிலாவது உறுப்பினராக இருந்தவரை எடுக்கவே மாட்டார்கள். ஒவ்வோர் ஊர்ச் சபையையும் பல உட்பிரிவுகளாகப் பிரித்து ஊர் அலுவல்களையும் பிரித்துக் கொண்டு பார்த்து வருவார்கள்.

தோட்டவாரியம், ஏரிவாரியம், பொன்வாரியம், சம்வற்சர வாரியம் என்பன சில உட்சபைகளின் பெயர். சம்வற்சரவாரியர் என்பவர் நியாயவிசாரணை செய்வோர். ஏரிவாரியர் என்போர் நீர் நிலைகளைப் பாதுகாப்பவர்.

ஒவ்வோர் ஊரிலும் கணக்கு எழுதுவதற்கு ஒரு கணக்கனை வைத்திருந்தார்கள். ஊர்ச் சபைகள் ஒழுங்குற நடைபெறுகின்றனவா என்று பார்ப்பதற்கு அரசனால் அனுப்பப்படும் மேற்பார்வையாளரும் உண்டு.

நிலங்களை விற்பது வாங்குவது முதலியவற்றிற்கு ஆவணம் எழுதப்பட்டிருந்தன. அவ்வாவணங்கள் காப்பிடப்பட்டும் (ரிஜிஸ்டர் செய்யப்பட்டும்) இருந்தன. என்றும் பயன்படக் கூடிய ஆவணங்களைக் கோவில் சுவரில் பொறித்து வைத்தார்கள். நிலத்தைச் செவ்வையாக அளந்து, தரத்திற் கேற்ப வரிவிதித்திருந்தனர். நம் முன்னோர்கள் நில அளவில் மிகவும் நுட்பமான அளவு வரையில் அளந்திருக்கிறார்கள். ஒரு வேலியில் (1/52428800000) ஐயாயிரத்து இருநூற்று நாற்பத்திரண்டு கோடியே எண்பத்தெட்டு லட்சம் பங்கு வரையில் அளந்திருக்கிறார்கள். இக்காலத்து நில அளவுக்கு, நம் முன்னோர்கள் அளவு எந்த வகையிலும் குறைந்ததென்று யாரும் கூற இயலாது.

ஒவ்வோர் ஊரிலும் ஒவ்வொரு பள்ளிக்கூடமும் ஆசிரியரும் உண்டு. ஆசிரியராக உள்ளவர்கள் கல்வியாலும் ஒழுக்கத்தாலும் மாணக்கருடைய அன்பையும் பெற்றோருடைய நன்மதிப்பையும் பெற்றிருந்தார்கள். கிராமத்தில் ஒற்றுமை மிகுந்திருந்தது. ஒருவருக் கொருவர் மனத் தாங்கல் உடையவர்கூடப் பொது நன்மைகளில் ஒற்றுமையாகவே இருந்து வேலை செய்

தார்கள். இப்போது செல்வம் என்று மதிக்கப்படும் பொருளீட்டத்தை அவர்கள் அடைந்திராவிட்டாலும் சிந்தையின் நிறைவாகிய செல்வத்தை அடைந்து, 'நல்லம் யாம்' என்னும் நடுவு நிலைமையால் தமக்கும் பிறர்க்கும் இன்பத்தைத் தேடி உயர்ந்த நிலையில் வாழ்ந்து வந்தனர். அவர்களுடைய நற்செயல்களும் உயர்ந்த நோக்கங்களும் நம்மை நல்வழியில் ஊக்குவனவாக.

---

# 8. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

[டாக்டர் திரு. அ. சிதம்பரநாதச் செட்டியார், எம். ஏ., பி. எச். டி.]

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே; நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே,' என முழங்கினர் கவிஞர் **சுப்பிரமணிய பாரதியார்.** 'ஒற்றுமையாக உழைத்திடுவோம்; நாட்டில் உற்ற துணைவராய் வாழ்ந்திடுவோம்,' என்றார் **கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை.** இறக்கும் தறுவாயில் இருந்த ஒரு முதியவர் தம் பிள்ளைகளை அழைத்து, விறகை ஒவ்வொன்றாகக் கொடுத்தும், கட்டாகக் கொடுத்தும், ஒடிக்குமாறு பணித்தார் என்றும், ஒன்றை ஒடித்த பிள்ளைகள் கட்டினை முறிக்கக் கூடாத காரணத்தை வைத்து, அவர்களுக்கு ஒற்றுமையுபதேசம் செய்தார் தந்தையார் என்றும் சொல்லப்படுகிற கதை நம்மில் பலர் அறிந்ததே. **திருவள்ளுவரும்** ஒற்றுமையின் அருமையை ஓர் உதாரணமுகத்தான் விளக்கியுள்ளார்; ஒரு பெரிய வண்டி இருக்கிறது. அது வலிமை மிக்கதே; எனினும், மயில்தோகையை நிரம்பநிரம்ப வாரி வாரிப் போட்டுக்கொண்டே யிருந்தால், அவ்வண்டியும் தாங்காது அச்சு ஒடியும். தோகையோ, மிகவும் நொய்ம்மையானது. வண்டியின் அச்சோ, மிகவும் பருத்து வலிமையுடையதாய் உள்ளது. எனினும், மேலும் மேலும் திரண்டு கூடித் தோகைகள் வருவதால், அச்சு இற்றுப் போகிறது. அதைப் போலவே, நாம் எத்துணை வலியராயினும், நம் பகைவர் சேர்ந்துசேர்ந்து கூட்டமாக வருவாரேயாயின், நமது வலிமை பெரியதாயினும் பயனின்றிப் போம். நாமே ஒற்றுமை

மிக்குப் பலரையும் நம்மோடு சேர்த்துக்கொள்ளுவோமாயின், வரும் பயன் மிகப் பெரிதன்றோ? இவற்றையெல்லாம் உணர்த்த எடுத்துக்கொண்ட வள்ளுவப் பெருந்தகையார், "பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம், சால மிகுத்துப் பெயின்" என்று வழங்கியருளினார்.

நம் சுற்றத்தாரேயன்றி, நம் ஏவல் செய்வார் தாமும் நம்மோடு இயைந்தவராய் இருத்தல் வேண்டும். நாமொன்று கருத, நம் வேலைக்காரர் பிறிதொன்று நினைத்துச் செய்து நமக்கு எள்ளல் வாங்கித் தருவாராயின், அவ் வேலைக்காரரால் நமக்கு உதவியுண்டாவதற்கு மாறாகப் பல சங்கடங்கள் வந்து சேரும். சங்கடங்கள் ஏற்படின், கவலையுண்டாவது நிச்சயம்; கவலையேற் பட்டாலோ, கருமயிர் நரைத்தல் ஒருதலை. எனவே, நல்ல வேலையாட்கள்—நம்மோடு ஒற்றுமைப்பட்ட வேலையாட்கள்—இல்லையேல், நாம் விரைவில் மூப்பு உற்றவர் போன்று தோன்றுவோம். இதன் உண்மை, பழந்தமிழ்ப் பாடல் ஒன்றாலும் அறியப் படுகிறது. முன்னாளில் பிசிராந்தையார் என்ற ஒரு புலவர் இருந்தார். அவருக்கு வயது பல ஆகியும், நரை தோன்ற வில்லை. புலவர் சிலர், அவரை ஒரு நாள் அதற்குக் காரணம் கேட்டனர். அவர் சொல்லிய காரணங்களுள் ஒன்று, 'யான் கண்டனையர் என் இளையரும்,' என்பது. அதன் கருத்து, 'நான் நினைக்கிறபடியே நினைத்து என்னுடைய ஏவல் செய் வாரும் என்னோடு இயைந்து செயல்களைப் புரிகின்றனர். என் இல்லத்தில் சண்டை தொல்லைகள் இல்லை.' என்பதாகும்.

இனி, குடும்பத்தாரிடையே பூசலுங் கலாமும் விளையக் கூடிய சமயங்களில், புலவர் சிலர் ஒற்றுமை உபதேசம் செய்து தடுத்துள்ளனர் என்பதை அறிகிறோம். நலங்கிள்ளி என்னும் சோழனும் நெடுங்கிள்ளி என்னும் சோழனும் தாயத்தார்கள். அவருள் நலங்கிள்ளி மிக்க வீரம் வாய்ந்தவன்; சேர பாண்டிய அரசரை வென்று, அவர் தம் வஞ்சியென்னும் ஊரையும், மதுரை யென்னும் ஊரையும் புலவர்க்கு வழங்கத்தக்க ஆற்றலுடை யவன். அவன் ஒருநாள் உறையூரை முற்றுகையிட்டான். உள்ளே பங்காளியாகிய நெடுங்கிள்ளி இருந்தான். பார்த்தார் ஒரு புலவர்; 'அழகிது!' என நினைத்தார். நலங்கிள்ளியிடம், 'ஒன்றுபட்டால் வாழ்வுண்டு; இன்றேல், இருவர்க்கும் தாழ்வே.'

என்று கூறினர். இக் கருத்துப் பொதிந்த பாடல் புறநானூற்றிற் காணப்படுகிறது. அதன் போக்கு இது :

'அரச, நீ பொர நினைக்கும் அரசன் சேரனும் அல்லன் ; பாண்டியனும் அல்லன் ; சோழனே ஆவன் ; நீயும் சோழன்; அவனும் சோழன். நீயும் ஆத்திமாலை சூடியிருக்கிறாய் ; அவனும் ஆத்தி மாலை சூடியிருக்கிறான். அஃது ஒன்றே நீவிர் இருவீரும் ஒரு குடிப் பிறந்தீர் என்பதைக் காட்டுமே! நும் இருவீருள் எவர் தோற்றாலும், தோற்பது உம் குடியன்றோ? அவ்வகை வரலாமோ? நீவிர் இருவீரும் வெற்றிகொள்ளமுடியாது என்பது வெளிப்படை. உமது குடிக்கு வரும் பழியை நீக்க வேண்டுமானால், இம் மாறுபாட்டை உடனே தவிர்க்க வேண்டாவோ? நீவிர் பொருவீரானல், உம் பகைவரெல்லாம் உடம்பு பூரித்து உவகை எய்துவர். அவர் உவகை நுமது இளிவரல் அன்றோ? நீர் போர் குறித்து நிற்பது நும் குடிக்கு ஏற்றதன்று.'

நலங்கிள்ளி, 'குடிக்கு வடு உண்டாகும்.' என்பதைக் கேட்டவுடன் போர்க்கோலம் நீத்தான். நெடுங்கிள்ளியும் புலவர் மொழியைக் கேட்டு இகலை விட்டான். இங்ஙனம் ஒற்றுமைப்படுத்திய புலவரது பெயரை நாம் அறியவேண்டாவோ? வேண்டினும், அவர் பெயரை அறியோம் ; ஊரை அறிவோம். அவ்வூர்ப் பெயராலேயே அவர் இற்றைநாள் அறியப்படுகிறார். அவரை மறவாது இருப்போமாக! **கோவூர் கிழார் வாழ்க!**

மற்றொரு புலவர், ஒரு பாண்டியனுக்கும் ஒரு சோழனுக்கும் ஓர் அறவுரை பகர்ந்துள்ளார் : அவர் **காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக் கண்ணனர்** எனப்படுவர். **வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி** என்னும் அப் பாண்டியனையும், **குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமா வளவன்** என்னும் அச் சோழனையும் ஒருநாள் ஒருசேரக் கண்ட அப் புலவர்க்கு உண்டான மகிழ்ச்சிக்கு எல்லை யில்லை. உடனே அவர் பாடத் தொடங்கிவிட்டார் :

'பால்நிறக் கடவுளும், நீல நிறக் கடவுளும் உடனிருப்பதுபோல உள்ள நீவிர் இருவீரும் இயைக்

திருப்பது இனிது. அண்ணனும் தம்பியுமாகிய **பலராமனும் கண்ணனும்** ஒருங்கு இருப்பது போன்று உள்ளது உமது தோற்றம். இதனினுஞ் சிறந்த காட்சி பிறிதொன்று உண்டோ? நீவிர் இருவீரும் ஒருவர்க்கொருவர் உதவி புரிவீராக! நீவிர் இங்ஙனே ஒன்றுபட்டிருப்பின், கடல் சூழ்ந்த பேருலகு நும் கையகப்படுவது மெய்யேயாகும். இப்படி நீவிர் அன்பினால் இயைந்துள்ளதைக் காணும் சிலர் பொறாமைகொண்டும், நல்லன சொல்லுவார் போலச் சில சொல்லி நும்மைப் பிரிக்கப் பார்ப்பர். நான் வேண்டுவதெல்லாம், நீவிர் இன்றுபோலவே என்றும் இருக்க வேண்டும் என்பது. இருப்பீராயின், வெற்றி யெல்லாம் நும் இருவர்க்கேயாம்; நும் கொடிகளே பிற நாடுகள் எங்கும் துலங்கும். பிரியன்மின்! பிரியன்மின்!'

மற்றுமொரு புலவர், சினந்த தந்தையை எதிர்த்த மக்களோடு ஒன்றுபடுத்தி வைத்தார் என்பது அறிகிறோம். அப்புலவர் பெயர் **எயிற்றியனார்** என்பது; ஊர் **புல்லாற்றூர்**. **கோப்பெருஞ்சோழன்** என்னும் அரசன், உறையூரை ஆண்டுவரும் நாளில், ஒருநாள் அவனுடைய புதல்வர் இருவர் அவனோடு மாறுகொண்டனர். எதிர்த்துநின்ற அவரோடு பொரக் கருதி எழுந்தான் சோழ மன்னன். அப்பொழுது அருகே இருந்த பைந்தமிழ்ப் புலவர், 'விறல்கெழு வேந்தே,' என்று விளித்தவுடன், செவி சாய்த்து நின்றான் நிருபன். புலவர் உடனே தமது பொருளுரையைப் புகலத் தொடங்கினார். அதன் சாரம் வருமாறு:

'பற்பல அமருள் வென்று மேம்பட்ட வேந்தே, இப்பொழுது உன்னோடு எதிர்த்து வந்து நிற்பார் உன் பகைஞர் அல்லரே! நீயும் அவர்க்குப் பகைஞன் அல்லை. பகைஞரைக் கொல்லும் களிற்றையுடைய தலைவ, நீ புகழை இவ்வுலகில் எய்தி, உயர்ந்த உலகை அடைந்த பிறகு, உன் புதல்வர்க்குத்தானே உன் அரசு உரித்தாகும்! இதனை நீயே அறிவையே!'

இப்பொருளுரையைக் கேட்டும், அரசன் ஓர் அடி எடுத்து வைப்பது தோன்றிற்று அப் புலவருக்கு. 'இன்னும் கேட்பாயாக; இசையில் விருப்ப முடையோய், பெரிதும் கேட்பாயாக; புகழில் இச்சை யுடையோய்,' என்பன போன்ற மொழிகளைச் சமய மறிந்து சொல்லி, அவர் மேலும் சொல்லலுற்றார்:

> "உன் புதல்வர் ஆலோசனையின்றி, அறிவு குன்றி எதிர்ப்பட்டுள்ளனர். நீ தோற்றுப் போனல், உன் செல்வத்தைப் பின்னர் அவருக்கு அல்லாமல் வேறு எவருக்குக் கொடுக்கப் போகிறாய்? போரினை விரும்புகின்ற செல்வ, ஒருகால் நீ அவர்க்குத் தோற்றால், உன் பகைவரெல்லாரும் உன்னை இகழ்ந்து மகிழ்வர். நீ உலகில் பழியையே வைத்துச் செல்ல வேண்டியிருக்கும். நான் உன் ஆற்றலில் ஐயமுள்ளேன் என்பதன்று. அவ்வாற்றலை இவரிடம் காட்ட வேண்டா என்பதே என்னுடைய வேண்டுகோள். உன்னுடைய வீரம் உன்னைவிட்டு இப்பொழுது நீங்கியிருக்கட்டும். உன்னுடைய ஊக்கம் பிறவற்றிற் செல்லட்டும். நல்வினைகள் பல செய்வாயாக. வாழிய அரசே!"

நயம்பட உரைக்கப்பட்ட இவ்வுரையையும் மறுத்துப், புதல்வரோடு பொருதற்கு அரசன் மனம் இசைந்திருக்குமோ? புலவர் உரைக்குங்காலே, வேம்பும் கரும்பும்போல இடையிடையே கடுஞ் சொல்லும் புகழ் மொழியும் பெய்து உரைத்த நயம் வியக்கற்பாற்று. அவர் அழைக்கும் போதே, அவன் பெருமையையும், வீரத்தையும், வென்றியையும் உரைத்து அழைத்தார்; இடையிடை அவன் ஆற்றலின் சிறப்பைக் குறிக்கும் சொற்களைக் கூறினார்; 'உனக்குத் தெரியாத தன்று.' என்று சொன்னார்: புகழ் விருப்பம் உள்ள அவன் பழி தரும் செயல் புரியலாகாது என்பதை வற்புறுத்தினர்; புதல்வரை வெறுத்துரைப்பார் போன்று சில சொல் சொன்னார். இவையெல்லாவற்றினும் மிக்கதாக, 'அமரில் விருப்பமுள்ள செல்வ,' என்றும், 'உன் வீரம் இப்பொழுது உன்னை விட்டு இருக்கட்டும்.' என்றும் அவர் மொழிந்த மொழிகளின் சிறப்பைக் கண்டு நாம்

மகிழாதிருக்க முடியாது. ஓர் அரசன் முன் நின்று, 'நீ உன் புதல்வர்க்குத் தோற்றால்,' என்ற கூற்றைக் கூறுவது எளிதன்று. அரசன் வெகுளாதிருக்கும்பொருட்டும், வெகுண்டு புதல்வரையே அழித்துவிடா திருக்கும்பொருட்டும், எழுச்சியைத் தடுக்கும் பொருட்டுமன்றோ அத்தண்டமிழ்ப் புலவர்,

"அமர்வெஞ் செல்வ! நீயவர்க்கு உலையின்
இகழுநர் உவப்பப் பழியெஞ் சுவையே ;
அதனால், ஒழிகதில் அத்தைநின் மறனே."

என இரு மருங்கும் சர்க்கரையைக் கூட்டி, இடையே கடுக்காய்த் தூளை வைத்தார். இங்ஙனமெல்லாம் நன்மருந்து தர வல்ல நாவலர் பலர் வாழ்ந்த நாடு நம் நாடு. அவர்தம் ஊர் பேர் உபதேசங்களை மறந்துள்ள நாம் இனியாவது விழித்துக் காண்போமாக. அவர்தம் பொன்னுரைகளை அறிந்து வாழ்வம் ஒன்றாகவே!

---

## 9. கல்வியில் சீர்திருத்தம்*

[கல்வி அமைச்சர் கனம் தி. சு. அவிநாசிலிங்கஞ் செட்டியார், பி. ஏ., எம். எல்.]

*மகாபாரதத்தில் ஒரு பழங்கதை:—*

துரோணாசாரியார் கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் சேர்ந்து கல்வி கற்பித்துக்கொண்டிருந்தார். ஆனால், அவ்விரு குலத்தாருக்குமிடையே மிகுந்த பொறாமை பரவி யிருந்தது. துரியோதனாதியர் தங்கள் பெற்றோரிடத்தில் சென்று தங்கள் ஆசிரியருக்குப் பாண்டவ புத்திரர்கள்பால்தான் மிகுந்த அன்பு உண்டு, அவர்களைத்தான் அவர் நேசிக்கிறார், அவர்களுக்குத்தான் விசேஷமாகக் கற்பித்தும் வருகிறார் என்று புகார் சொல்லிக் கொண்டு வந்தனர். இதைப் பற்றிய விவரம் துரோணாசாரியார் காதுக்கு எட்டியது. தந்தைமார்களுக்கு அவர்களுடைய குணாதிசயங்களை விளக்கவேண்டுமென்று அவருக்குத் தோன்றிற்று. ஒருநாள் இவ் விருகுலத்துப் பிள்ளைகளையும் அவர் அழைத்தார். கையில் கொஞ்சம் பொருள் கொடுத்து, "நானும் உங்கள்

* கலைமகள் தீபாவளி இதழில் வெளிவந்தது.

பெற்ளேர், பீஷ்மர் முதலியவர்களும் உங்கள் வீட்டுக்கு வரப் போகிரேம்; நீங்கள் வீடு நிறைய ஏதாவது பண்டம் வாங்கி வைத்திருங்கள்; மாலையில் வருகிரேம்'' என்று சொன்னர்.

இருதிறத்தாரும் பணத்தை வாங்கிக்கொண்டு தனித்தனியாகச் சென்று யோசிக்கத் தொடங்கினர்கள். வீடு நிறையப் பொருள் இருக்கவேண்டுமென்று அல்லவா ஆசிரியர் சொன்னர்? இருக்கும் பணத்தில் எதை வாங்கினல் வீடு நிறையச் செய்யலாம் என்பது பற்றி ஆலோசித்தார்கள். ஒருவர் ஆலோசிப்பது மற்றவர்களுக்குத் தெரியக்கூடாதென்று இரகசியமாக அதை வைத்துக்கொண்டார்கள்.

அவர்கள் வீடுகளுக்குப் போகும்நாள் வந்தது. மாலையில் துரோணசாரியாரும், பீஷ்மர் முதலியவர்களும் இருவர் வீடுகளுக்கும் செல்லப் புறப்பட்டார்கள். முதலில் துரியோதனுதிகள் வீட்டுக்குச் சென்ருர்கள். துரியோதனுதியர் நூறு பேர்களும் வீட்டுக்கு வெளியே நின்றுகொண்டிருந்தார்கள். ''எதை வாங்கி வீட்டை நிறைத்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டார்கள். அதற்குத் துரியோதனன் சொன்னன்: ''வீட்டை எவ்வளவு நிறைத்திருக்கிரேம் என்று நீங்கள் பாருங்கள். கதவைக்கூடத் திறப்பது சிரமமாய் இருக்கும்படி கொஞ்சங்கூட இடமில்லாமல் அவ்வளவு வீட்டை நிறைத்திருக்கிரேம்'' என்று சொன்னன்.

''எதைக்கொண்டு நிறைத்திருக்கிறீர்கள்?'' என்று ஆசாரியார் கேட்டார்.

''நீங்கள் கொடுத்த பணத்தில் எதைக்கொண்டு நிறைக்க முடியும்? வைக்கோல் வாங்கி வீடு முழுதும் திணித்து நிறைத்திருக்கிரேம்'' என்ருன்.

வீட்டைத் திறந்து பார்த்தார்கள். எங்கும் வைக்கோல் அடைபட்டு உள்ளே செல்ல முடியாதபடி இருந்தது. அதைப் பார்த்து அனைவரும் சிரித்துக்கொண்டார்கள்.

அங்கிருந்து பாண்டவர்கள்வீட்டுக்குச் சென்ருர்கள். பாண்டவர்கள் வெளியிலே பெரியோர்கள் வரவை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் வீடு முழுதும் மெழுகிக் கோலமிட்டுச் சுத்தம் செய்து வைத்திருந்தார்கள். எங்கும் பளிச்சென்று அழகாயிருந்தது. பெரியோர்களை உள்ளே அழைத்துச் சென்ருர்கள். அறைகள்தோறும் சுடர்

விளக்குகள் எரிந்து வெளிச்சம் கொடுத்துக் கொண்டிருந்தன. உள்ளே சென்றதும் பெரியவர்களுக்குரிய மரியாதைகளான சந்தனம், தாம்பூலம், பலவகைப் பழங்கள் முதலியன வழங்கி எல்லோரும் முதியோர்களுக்கு நமஸ்காரம் செய்தார்கள். பிறகு லேசான பானங்கள் அளிக்கப்பட்டன. பெற்றோர்கள் மனம் சந்தோஷமாயிற்று. "எதைக்கொண்டு உங்கள் வீட்டை நிறைத்திருக்கிறீர்கள்?" என்று ஆசாரியார் அவர்களைக் கேட்டார். "வீடு முழுதும் ஒளி நிறைந்து, இன்பம் நிறைந்து இருப்பதைத் தாங்கள் காணவில்லையா?" என்று தருமர் பதில் சொன்னார். பெரியோர்கள் இவ்விரண்டையும் பார்த்து இருவருடைய தராதரத்தையும் உணர்ந்து மகிழ்ந்தார்கள். இவ்விருவர்களில் சமர்த்தர்கள் யார்? வீட்டை நிறைக்கவேண்டும் என்று சொன்னதற்கு ஒரு சாரார் வைக்கோலால் வீட்டை நிறைத்தார்கள். மற்றவர்கள் வெளிச்சத்தைக் கொடுத்து இன்பத்தால் வீட்டை நிறைத்து மக்கள் மனத்தை மகிழ்வித்தார்கள்.

கல்வியின் லட்சியம் எது என்று பலமாக விவாதித்துக் கொண்டிருக்கும் இக் காலத்தில் இக் கதை நமக்கு உயர்ந்ததோர் உண்மையைப் புலப்படுத்துகின்றது. நம் பள்ளிக்கூடங்களில் பலவிதமான விஷயங்களைப் பற்றிய அறிவைக் குழந்தைகளுக்குச் சொல்லித்தருகிறோம். பல சமயங்களில் மனப்பாடம் செய்யும்படி சொல்லுகிறோம். ஆண்டுக்கொரு தடவை பரீக்ஷை வைக்கிறோம். இதற்குமேல் அரசாங்கத்தால் அல்லது சர்வகலாசாலைகளால் நடத்தப்படும் பரீக்ஷைகள் இருக்கின்றன. அதிகமாகத் தெரிந்தவர்கள் என்று சொல்லக் கூடியவர்கள் படிப்பில் வெற்றி பெற்றவர்களாகக் கருதப்படுகிறார்கள். இவ்விஷயங்களை அறிவதுதான் உண்மையான கல்வியா என்பது பல அறிவாளிகளின் மனத்தில் தோன்றிக்கொண்டிருக்கும் கேள்வியாகும்.

இந்தக் கல்வியைப் பெற்ற பலரை நாம் இப்பொழுது பார்க்கிறோம். அவர்களுக்குப் பல விஷயங்கள் தெரிந்திருக்கலாம். ஆனால், அவர்களை அறிவாளிகளென்று நாம் சொல்ல முடியாது. பல புத்தகங்களை அவர்கள் படித்திருக்கலாம். ஆனால், அந்தப் படிப்பின் பயனைப் பெற்றவர்களாக அவர்கள் தோற்றுவதில்லை. ஒழுக்க நூல்கள் பலவற்றைப் பாராமல் பாடம் செய்திருக்கலாம்.

ஆனால், ஒழுக்க விஷயத்தில் படிப்பு வேறு பழக்கம் வேறு என்பது வெள்ளிடைமலை. விஞ்ஞான நூல்கள் பலவற்றை அவர்கள் கற்றிருக்கலாம். ஆனால், ஆராய்ச்சி உள்ளவர்களாக அவர்கள் காணப்படுவதில்லை. எனவே, இந்த விஷயங்களைப் பற்றி மாத்திரம் படித்தால் போதாது. அவ்வளவு அவனுக்கு எதிர் காலத்தில் வாழ்க்கையில் பயன்படக்கூடியதாகவும் இருக்க வேண்டுமானால் அவன் வாழ்க்கையும் அவ்வறிவின் அநுபவத்தில் ஒட்டியதாக இருக்க வேண்டும். அவன் ஒழுக்கத்தில் நிலை நின்று தன் கடமைகளைச் சரிவர ஆற்றக்கூடிய சக்தியையும் கல்வி அவனுக்கு அளிக்க வேண்டும்.

கல்வியென்பது ஒருவனுடைய மூளையில் பல விஷயங்களைத் திணிப்பதன்று. அப்படித் திணிக்கப்படும் விஷயங்கள் வாழ் நாள் முழுவதும் அவனோடு ஒன்றுமல் உபத்திரவம் செய்து கொண்டிருக்கும். அதனால் என்ன பயன்? கற்கும் விஷயங்கள் நன்ருக் ஜீரணமாகிப் பயன்பட வேண்டும். அவை உயிர் ஊட்டு வனவாய், ஊக்கம் அளிப்பனவாய், மனிதத் தன்மை தரு வனவாய், ஒழுக்கம் அமைப்பனவாய் இருத்தல் வேண்டும். நீங்கள் ஐந்தே ஐந்து உயர்ந்த கருத்துக்களை நன்ருய்க் கிரகித்து, அவற்றை உங்கள் வாழ்க்கையிலும் நடத்தை யிலும் ஊன்றி நிற்கும்படி செய்வீர்களானல், ஒரு பெரிய புத்தகசாலை முழுவதையும் மனப்பாடம் செய்தவர் களைவிடப் பெரிய கல்விமான்களாவீர்கள். "வெறும் விஷயங் களைச் சேகரிப்பதுதான் கல்வியென்ருல், புத்தகசாலைகளன்ரே பெரிய மகான்களாகியிருக்கும்! அகராதிகளன்ரே ரிஷிகளாகி விடும்!" என்று ஸ்ரீ விவேகானந்த சுவாமிகள் மிகுந்த நகைச் சுவையுடன் அருளியிருக்கிருர். இவ்வுயர்ந்த கருத்துக்களைத் தான் மேற்சொன்ன மகாபாரதக் கதை நமக்குப் புலப்படுத்து கின்றது.

சென்னை அரசாங்கத்தாரால் கொண்டுவரப்பட்டிருக்கும் கல்விச் சீர்திருத்தங்கள் இக் கொள்கைகளையே முற்றும் கொண் டிருக்கின்றன. ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் நல்ல பழக்க வழக் கங்களையும் அவற்றை யொட்டி அறிவையும் நம் குழந்தைகளுக்கு அளிப்பதே நம் முக்கியமான நோக்கமாக இருக்கவேண்டும். மனிதனுடைய முன்னேற்றத்துக்கு அவனுடைய உழைப்பே

முக்கியம். எனவே, முன்னேற்றமடைய விரும்பும் எந்த நாடும் உழைப்புக்கு மிகுந்த மதிப்புக் கொடுக்க வேண்டும். அநுபவத்தின் மூலம் வரக்கூடிய கல்வியே நிலைத்து நிற்கிறது. இக்கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டுதான் மகாத்மா காந்தி தம் ஆதாரக் கல்வித் திட்டத்தை வகுத்தருளினர். அவர் உபதேசித்த ஆதாரக் கல்வியை ஆரம்பப் பாடசாலைகளில் கற்பிப்பதே சென்னை அரசாங்கத்தாரின் கொள்கையாம்.

இக் கொள்கையை அநுசரித்து மத்தியதரக் கல்வியும் (Secondary Education) மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. நம் குழந்தைகள் பல விஷயங்களைப் பற்றிய ஞானத்தை மட்டும் பெற்ருல் போதாது. அவற்றைப் புத்தகங்களின் மூலம் மாத்திரம் அறிந்தால் அவைகள் சரியாக உணரப்படுவதில்லை. பள்ளிகளில் அளிக்கப்படும் அறிவினல் குறிப்பிட்ட விஷயங்களைப் பற்றித் தெரிந்து கொள்வதோடு மாத்திரம் நில்லாமல் வாழ்க்கையில் நன்ருக வாழ்வதற்கு மாணுக்கர்கள் பழகவேண்டியதும் அவசியமாகும். தற்கால அரசியல் அமைப்பில் ஒவ்வொரு மனிதருக்கும் வாக்குரிமை இருப்பதால் ஒவ்வொருவரும் தம் உரிமைகளையும் கடமைகளையும் அறிய வேண்டியது அவசியம். தவிர, நம் வீட்டு வாழ்க்கையில் சந்தோஷமாக வாழ்வதற்கு ஏற்றவாறு நம் பெண்களுக்குப் பயிற்சி அளிப்பது அவசியம். இந்த அவசியங்களை அடிப்படையாகக் கொண்டு அவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையில் இப்பொழுது வரும் கல்விச் சீர்திருத்தம் அமைக்கப்பட்டிருக்கிறது.

கல்வியில் இன்னும் ஒரு முக்கியமான அம்சத்தை இங்கே சொல்லாமல் விடலாகாது. கல்வி என்பது பல விஷயங்களைப் பற்றித் தெரிந்துகொள்ளும் அளவு மட்டுமன்று. வாழ்க்கையைச் சரிவர நடத்தும் இரகசியத்தை அறிபவன்தான் உண்மைக் கல்வியையும் அறிவையும் பெற்றவனுவான். அறிவின் அடிப்படையான இலக்கணம் திருவள்ளுவரால் மிக்க அழகாக எடுத்துக் கூறப்பட்டு இருக்கிறது. பல தாழ்ந்த துறைகளில் மனத்தைச் செல்லவிடுபவன் அறிவுள்ளவன் எனக் கருதப்படமாட்டான். அதன் மூலம் அவன் சக்தியைச் சிதறவிடுவதுடன் தன் வலிமையையும் இழக்கிருன். உயர்ந்த காரியங்களிலே தன் மனத்தைச் செலவிடுபவன் நாளடைவில் மகத்தான சக்தியுள்ள மனிதனுக

விளங்குவான். அத்தகைய மனிதன்தான் உண்மையில் அறிவுள்ளவன் எனக் கருதப்படவேண்டும். அதைத்தான் திருவள்ளுவர்,

“ சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு ”

என்று அருளியிருக்கிறூர். மிகுந்த படிப்பிருந்தும், பட்டங்கள் பெற்றும், இத்தகைய அறிவு இல்லாதவர்கள் இருப்பார்களானுல் அவர்கள் உண்மை அறிவு பெற்றவர்கள் அல்லர். ஆனுல், கலாசாலைகள் தரும் பட்டங்கள் பெருமலிருந்தும் இத்தகைய அறிவைப் பெற்றிருப்பார்களானுல், அவர்கள்தாம் உண்மையில் அறிவுள்ளவர்களாவார்கள். இத்தகைய அறிவை அளிப்பதே நம் கல்விச் சீர்திருத்தத்தின் முக்கியமான நோக்கமாகும்.

---

## 10. சுவாமி இருக்கிறூர்

[மகாமகோபாத்தியாய, டாக்டர் உ. வே. சாமிநாதையர்]

ஏறக்குறைய நாற்பத்தைந்து வருடங்களுக்கு முன்பு கும்பகோணத்தில் அரசாங்கக் கலாசாலையில் உள்ள ஆசிரியர்களும் மாணுக்கர்களும் தாகந் தீர்த்துக்கொள்ளும் பொருட்டு அவர்களுக்குத் தண்ணீர் கொடுக்க ஒரு பிராமணர் நியமிக்கப்பட்டிருந்தார். அவர் காவிரியில் தண்ணீர் உள்ள காலத்தில் அந்தத் தண்ணீரை எடுத்து வந்தும், தண்ணீர் இல்லாத காலத்தில் ஊற்றுப்போட்டு இறைத்துத் தண்ணீர் கொணர்ந்தும் சால்களிற் கொட்டி விளாமிச்சைவேர் முதலியன போட்டு வைப்பார். தினந்தோறும் முதல் நாளில் எஞ்சியிருந்த தண்ணீரை வெளியே கொட்டிப் பானைகளை நன்ருக அலசிச் சுத்தம் செய்துவிட்டு அவற்றிலே புதிய தண்ணீரை ஊற்றிவைப்பார்; பானைகளின் கீழே நல்ல மணலை நிறையப் பரப்பிவைப்பார். தமக்குக் கிடைக்கும் வருவாயை நினைந்தே அவர் அங்ஙனம் செய்து வந்தார்.

அவர் முகத்தில் ஒருநாளும் சந்தோஷத்தைக் காண முடியாது; எப்பொழுதும் கடுகடுத்த முகத்தோடே இருப்பார்.

அவருடைய உடம்போ மிக மெலிந்திருக்கும். அவருக்கு எப்போதும் உள்ள வயிற்றுவலியினால் அது பின்னும் மெலிந்து வந்தது. அவருக்கு யாருடனும் பேசுவதில் விருப்ப மிருப்பதில்லை. பேசினாற் கடுமையாகவே இருக்கும். ஆனால் தவறின்றி ஒழுங்காகவே தம்முடைய வேலையைப் பார்த்து வந்தார்.

இப்படி இருந்துவரும் போது ஒரு வருடம் கோடைக் காலத்தில் ஒருநாள், அந்தக் காலேஜில் தத்துவ சாத்திர ஆசிரியராக இருந்த கள்ளிக்கோட்டை நாராயணசாமி ஐயரென்பவர் அந்தப் பிராமணரிடத்தில் தண்ணீர் வாங்கி உண்டபோது அதில் ஒரு வகையான கெட்ட நாற்றம் உண்டாயிற்று. உடனே அவர் தண்ணீர் கொட்டுபவரைப் பார்த்து, "என்ன! இந்தத் தண்ணீரில் ஏதோ நாற்றம் அடிக்கிறதே!" என்று கேட்டார்.

தண்ணீர் கொட்டுபவர்:—"நான் என்ன செய்வேன்; சுவாமி இருக்கிறார்!" என்றார்.

நாராயணசாமி ஐயர் கும்பகோணம் வந்து சில காலமே ஆயிற்று; ஆகலின் தம்மை அவர் அவமதிப்பதாக நினைத்தார். தாம் கேட்டதற்கும் அவர் கூறியதற்கும் என்ன சம்பந்தமென்பது அவருக்கு விளங்கவில்லை. அவர் "நாம் கேட்கிறோம்; இந்த வயிற்றுவலிக்காரர், 'நான் சரியாகத்தான் பார்த்துக் கொட்டிவருகிறேன்; அநியாயமாக நீங்கள் பழிகூறுகிறீர்கள்; சுவாமி இருக்கிறார்; அவர் இப்படிப் பழிகூறுபவர்களைக் கவனித்துக் கொள்வார்' என்ற பொருள்படும்படி பேசுகிறார்" என்று எண்ணினார். உடனே சற்றுச் சினம் அடைந்து, "என்ன ஐயா! தண்ணீர் நாற்றம் நாறுகிறதென்றால் சுவாமி இருக்கிறாரென்று சொல்லுகிறீரே, நல்ல தண்ணீராக நீர் கொட்டக் கூடாதா?" என்று சிறிது கடுமையாகக் கேட்டார்.

மீண்டும் அவர், "என்னால் முடிந்ததை நான் செய்கிறேன்; சுவாமி இருக்கிறார்! என்மேல் தப்பு ஏது?" என்றார்.

நாராயணசாமி ஐயருக்கோ கோபம் அதிகரித்தது. மீண்டும் ஏதோ கேட்க அப்பிராமணர், "சுவாமி இருக்கிறார்!" என்றே கடுமையான தோற்றத்தோடு சொல்லிவந்தார். இந்த வாக்குவாதம் நடந்துகொண்டிருக்கையில் நான் அங்கே வந்து, "என்ன சமாசாரம்?" என்று நாராயணசாமி ஐயரைக் கேட்

டேன். அவர் பொங்குகின்ற கோபத்தோடு, "இந்தத் தண்ணீர் ஒரு கெட்ட நாற்றம் அடிக்கிறது. நான், ஏன் இப்படியிருக்கிற தென்று கேட்டேன். இந்த மனிதர் சுவாமி இருக்கிறார் என்று சாபமிடுகிறார். இவரை இன்றைக்கே விலக்கிவிடவேண்டும்" என்று உரத்த குரலிற் சொன்னார். இருவருக்குமிடையில் நிகழும் வாக்குவாதத்திற்குக் காரணமான விஷயம் இன்ன தென்று எனக்கு முற்றிலும் விளங்கிவிட்டது. அவ்விருவர் மீதும் குற்றமில்லை யென்பதை நான் உணர்ந்தேன். தத்துவ சாத்திர ஆசிரியரை மெல்ல நோக்கி, "கோபித்துக்கொள்ள வேண்டா. காவேரியிற் சில இடத்தில் மணலுக்கு அடியே களி இருக்கும். அங்கே ஊற்றுப் போட்டுத் தண்ணீர் எடுத்தால் அது கும்பி நாற்றம் நாறும். இந்த ஊரில் முக்கியமான கோவில் கும்பேசுவரர் கோயிலல்லவா? கும்பி என்பதற்கும் கும்பேசுவரர் என்பதற்கும் சிறிதளவு ஒற்றுமை இருப்பதால் சிலர் கும்பியைக் கும்பேசுவரரென்று சங்கேதமாகச் சொல்வார்கள்; சுவாமி யென்றும் சொல்வதுண்டு. இந்த ஊரிற் பலர் இப்படியே சொல்வார்கள். இவர் கும்பி இருக்கிறது, அதற்கு நானென்ன செய்வேன் என்ற கருத்தோடு சுவாமி இருக்கிறாரென்று சொன்னாரே யொழிய உங்களை அசட்டை செய்யவில்லை. தெய்வம் தண்டிக்க வேண்டுமென்பது இவர் கருத்தன்று" என்று விளக்கிச் சொன்னேன். நாராயணசாமி ஐயருடைய கோபமெல்லாம் மாறிவிட்டது. அடக்க முடியாத சிரிப்பு உண்டாயிற்று. தண்ணீர் கொடுப்பவரை ஏறஇறங்கப் பார்த்தார்; "அட பாவி! ஈசுவரனுடைய அழகிய பெயரை இப்படியா உபயோகப் படுத்துவது! உன்னுடைய வார்த்தைக்கு இதுவா அர்த்தம்?" என்று சிரித்துக்கொண்டே கூறினார்.

"எல்லாருந்தான் சொல்லுகிறார்கள்; நான் சொல்லக் கூடாதா?" என்று அந்தப் பிராமணர் சமாதானம் சொன்னார்.

"சரி சரி! கும்பியில்லாத இடமாகப் பார்த்து நாளைமுதல் தண்ணீர் கொண்டுவந்து கொட்டும்" என்று சொல்லிவிட்டு நாங்கள் இருவரும் சென்றோம்.

# 11. நம் பண்டைய நீதி நூல் ஆசிரியர்*

[மகாமகோபாத்தியாய, பண்டிதமணி, திரு. மு. கதிரேசச் செட்டியார்.]

மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படும் வண்ணம் நம் பெரியார் நமக்கு உதவிய நூல்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்கள் நான்கினையும் பற்றியனவேயாம். இவ் வெல்லாம் நீதியின்பால் அமைவன வெனினும், இவற்றுள் பொருட்பகுதியைப் பற்றி யெழுந்த நூல்களையே 'நீதிநூல்' எனப் பெரியோர் வழங்குவர். அப் பொருட் பகுதியை மாத்திரம் சிறப்பாக எடுத்துக் கூறிய ஆசிரியரும் உளர். அதனோடு அறம் முதலிய ஏனைய உறுதிப் பயன்களையும் இயைத்துக் கூறிய ஆசிரியர்களே பெரும்பான்மையோராவர். இம் முறையில் தமிழிற் சிறந்த நீதிகளை வழங்கிய வண்மையிற் சிறந்த பெரியார் திருவள்ளுவரே யாவர். அவர்க்கு முன்னும் பின்னும் நீதி நூலருளிய ஆசிரியர்கள் வடமொழியிலும் தமிழிலும் பலரிருந்தனர். எனினும், அன்னார் புகழொளி யெல்லாம் வானத்து விளங்கும் மீன்களாக, வள்ளுவர் சீர்த்தி அப் பன்மீன் நடுவண் பான்மதிபோலத் திகழ்வதாகும். "எல்லாப் பொருளும் இதன்பாலுள; இதன்பால், இல்லாத எப்பொருளும் இல்லையால்" என்றபடி உள்ளுநர் உள்ளும் பொருளெல்லாம் வள்ளுவர் வாய்மொழியிற் காணப்படுவனவேயாம். தம் தெள்ளிய கல்வியானும் ஒள்ளிய மதி நுட்பத்தானும் உலகியலையும் மக்கள் வழக்க ஒழுக்கங்களையும் அழுந்தி யறிந்து, உள்ளத்தமைத்துத் 'திருக்குறள்' என்னும் நீதிக் களஞ்சியத்தை உலகமுள்ளளவும் நிலைபெற யாத்துதவிய பெருமையே அப் பொய்யில் புலவர் புகழொளி விஞ்சுதற்கு ஏதுவாயிற்று.

திருவள்ளுவர் எழுதிய நூல் ஒழுங்கிற்கும் ஏனையோர் நூன்முறைக்கும் உள்ள வேறுபாடுகள் பலவாம். தாம் கூற மேற்கொண்ட பொருளை நன்றாக ஆராய்ந்து இவ்வாறு தெளிவுபடுத்தவேண்டுமென்று உள்ளத் தமைத்துப், பின்னர்ச் செய்யுள் வடிவில் இவர் வெளியிட்டுள்ளார். பெரும்பான்மையும் மேற்கொண்ட பொருளின் இலக்கணம், அதன் சிறப்பு, அதனாலாம் பயன், அஃதில்வழி வருந் தீங்கு என்று இன்னோரன்ன பாகுபாடுகளை வரையறுத்துக்கொண்டு கூறுதல் இவர் இயல்பு.

* திருச்சிராப்பள்ளி அகில இந்திய வானொலியில் பேசப்பெற்றது.

எப்பொருட்கும் வரையறையும் தெளிவும் இன்றியமையாதன. வரையறுத்துத் தெளிவு படுத்தப்படாத பொருள்கள் மக்கள் உளங்கோடற்கு ஏற்றனவாகா என்பது பெரியார் துணிபு.

இத்தகைய சிறப்பு வாய்ந்த திருக்குறளுக்கு, வடமொழி தென்மொழிகளிலுள்ள பற்பல நீதி நூல்களையும் நன்கு கற்று ஆராய்ந்த பரிமேலழகர் என்னும் புலவர் பெருமான் இயற்றிய உரையே எல்லா உரைகளினும் சிறந்ததாகப் போற்றப் படுவது. அவ் வுரையாளர் ஓரிடத்து, "தேவர்க்கும் அசுரர்க்கும் அமைச்சுப் பூண்ட வியாழ வெள்ளிகளது துணிபு தொகுத்துப் பின் நீதிநூலுடையார் கூறியவாறு கூறுகின்றமையின்" என்று எழுதியிருத்தலால் வடமொழியிற் புகழ் மிக்கவர்களான வியாழ வெள்ளிகளின் நூற் கருத்துக்கள் நம் வள்ளுவர் வாய் மொழியிற் புலப்படுகின்றன வென்பது பரிமேலழகர் கருத்தாம். ஒரு நாட்டினர் வழக்க ஒழுக்கங்களை உணர்ந்து, அவற்றிற் கேற்ப நீதிகளை வரையறுக்கும் ஆசிரியர்கள், கால இடையறவால் சேய்மைக்கண் உள்ளா ரெனினும், பொருள் ஒற்றுமைக் கருத்தால் அணிமையில் உள்ளவராகவே கருதப்படுவர்.

வடமொழியில் மனு முதலிய நூல்கள் அறம் பொருள் இன்பங்கள் விரவக் கூறப்பட்டுள்ளன. பொருட் பகுதியாகிய அரசியல் முறையைத் தனிமையில் விளக்க எழுந்த நூல்களுள், பிருகற்பதியாகிய வியாழ குருவால் தேவர்கள் பொருட்டு இயற்றப்பட்ட பாருகற்பத்தியமும், உசனஸ் என்னும் சுக்கிராச் சாரியரால் அசுரர் பொருட்டு இயற்றப்பட்ட ஔசநசமும் முதலில் நினைக்கத் தக்கனவாம். இவற்றின் பின் எழுந்தன சந்திர குப்தன் காலத்து அமைச்சராக இருந்த சாணக்கியரால் ஆக்கப்பட்ட கௌடலியமும், காமந்தகனால் இயற்றப்பட்ட காமந்தக முதலியனவும் ஆம்; இவற்றுள் இக் காலத்துச் சட்ட நூல் வல்லோராற் பெரிதும் தழுவப்படுவது கௌடலியம் என்னும் நூலேயாம். வியாழனால் ஆக்கப்பட்ட நூலினும் வெள்ளியாகிய சுக்கிரரால் ஆக்கப்பட்ட நூல் தென்னாட்டு வழக்க ஒழுக்கங்களுக்குப் பெரிதும் இயைபுடையதாகும். இவற்றின் பின் தோன்றிய கௌடலிய நூலின் தொடக்கத்தில் அதன் ஆசிரியர் பூர்வாசார்ய வணக்கமாகச் "சுக்கிர பிருகஸ் பதிப்யாம் நம:" 'சுக்கிரற்கும் பிருகற்பதிக்கும் வணக்கம்'

என்று கூறியுள்ளார். இதனாலேயே வெள்ளி நூலின் விழுப்பம் புலப்படுவதாகும். பிற்காலத்துக் கவிஞர் பெருமானாகிய **கம்பர்**, "வெள்ளியும் பொன்னும் என்பார் விதிமுறை வகுத்த நூலில்" என்று முறைப்படுத்துக் கூறியதும் இதனை வலியுறுத்தும். இங்ஙனம் சிறந்துள்ள ஔசநஸத்தின் சுருக்கமே **'சுக்கிரநீதி'** யென்னும் **பொருள் நூலாகும்.**

இச் சுக்கிரநீதியைத் தமிழ் மக்கள் நலங் குறித்து மொழி பெயர்த்தபொழுது, யான் கண்ட புதுமைகளும் பழமைக்குரிய சான்றுகளும் பலவாம்: 'புதல்வர்ப் பேற்றை விரும்பும் பெண் மக்கள் வயிர மணியை அணிதலாகாது' என்று கூறப்பட்டுளது. கருவைத் தடைப்படுத்தற்கு வைரவொளி எங்ஙனங் காரண மாகும் என்பதைக் கலவை (இரசாயன) நூலார் ஆராய்தல் வேண்டும். இது போன்றன புதியனவாம். நீர்ப்பொறி, இசைப் பொறி, காற்றியக்கும் பொறி, கம்பிவழிச் செய்தியனுப்புங் கருவி, நீராவியால் இயக்கப்படும் பொறிகள் முதலிய இக் காலத்துக் காணப்படும் இயந்திரத் தொழில்களைப் பற்றியும் அந் நூல் கூறியுள்ளது. ஆனால் இவற்றின் அமைப்பு முறைகள் வேறுபட்டிருக்கலாம். போர்த் தொழில் முறைகளும், போர்க் கருவிகளும், பொறி வழியாக ஆயுதங்களைச் செலுத்தும் முறையும், வெடிமருந்து செய்யும் முறையும், படைகளின் அணி வகுப்புக்களும் பிறவும் செவ்வையாகக் கூறப்பட்டுள்ளன. மக்கள் இயங்குஞ் சாலை (Road) ஆமை முதுகுபோல் இருக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆமை முதுகு இரு மருங்கும் தாழ்ந்து நடுவிடம் சிறிது உயர்ந்திருக்கும். இது சாலை வழியிற் பெய்யும் மழைநீரால் அச் சாலை கெடாம லிருப்ப தற்குக் கருதப்பட்டதாகும். மேலும், இந் நூலின்கண் அரச னியல்பு, அவன் சுற்றங்களாகிய அமைச்சர் முதலியோரியல்பு, வினைசெய்யும் ஏவலரியல்பு, கிராம பரிபாலனம், வாணிகமுறை, நியாய மன்றங்கள், நீதிபதிகளின் அதிகாரங்கள், வழக்கின் இயல்புகள் முதலியன விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

கரிகாற்சோழ அரசனைக் குடிமக்களுள் ஒருவனாகச் **சிலப் பதிகாரம்** கூறும். இதனால் அரசன் குடிமக்களின் உயர்ந்தவ னாகத் தன்னை எண்ணலாகாது என்பது புலனாகும். செங் கோன்மை தவறாது செலுத்தும் நல்லரசற்கு அரசியற் காரியம்

தன்னலங் குறித்ததாகாது; குடிமக்கள் நலங்குறித்ததேயாம். இங்கே, கோவலனைக் குற்றமில் வழியும் கொலை புரிவித்த பாண்டியனைக் கண்ணகியார் வெகுள, அது காரணமாகப் பாண்டியன் உயிரிழந்தான் என்று தண்டமிழ்ப் புலவர் **சாத்தனர்** செங்குட்டுவற்குக் கூறினராக, அது கேட்ட செங்குட்டுவன், பாண்டியன் தவறின்மையையும் அரசியல் நடாத்தும் சிரமத்தையும் சாத்தனர்க்குக் கூறுமுகமாக,

> " மழைவளங் கரப்பின் வான்பே ரச்சம்
> பிழையுயி ரெய்திற் பெரும்பே ரச்சம்
> குடிபுர வுண்டுங் கொடுங்கோ லஞ்சி
> மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
> துன்ப மல்லது தொழுதக வில்லென "

என்று **இளங்கோவடிகள்** கூறியது நினைந் தின்புறத் தக்கது. " அரசன் குடிகளிடத்தினின்று தனக்குரிய அரசிறையாகிய வேதனத்தைப் பெறுதலால் அக் குடிகளுக்கு ஏவலாளர் தன்மையுடையனவான் " எனவும், " பூமரத்தை வளர்த்து மலர் பறித்து மாலை கட்டிப் பயன்பெறுபவனை யொப்பக் குடிகளைப் பாதுகாத்து அவர்பால் அரசிறை பெறவேண்டும் " எனவும், " அங்ஙனமன்றி அம் மரத்தை எரித்துக் கரிசெய்து பயன் பெறுதல் போலக் குடிகளைக் கெடுத்துச் சிறுபயன் கொள்ளலாகாது " எனவும் சுக்கிரநீதி கூறுகின்றது. இச் செய்திகள் மிகவும் பாராட்டற்குரியனவாம்.

திருக்குறட் பொருட்பகுதியில் அரசர், அமைச்சர், படைத் தலைவர் முதலியோரின் இலக்கணங்களாகக் கூறப்பட்டனவும் பிறவும் **யாண்டும் காண்டற்கரியனவாம்.** ஒற்றர் இயல்பு கூறுங்கால், ஒற்றும் நீதிநூலும் ஆகிய இரண்டும் அரசர்க்கு இரு கண்களாகும் என்று கூறப்பட்டுள்ளது. நாட்டின் இலக்கணங் கூறுங்கால், ஒரு நாட்டில் வாழ்வார் தேடி வருந்தாமல் வேண்டுவன வெல்லாம் ஆங்கே பெறத் தக்கதாக இருத்தல்வேண்டும் என்னுங் கருத்தமைய " நாடென்ப நாடா வளத்தன " என்கிறார். பிணியின்மையும், நிரம்பிய செல்வமும், விளைவும், இன்பமும், காவலும் ஆகிய இவ் வைந்தும் நாட்டிற்கு அழகு செய்வன வெனவும் கூறப்பட்டுள்ளன. இதனல் அரசன் தன்

நாட்டை இத் தகுதிகளுக்கு உரியதாக அமைத்துக்கொள்ளல் வேண்டுமென்பது புலனாகும். அமைச்சரியல்பு கூறுங்கால், வினைத்தூய்மை, வினைத்திட்பம், வினைசெயல்வகை என மூன்றதிகாரங்கள் காணப்படுகின்றன. இவற்றை ஊன்றிப் படிப்பார்க்குத் தாம் செய்யவேண்டிய காரியங்களைப் பற்றிய தெளிவு கல்லெழுத்துப்போல நெஞ்சிற் பதிவதாம். திருக்குறளே யல்லாமல் நாலடியார், நான்மணிக்கடிகை, திரிகடுகம், சிறுபஞ்சமூலம் முதலிய சங்கமருவிய நீதிநூல்களும் தமிழிற் பல உள. அவை யெல்லாம் மக்கள் ஒழுக்க முறைகளை வரையறுத்துத் தெளிவுபடுத்துவனவாம்.

நாலடியார் என்னும் நூல், கற்பார் மனத்தைக் கவர வல்லது. "ஆலும் வேலும் பல்லிற் குறுதி, நாலுமிரண்டுஞ் சொல்லிற் குறுதி" என்னும் பழமொழியில் நாலென்பது நாலடியாரையும் இரண்டு என்பது ஈரடியானமைந்த திருக்குறளையுங் குறிப்பனவாம். ஒருவன் சிற்சில செயல்களிற் செவிடனாய்க் குருடனாய் ஊமையாய் இருத்தல் வேண்டுமென நாலடி கூறுகின்றது. இம்முறை வியக்கத்தக்கது. இதன் கருத்து: பிறர் இரகசியங்களைக் கேட்பதில் செவிடனாகவும், பிறர் மனைவியரைக் காம நோக்கமாகக் காண்பதிற் குருடனாகவும், பிறரைப்பற்றிக் காணுவிடத்துப் புறங்கூறுவதில் ஊமையாகவும் இருத்தல் வேண்டும் என்பதாம். இங்ஙனம் சாதுரியமாகக் கூறுமியல்பை இந் நூலிற் பலவிடங்களிற் காணலாம். ஒருவன் மற்றொருவன் பால் இல்லாத குணங்களைப் புகழ்தலினும் அவனை வைதல் நல்லதென்கிறார். கடையாயார், இடையாயார், தலையாயார் ஆகிய இம் முத்திறத்தாரும் அஞ்சுதற்குரியன யாவை என்னும் வினாவை எழுப்பி விடை யிறுக்குமுகமாக முறையே கடையாயார் பசிக்கு அஞ்சுவரெனவும், இடையாயார் துன்பத்திற்கு அஞ்சுவ ரெனவும், தலையாயார் பழிச்சொல்லிற்கு அஞ்சுவரெனவும் கூறுகிறார். குலப்பெருமை பேசுவார்க்கு "நல்ல குலமென்றுந் தீய குலமென்றுஞ் சொல்லள வல்லாற் பொருளில்லை" என்றும், "தவங் கல்வி ஆள்வினை என்றிவற்றான் ஆகுங் குலம்" என்றுங் கூறுவர். இன்னோரன்ன சிறந்த நீதிமணிகள் பல ஒளி செய்தலை இந் நூலாகிய பொற் பேழையில் பரக்கக் காணலாம்.

பிற்காலத்து **ஔவைப் பிராட்டியார்** அருளிய **ஆத்திசூடி, வாக்குண்டாம், நல்வழி** முதலிய நீதி நூல்கள் சிறுவரும் உணர்ந்து இன்புறத்தக்க நிலையில் அமைந்து பேரறிவாளர்க்கும் விருந்தாக விளங்குவன. "இயல்வது கரவேல்" என்னுஞ் சூத்திரம் ஒருவன் மனம் மொழி மெய்களாற் பிறர்க்குச் செய்யக் கூடிய உதவியை ஒளித்தலாகாது என்னும் பொருளை உட்கொண்டு இப் பொருளின் விரிவுகளுக்கெல்லாம் நிலைக்களமாக நிற்றலை நோக்குவார்க்கு இதன் திட்ப நுட்பங்கள் இனிது விளங்கும்.

"சில்வகை யெழுத்திற் பல்வகைப் பொருளைச்
செவ்வன் ஆடியிற் செறித்தினிது விளக்கித்
திட்ப நுட்பஞ் சிறந்தன சூத்திரம்"

என்பதனாற் சூத்திரத்தின் இலக்கணத்தை அறியலாம். இவ் விலக்கணத்துக்குப் பெரிதும் இவ் ஆத்திசூடிச் சூத்திரங்கள் இயைபுடையனவாக விளங்குவன. இந் நூல், மாபாடியம் போன்ற விரிவுரையை ஏற்குந் தகுதி வாய்ந்தது. உயர்ந்த நீதிகளைச் சிறுவர் எளிதி லுணர்ந்து கொள்ளுதற்கும், பெரும் புலவர்கள் பல திறமாக வகுத்து ஆராய்ந்து உரை காண்டற்கும் இஃது இலக்கியமாகத் திகழுமாயின், இதனை உபகரித்த தமிழ்ச் செல்வியின் அறிவின் திட்பம் எத்துணைச் சிறந்ததாகும் என்பதை அறிவுடையார் உணர்வாராக.

பண்டை நீதிநூலார், கூடியவரை முயன்று தம் அனுபவத்திற் கண்ட உண்மைகளை நெடுங்காலமாயினும் சிதையாமலிருத்தற் பொருட்டுச் சூத்திர வடிவிலும் செய்யுள் வடிவிலும் யாத்துதவினர். அவை உரைநடையில் ஆக்கப் படாமை குறையென்ப ஒருசாரார். முற்காலத்தில் இவ்வளவு விரிவாக அச்சிடுதற்குரிய கருவிகளில்லை. கற்பவர் நெஞ்சத்தில் உரைநடையினும் செய்யுள் நடை நிலைபெற்று ஞாபகத்துக்கு நன்கு பயன்படும். காலந்தோறும் மக்கள் வழக்க ஒழுக்கங்கள் மாறுபடுதல் இயல்பே. அம் மாறுபாட்டிற் கேற்ப நீதிகளும் திருத்தப்படு மென்பது சொல்லாமலே விளங்கும். மகாபாரதத்துக் கண்ட சில அறங்கள் இக்காலத்துப் பொருத்தமாகக் காணப்படா. அது பற்றிப் பேரறிஞராகிய வியாச முனிவர் இழித்துரைக்கப்படுவாரல்லர். ஆகவே எத்தகைய

நீதிகளையும் காலம் நோக்கிக் கொள்ளுதலும் தள்ளுதலுஞ் செய்தல் வேண்டும். "பழையன கழிதலும் புதியன புகுதலும்" என்பதைக் கடைப்பிடித்து மனம் போனபடி செய்யத் துணிதல் நன்றன்று. இங்ஙனம் வடமொழி தென்மொழிகளிற் சிறந்த நீதிநூல்களை ஆக்கிய பெரியாருடைய இயல்புகளை இங்கே கூறியன கொண்டு தெளிந்துகொள்க.

---

# 12. நனவே கனவு

## சிறு நாடகம்

[டாக்டர் திரு. மு. வரதராசன், எம். ஓ. எல்., பி. எச். டி.]

### காட்சி I

[மூர்மார்க்கெட்டிலிருந்து இருவர் நடந்து போகிறார்கள். அவர்கள் இருவரும் ஒருசாலை மாணவர்கள். புத்தகமும் கையுமாக இருக்கிறார்கள். மாலை 5 மணி இருக்கும். கல்லூரி விட்ட உடனே, மாலையில் பொழுது போக்காகப் பேசிக்கொண்டு போகிறார்கள். சிறிது நடந்து சென்ற பிறகு அருகே உள்ள இளமரக்காவில் (பார்க்கில்) புல் தரையில் உட்கார்ந்து புத்தகங்களை ஒன்றாக வைக்கிறார்கள். பக்கத்து மரத்தில் இருந்த புறாக்களைப் பார்த்துக் கொண்டே ஒருவன் புல் தரையில் ஒருபுறமாகச் சாய்கிறான். அவன் பெயர் முருகையன். மற்றவன் பெயர் சுந்தரன்.

முருகையன் வயது 17; நல்ல உடல்கட்டு; சிரித்த முகம்; கல்லூரிப் படிப்பானாலும் சரி, அரசியல் நெருக்கடியாக இருந்தாலும் சரி, எதையும் வேடிக்கை பார்த்துக் கழிப்பான் என்பது அவன் முகத்தில் எந்நேரமும் உள்ள புன்சிரிப்பால் தெரிகிறது. அவன் உடுத்த உடையிலும் அந்தக் கவலை அற்ற மனம் விளங்குகிறது.

சுந்தரன் வயது 16; குள்ளம்; பார்ப்பதற்கு 13, 14 வயதுபோல் தெரிகிறது; முகம் பெண் முகம்; இனிய குரல். அவன் பாடினால், ஆயிரம்பேர் கொண்ட மாணவர் கூட்டமும் ஒரே அமைதியாகிவிடும். ஆனால், அவன் முகத்தில் புன்சிரிப்பே

காணும். அவன் கண்ணின் ஒளி, கண்டவர்க்கு அமைதி அளிக்கிறது. கண்டால் கண் ஒளி, பாடினால் குரல் ஒலி, இந்த இரண்டிற்கும் மயங்காதவர் இல்லை என்று சொல்லலாம்.

[புறுக்களைப் பார்த்துக்கொண்டிருந்த முருகையன் திரும்பிப் படுத்துச் சுந்தரனைப் பார்த்தான்.]

**முரு :** என்ன ! சுந்தரம் ! பேசா விரதம் இருப்பதற்கா இங்கே வந்தோம் ? இன்றைக்கு நன்றாகப் பேசவேண்டுமென்றுதானே கல்லூரி விட்டதும் நேராக வந்து விட்டேன். என்ன எண்ணுகிறாய் ? பரீட்சைக் கவலையா? குடும்பக் கவலையா ? உனக்குத்தான் இரண்டைப் பற்றியும் குறைவு இல்லையே !

**சுந் :** கவலை ஒன்றும் இல்லை. இன்று கல்லூரியில் இடைநேரத்தில் நம் நண்பர்கள் திருநாவுக்கரசும் வேங்கடசாமியும் பேசினார்களே ! அந்தப் பேச்சு நினைவுக்கு வந்தது.

**முரு :** அவர்கள் பேசிப் போகட்டும் அப்பா ! சினிமா இல்லாவிட்டால் அவர்களுக்குப் பொழுதும் போகாது ; உலகமும் இருக்காது.

**சுந் :** சினிமா வேண்டாம் என்று நான் சொல்லவில்லையே ! ஆராய்ந்து பார்க்காமல் கண்டதை எல்லாம் வானளாவப் புகழ்ந்து பேசுகிறார்களே ! அவர்கள் வம்பளப்பது உனக்கு எப்படி இருக்கிறது ?

**முரு :** எனக்கு விருப்பும் இல்லை ; வெறுப்பும் இல்லை. என்னவோ எப்படியோ பொழுது போகட்டும் என்று இருக்கிறேன்.

**சுந் :** அப்படி இருக்கவே கூடாது ; உனக்கு இப்போது தெரியாது அப்பா ! நமக்கு ஒரு கடமை உண்டு என்பதை உணர்ந்தால் தவிர, நாடு வாழாது ; மொழி வாழாது ; கலை வாழாது ; கல்லூரி வாழாது ; நாமும் வாழ மாட்டோம். கடமையை உணர வேண்டும். அந்த உணர்ச்சி இல்லையானால் படிப்பு எதற்காக ? குருவிக்காரர் வாழ்வுக்கே திரும்பிப் போகலாமே !

**முரு :** ஆமாம், ஆமாம், அப்பா ! கடமை, கடமை என்று எண்ணு ; பேசு ; வேண்டாம் என்று யாரும் தடுக்கவில்லை.

சினிமா உலகத்தைப் பற்றி நீயும் நானும் வேங்கடசாமியும் பேசி என்ன செய்துவிடப் போகிறோம்? நீ மந்திரியா? வேங்கடசாமி முதலாளியா? அல்லது, நான் ஒரு டைரக்டரா?

சுந் : மந்திரிகளும் டைரக்டர்களும் மனிதர்கள்தாமே? அவர்களும் மாணவர்களாக இருந்தவர்களே! அதை மறக்க வேண்டாம், அப்பா! இன்றைக்கு நாம் எண்ண வேண்டும்; பேச வேண்டும்; அது நாளைக்கு எதிர்காலத்தில் செயலாக மாறிவிடும்; ஊக்கமாக உண்மையாக எண்ண வேண்டும். எண்ணம் எதுவும் வீணுவதே கிடையாது. நம்முடைய முன்னோர்கள் அப்படி எண்ணியிருப்பார்களானல் நமக்கு இந்தத் தொல்லை யெல்லாம் இருக்காதே!

முரு : ஐயோ; பாவம்! இப்போது என்ன தொல்லை வந்துவிட்டதோ, தெரியவில்லை! சினிமாவில் நல்ல கலை இல்லாமல் போனல் நமக்கு என்ன?

சுந் : மணலைக் கயிருகத் திரித்தாலும் திரிக்க முடியும்போல் தெரிகிறது. உன் மனத்தை மாற்றுவது யாரால் முடியும்? அப்பா! நான் சொல்லுகிறேன்: இந்த உண்மை உலக சரித்திரத்தால் விளங்கினது: இனிமேலும் விளங்கப் போவது. எந்த நாட்டில் கலை, உரிமையுடன் வாழாமல் அடிமையாக ஒழிகிறதோ, அந்த நாட்டு மக்களின் தலை எழுத்தும் அப்படித்தான் முடியும். உரிமை சுதந்தரம் என்பது உள்ளத்தில் உண்டாக வேண்டும். அப்படி இருக்கும் நாட்டில் கலை எதற்கும் யாருக்கும் அடிமையாகவே ஆகாது ......... நம் நாட்டில் கலை எங்கே இருக்கிறது? வியாபாரி கையில் இருக்கிறது. சினிமா முதலாளியும் டைரக்டரும் நல்ல வியாபாரம் செய்கிருர்கள். ஒரு காபி கிளப் நடத்த வேண்டுமானலும், எந்தச் சரக்குப் போட்டால் விலையாகும் என்று தெரிந்துகொள்ள வேண்டும். காபிகிளப் முன்னுக்கு வந்தால் நல்ல பணம் திரட்டலாம் என்பதுதான் முதலாளியின் ஆசை. உடம்புக்கு நன்மையான கீரைகளையும் பசுமோரையும் அங்கே விற்ருல், யாராவது அந்தக் காபிகிளப்புக்கு வருவார்களா? ஒரு நாளுக்கு ஒரு ரூபாய் வியாபாரம் அங்கே நடக்குமா?

முன்னே யார் வருவார்கள்? இராமலிங்க சுவாமிதான் வருவார்! வந்தால், அவர் கையிலும் பணம் ஏது? திருநீறு தான் வைத்துக்கொண்டிருப்பார். இல்லையானால், (இசை யுடன் பாடுகிறான்)

"அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண் டும்" என்று ஒரு பாட்டு எழுதிக் கொடுத்து விட்டுப் போவார்.

முரு: அப்பா, அப்பா! நீ அந்தப் பாட்டைப் பாட ஆரம்பித்து விட்டாயே! தொடங்கிய பிறகு முடித்தே ஆக வேண்டும். அதை நான் கேட்டே ஆக வேண்டும். நீ பாடியே ஆக வேண்டும். பேச்சைவிடப் பாட்டுத்தான் சுவையாக இருக் கிறது. நான் உன்னை வேண்டுகிறேன். (இசையுடன் பாடுகிறான்)

"அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண் டும்" அந்தத் திருப்பாட்டை நீயே பாடியாகவேண்டும்.

சுந்: நீயும் நன்றாகப் பாடுகிறாயே! நான் பாடியது பழம் பாட்டு. நீ பாடியது புதுப் பாட்டு. புதுமைதானே வேண்டும். நீயும் அதைப் பாடி முடிக்க வேண்டும்.

முரு: சரி, அப்படியே செய்வேன். நீ முதலில் பாடு. (சுந்தரன் பாடாமல் இருக்கிறான்.) இது கச்சேரி அன்று. மிருதங்கம், பிடில், ஒன்றும் தேடாதே, அதெல்லாம் இருந் தாலும் எனக்கு அவ்வளவாகப் பிடிப்பதில்லை. குரலோசை இனிமையாக இருக்க வேண்டும். பாட்டின் கருத்தும் மூடு மந்திரமாக இல்லாமல் தமிழாக இருக்க வேண்டும். அங்கேதான் இசை இன்பம் இருப்பதாக எனக்குத் தெரிகிறது. (எழுந்து உட்காருகிறான்) எனக்குப் பொருள் தெரியாத இந்துஸ்தானிப் பாட்டோ, தெலுங்குப் பாட்டோ, தெய்வமே வந்து பாடினாலும் சரி, எனக்கு வேண்டவே வேண்டாம் என்று தள்ளிவிடுவேன். தமிழ்ப் பாட்டே என் செவிக்கு இனிய பாட்டு. அதுதான் இசை. தமிழ் இசை; **செட்டிநாட்டரசர் சர். அண்ணமலைச் செட்டியார்** அவர்களின் இசையும் அதுதான்.

சுந்: நீ சொல்லுவது உண்மையே. ஆனால் என் பாட்டைப் புகழாதே. தமிழ்ப் பாட்டை வாழ்த்து. தமிழ் இசையை

வாழ்த்து. நன்றாக— வாயார வாழ்த்து. இராமலிங்க அடிகள் பாட்டில் மூடு மந்திரம், முணுமுணுப்பு மந்திரம் ஒன்றும் இல்லை. அவர் உலகம் உய்யவந்த உத்தமர்; அருட்பிரகாச வள்ளல். (பாடுகிறான்.)

அப்பாநான் வேண்டுதல்கேட்டு அருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட்கு எல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே
எந்தைநினது அருட்புகழை இயம்பியிடல் வேண்டும்
செப்பாத மேல்நிலைமேல் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினும் நீபொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத தன்மையும்வேண் டுவனே.

முரு: இப்படியே யாராவது பாடிக்கொண்டே இருந்தால் நான் பக்கத்திலிருந்து கேட்டுக்கொண்டே இருப்பேன். நான் தொடங்கிய பாட்டை இன்னும் கட்டி முடிக்கவில்லை. நாளைக்குப் பாட்டுக் கட்டி முடித்து உன்னிடமே பாடுவேன். அது என்ன 'பாக்கெட்டில்,' திருக்குறளா?

சுந்: இதுவா? ஆமாம். திருக்குறள்தான். பாரதியார் வாயாரப் புகழ்ந்த வேதம் இது! பாரதியாரே பெரிய புலவர். அவரால் புகழப்பட்ட கம்பரும், இளங்கோவடிகளும், திருவள்ளுவரும் எப்படிப் பட்டவர்களாக இருக்க வேண்டும்? திருவள்ளுவருக்கு முன்னே வாழ்ந்த சங்கப் புலவர்கள் எப்படிப்பட்டவர்களோ? ஆனால் நம்முடைய நண்பர் சிலர், சங்கப்பாட்டு என்றால் கேட்கவே மாட்டேன் என்கிறார்கள். அதில் என்ன, உப்பு சப்பு ஒன்றும் இல்லை என்கிறார்கள். அரைக் காசுக்கு உதவாது என்று வாய் கூசாமல் வம்பு பேசுகிறார்கள், அப்பா!

முரு: அவர்களைப் பற்றி நமக்கு என்ன? உலகம் பலவிதம். அதில் அவர்கள் சிலவிதம். அவர்கள் வேண்டுமானால், சினிமாவில் பாடுகிற 'காமிக்' பாட்டுக்களையே படித்துக் கொண்டிருக்கட்டுமே!

சுந்: ஆ! இப்பொழுதுதான் நினைவு வந்தது நாம் என்னவோ சினிமாப் பேச்சுக்களைப் பேசிக்கொண்டிருந்தோமே!

முரு: ஆமாம் அப்பா! நானும் மறந்துவிட்டேன். சீக்கிரம் முடித்துவிடு. புறப்பட்டுப் போகலாம்.

சுந்: சினிமா, காபிகிளப் வியாபாரம் போல நடக்கிறது என்று சொன்னேன். கரிசலாங்கண்ணிக் கீரையும், பொன்னாங் கண்ணிக் கீரையும், தூதுவளைக் கீரையும் உடம்புக்கு நன்மைதான். இராமலிங்கசுவாமியும் விரும்புவார். ஆனால், சைனாபஜாரில் ஒரு காபிகிளப் வைத்து, கீரைப் பலகாரங் களை விற்றுப் பணம் சேர்க்க முடியுமா? ஜாங்கிரியும், சேத் பேடாவும், டில்லிதர்பாரும், சவ்சவ்பஜ்ஜியும் மசால் தோசையும், சூடான காபியும், ஐஸ் கிரஷ்ஷும் இல்லை யானால் கிளப் நடத்த முடியுமோ? அதுபோலத்தான் இதுவும். கலை, கலை என்று சொல்லி உயர்ந்த படங்களைக் காட்டினால் சினிமாவுக்கு யார் வருவார்கள்? யார் விரும்பு வார்கள்? அதைத் தெரிந்து கொண்டுதான் சினிமா டைரக்டர்கள் வியாபார முறையில் இறங்கிவிட்டார்கள். கலையை அவர்கள் கையில் விடலாமா? அரசாங்கத்தார் கலையை வளர்க்க வேண்டும். சினிமா, அரசாங்கத்தார் கையில் இருக்க வேண்டும். மாநகர் மன்றம் (Corporation) குழாய்த் தண்ணீர்போல அதையும் அரசாங்கம் கவனித் துக்கொள்ள வேண்டும். உடம்புக்குத் தண்ணீர்; உயிருக் குக் கலை. புழலேரித் தண்ணீரைக் கண்ட்ராக்ட் வியாபார முறையில் விட்டிருந்தால் என்ன ஆயிருக்கும் தெரியுமா? அது தண்—நீராக இருக்காது; கள்—நீராக இருக்கும். அதாவது காபி நீராக ஆயிருக்கும்; அல்லது வெல்லப் பானமாக மாறிவிட்டிருக்கும். அரசாங்கத்தார் கையில் அறிவாளிகள் பொறுப்பில் இருக்கவேண்டிய நாடகக்கலை, வியாபாரிகள் கையில் வந்ததால், சினிமாவில் காட்டு மிராண்டி நாகரிகம் காண்கின்றோம். அதிலும் தமிழ்ப் படங்கள் பயனற்றவை என்று நண்பர்கள் சொல்லுகிறார் கள். உன் கருத்து என்ன?

முரு: ஆமாம். உண்மைதான். ஆனால்—ஆனால்—இப்போது வரும் சில படங்களில் அப்படிக் குறை சொல்ல முடியாது.

சுந்: உதாரணமாக ஒரு படம் சொல்லு. சாந்தா ஆப்தே நடிக்கும் ‘ நமஷ்ஷ்கார ’மா?

முரு: அதை விட்டுவிடு, அப்பா! அதுதான் பழைய பேச்சாய் விட்டதே. உன் பேச்சைப் பேசு அப்பா!

சுந்: என் பேச்சா? உலகத்திற்குப் பிடிக்காத பேச்சு. இதைப் பற்றி இந்த மூலையில் நான் உன்னிடம் சொல்வதில் பயன் என்ன? நான் ஒரு மாணவன். நீ ஒரு மாணவன். பரீட்சை முடிகிற வரைக்கும் இப்படி. அப்புறம் பழைய மாணவர். அவ்வளவுதானே?

முரு: அதுதான் உன்னிடமுள்ள குறை. ஊக்கமாகப் பேசிக் கொண்டே இருப்பாய். உடனே ஷேக்ஸ்பியர் எழுதின ஹாம்லெட் ஆகிவிடுவாய். சுறுசுறுப்பான பேச்சு, கொஞ்ச நேரத்திற்கெல்லாம் சோம்பேறிப் பேச்சு; திண்ணை வேதாந்தம். இதை விட்டுவிடு. தமிழ்ப் பேச்சுப் பேசு. பார்ப்போம். நமக்கும் நேரம் ஆனது.

சுந்: சரி சரி; நல்ல தூண்டுகோல் நீதான். இதோ சொல்லி முடித்து விடுகிறேன். (என்று சுறுசுறுப்பாய் முறுக்காய் உட்காருகிறான்.)

முரு: 'தமிழ்ப் பேச்சு' என்று சொன்னேன். 'தமிழ்' என்ற ஒலியைக் கேட்டதும் எங்கிருந்தோ வந்து விட்டதே உனக்கு ஊக்கம். தமிழ் நல்ல சூடான காபி, அப்பா! அதில் நல்ல போதை இருக்கிறதே! உன்னைத் தூக்கத்தில் தட்டி எழுப்ப வேண்டியதில்லை. உன் தாயாருக்குச் சொல்லி விடுகிறேன். எவ்வளவு தூக்கமாயிருந்தாலும் சரி, உன் காதில் தமிழ், தமிழ், தமிழ் என்று ஓதிவிட்டால் போதும். நீ எழுந்து உட்கார்ந்துகொள்ளுவாய் என்று நம்புகிறேன். மெய்தானே?

சுந்: ஒருவகையில் மெய்தான். "வைகறைத் துயிலெழு" என்று ஒளவையார் சொன்னாரே, அது என்னால் முடிவதில்லை. காலையில் வழக்கமாக $6\frac{1}{2}$ மணிக்கு எழுவேன். 6 மணிக்கு எழுந்துவிட்டால் நல்ல காலம் என்றுதான் சொல்ல வேண்டும். பரீட்சைக் காலத்தில் எப்படியாவது எழ வேண்டும் என்று எவ்வளவோ முயற்சி செய்வேன். என்னால் முடிவதில்லை. அலாரம் வைத்தால் அது அடிக்கும்போது கோபம் வரும். யாராவது எழுப்பினால் அவர்கள்மேல்

வெறுப்பாக இருக்கும். அம்மா எழுப்பினல், ‘இன்னும் கொஞ்ச நேரம், அம்மா’ என்று கெஞ்சிக் கேட்டுத் தூங்கிவிடுவேன். இதற்காக அம்மா என்ன செய்வார் தெரியுமா? நான் தூங்கிக் கொண்டிருக்கும்போது, காலை 5 மணிக்கு என் படுக்கைப் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொள்வார். அம்மாவே ஒரு பாட்டு முதலில் பாடுவார். பிறகு அருட்பாவிலிருந்து முதலடி எடுத்துக் கொடுத்து ஒரு பாட்டுப் பாடும்படியாகச் சொல்வார். நான் படுத்துக் கொண்டே அரைப் பாட்டுப் பாடி, உடனே எழுந்து உட்கார்ந்து மற்ற அரைப் பாட்டையும் பாடுவேன். நானும் அம்மாவும் சேர்ந்து பாடுவதும் உண்டு. ‘இன்னும் ஒரு பாட்டுப் பாடு’ என்று அம்மா சொன்னல் அப்படியே பாடுவேன். எனக்கு அதற்குமேல் தூக்கம் வராது என்று தெரிந்துகொண்டு, ‘பொழுது விடிந்துவிட்டது; பரீட்சைக்குப் படி’ என்று சொல்வார். அதற்குப் பிறகுதான் அன்றைக்குப் பரீட்சையில் வரும் ஷேக்ஸ்பியர் படிப்பேன். முதலில் தமிழ்தான் என்னை எழுப்பும். பிறகுதான் மற்ற எந்தப் பாடமும் படிப்பேன். நல்லது; இப்படியே ‘ஒன்றை விட்டு ஒன்று பற்றிப் பாசக் கடற்குள்ளே வீழக்’ கூடாது. என் பேச்சு முடிந்ததா?

முரு : மறுபடியும் தத்துவம் (Philosophy) பேச வந்து விட்டாயே.

சுந் : தாயுமானவர் பாட்டு அப்பா அது!

முரு : இருக்கட்டும்; எடுத்த பேச்சு முடியட்டும். உனக்குச் சுறுசுறுப்பு உண்டாவதாக. இதோ மந்திரம் சொல்லுகிறேன். தமிழ், தமிழ், தமிழ் (என்று காதருகே சொல்லுகிருன்). நான் தூண்டுகோல்; நீ சுடர் விளக்கு; சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்.

சுந் : நான் சுடர் விளக்கல்லேன். ஆனல் அப்படி ஆகவேண்டும் என்பதுதான் ஆசை. நான் சுடர் விளக்காக இருந்தால் தமிழ்நாடு இப்படியா இருக்கும்? இன்று எல்லா நாடுகளும் தமிழ் ஒலியை, தமிழ்ப் பாட்டை, தமிழ்க் கருத்தை—உலகமெல்லாம் எதிர்பார்க்கும்படி செய்து

விட மாட்டேனா? நேரம் ஆய்விட்டது. குறையிருந்தால் நாளைக்குப் பேசிக்கொள்ளலாம். (இசையுடன் பாடுகிறான்)

வாய்ச்சொல்லில் வீரரடி—யாமெல்லாம்
வாய்ச்சொல்லில் வீரரடி—கிளியே
வாய்ச்சொல்லில் வீரரடி !

நாளைக்குப் பேசலாம். எழு, போகலாம். நம்முடைய நல்ல அரட்டைக்கு முடிவு ஏது? முதல் ஏது? (நடந்து கொண்டே) அகலம் ஏது? நீளம் ஏது? நாம் உள்ள வரைக்கும் நம் பேச்சும் ஓயாது. நல்லது, வணக்கம். 'பெற்றனன் விடை எனப் பெயர்ந்து' போகிறேன்.

---

# 13. பண்டைத் தமிழ்க் கலைகள்

[வித்துவான் திரு. மா. இராசமாணிக்கம் பிள்ளை, எம்.ஓ.எல்., எல்.டி.]

**கலைகள்** அறுபத்து நான்கு என்பர். அவற்றுட் பல, பண்டைத் தமிழர் வாழ்வில் காணப்பட்டன என்பதை, அழிந்தன போக எஞ்சியனவாக வுள்ள பழைய நூல்களாலும் அவற்றின் உரைகளாலும் அறியலாம்.

**இசைக் கலை :**—உலகத்து நாகரிகக் கலைகளுள் இசைக் கலை ஒன்றாகும். இதன் சிறப்பை உணர்ந்தே தமிழர் முத்தமிழுள் இதனை நடு நாயகமாக வைத்தனர். சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையைக் கொண்டும், அதற்கு அடியார்க்கு நல்லார் வரைந்துள்ள விரிவுரையைக் கொண்டுமே இசைத் தமிழைப் பற்றிய பல உண்மைகளை உணர்தல் கூடும். பழைய காலத்தில் தோற்கருவி வகைகளிற் பலவும், யாழ் வகைகளில் சகோடயாழ், செங்கோட்டியாழ், மகரயாழ் முதலாகப் பலவும், தாள வகையிற் பலவும் இருந்தன என்பது தெரிகிறது. ஆயிரம் நரம்புகளை உடைய யாழும் இருந்ததாக ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இசைச் சங்கங்கள் ஆங்காங்கே இருந்தன. இசைப் புலவர் பலர் இசை பற்றிய ஆராய்ச்சி நிகழ்த்தி வந்தனர்; இசை நூல்கள் பல யாத்தனர். இச்செய்திகளைப் பரிபாடல், சிலப்பதி

காரம் முதலிய நூல்களிலிருந்து அறியலாம். 'இசை ஆசிரியன் நடிக மாதர்க்குரிய ஆசிரியர் பலருள் ஒருவன்' என வரும் சிலப்பதிகாரக் குறிப்பைக் காண்க.

**நாடகக் கலை** :—பண்டைத் தமிழராய நம் முன்னோர் நாடகத் தமிழையும் முத்தமிழுள் ஒன்றாகக் கொண்டனர். தமிழ் நாடகம் 'கூத்து' எனப்படும். அது 'வேத்தியல், பொதுவியல்' என இருவகைப்படும். அவை முறையே அரசர்க்கு ஆடும் கூத்து, குடிகட்கு ஆடும் கூத்து என்பன. இவ்விருவகைக் கூத்துகள் இங்கிலாந்தில் ஷேக்ஸ்பியர் காலத்தும் இருந்தமை இங்கு அறியத் தக்கது. நாடக நூல்கள் பல இருந்து அழிந்தன என்பதை உரைகளால் அறிதல் கூடும். நாடகக் கலைக்கு உரியாருடைய இலக்கணம் முதலியவற்றைப் பற்றிக் கூறும் நூல்கள் பல இருந்தன என்பது சிலப்பதிகாரத்தால் அறியலாம்.

**ஓவியக் கலை** :—ஓவியக் கலை பற்றிய நூல் தமிழில் இருந்தது என்பதை, "**ஓவியச் செந்நூல்** உரைநூல் கிடக்கையும்" என்னும் மணிமேகலை அடியால் அறியலாம். சிலப்பதிகார வேனிற்காதை உரையில் அடியார்க்கு நல்லார், "ஓவிய நூலுள் நிற்றல், இருத்தல், கிடத்தல், இயங்குதல் என்னும் இவற்றின் விகற்பங்கள் பலவுள; அவற்றுள் இருத்தலாவது......" என்று விரிவாகக் கூறிச் செல்லலை நோக்க, அவரது காலம்வரை **ஓவிய நூல்** தமிழகத்தில் இருந்ததென்பதை அறியலாம். ஓவியம் வல்லார் 'கண்ணுள் வினைஞர்' எனப்பட்டனர். இத்தொடர்க்கு, 'நோக்குவார் கண்ணெதிரே தம் தொழிலை நிறுத்துவோர்' என்பது பொருள் என்பர் நச்சினார்க்கினியர்.

> "எவ்வகைச் செய்தியும் உவமங் காட்டி
> நுண்ணிதின் உணர்ந்த நுழைந்த நோக்கிற்
> கண்ணுள் வினைஞர்."

என்னும் மதுரைக் காஞ்சி அடிகளை நோக்குக. கட்டடங்களில் கண்கவரும் சித்திரங்களைத் தீட்டுதல் தமிழர் மரபு என்பதை,

---

1 சிலப்பதிகார வேனிற்காதை உரையில் அடியார்க்கு நல்லார், "இனி **நாடக நூலார்** இவ்விருப்பை ஐம்பதென விரி வரையறை கூறித் தொகை வரையறை கூறுவார், அவற்றை ஒன்பதின் அடக்கிக் கூறினர் எனஉணர்க..." என்று கூறியிருத்தல் காண்க.

" சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனைதொறும்
மையறு படிவத்து வானவர் முதலா
எவ்வகை உயிர்களும் உவமம் காட்டி
வெண்சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய
கண்கவர் ஓவியம் கண்டுநிற் குநரும்"

என வரும் மணிமேகலை அடிகளால் அறியலாம். ஆடைகளில் சித்திரங்களை எழுதும் வழக்கமும் பழந்தமிழரிடம் இருந்தது. மடலேறும் தலைவன், தலைவியைப் போல ஆடை ஒன்றில் சித்திரம் எழுதுதல் வழக்கம் என்னும் செய்தியால் ஒருவரைப் பார்த்துச் சித்திரம் வரைதலும் உண்டு என்பதையும் அறியலாம். ஓவியக்காரர் தாம் புனைய விரும்பும் சித்திரக் குறிப்புகளை முதலிற் குறித்துக் கொள்ளல் (Sketch) வழக்கம்; அதன் பின்னரே வர்ணங்களை அமைப்பர். இங்ஙனம் முதலிற் குறித்துக்கொள்ளல் **புனையா ஓவியம்** எனப்படும்.

" மனையகம் புகுந்து மணிமே கலைதான்
புனையா ஓவியம் போல நிற்றலும் "

என வரும் மணிமேகலை அடிகளையும், 'புனையா ஓவியம்-வண்ணங்களைக் கொண்டு எழுதாத வடிவைக் கோட்டின சித்திரம்' என வரும் ஐயரவர்களின் உரையையும் காண்க. திரைச் சீலைகளிலும், கட்டிலைச் சுற்றி அமைக்கப்படும் சீலைகளிலும் படுக்கைமேல் விரிக்கும் துணிகளிலும் சித்திரங்கள் தீட்டப் பெற்றிருந்தன. சித்திரங்களை அமைத்து நெய்வதும் உண்டு.

" செருந்தியும் வேங்கையும் பெருஞ்சண் பகமும்
எரிமலர் இலவமும் விரிமலர் பரப்பி
வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரச் செய்கைப் படாம்போர்த் ததுவே
ஒப்பத் தோன்றிய உவவனம்"

என வரும் மணிமேகலை அடிகள் இவ்வுண்மையைப் புலப்படுத்தும். இதுகாறும் கூறிய உண்மைகளால் நம் முன்னோராய பழந்தமிழரது ஓவியக் கலைத்திறனை ஓரளவு உணர்ந்து இன்புறலாம்.

**சிற்பக் கலை :**—மண், செம்பு, பொன், தந்தம், மரம், கல், சுண்ணம்பு முதலியவற்றால் பலவகைப் பாவைகள் முதலியன செய்யப்பட்டு வந்தன என்பதைப் பண்டைத் தமிழ் நூல்களால் அறியலாம். மண்ணைக் கொண்டு பாவை அமைப்பவர் 'மண்ணீட்டாளர்' எனப்பட்டார். தமிழர் சிற்பக் கலையில் சிறந்தவர் என்பதற்கு நூல் ஆதாரங்கள் வேண்டுவதில்லை. அவர் திறமையைப் பற்றிப் புகழ் வாய்ந்த கோவில்களும் மகாபலிபுரத்தில் உள்ள ஒற்றைக் கல் கோவில்களுமே சான்று பகரும்.

**அணிகள் :**—பொன், வெள்ளி இவற்றால் நகைகள் செய்யப்பெற்று நவரத்தினங்கள் பதிக்கப் பெற்றிருந்தன. இவற்றைச் செய்யும் பொற்கொல்லர் நவமணிப் பரீட்சையில் கைதேர்ந்தவராக இருந்தனர்; பொன் பரீட்சையிலும் சிறந்திருந்தனர். கிளிச்சிறை, ஆடகம் எனப் பொன்னில் பலவகை உண்டு என்பதையும், நவமணிகளில் குற்றமும் குணமும் உண்டு என்பதையும் விளக்கும் **நூல்கள் பல** தமிழில் இருந்தன என்பதைச் சிலப்பதிகாரத்தாலும், அடியார்க்குநல்லார் உரையாலும் நன்குணரலாம்.

**நெய்தல் :**—நெய்தல் தொழிலில் தமிழர் பெயர் பெற்று இருந்தனர். பருத்தி, எலிமயிர், ஆட்டுமயிர் இவற்றால் சிறந்த ஆடைகள் அக் காலத்தில் நெய்யப்பட்டு வந்தன. இதனை,

> " பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
> கட்டு நுண்வினைக் காருகர் "

என வரும் சிலப்பதிகார அடிகளாலும், அவற்றின் உரையாலும் உணரலாம். கைம்பெண்டிரும், பிற பெண்டிருமே பெரும்பாலும் நூல் நூற்று வந்தனர்.

> " ஆளில் பெண்டிர் தாளிற் செய்த
> நுணங்குநுண் பனுவல் "

என வரும் நற்றிணை அடிகளையும்,

> " பருத்திப் பெண்டின் பனுவல் அன்ன "

என வரும் புறநானூற்று அடியையும் நோக்குக.

இங்ஙனம் நூற்கப்பட்ட நூல் இழைகளைக் கொண்டு பல நிறக் கச்சுகளும், ஆடைகளும், பூத்தொழில் அமைந்த கலிங்கங்களும், முடிச்சுகளையும் மணிகளையும் ஓரத்திலேயுடைய பட்டுடை

களும் ஆக்கப்பட்டன. 'பாம்பின் சட்டை போல, மூங்கிலில் உரித்த தோல் போல, பால் ஆவியைப் போல, புகையைப் போல' என்று ஆடைகள் உவமிக்கப்படுதலின், ஆடைகளில் மிக்க மென்மை வாய்ந்தனவும் இருந்தன என்பது தெரிகிறது.

**மடைத் தொழில் :**—உணவு சமைத்தல் மடைத்தொழில் எனப்படும். அதனைச் செய்பவர் 'மடையர்' எனப்படுவர். பாக சாஸ்திரம் 'மடை நூல்' எனப்படும். இம் மடைநூலைப் பற்றிய செய்திகளை மணிமேகலை, சிறுபாண் ஆற்றுப்படை முதலிய நூல்களிற் காணலாம். பலவகை உணவு வகைகளைக் காலத்திற் கேற்றவாறு பழந்தமிழர் உட்கொண்டு வந்தனர் என்பதும், உணவு வகைகள் தயாரிக்கப்படும் விதமும் பிறவும் மடைநூலால் அறியலாம்.

**சோதிட நூல் :**—நிமித்தம் பார்த்தல், சோதிடம் முதலிய வற்றிலும் பழந்தமிழர் பண்பட்டு இருந்தனர். இக் கலை பற்றிய நூல் தமிழில் இருந்தது. அதில் குறிபார்த்தல், சகுனம்பார்த்தல் முதலியன கூறப்பட்டனபோலும்! **'கட்டுவிச்சி"** என்பவள் வெறியாடும் மகள். அவள் கட்டுப் பார்த்து நேர்வன வற்றைச் சொல்வாள். **வேலன்** என்பவன் வெறியாடுபவன். அவன் கழங்கு பார்த்துக் கூறுபவன். இவரன்றி, அரசன் போர்க்குப் புறப்படத் தகும் சமயம் கூறும் **காலக் கணிதர்** (கணிகள்) என்பவரும் தமிழ்நாட்டில் இருந்தனர். இவர் அனைவரும் இக் கலையில் வல்லுநராக இருந்தனர். ஆநிரை கவரப் போவதற்கும் சகுனம்பார்த்துப் போதல் தமிழர் மரபு என்பதைத் தொல்காப்பியத்தால் அறியலாம்.

**வானக் கலை :**—பண்டைத் தமிழர் வான சாஸ்திரப் பயிற்சியும் வாய்க்கப் பெற்றிருந்தனர் என்பதைப் பண்டைத் தமிழ் நூல்களால் உணரலாம். சந்திரன் பரிவேடங் கொள்ளும் காலத்தில் குறிஞ்சி நில மாக்கள் மணம் செய்துகொள்வர். 'தமிழர், தம் கட்டிலின் மேல்தட்டில் பன்னிரண்டு இராசிகளை எழுதிவைத்திருந்தனர்' என்னும் செய்தியை 'நெடுநல் வாடை'ப் பாட்டால் அறியலாம். **அரசர் பிறந்தநாள் விழாக்** கொண்டாடல் மரபு. சனி மீன் முதலிய நட்சத்திரங்களின் பெயர்கள் பல சங்க நூல்களில் குறிக்கப்பட்டுள்ளன. பண்டைத் தமிழர் மேனாடுகளுடன் கடல் வாணிபம் செய்துவந்தவர்

ஆதலின், நட்சத்திரங்களைப்பற்றிய அறிவும், பருவ காலங்களைப் பற்றிய அறிவும் சிறப்புற வாய்க்கப் பெற்றிருந்தனர் என்பதில் வியப்பில்லை அன்றோ?

**மருத்துவக் கலை :**—தமிழ் மருத்துவம் 'சித்த வைத்தியம்' எனப்படும். வாழையடி வாழையாக வந்த மருத்துவ முறையையே பிற்காலச் சித்தர்கள் எழுதிவைத்தனர். பழைய தமிழ் நூல்களில், **மருத்துவன் தாமோதரனுர்** போன்ற மருத்துவப் புலவர் பலர் இருந்தனர் என்பதும், மருந்து வகைகள் பல இருந்தன என்பதும், பலவகை மூலிகைகள் நோய்களைக் குணப்படுத்த உபயோகிக்கப்பட்டு வந்தன என்பதும் கூறப்பட்டுள்ளன.

**காவலும் கரவடமும் :**—ஊர்க்காவல், நாடுகாவல் என்பன தொல்காப்பியத்துள் கூறப்பட்டுள. காவல்பொருட்டுப் பிரிவு உண்டு என்று அகப்பொருள் நூல் கூறும். நாட்டையும் ஊரையும் காப்பவர் இன்ன முறையிற் போதல் வேண்டும் - கள்வர் இன்னின்னபடி மறைந்தும் வெளிப்பட்டும் வருவர் - அவர்களை இவ்விவ்வாறு பிடித்தல் வேண்டும் என்பன போன்ற செய்திகளைக் காவலர்க்கு அறிவுறுத்த எழுந்தவையே **காவல் நூலும் கரவட நூலும்** ஆகும். இவற்றின் விவரம் மதுரைக் காஞ்சி முதலிய நூல்களில் காணக் கிடைக்கிறது. இவ்வொன்றிலிருந்தே பழந்தமிழர் நாகரிக வாழ்க்கையை நாம் நன்கறிந்து கொள்ளலாம்.

**போர்க் கலை :**— 'போர் இன்னவிதம் புரியவேண்டும்' என்பதை அறிவுறுத்தத் தனி இலக்கணம் தமிழில் உண்டு. அதுவே தொல்காப்பியப் புறத்திணை யியலிற் பெரும் பகுதியாகக் கூறப்பட்டுள்ளது. பன்னிரு படலம், புறப்பொருள் வெண்பா மாலை என்னும் நூல்களிலும் அவ் விலக்கணம் கூறப்படுகிறது. நிரை கவர்தல், நிரை மீட்சி ; போருக்குப் போதல், போரை எதிர்த்தல் ; மதிலை வளைத்தல், மதிலைக் காத்தல் ; வெற்றி பெறுதல் என்று போரில் பல பிரிவுகள் உண்டு. போருக்குப் புறப்படுபவர் பகைவர் நாட்டிலுள்ள பெண்டிர் முதலியவர்க்கு ஏதம் உண்டாதலைப் பறையறைந்து அறிவித்துக் காவலிடங்கட்குப் போகச் செய்வர் :

"ஆவும் ஆனியல் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்அம்பு கடிவிடுதும் ; நும்மரண் சேர்மினென
அறத்தாறு நவலும் பூட்கை"

என வரும் புறநானூற்றுச் செய்யுள் அடிகளை நோக்குக.

**நகர அமைப்பு** :—பூம்புகார், வஞ்சி, மதுரை, காஞ்சி முதலிய தலைநகரங்களைப் பற்றிய செய்திகள் மணிமேகலை, சிலப்பதிகாரம், மதுரைக் காஞ்சி முதலிய நூல்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அவற்றைக் காண்கையில், பெரிய நகரம் ஒன்றில் தெருக்கள் நீண்டும் அகன்றும் வரிசை வரிசையாக இருந்தன ; சந்திகள், சதுக்கம், அம்பலம், மன்றம், பொதியில் முதலிய இடங்கள் இருந்தன. பல இடங்களில் செய்குன்றுகள் அமைந்து இருந்தன ; ஆங்காங்குப் பூஞ்சோலைகள் (Parks) இருந்தன ; அவற்றுள் பளிங்கறை மண்டபங்கள், மலர்ப் பந்தர்கள், ஒளிந்து விளையாடும் இடங்கள் முதலியன அமைந்திருந்தன ; ஒவ்வொரு தொழில் செய்வார்க்கும் தனித்தனித் தெருக்கள் இருந்தன. அரசனது அரண்மனை நகரில் நடுநாயகமாக இருந்தது. பெரிய கடைவீதிகள் இருந்தன. அவை **நாள்அங்காடி, அல்லங்காடி** என இருவகைப்படும். நகரத்தில் 'நுதல்விழி நாட்டத்து இறையோன்' கோயில் முதல் 'பதிவாழ் சதுக்கப் பூதத்தின்' கோயில் ஈறாகப் பல கோயில்கள் உண்டு. தலை நகரத்தைச் சுற்றிக் கோட்டை மதில் உண்டு. அம்மதில்மேல் பல வகை யந்திரப் பொறிகள் வைக்கப்பட்டிருக்கும். மதிலைச் சுற்றி ஆழ்ந்து அகன்ற அகழி இருக்கும். அவ்வகழியில் முதலைகள் விடப்பட்டிருக்கும். அகழிக்கும் அப்பால் '**காவற் காடு**' அமைந்திருக்கும் என்பவை புலனாகும். இங்ஙனம், குறிப்பிட்ட இலக்கணப்படி தலை நகரங்களையும் பிற நகரங்களையும் அமைக்கும் முறையில் பழந்தமிழர் பண்பட்டிருந்தனர் என்பதையும் தொன்னூல்கள் இனிதுணர்த்துகின்றன. மதுரை, காஞ்சிபுரம் என்னும் இரு பெரு நகரங்களும் தாமரை மலர்போல் அமைந்தவை என்பதைப் பரிபாடல், பெரும்பாணாற்றுப்படை என்னும் நூல்களைக் கொண்டு நுனித்தறியலாம்.

இவ் வொன்றிலிருந்தேனும் பண்டைத் தமிழ் மக்களின் நகர அமைப்புத் (Town planning System) திறன் நன்கு உணரக் கூடும் அன்றோ?

நகரில் உள்ள வீடுகளை அமைப்பதிலும் அம் மக்கள் சிறந்திருந்தனர் என்று கூறவும் வேண்டுமோ? கோபுரங்கள், வாயில்மாடங்கள், நிலா முற்றங்கள், திண்ணைகள், அறைகள், நீண்டு அகன்ற கூடங்கள் என்பன அவரவர் இயல்புக்கேற்ற வாறு வீடுகளில் அமைக்கப்பட்டிருந்தன. வீடுகளில் ஜன்னல்கள் அமைத்தல் உண்டு. அவை 'கால் அதர்' (காற்று நுழையும் வழி) எனப்பட்டன. வீட்டு முன்புற மாடத்தில் பலவிதச் சிற்பங்கள் தீட்டப்படவும் உண்டு.

கிணறு தோண்டுதலைப் பற்றிய விவரங்களைக் கூறும் நூலும் அக் காலத்தில் இருந்ததெனின், அம்மம்ம! நம் மூதாதையர் நாகரிகச் சிறப்பை என்னென்பது! அக் நூல் '**கூப நூல்**' எனப்படும்.

**கப்பல் தொழில்:**—தமிழ்நாட்டார் சாலமோன் காலத்திற்கும் (கி. மு. 1000) முற்பட்டே கடல் வாணிபத்திற் சிறந்து விளங்கினவர்; ஆதலின், அவர்கள் கப்பல் கட்டும் தொழிலில் கைதேர்ந் திருந்தனர் என்பது கூறாதே அமையும். ஒவ்வொரு தமிழகத்துத் துறைமுகத்திலும் கலங்கரை விளக்கம், பண்டசாலைகள் (Godowns), சுங்கச் சாவடி (Custom House) என்பன இருந்தன. வேற்றுநாட்டு வாணிபர், துறைமுகத்தை அடுத்துள்ள பெரிய மாளிகைகளில் வசித்து வந்தனர். குதிரைகள், மேனாட்டு மதுபான வகைகள், இயந்திர வகைகள், விளையாட்டுப் பொருள்கள் இன்ன பிறவும் இறக்குமதி யாயின. தேக்கு, மிளகு, யானைத் தந்தம், சந்தன மரங்கள் முதலியன ஏற்றுமதியாயின. இச்செய்திகள் யாவும் மதுரைக் காஞ்சி, பட்டினப்பாலை, பெரும்பாணாற்றுப்படை, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய தொன்னூல்களிலிருந்து அறியலாம்.

**பிற கலைகள்:**—மாலை தொடுத்தலில் பல வகை உண்டு என்பதைத் தமிழ் நூல்கள் தெரிவிக்கின்றன. இண்டை, கண்ணி, தார் என மாலைகளில் பல வகை உண்டு. அளவை(யைப் பற்றிய) நூல், எண்ணூல், கனுநூல், குதிரை நூல், யானை நூல், கோழிநூல், புதையல்நூல், யோகநூல் எனப் பலவகைக்

136885

கலைகளைப் பற்றிய நூல்கள் அப் பழங்காலத்தில் வழக்கில் இருந்தன. பல வகை எழுத்துக்களைப் பற்றிக் கூறும் நூல்களும் இருந்தன. ஒருவர்க்கொருவர் இரகசியமாகத் தெரிவித்துக் கொள்ளும் செய்திகளை எழுதக் 'கரந்தெழுத்துக்கள்' பயன்படுத்தப்பட்டன. தமிழர் சிலர் யவனர் மொழி, துருக்கர் மொழி, சீனமொழி, வடமொழி இவற்றில் வல்லுநராகவும் இருந்தனர்.

தமிழ்த் தொழிலாளர், தம் நாடு போந்த பிறநாட்டுத் தொழிலாளருடைய தொழில் நுட்பங்களை அறிந்தும், தம் தொழில் நுட்பத்தை அவர்க்கு அறிவித்தும் தொழில்களைப் பல வழிகளிலும் வளர்த்து வந்தனர்.

சுருங்கக் கூறின், பண்டைத் தமிழர் ஒப்புயர்வற்ற நாகரிகம் பெற்று எல்லாக் கலைகளிலும் வல்லுநராய் வாழ்ந்து வந்தனர் என்று கூறலாம். இதனாலன்றோ, இந்தியாவில் பெரும் பகுதியைப் பிடித்தாண்ட **அசோக மன்னன்** காலத்தும் தமிழகம் **தன்னாட்சி** பெற்று இலங்கியது! அவன், 'என் நண்பர்களான சேர, சோழ, பாண்டியர்...' என்று தன் கற்றூண்களில் செதுக்கியுள்ளான் எனின், அப் பேரரசன் போற்ற வாழ்ந்த நம் முன்னோர் பெருமையே பெருமை!

---

# 14. பெண் கல்வி

[திருவாட்டி. ஆர். இராசாமணி அம்மையார், எம். ஏ., எல். டி.]

'பெண்கல்வி' என்ற தலைப்பின் கீழ், இது வரையில் காணப்பட்ட கட்டுரைகள் கணக்கிலடங்கா; எழுதப்பட்டவை ஏட்டிலடங்கா. அங்ஙனமிருக்க, காகித நெருக்கடி யேற்பட்டுள்ள இக் காலத்தில், அதே பொருளைப் பற்றிய கட்டுரைகள் எழுதப்பட வேண்டிய அவசியமென்னை? ஆண்கல்வியைக் குறித்து யாராவது எப்போதாகிலும் பேசி நாம் கேட்டிருக்கிறோமா? அல்லது கட்டுரையைத்தான் கண்டிருக்கிறோமா? இல்லையே! காரணமென்னையெனில், பிறருடைய வற்புறுத்தலின்றியே ஆடவர் ஓரளவு கல்வியாவது பயில்கின்றனர். ஆனால், பெண்மக்களோ, இடித்துக் கூறினும், பிடித்த பிடியை

விடார். 'எண்ணெழுத்திகழேல்' 'பிச்சை புகினுங் கற்கை நன்றே' என்னும் பொன் மொழிகள், பெண்பாலரை விலக்கிக் கூறப்பட்டவை யல்ல. அவ்வாறிருக்க, பெண்மக்களுள் ஒரு சாரார், 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு' என்னும் பழமொழியை மிக உறுதியாகப் பற்றிக் கொண்டிருப்பதேன்? கல்வியின் முன்னேற்றத்துக்கு, இதைக்காட்டிலும் இடையூறு விளைவிப்பது வேறென்ன இருக்கிறது?

சாதி சமயக் கட்டுப்பாடுகள் தகர்த்தெறியப்படும் இவ் இருபதாம் நூற்றாண்டிலும், பெண்களைப் படிக்கவைக்கும் வழக்கம் எங்கள் குடும்பத்தில் இல்லை; எங்கள் முன்னோர் சென்ற வழியில் தான் நாங்களும் செல்லவேண்டும்; பெண்கள் படித்து என்ன செய்யப்போகிறார்கள்? ஏதோ வேண்டிய சொத்து இருக்கிறது; என்று வேதாந்தம் பேசுபவர் எத்தனை பேர்? உடலை வளர்க்க வேண்டும் என்னும் எண்ணமுடையாருக்கு, உள்ளத்தைப் பண்படுத்த வேண்டும் என்னும் எண்ணம் தோன்றவில்லைபோலும்! நம் நாட்டிலுள்ள படித்த பெண்மணிகளின் தொகையைக் கணக்கிட்டால் இப்பெருங் குறைபாடு நன்கு விளங்கும்.

தொட்டிலை ஆட்டுங் கை, தொல்லுலகை ஆளுங் கை; ஆவதும் பெண்ணால் அழிவதும் பெண்ணால்; என்று கூறினர் பெரியோர். ஆக்குவதில் நாம் எவ்வளவு தூரம் முன்னேற்றமடைந்துள்ளோம் என்பதைச் சிந்திக்கு மிடத்து, அந்தோ! பெண்குலம் பூமிக்குப் பாரமாய்த் தோன்றுகிறது.

எவரோ ஒரு சில பெண்மணிகள் கல்வி பயின்றிருப்பதும், அவர்கள், நாட்டிற்காகப் பாடுபடுவதும் உண்மையே. எனினும், சில கற்ற பெண்களால் மாத்திரம் நாடு முன்னேற்றமடைய முடியாது. ஒவ்வொருவரும் கல்வி பயின்று, தம்முடைய கடமையைச் செய்தலே முறையாகும். படித்திருக்கும் சில பெண்களும், இல்லத்தில் தாம் செய்யவேண்டிய காரியங்களைச் செய்வது கேவலம் எனக் கருதுகின்றனர். எந்தச் சிறு வேலைக்கும் பிறரது உதவியை நாடுகின்றனர். அன்னார்தம் குழந்தைகளும் பணியாளரது கையில் ஒப்படைக்கப் படுகின்றனர். நாகரிக உலகில், நங்கையருக்கு எதற்கும் நேரமே யிருப்பதில்லை. எதிர் கால வுலகத்தில் ஏற்ற பிரஜைகளாக விளங்கப் போகும் இளங் குழந்தைகளைச் சீரிய முறையில் வளர்த்தல் தாய்மாரது

கடனன்ருே? அவர்களுக்கு எத்தகைய உணவு கொடுக்க வேண்டும்? அவர்களை நற்குண நற்செய்கை யுடையோ ராக்குதல் எங்ஙனம்? இல்லத்தையும் சுற்றுப் புறத்தையும் தூய்மையாக வைத்துக்கொள்ளுதல் எப்படி? கொள்ளைநோய் நடமாடுங் காலத்தில் நாம் என்னென்ன முறைகளை அனுசரிக்கவேண்டும்? என்னும் விஷயங்களைப் பணியாளரும், கல்வியறிவில்லாதாரும் உணர்வரோ? வாந்திபேதி, வைசூரி முதலிய நோய்கள் பரவு முன் ஊசி குத்திக்கொள்ள மறுப்பவர் எத்தனை பேர்? சத்திர சிகிச்சைக்கு அஞ்சி உயிர் துறப்பவர் எத்தனை பேர்?

இல்லத்தை ஆள்பவள் 'இல்லாள்' என்னும் பெயர் பெற்ருள். இல்லத்தி லிருப்பவள் சமையற்ருெழிலுக்கு மாத் திரந்தான் உரியவள் என்று எண்ணுதல் தவறு. அவளுடைய கடமை அந்தச் சிறு பணியுடன் நின்றுவிட வில்லை. உலகத்தை உருவாக்கும் தெய்விகப்பணி அவள் கையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. இல்லறத்தை இனிது நடத்தல் ஒரு தனிக் கலை. ஆண், பெண் ஆகிய இருபாலாரும் பயிலக்கூடிய பொதுக் கல்வி வேறு. பெண்கள், தங்கள் வாழ்க்கையில் பயன்படுத்தக் கூடிய கல்வி, வீட்டுக் கலை என்பதாகும். அதை இப்போது சில பெண்கல்லூரிகளிற் புகுத்தி யுள்ளனர். உயர்தரப் பாடசாலை களிலும், குடும்ப நிர்வாக சாத்திரத்தின் சில அம்சங்கள் கற்பிக்கப் படுகின்றன. வெறும் ஏட்டுக் கல்வி பயிலுவதில் பய னில்லை. கற்றவற்றைச் செய்கையிற் காட்டி, வாழ்க்கையோடு இணைக்கவேண்டும் என்பதை இக்கல்வித் துறை நன்கு விளக்கு கின்றது. ஏவலாளர் உதவி யின்றியே, பெண்கள் எங்ஙனம் வீட்டி லுள்ள பணிகளைச் செய்வது என்பதற்குச் சிறந்த பயிற்சி யளிக் கப்படுகிறது. பெண்கள் தாங்களே சமையற்ருெழில் முதலிய வற்றைச் செய்தால் சுவையுடனும், தூய்மையாகவும் செய்ய லாம். மேலும், சிக்கனமும் உடற்பயிற்சியும் உண்டாகின்றன.

அட்டிற்ருெழில் முதலியவற்றை இல்லத்திலுள்ள முதிய பெண்டிரே கற்பித்து விடுவார்களே! அவர்கள் கைநிதானத் தினுல் தயாரிக்கும் உணவு தேவாமிர்தம்போ லிருக்குமே! அதைக் கல்லூரியில் வந்துதானு கற்றுக்கொள்ள வேண்டும்? பொருட்களை அளந்தும் நிறுத்தும் செய்வதால் எங்ஙனம் சுவை யேற்படும்? என்பன போன்ற பல வினுக்கள் எழலாம். இல்லத்

தில்கூடத்தான் கற்ற ஆடவரும் பெண்டிரும் உளர். அவர்களே தத்தம் குழந்தைகட்குக் கல்வி கற்பிக்கலாமே! அதை விட்டுப் பாடசாலைக்கு அனுப்புவானேன்? என்ற விஷயங்களைச் சிந்திக்கு மிடத்து, உண்மை ஒருவாறு புலப்படும். கல்வி நிலையங்களிற் சென்று கற்கும் கல்வியே சிறந்தது. அது ஒழுங்கான கல்வி முறையுமாகும். மற்ற பிள்ளைகள் கற்பதைப் பார்த்துத் தாமும் நன்றாகக் கற்கவேண்டும் என்னும் ஆர்வம் எல்லாருக்கும் உண்டாகும். அதனால் கல்வியிலும் முன்னேற்றம் உண்டாகும். அவ்வாறேதான் கல்லூரியில் பயிலும் வீட்டுக் கலையும். இல்லத்தி லுள்ள முதிய பெண்டிர் எல்லாப் பணிகளையும் செய்துவிடுவதால் கல்லூரி அல்லது பள்ளி மாணவிகள் செய்வதற்கு அங்கு ஒரு பணியும் இருப்பதில்லை. அங்ஙனம் இல்லி லுள்ள பெரியோர், சில வேலைகளைக் கற்பித்தாலும் இவர்கள் ஒழுங்காகக் கற்றுக் கொள்ளுவதில்லை. அத்துடன், அவர்கள் இப்பணி செய்வதைப் பெரிய அவமானமாகக் கருதுவர். அங்ஙனம் பணியாற்றிக் கொண்டிருக்கும்போது யாராகிலும் வந்து விட்டாலோ கேட்கவேண்டியதில்லை. ஏதோ பெருத்த மோசமோ அவமானமோ நேர்ந்துவிட்டதைப் போல் ஓடியொளிந்து கொள்ளுவர். தாய்மொழியிற் பேசுதல் எங்ஙனம் மதிப்புக் குறைவு என்று கருதப்பட்டதோ அவ்வாறே மாணவிகள் பணி செய்தலும் கேவலமெனக் கருதப்பட்டு வருகிறது. தங்கள் இல்லத்துக்கு, மணம் பேச வருபவரிடங்கூட, பெண்ணுக்கு வீட்டு வேலையிற் பழக்கமில்லை; எங்கள் வீட்டில் எல்லா வேலைக்கும் ஆள்தான் என்று பெருமையாகப் பிதற்றும் பெற்றோர் எத்தனை பேர்? இப்படிப் பெண்களை முழுச் சோம்பேறிகளாக்கி விட்டால், நாடு எங்ஙனம் முன்னேற்ற மடையும்? கலாசாலை, கல்லூரி முதலிய இடங்களில் இக்கலை பயிலுவதால் ஒருவரோ டொருவர் போட்டியிட்டுக்கொண்டு, அதிக அம்சம் பெறவேண்டும் என்ற நோக்கத்தால் யாவரும் உற்சாகமாய் வேலை செய்கின்றனர். வீட்டில் செய்யக்கூடிய அத்தனை பணிகளையும் கல்லூரியில், பல பெண்களுடன், பலர் முன்னிலையில் செய்வதால், அத்தகைய பணிகளைச் செய்வது கேவலம் என்ற மனப்பான்மையே அவர்களுக்கு உண்டாவதில்லை. அவர்கள், தங்கள் காரியத்திலேயே கண்ணுங் கருத்துமா யிருப்பார்களே

யன்றிப், பிறருடைய பரிகாசத்தைப் பொருட்படுத்த மாட்டார்கள். சமையல் முதலியவற்றிற்கு வேண்டிய பொருட்களை இப்பொழுது அளந்தும் நிறுத்தும் போட்டாலும், நல்ல பயிற்சி ஏற்பட்டவுடன் கைநிதானமாய் எந்தக் காரியத்தையும் எளிதாயும் விரைவாகவும் செய்யலாம். கைதேர்ந்த ஆட்கள்கூடப் பெரிய சமையலாக இருந்தால், எந்தப் பொருட்களையும் அளந்து போடுவதை நாம் பார்க்கிறோம்.

இது இங்ஙனமிருக்க, கல்வி பயிலுதல் பொருள் தேடுவதற்காகவே என்று ஒருசாரார் கூறுகின்றனர். இதில் ஓரளவு உண்மை யிருப்பினும், வருமானத்திற்காகத்தான் யாவரும் கல்வி கற்கின்றனர் என்பது பொருத்தமுடையதாகாது. அழியும் இயல்புடைய செல்வத்தை, அழியாத கல்விச் செல்வத்தைக் கொண்டு தேடுகிறோம் என்றால், கல்விக்கே குறைவு ஏற்படுகிறது. எனவே, மனப் பண்பாட்டிற்காகத்தான் கல்வி பயிலப்படுகிறதே யன்றி வேறன்று.

கல்வி கற்பிப்பதற்காக, ஆரம்பப் பாடசாலைகள், உயர்தரக் கலாசாலைகள், கல்லூரிகள் முதலியவை எங்கும் ஏற்படுத்தப் பட்டுள்ளன. எனினும், கிராமப் பெண்பாடசாலைகளிலுள்ள தொகையைக் கணக்கிடுமிடத்து, மிகவும் வருந்தவேண்டியதாகவே யிருக்கின்றது. நான்கு அல்லது ஐந்து வகுப்புகள் வரையில் படித்தவுடன் கல்விக்கு முற்றுப்புள்ளி வைத்து விடுகின்றனர். இதனால் அவர்கள் எவ்வளவு தூரம் முன்னேற்றமடையக் கூடும்?

ஆடவன் மாத்திரம் கல்வி பயின்று, பெண் கல்லாதவளாயிருப்பின், அவ்விருவரும் இல்வாழ்க்கை யென்னும் இயல்புடைய வான் சகடத்தைச் செலுத்துதல் எங்ஙனம்? எல்லா அம்சங்களிலும் ஆடவரும் பெண்டிரும் ஒத்திருத்தல் வேண்டும். சம உரிமை சம உரிமை யென்று முழங்குகிற இக் காலத்திலும், கல்வி வாசனையே யின்றிக் காலங் கழிக்கும் பெண்டிர் எத்தனை பேர்? அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளின் அறிவு எத்தகையதாயிருக்கும்? பல நாடுகளும் மிகத் தீவிரமாக முன்னேறிக்கொண்டுவரும் இக் காலத்தில், நம் நாடு மாத்திரம் இவ்வாறு சீர்கேடடைந்திருப்பதேன்? "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்றும், 'கல்லாதார் முகத்திலிருப்பது கண்

ணன்று புண்;' என்றுங் கூறினர் ஆன்றோர். கல்வியறிவற்ற பெரிய பெண்களுக்கும் யாண்டும் முதியோர் கல்விச் சாலைகள் நிறுவப்பட்டுள்ளன. வீட்டுப் பெண்டிருக் கேற்றவாறு, கல்வி பயிலும் நேரமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அரசாங்கத்தார் இவ்வளவு முயற்சியெடுத்துக்கொண்டும், கல்வி பயிலுதற்குப் பல பெண்டிர் வருவது மில்லை; போதிய ஆர்வங் காட்டுவது மில்லை யென்ற குறையே கூறப்படுகிறது. கல்வி பயிலுவதைப் பெண்கள் தங்களுக்குக் கிடைத்த பெரும்பேறென்று கருதவேண்டும். கல்வி பயிலுதற்கு ஒரு வயதும் எல்லையும் கிடையா. எனவே, வயதான பெண்டிர், இனிமேல் கல்வி கற்றால் யாவரும் பழிப்பர் என்று அஞ்சவேண்டியதில்லை.

பெண்கள் கல்வி கற்றல் ஒரு புதிய வழக்கமன்று. பழங்கால இலக்கியத்திற் காணப்படும் செய்யுட்களுட் சில, பெண்பாற் புலவர்களால் இயற்றப்பட்டவை. பிறர் உதவி யின்றி அச் செய்யுட்களுக்கு நாமாக உரை கூறுதல் கடினம். அத்தகைய பெண்டிர் ஏனோ இடைக் காலத்தில் தோன்றவில்லை. எனவே பெண்கல்வியும் நாளடைவில் சீர்கேடடைந்தது. எனினும், எல்லாப் பெண்டிரும் ஒன்றுபட்ட உள்ளத்துடன் முயன்று பாடுபட்டால், நம் நாடும் பிற நாடுகளைப் போல் சீரும் சிறப்பு மடையு மென்பதற் கையமில்லை.

---

# 15. போக்குவரத்தும் பொருளாதாரமும்

[டாக்டர் திரு. பி. நடராஜன், எம். ஏ., டி. லிட்.]

போக்கு வரத்து வசதிகள் அண்மைக் காலத்தில் அதிகமாயினவேனும், நாட்டில் பல பாகங்களில் நேரான, போதுமான சாலைகள் இல்லை. இந்தியாவை ஏனைய நாடுகளோடு ஒப்பிடுங்கால் அதன் குறைபாடு இவ்வளவு என நன்கு விளங்கும்; ஜனத் தொகை விகிதமாகப் பார்க்கும்போது அமெரிக்காவில் சராசரி 1,000 பேருக்கு 23 மைல் நீள ரோட்டும்; ஜர்மனியில் 17 மைல் நீள ரோட்டும்; பிரான்ஸில் 10 மைல் நீள ரோட்டும்; ஜப்பானில் 8 மைல் நீள ரோட்டும் இருக்கின்றன. இந்தியாவிலோ 1,000 பேருக்கு $\frac{1}{2}$ அல்லது $\frac{3}{4}$ மைல்

நீள ரோட்டுத்தான் உண்டு. இந்த ரோடுகளாயினும் நல்ல நிலைமை யில் இருக்கின்றனவா? அதுவுமில்லை. அவை பெரும்பாலும் செப்பனிடப்படாதவை. மழைக் காலங்களில் மனிதரோ வண்டி களோ செல்ல முடியாத நிலைமையில், கிராமாந்தரங்களில் நொடி மலிந்த ரோடுகள் எத்தனையோ இருக்கின்றன. நல்ல சாலைகள் ஒரு நாட்டின் ஜீவநாடி. குக்கிராமங்களில் விளைகிற பொருள் களை வெளியூர்களுக்கும், அயல் நாடுகளுக்கும் அனுப்பவும், கிராம மக்களுக்கு இன்றியமையாத பொருள்களைக் கொண்டு கொடுக்கவும் சாலைகள் வேண்டும். வாழ்க்கை வளர்ச்சிக்குச் சாலைகள் முக்கியமானவை என்பதை உணர்ந்தே நம் முன்னோர் கள் சாலைகள் அமைப்பதும், சாலைகள் நெடுக மரங்கள் வளர்ப்ப தும், தண்ணீர்ப் பந்தல், சுமைதாங்கி முதலியன ஏற்படுத்து வதும் 32 அறங்களில் ஒன்றாகக் கருதினார்கள். அரசி மங்கம் மாள் அமைத்த சாலை, இன்றும் பாண்டி நாட்டில் தமிழர்கள், சாலை நிறுவுவதில் எவ்வளவு ஊக்கம் காட்டினார்கள் என்பதற்கு அழியாத அறிகுறியாக இருந்துவருகின்றது.

தற்காலத்தில் நிலப் போக்கு வரத்துச் சாதனங்களில் பழைய மாட்டுவண்டியோடு வேறு பல வாகனங்கள் தோன்றியுள்ளன. மாட்டுவண்டிகள் நாட்டுப்புறங்களில் விவசாயத்துக்குத் துணை யாகவே பெரும்பாலும் பயன்படுகின்றன. நெடுந்தூரம் செல் வதற்கோ, பெரும் பாரங்களைக் கொண்டு சேர்ப்பதற்கோ மாட்டு வண்டிகள் ஏற்றவை யல்ல. இயந்திர ஊர்திகளாகிய மோட்டார், பஸ், லாரி, ரயில் முதலியன பழைய மாட்டுவண்டிகளினும் இன்று பன்மடங்கு பயனளிக்கின்றன. ஆதலால் ரயில்பாதை களே யாவற்றினும் மிக முக்கியமானவை.

இந்தியாவில் இப்பொழுது சுமார் 40,000 மைல் ரயில் பாதை இருக்கின்றது. இந்த ரயில்பாதை முழுவதும் அரசாங் கத்துக்குச் சொந்தமானது. பிரயாணப் போக்குவரத்துக்கும், உள் நாட்டு வெளி நாட்டு வாணிபத்துக்கும் பயன்படும் ரயில் பாதைகளால் அரசாங்கத்துக்கு ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 50 கோடி ரூபாய் வருமானமும் வருகிறது. அத்துடன் யுத்த காலத்தில் ரயில்பாதைகளே ஒரு நாட்டுக்கு உயிர். 40,000 மைல் ரயில்பாதை இந்தியாவின் தேவைக்கு மிகவும் குறைந்த அளவானதே. வாணிபம் செழித்துப் பொருளாதாரம் வளர

வேண்டுமானல், இன்னும் பல ரயில்பாதைகள் அமைக்க வேண்டும். அவற்ரோடு ரயிலுக்கு வேண்டிய என்ஜின்கள், இயந்திரங்கள் முதலியவற்றை நாட்டிலேயே உற்பத்தி செய்ய வேண்டும். வேண்டிய என்ஜின்கள், கோச்சுகள், வண்டிகள் முதலியன இல்லாமையால்தான் தற்பொழுது ஆங்காங்குப் பஞ்சம் என்ற நிலைமை ஏற்படுகிறது. துணி முதலிய பொருள்கள் ஊருக்கு ஊர், மாகாணத்துக்கு மாகாணம் வேறு வேருயிருப்பதும் இதனுல்தான். ஏனைய நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்தியா ரயில்பாதை சம்பந்தமாகவும் மிகத் தாழ்ந்த நிலைமையிலிருக்கிறதென்பது விளங்கும். 100 சதுர மைல் பரப்புக்கு ஜர்மனியில் சுமார் 18 மைல், அமெரிக்காவில் 8 மைல், இங்கிலாந்தில் 21 மைல், பிரான்ஸில் 12 மைல் நீள ரயில்பாதை இருக்கின்றது ; ஆனுல் இந்தியாவிலோ $2\frac{1}{2}$ மைல் நீள ரயில் பாதைதான் இருக்கிறது. ஆகவே ரயில்பாதைகளை விஸ்தரிப்பதோடு, என்ஜின்கள், வண்டிகள் முதலியவற்றுக்கு அயல்நாட்டு இறக்குமதியை எதிர்பார்ப்பதை நிறுத்தி, நம் நாட்டிலேயே உற்பத்தி செய்ய விரைய வேண்டும். இதற்கு வேண்டிய முயற்சிகள் காஞ்சிரப்பறை என்னு மிடத்தில் மத்திய அரசாங்கம் எடுத்துள்ளது.

பண்டைக் காலத்தில் போக்கு வரத்துச் சாதனங்கள் நிலத்தில் மட்டிலுமின்றி நீரிலும் சிறந்திருந்தன. "காலிலும் கலத்திலும்" என்ற சிலப்பதிகாரச் சொற்ருெடருக்கு உரை கூறப்போந்த ஆசிரியர், கால் என்பதற்குக் கால்களுடைய சகடம் அல்லது வண்டி கொண்ட நிலப் போக்கு வரத்துச் சாதனங்களையும், கலம் என்பதற்கு நீர்மேல் செல்லும் போக்கு வரத்துச் சாதனங்களையும் குறிப்பிட்டார். இதுவரையும் கூறிய நிலப் போக்கு வரத்துச் சாதனங்கள் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் நீர்மீது செல்லும் வாகனங்களும். கப்பல் கட்டும் தொழிலில் தென்னுடு பழங்காலத்தில் சிறப்புற்றிருந்தது. தமிழர் திரைகடலோடி, யவனம், சீனம் முதலிய தேசங்களுக்குச் சென்று வாணிபம் நடத்தியதோடு இலங்கை, புட்பகம், சாவகம் முதலிய தீவுகளில் தங்கள் புலிக்கொடியையும், மீன்கொடியையும் நாட்டி அரசியல் வலிமையையும் நிறுவியுள்ளனர். இவ்வளவு சீரும் சிறப்பும் பெற்றிருந்த கப்பல் தொழில் பிற்காலத்தில்

இருந்த இடம் தெரியாது மறைந்துபோயிற்று ; கரையோரம் கப்பலோட்டும் உரிமை பெற முயன்ற கப்பலோட்டிய தமிழர், காலஞ்சென்ற வ. உ. சிதம்பரம் பிள்ளை சிறையிருக்க வேண்டிய தாயிற்று.

இந்தியாவின் கடற்கரை ஏறக்குறைய 4,000 சதுர மைல் நீளம் கொண்டது. 70 லட்சம் டன் அரிசி, நிலக்கரி, மரத்தடி, உப்பு, எண்ணெய் முதலிய பொருள்களில் கடலோரக் கப்பல் போக்கு வரத்து இன்று நடைபெறுகிறது. வெளி நாட்டு வியாபாரத்தில் ஏறக்குறைய 400 கோடி ரூபாய் மதிப்புள்ள சரக்குகள் கப்பல்களில் செல்லுகின்றன. ஆனால் இந்தியக் கப்பல்களில் அவற்றில் 20-ல் ஒருபங்கு சரக்குகள்தான் செல்லுகின்றன. இதனால் நமது கப்பல் தொழில் இன்னும் எவ்வளவோ விரைவில் விரிவடையவேண்டு மென்பது விளங்கும். சமீப காலத்தில் விசாகபட்டினத்தில் கப்பல் கட்டும் தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளது. நம்முடைய கடலோர, வெளிநாட்டு வியாபாரம் மட்டுமன்றி அயல் நாட்டு வியாபாரம்கூட மூவர்ணத் தேசியக் கொடிபறக்கும் இந்தியக் கப்பல்களில் விரைவில் நடைபெறு மென்று நம்புகிறோம்.

நீர்வழிகள் கடலோர வாணிபத்துக்கும் வெளிநாட்டு வாணிபத்துக்கும் மட்டுமே கருவியா யிருக்கும் என்று சிலர் கருதுகின்றனர். ஆனால் உள்நாட்டு வாணிபத்துக்குப் பெரும் பயனளிக்கும் நீர்வழிகளும் உள ; அவைதாம், கால்வாய்களும் ஆழமுள்ள ஜீவநதிகளும். தோணிகளிலும் படகுகளிலும் நடக்கும் உள்நாட்டு வியாபாரம் பல காரணங்களால் முக்கியமானதாகும். போர்க் காலத்தும் அதன் பின்னரும் ரயில் வண்டிகள் கிடையாமல் ஊண், உடை முதலிய இன்றியமையாத பொருள்கள் இடமிருந்து இடம் பெயர்வதற்குத் தயக்கம் உண்டாகிய காலத்தே, இந்த வாய்க்கால்கள்தாம் பெரிதும் உதவின. ஆனால் ரயில்வே கம்பெனிகளின் சுயநலத்தாலும் பேராசையாலும் இந்தக் கால்வாய்ப் போக்கு வரத்து வளராது போயிற்று. சர் ஆர்தர் கார்டன் என்னும் ஆங்கில என்சினியர் கங்கை முதல் காவிரி வரை இணைக்கும் ஒரு கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்றி வைக்க எத்தனையோ முயன்றும், ரயில்வேக் கம்பெனி முதலாளிகளின் கையில் பம்பரமாய் ஆடிய அன்றிருந்த வெள்ளையர் அரசாங்கம்

ஆர்தர் கார்டன் அருமொழிகளை எள்ளி நகையாடியது. இக் காலத்தும் இந்தக் கால்வாய் நீர்வழியின் எளிமைச் சிறப்பை அறிவாரில்லை. இன்று சென்னை மக்களுக்கு உண்ண உணவும் உணவு சமைக்க விறகும் தடங்கலின்றிக்கிடைப்பது பக்கிங்காம் கால்வாயின் புண்ணியமே. வேதாரணியம் கால்வாயோடு பக் கிங்காம் கால்வாயை இணைக்க 25 லட்ச ரூபாய் செலவில் சென்னை அரசாங்கத்தில் ஒரு திட்டம் இருக்கிறது. இது நடை பெற்றால் காக்கினடா முதல் வேதாரணியம் வரை 600 மைல் நீள முள்ள ஒரு உள்நாட்டு நீர்வழி உருவாகித் தென்னாட்டுக்கு மிக்க பயனளிக்கும். இது போன்று மேலைக் கரையோரத்திலும் செய்ய இருக்கும் ஆறு திட்டங்கள் உள்ளன. அவற்றால் பொன்னானித் தாலுகா வழியாகக் கோழிக்கோடு முதல் கொச்சி வரை ஒரு நீண்ட நீர்வழி தோன்றக்கூடும்.

நீர்வழி, நிலவழிகளன்றி, இன்று வான் வழியும் போக்கு வரத்துச் சாதனத்தில் தனியிடம் பெற்றுவிட்டது. ஆகாய விமானங்கள் விண்ணை மின்னெனக் கிழித்து, உலகின் நாலா பாகங்களுக்கும் செல்கின்றன. கண்மூடி விழிப்பதற்குள் காதம் பறக்கின்றன ; காலையில் சென்னை, மாலையில் டில்லி ; பிரயாணப் போக்கு வரத்தில் ரயில் வழிக்கும் ஆகாய வழிக்கும் போட்டி மும்முரமாகிறது. பார மிகுந்த சாமான்களை எடுத்துச் செல் வதிலும் போட்டி எழுவதற்கு இன்னும் வெகுநாளில்லை. இந்தி யாவில் 25 விமானக் கம்பெனிகள் இருக்கின்றன. ஏறக்குறைய 50 கோடி ரூபாய் மூலதனம் போடப்பட்டிருக்கிறது. நாளுக்கு நாள் நம் நாட்டு மக்களுக்கும் விமான இங்கிதம் மிகுந்து வருகின்றது.

பொருளாதார நிலை உயரவேண்டுமானல்; போக்கு வரத்து வசதிகள் விரிவடைய வேண்டும் ; நீர் வழி, நில வழி, வான் வழி என்ற மூன்று துறைகளிலும் வளர்ச்சி வேண்டும். மூன்று துறைகளும் ஒன்றோடொன்று முரணாது ஒற்றுமையோடு நாட்டின் பொருளாதார நலம் என்ற ஒரே லட்சியத்தை மேற் கொண்டு நடைபெற வேண்டும். வீண் போட்டியால், தனி மனிதர்க்கன்றிப் பொது சமுதாயத்துக்கும் பெருநஷ்டம் ஏற்படும். ரயிலுக்கும் லாரிக்கும், ரயிலுக்கும் மோட்டாருக்கும், ரயிலுக்கும் படகுக்கும், ரயிலுக்கும் விமானத்துக்கும் போட்டி

தோன்றுது காக்கவேண்டும். நில வழிக்கும், நீர் வழிக்கும், வான் வழிக்கும் இணங்கிய தொடர்பு வேண்டும்.

பொருளாதார நிபுணர்கள் போக்கு வரத்தைப் பெரிதென்று மதிக்காத காலமும் இருந்தது. போக்கு வரத்துத் துறையில் உழைப்போரை வீணுக்குழைக்கும் மக்கள் என்று பதினெட்டாம் நூற்றுண்டில் பிரான்ஸில் தோன்றின "பிஸியோக்ரட்ஸ்" என்ற பொருளாதாரக் குழுவினர் கருதினர். அன்று இன்றுள்ள போக்கு வரத்துச் சாதனங்கள் தோன்றவில்லை. அவ்வப் பிரதேசத்தில் உற்பத்தியாகும் பொருள்களை ஆங்காங்குள்ள மக்கள் துவரத் துய்ப்பதே பொருளாதார இலட்சியமாக விளங்கியது. பின்னர், இயந்திரக் கப்பல்கள் தோன்றின; ரயில் வழிகள் தோன்றின; போக்கு வரத்துச் சாதனங்களிலேயே புரட்சிகரமான மாறுதல் ஏற்பட்டது. தேசங்கள் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டன. உள் நாட்டு வாணிபத்திலும் வெளி நாட்டு வாணிபம் மேலிடம் பெற்றது. பொருள்களை இடமிருந்து இடம் கொண்டு செல்வோரும் பொருள்களை உற்பத்தி செய்வோருக்கு நிகர் என்னும் உண்மையைப் பொருளாதார நூலாசிரியர்கள் வலியுறுத்தலாயினர். அதன் பயனுய் ஆஸ்திரேலிய திராட்சைப்பழம் சென்னைப் பழக்கடையிலும், அஸ்ஸாம் தேயிலை லண்டனில் வாழும் மக்கள் கையிலும், அமெரிக்காவிலிருந்து பென்ஸிலின் முதலிய மருந்துகள் உலகத்தின் நாலாப் பக்கங்களிலும் இன்று எளிதில் கிடைக்கின்றன.

தானுய் நிற்றல் என்பது இன்று தனி மனிதர்க்கும் முடியாது; சமூகங்களுக்கும் முடியாததொன்று. சுதந்தரம், சுய நிர்ணயம் என்பவையெல்லாம் அரசியல் உலகில் எத்தனை தனியிடம் பெறினும், பொருளாதார உலகில் வீண் கனவேயாகும். தேசங்கள் ஒன்றையொன்று சார்ந்து நிற்றலே பொருளாதார வளர்ச்சிக்கு நிலையான பயனைத் தரும் நெறியாகும். பொருளிலே சுழலும் இந்த உலக வாழ்க்கை வெற்றியுற வேண்டுமேல், போக்கு வரத்துக் கருவிகளைப் பெருக்கிப் பயன்படுத்தியே ஆகவேண்டும். அதுவே உழவொடு தொழில் செழிக்கும் வழியாகும்.

# 16. மருகனுக்கு அறிவுரை (கடிதம்)

(புலவர் திரு. பு. செல்வராஜ்)

40, பெரியண்ணன் தெரு,
செம்பாக்கம்
4—2—'49.

அன்பு கெழுமிய திரு. இளஞ்செழியனுக்கு, என் வாழ்த்து உரியது. நலம். நலம் அறிய விழைகின்றேன்.

உன் கடிதம் கிடைத்து நீண்ட நாட்களாயின. எழுதாமல் இருப்பதற்குக் காரணம் என்னவென்பது தெரியவில்லை. இதனால் எனக்கு மனக் கவலை ஏற்படுகிறது என்பதை நீ அறியாயோ?

தந்தையை இழந்த உன்னைச் சென்னைக்கு அனுப்பிப் படிக்க வைக்கவேண்டும் என்று நான் விரும்பினேன். உன் தாயார் தடுத்தார். நான் கிராமக் கல்வி அறிவும் நிரம்பப் பெருதவன் ஆதலால், வாழ்வில் அடைந்த இடுக்கண்கள் பல. இன்று நான் செல்வம் படைத்தவனாயிருப்பினும், கல்வியினால் ஏற்படும் அறிவுச் செல்வம் அற்றவனாயிருப்பதை நன்றாக உணர்கிறேன்; அதனால் அறிஞரிடையே பழக நேர்ந்த சமயங்களில் நெடுமரமாய் நின்றுள்ளேன்; அறிவின் அமுதத்தை அள்ளிப் பருக முடியாதவனாயுள்ளேன்; கண்ணிருந்தும் அறிவுலகைக் காணும் பார்வையற்றுள்ளேன். என் குறையை நான் நன்கறிந்திருப்பதால், என் தங்கை மகனாகிய உன்னைக் கல்வியறிவு மிக்க அறிஞனாக ஆக்க முடிவு செய்தேன். என்னைப் போல் உன் தாயாராகிய என் தங்கையும் கல்வி அறிவு வாய்க்கப் பெருதபடியால், அவர் தடுத்ததையும் பொருட்படுத்தாமல் உன்னைச் சென்னைக்கனுப்பி, உயர்கல்வி பெறும் துறையில் ஈடுபடுத்தினேன்.

'மாமாவுக்குப் பிள்ளை இல்லாததால் அவரது செல்வம் என்னைத்தானே சேரும்' என்று நீ எண்ணிப் படிப்பிலுள்ள ஊக்கத்தைத் தளரவிடாதே. செல்வம் நிலையுள்ளது, கல்வியை விட உயர்ந்தது என்று எண்ணாதே. செல்வம் வெள்ளத்தாற்

போகும்; வெந்தழலால் வேகும்; வேந்தரால் கொள்ளமுடிவது; கள்வரால் கவரத் தக்கது; காவல் வேண்டுவது; பிறர்க்குக் கொடுக்கக் குறைவது. ஆயின், கல்விக்கு இத்துணைக் கேடுகள் இல்லை. அஃது ஒருவன் உள்ளத்தைத் தூய்மைப்படுத்தும்; உலக அறிவை ஊட்டும்; மனிதத் தன்மையை உயர்த்தும்; பிறர்க்குக் கொடுக்க (கற்பிக்க) வளரும்; ஒழுக்கத்தைச் செம்மைப்படுத்தும். 'கல்வியே உற்றுழியும் கைகொடுக்கும். சிற்றுயிர்க் குற்ற துணை அதுவேயாம்' என்பது ஆன்றோர் அருளிய வாக்கன்றோ? கல்வியற்ற செல்வர் பலர் அறியாமையால் சூதாட்டம், குதிரைப் பந்தயம் முதலியவற்றில் தம் கைப் பொருளை இழந்து, பிழைக்கக் கல்வியின்றி வறுமையின் வடிவங்களாக வாடி அலைதலை நாம் நாள்தோறும் நாட்டிற் காண்கின்றோம். கற்றவராயின், கைப் பொருள் ஒழிந்த விடத்தும் கலக்கமின்றித் தொழிலில் ஈடுபட்டு மாதந்தோறும் சம்பளம் பெற்று வாழ்க்கையை இன்பமாகக் கழித்தலைக் காண் கிறோம். இவ்விரு திறத்தினரையும் நோக்க நாம் அறிவ தென்னை? செல்வம் இருப்பினும் இராதொழியினும் ஒவ் வொருவரும் கல்வி பெறுதலே நல்வாழ்க்கைக்கு உறுதிபயப்பது என்பதை அல்லவா நாம் அறிகின்றோம்?

சென்னை நகரம் பலவகை மக்கள் குழுமியுள்ள இடம்; பல்வேறிடங்களிலிருந்து வந்த, பல்வேறு வகையான பண்பா டுடைய மக்கள் சேர்ந்து வாழுமிடம்; மாணவர்களின் மனத்தைப் பல்வேறு துறைகளில் ஈர்க்கத்தக்க திரைப்படக் காட்சிகள், நாடக, நடன, இசை அரங்குகள், இவைபோன்ற இன்னும் பல பெருகியுள்ள இடம். கிராமங்களிலிருந்து அங்குப் படிக்கச் செல்லும் மாணவர்கள், பிறருடன் சேர்ந்து பயில நேரிடும் போழ்தும், மனத்தை ஈர்க்கும் காட்சிகளுக்குப் போகத் துணியும் போழ்தும் தங்கள் குடும்ப நிலை, பண்பாடு முதலிய வற்றினை எண்ணி, தீய நட்புக்கு இடந்தராமலும், காலத்தை வீணிற் போக்காமலும் இருத்தல் வேண்டும். இத்துறையில் நீ மிகுந்த கவனம் செலுத்துதல் வேண்டும். வீணிற் பொழுது போக்கும் காட்சிகள், தீயவழியிற் புகுத்தும் தோழர்தம் நட்பு, பலனின்றிப் பணத்தைச் செலவிடும் பழக்கங்கள் முதலிய வற்றினை நீ கனவிலும் கருதுதல் கூடாது.

நீ தமிழன் என்பதை மறவாதே. சென்னையில் புகழ் பெற்ற தமிழ்ப் பேராசிரியர் பலர் இருக்கின்றனர்—அவர்கள் அவ்வப் போது பல விழாக்களிற் கலந்துகொண்டு அரிய சொற்பொழிவு கள் ஆற்றிவருகின்றனர் என்பதைச் செய்தித் தாள்களில் நான் பார்க்கிறேன். அப்பெரியாருள் திரு. வி. கலியாண சுந்தர முதலி யார் அவர்கள், எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள், தெ. பொ. மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள், ரா. பி. சேதுப் பிள்ளை அவர் கள் முதலியோர் குறிப்பிடத்தக்கவர். நீ அவர்கள் சொற்பொழிவு களைக் கேட்கத் தவறாதே; அவர்கள் பேசும் பொருள்களைப் பற் றிய செய்திகளைக் குறித்துக்கொள்; அவற்றைப் பற்றி நினை; அவற்றைக் கட்டுரையாக எழுதிப் பழகு. அப் பெரியோர்களைப் போல நீயும் உன் தாய் மொழியிற் புலமை பெறவேண்டும் என்று நினை; அழுத்தமாக நினை; உனது எதிர்கால வாழ்வில் அவர் களைப் போலத் தாய் மொழிக்குத் தொண்டு செய்யவேண்டும் என் னும் எண்ணம் உன் உள்ளத்திற் கருக்கொள்வதாக. 'என் தமிழ் நாட்டுக்கு நான் எந்த வகையில் நல்ல தொண்டு செய்ய இயலும்?' என்பதைப் பற்றி அடிக்கடி நினை.

உன் பள்ளி ஆசிரியர்களிடம் அன்பும் மரியாதையும் காட்டி நடந்துகொள். உன் பள்ளி மாணவர்களிடம் அன்பு காட்டு. நல்ல மாணவருடன் பழகு; தீய மாணவரைப் பகைத்துக் கொள்ளாதே; நகைமுகம் காட்டி விலகிச் செல். எப்பொழுதும் எல்லோரிடத்தும் நகைமுகமும் இன்சொல்லும் உடையவனாக இரு. பிறருடைய நற்பண்புகளை மட்டும் வெளியே சொல். இவை உனது வாழ்வைச் சிறப்பிக்கும் உயிர்ப் பண்புகள் ஆகும்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்று வள்ளுவப் பெருந்தகையார் கூறியிருப்பதாக நான் கேள்விப்பட்டதுண்டு. அந்தப் பொன்மொழியை என்றும் மறவாமல் உன் உள்ளத்திலிருத்தி, நன்கு கற்று, கற்றபடி நின்று ஒழுகும் சிறந்த அறிஞனாக நீ திகழுதல் வேண்டுமென்று நான் விரும்புகின்றேன்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"

என்பதற் கிணங்க, நீ அறிவுடையவனாகவும் சான்றோனாகவும் மிளிர்ந்தால் உன் தாயாரும் பெருமகிழ்ச்சி எய்துவார் அல்லவா? இவற்றையெல்லாம் சிந்தித் துணர்ந்து, கல்வியில் கவனம் செலுத்தி, அடுத்துவரும் ஆண்டுத் தேர்வில் முதல்வனாகத் தேர்ச்சி பெறுவாய் என்று நம்புகிறேன்.

உன் நலத்தை என்றும் நாடும்,

உனதன்பு மிக்க மாமன்,

**மணிவண்ணன்.**

திரு. வ. இளஞ்செழியன்,
9–ஆம் வகுப்பு,
முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளி,
சென்னை. 1.

---

## 17. ரோவால்ட் அமண்சன்

[சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்]

### நில முனைகள்

நில உருண்டையினுடைய வடமுனையையும் தென்முனையையும் ஆராய்ந்தறியப் பண்டைநாள் முதல் அறிஞர் பலர் முயன்றனர். பயணத்திற்கே இடையூறு விளைக்கக்கூடிய இடம் நில உருண்டையினுடைய முனைதான். அங்குக் குளிர் மிகுதியால் தரையில் பனி உறைந்திருக்கும். உணவுப் பொருள் கிட்டாது; ஆறு திங்கள் அளவும் பகலாகவும், ஆறு திங்கள் காலம் இரவாகவும் இருக்கும். தரையிலும் ஆங்காங்குப் பெரும் பள்ளங்கள் உள்ளன. பனி மூடிய நிலத்தில் வழுக்கிப் பள்ளத்தில் விழ நேரிடின் உயிர் தப்பல் இயலாது. அன்றியும், குளிர் நாளில் கடல் நீரும் உறைந்து விடுமாதலால் கலங்கள் கடலில் சிக்கிக் கொண்டு அசைய முடியாதபடி இருக்க நேரிடும். முனை நோக்கிச் செல்லும்போது கலம் தவறான வழியே சென்று பாறைகளில் மோதியும், பெரு மீன்களினால் தாக்குண்டும் ஒழிவதால் கலத்திற் செல்லும் அனைவரும் உயிரிழக்கநேருவதும் உண்டு.

## வடமேற்கு வழி

ஆசியா சென்று அந்த நாட்டாரோடு வாணிபம் செய்ய ஐரோப்பியர் விரும்பினரென்பதை நீங்களறிவீர்கள். தரை வழியாக ஆசியா செல்ல ஒரு வழி காணப் பலர் முயன்றனர். மற்றொரு பிரிவினர் கடல் வழியாக ஆப்பிரிக்காவைச் சுற்றி இந்தியா செல்லக் கூடுமென்றும் கருதினர். ஐரோப்பாவின் வடமேற்கில் சென்றால் ஆசியாவின் கிழக்குப் பகுதியையடையலாம் என்று பலர் எண்ணமிட்டனர். நிலம் உருண்டை வடிவான படியால் ஐரோப்பாவிலிருந்து மேற்கே சென்றாலும், கிழக்கே சென்றாலும் ஆசியாவை யடையலாம் என்று அவர்கள் நினைத்தனர். இவ்வாறு ஐரோப்பாவிலிருந்து வடமேற்காகச் சென்று ஆசியா செல்லும் வழி அறிபவர்களுக்கு இருபதினாயிரம் பொற் காசுகள் நன்கொடை யளிப்பதாக ஆங்கில அரசினர் அறிவித்திருந்தனர். ஆதலால் வடமேற்கு வழியைக் கண்டு பிடித்தால் அப்பரிசில் பெறுவதும் உலகோரனைவருடைய வாழ்த்துக்கும் நன்றியறிவிற்கும் தாம் உரியராவதும் ஒருபுறமிருக்க, உலகின் பல நாட்டு மக்களுக்கும் தாம் ஒரு தொண்டு ஆற்றியதாகும் என்று அறிஞர் பலர் முயன்றனர்.

## அமண்சன் ஆராய்ச்சி

அவர்களுள் [1] **ரோவால்ட் அமண்சன்** ஒருவர். அவர் [2] **நார்வே** நாட்டைச் சேர்ந்தவர். இளமையிலேயே எதையும் நுட்பமாகக் கூர்ந்து ஆராயும் ஆற்றல் பெற்றிருந்தார். திறமையும் மனவன்மையும் மிக்க செயல்கள் பல செய்வதில் அவருக்குப் பெரிதும் விருப்பம். அவர் உலகின் வடமுனையைக் காண ஊக்கம் கொண்டார். தமக்குமுன் வடமுனை காணச் சென்று மறைந்த [3]**சபாஸ்டியன் காபட்**, [4]**ஹென்றி ஹட்ஸன்**, [5]**விட்டஸ் பேரிங்**, [6]**ஜான் பிராங்ளின்** முதலியவர்களுடைய வாழ்க்கை வரலாறுகளையும், வடமுனைப் பயணத்தின்போது அவர்கள் அவ்வப்போது தாம் கண்டவைகளைப்பற்றி வரைந்த குறிப்பு விவரங்களையும் ஆவலுடன் படித்தார். அத்தனைபேரும் வெற்றி அடையாததற்குக் காரணம் யாதென ஆராய்ந்தார்.

---

[1]Roald Amundsen. [2]Norway. [3]Sebastion Cabot. [4]Henry Hudson. [5]Vittus Bering. [6]John Franklin.

அனைவரும் ஆற்றலும் ஆண்மையும் பெற்றவர்களே ! ஆயினும், வட முனையைக் காணச் செல்லும்போது அவர்கள் பயணத்திற் குறைபாடுகள் இருந்தனவோ என அவர் ஆராய்ந்தார். கடுங்குளிரிலிருந்து தங்களைக் காக்கத் தகுந்த உடைகளை வட முனை செல்பவர்கள் அணிவதால் ஒருவாறு குளிர்க் கொடுமையி னின்றும் தப்பலாம் ; பனிப்புயலினின்றுந் தப்புதல் அவரவர் செல்லும் காலத்தைப் பொறுத்தது ; வழியில் ஏற்படும் இடர்கள் எல்லோருக்குமே உண்டு. எனினும், எதிர்பாராத சில நிகழ்ச்சி களால் தாம் மீளத் திட்டம் போட்டிருந்த காலத்தில் மீள முடி யாமற் போவதுண்டு ; கப்பல் குளிரால் உறைந்த நீரில் சிக்கிக் கொள்ளுமாயின் கோடை வரும்வரை காத்திருக்க நேரும். அக் கோடையிலும் அப்பாகத்தில் ஏற்படும் வெப்பம் பனிப் படலத்தை முழுவதும் கரையச் செய்யப் போதுமானதாயிராது. அப்போது மனித முயற்சியால்தான் பனிப் படலத்தை உடைத்துக் கலஞ் செலுத்த வேண்டும். இத்தகைய எதிர் பாரா நிகழ்ச்சிகளால் ஏற்படும் கால தாமதத்திற்கு ஏற்ற அளவு உணவுப் பொருளையும் கொண்டு செல்லல்வேண்டும். நெடு நாட்கள் சேமித்து வைக்கப்பட்ட பொருள்களையே உண்ணவேண்டு மாத லால் அவர்களுக்கு நோய் வரக்கூடும் ; ஆதலால் அதற்குத் தக்க முன்னேற்பாட்டோடு செல்லவேண்டும்.

## தென் முனைப் பயணம்

இத்தகைய இடுக்கண்களைப் பற்றியும் அவற்றைத் தடுக்கத் தகுந்த ஏற்பாடுகள் எவை என்பது பற்றியும் அமண்சன் நன்கு ஆராய்ந்தார். தாம் செல்லக் கூடிய பயணத்தில் தமக்கு ஏற்படும் இன்னல்களைப் பொறுத்துக்கொள்ளப் பழக முயன்றார். அதற்காக அவர் கலங்களிற் பணியாற்றத் தொடங்கினர். அப்பணியில் நற்றிறமை யடைந்து நற்பெயர் பெற்றபடியால் [1] **தென் கீழ் முனை**யை ஆராய்வதற் கென்று பயணப்பட்ட [2] **பெல்ஜிகா** என்ற கப்பலின் தலைவரானர். இந்நிகழ்ச்சி அவருக்கு மிகவும் ஊக்கத்தை ஊட்டியது. தென்முனை செல்லும்போது தாம் கண்டறியும் கருத்துக்கள் வடமுனையைத் தாம் ஆராயச் செல்லும் போது தமக்கு உதவும் என்று அவர்

---

[1] South Magnetic Pole. [2] Belgica.

நினைத்தார். ஆதலால், தாம் செல்லுகையில் ஏற்பட்ட ஒவ்வொரு நிகழ்ச்சியையும் குறித்துக்கொண்டார். [1]**தென் விக்டோரியா நிலத்தை** நெருங்கியபோது கலம் பனியில் சிக்கிக் கொண்டது. ஓராண்டளவும் அசையாமல் இருந்தது. கடுங் குளிர் தாங்காமல் மாலுமிகளிற் சிலர் மனநிலை யிழந்தனர்; மற்றவர் [2]**கடல்நோய்வாய்ப்** பட்டனர். வழக்கமாய் உண்ட உணவுப் பொருளை விட்டுப் புதிதாய்த் தயாரித்த உணவுப் பொருளை உண்டால் கடல்நோய் தீரும் என்பதை அமண்சன் அறிவார். மிகுந்த தொல்லையோடு அமண்சன் அவ்வுறை பனிப் படலத்தில் நெடுந்தொலை சென்று மீனும் பறவைகளும் தேடிக் கொண்டு வருவார். நாளடைவில் நோய் நீங்கி மாலுமிகள் உடல் நலமுற்றனர். தாம் சென்ற கலம், பனிப் படலம் கரைந்து பயணம் செல்லக்கூடிய நிலைஅடைந்ததும் அமண்சன் நார்வே திரும்பினார்.

## அறிஞரை அடைதல்

[3]**இழுதிறனையும்** [4]**காற்றுப் பகுதி நிலையையும்** ஆராய்ந்தறியுங் கலை பயில அமண்சன் ஆவல் கொண்டார். [5]**வான் நியூமேயெர்** என்னும் செருமானிய அறிஞரிடம் சென்றார். அவ் அறிஞர் அமண்சனை மிக்க பரிவோடு வரவேற்றார். அமண்சன் இழுதிறனைப் பற்றித் தாம் நன்கு ஆராய்ந்தறிய விரும்புவதாகவும், தென் முனை யடுத்த பிரிவில் தாம் இரு ஆண்டுகள் சுற்றுப் பயணம் செய்திருப்பதாகவும் அறிவித்தார். நியூமேயெர் குறுநகை கொண்டார். "நீங்கள் உங்கள் உளக் குறிப்பு முழுவதையும் எனக்கு உணர்த்த வில்லைபோலிருக்கிறது! இன்னும் ஏதேனும் நீங்கள் அறிய விரும்பினால் தாங்கள் அதை எனக்கு அறிவிக்கலாமே!" என்று அமண்சனை அறிஞர் கேட்டார். "வடமேற்கு வழியை நானே முதலில் வகுக்கவேண்டும் என்பது என்னுடைய பேரவா!" என்று விடை யிறுத்தார் அமண்சன். "புகழத்தக்க பேரவாவே, தாங்கள் இன்னும் ஏதோ ஒன்றை என்னிடம் கூறாமல் மறைக்கின்றீர்கள்," என்று அறிஞர் கூறினார். அமண்சன் நியூமேயெரின் நுண்ணறிவை வியந்தார்; நாட்டுப் பற்று மிக்க பல இளைஞருக்குள்ள இலக்கு

[1] South Victoria Land. [2] Scurvy. [3] Magnetism, [4] Meteorology. [5] Von Neumayer.

தமக்கும் இருக்கும் என்பதைத் திடமாய்க் கண்டுகொண்ட அவ். அறிஞரை நோக்கி, "ஆம்! கூறிவிடுகிறேன்; வட விழு முனை எவ்விடம் உள்ளது என்பதையும் காண நான் எண்ணியுள்ளேன்" என்று கூறினார்.

## அறிஞரின் ஆசி

அமண்சனை அறிஞர் ஆவலோடு தழுவிக் கொண்டார்; "தாங்கள் அதைச் செய்தால் ஊழிவரை மக்களுக்கு மாண்பு மிக்கதோர் உதவி செய்தோ ராகுவீர். அதுவே உண்மையான வீரச் செயல்" என்று கூறினார். அமண்சனுக்கு அளவில்லாத உள்ளக் கிளர்ச்சி ஏற்பட்டது. தம்முடைய முயற்சியில் தமக்குத் தோல்வியே கிட்டுமென்றும், தாம் அம் முயற்சியால் வீண் தொல்லையே அடைய நேருமென்றும் எவரேனும் தமக்கு அறிவுறுத்திக் கூறினாலும் தினையளவும் உளத்தளர்வு அடையாத அவருக்கு நியூமேயெர் கூறிய சொற்களைக் கேட்டதும் உற்சாகம் கட்டுக்கடங்காமற் பெருகியது. தம்முடைய முயற்சியில் தாம் நினைத்ததைவிடக் கொடிய இடுக்கண் நேரினும், தாமும் தமது துணைவர்கள் அனைவரும், தாம் மேற்கொள்ளப் போகும் பயணத்தில் மரிக்க நேரினும், தாம் வடவிழு முனையை எவ்வாறேனும் காண முயல்வதென்று முன்னரே கொண்டிருந்த உறுதியை மீண்டும் திடப்படுத்திக் கொண்டார்.

## வடக்குப் பயணம்

1903-ஆம் ஆண்டு ஜூன்மீ 16உயில் அறுவரைத் தமக்குத் துணைவராகக் கொண்டு அமண்சன் ஒரு மீன்படகில் பயணமானார். சின்னாட்களில் கலம் [1]உரியொலி என்னுமிடத்தைச் சேர்ந்தது. அதற்கப்பால் அவர்களுக்குமுன் வேறெவரும் சென்றதில்லை. எனவே [2]வழிப்படங்கள் எவையும் இல்லை. அமண்சன் மிகுந்த விழிப்போடு கலத்தைச் செலுத்தலானார். தாம் சென்ற வழியைக் காட்டும் வழிப்படத்தைத் தாமே தயாரித்தார். ஒருநாள் கடும்புயலொன்று தொடங்கியது. கலமானது அங்கு மிங்கும் நிலையிழந்து ஆடிற்று. பெரிய அலையொன்று விரைவாகத் துடுப்பில் மோதிற்று. துடுப்பு

---

[1] Peel sound. [2] Charts.

அச்சை விட்டுச் சற்று விலகிவிட்டது. கலத்தைத் தங்கள் திட்டப்படி செலுத்தல் இனி அவர்களால் இயலாது. கலமும் வழி தப்பியது. ஒரு பாறையை நெருங்கிற்று; கலத்தின் அடிப்புறமும் பாறையின் ஒரு புறத்தில் மோதியது. அவர்களெல்லோரும் தங்களுடைய ஆயுள் முடிவடைந்ததாக நினைத்தனர்; அமண்சனுக்கு உயிரிழப்பதில் அச்சம் இல்லை. எனினும் தம்மால் நாட்டுக்கு ஏற்பட விருந்த நற்பயன் கிட்டாதே என்ற ஒரு குறை உண்டாயிற்று. எனினும், அவர் நம்பிக்கையை முழுதும் கைவிடவில்லை. ஒருவேளை ஏதேனும் தாம் முன்னேக்காத நிகழ்ச்சியால் தமது திட்டம் நிறை வேறினாலும் நிறைவேறும் என்று நினைத்தார்.

## கலம் நிலையடைதல்

மறுகணம் வேறொரு திரையானது கலத்தைத் தள்ளி அதனுடைய வழியிற் சேர்த்தது. திரையால் தாக்குண்ட துடுப்பு மீட்டும் தன்னிலை சேர்ந்து பணியாற்றத் தொடங்கிற்று. அனைவரும் உள மகிழ்ந்தனர். கலத்தில் ஓட்டை ஏதாவது ஏற்பட்டதோ என்று விரைவாகச் சோதித்தார்கள். கலத்திற்கு ஊறு ஏதும் ஏற்படவில்லை என்று கண்ட அமண்சன் அடைந்த களிப்பை யாரே அறிவார்! எனினும், துடுப்பு மீண்டும் நிலையிழந்து விடுமோ என்றொரு கவலை அவரை வாட்டியது. மிகவும் மெதுவாகக் கலத்தைச் செலுத்தி [1]**வில்லியம் அரசர் தீவு** என்று இப்போது சொல்லப்படும் தீவையடைந்து ஒரு தகுதியான இடத்தில் கலத்தை நிறுத்திக் கரை சேர்ந்தனர். குளிர்காலம் தொடங்கி விட்டபடியால் அவ்விடத்திலேயே தங்களுக்குத் தங்குமிடங்கள் அமைத்துக் கொண்டு குளிர்காலத்தை அங்கே கழித்துக் கோடைகாலம் வந்துற்றதும் தம்முடைய பயணத்தை மீண்டும் தொடங்கலா மென்று அவர்கள் கருதி அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டார்கள். அவ்விடத்திலேயே அமண்சன் தமக்கென ஒரு [2]ஆய்கூடம் ஏற்படுத்தி, இழுமுனையினுடைய இருப் பிடத்தைக் காட்டக்கூடிய பொறிகளை அவ்விடத்தில் அமைத்தார்.

---

[1] King William Island. [2] Observatory.

## ஆய் கூடம்

ஆய் கூடம் அமைப்பதற்குத் தேவையான பொருள்களே அமண்சன் தம்மோடு கொணர்ந்திருந்தார். [1] இழுதிற ஊசிகளே அமைக்கத் தகுந்த சிறந்த சலவைக் கற்களேயும், வெப்பமும் குளிரும் அவற்றைத் தாக்காவண்ணம் காப்பளிக்கப் பலகை களாலும் செப்பாணிகளாலும் ஆக்கப்பெற்ற பெட்டிகளேயும் கொணர்ந்திருந்தார். இருப்பாணிகளே [2] இழுதிறன் [3] வயப் படுத்துமாதலால் பெட்டிகளில் இரும்பு ஆணிகளே அமைத்தால் தமது இழுதிற ஊசிகள் அவற்றின் பணியைச் செவ்வனே செய்ய இயலாவென்று அவர் அறிந்திருந்தார். அமண்சன் தமது முழுத் திறனேயும் பயன்படுத்தி அமைத்த அப் பொறிகள் நன்கு பணியாற்றின.

## வட விழுமுனே

நில உருண்டையின் வடக்கேயும் தெற்கேயும் இழுதிறன் உள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள். அதனுற்றான் ஒரு இழு திறன் ஊசியை நாம் பார்த்தோமானல் அது தென் வடலாகவே உள்ளது. இனி இவ்வூசி குறிப்பிடும் வட திசையானது [4] வட முனே மீன் இருக்குமிடத்திலிருந்து சற்றுக் கிழக்கிலோ அல்லது மேற்கிலோதான் பெரும்பாலும் உள்ளது. சில சமயங்களில் இவ்வூசியானது பல மாதங்களுக்குமுன் காட்டிய திசையைக் காட்டாமல் சற்றே மாறுபட்டு நின்றது. ஆதலால், நில இழுதிற னுடைய முனேகள் இடம் மாறிக்கொண்டு வரக்கூடுமென்று அமண்சனுக்குத் தோன்றியது.

## உள் நாட்டினரைக் காணல்

கலத்திற் சேமிக்கப்பட்ட உணவுப் பொருள்களன்றி வேறு உணவுப் பொருளே உண்ணவேண்டு மென்று அமண்சனும் துணைவரும் விரும்பினர்கள். அப்போதெல்லாம் அமண்சனும் அவர்தம் துணேவரும் சென்று விழுமுனேக் கரடிகளேயும் கலேமான்களேயும் வேட்டையாடி வருவார்கள். அவற்றின்

[1] Magnetic needle [2] Magnetism. [3] Attract. [4] North Polar Star

இறைச்சியைப் பதஞ்செய்து அவர்கள் உண்ணுவார்கள். கடல் நோய் காணுமல் தங்களைக் காத்துக்கொள்ள அமண்சன் இந்த முறையைக் கைக்கொண்டார். ஒரு நாள் அவர்கள் இவ்வாறு வேட்டையாடச் சென்றபோது தொலையில் கலைமான் தோலு டுத்து, வில்லை அம்புடன் கைக்கொண்ட மக்கள் சிலரைக் கண்டார்கள். அமண்சனும் அவர் குழுவினரும் தம்முடைய கையிலிருந்த [1] கொல் மருந்துக் கருவிகளைக் கீழே யெறிந்து தம்முடைய நல்லெண்ணத்தைக் காட்டினூர்கள். உடனே அம் மக்களும் தங்கள் கைகளிலிருந்த வில்லையும் அம்பையும் கீழே எறிந்துவிட்டு அமண்சனையும் அவர் குழுவினரையும் அணுகினூர்கள். அவர்கள் [2] எஸ்கிமோ எனப்படும் மக்கள் இனத்தினர். அமண்சன் அவர்களுக்குத் தம்முடைய கலத்தையும், தம்முடைய ஆய் கூடத்தையும் காட்டினூர். அவர்கள் மிகவும் வியப்புற்றனர்.

## எஸ்கிமோ மக்கள்

எஸ்கிமோ மக்கள் பனி நிறைந்த இடத்தில் உறைந்து வந்தமையால் கலைமானினுடைய தோலையும், ஆங்குக் காணப்பட்ட கரடிகளினுடைய தோலையும் உடையாகச் செய்து அணிந்தார்கள். அவர்களுக்கு அவ் விலங்குகளினுடைய இறைச்சியும் ஒருவகை மீனுமே உணவுப் பொருள்களாம். அங்குக் கிடைத்த மீனினுடைய கொழுப்பை எடுத்து அவர்கள் குளிர்காலத்தில் விளக்கெரிப்பார்கள். தாங்கள் கொன்ற மிருகங்களினுடைய எலும்பைக் கொண்டே அவர்கள் தங்களுடைய வில் அம்பு போன்ற வேட்டைக் கருவிகளையும், தங்களுடைய ஆடைகளைத் தைப்பதற்கு வேண்டிய சிறிய ஊசிபோன்ற கருவிகளையும் செய்துகொள்வார்கள். அமண்சன் எஸ்கிமோ மக்களோடு நட்புரிமை கொண்டார். எஸ்கிமோ மக்களும் அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்தார்கள்.

## வடமேற்கு வழி காண்டல்

அமண்சனும் அவர் குழுவினரும் 1905-ஆம் ஆண்டு, ஆகஸ்ட்டுத் திங்கள் மீண்டும் புறப்பட்டு வடக்கே சென்றூர்கள். எந்த இடத்தில் தாம் தமது கலம் சென்ற திசையை மாற்றவேண்டு

[1] Earth Magnet. [2] Eskimo.

மென்பதை அமண்சன் மிகுந்த எச்சரிக்கையோடு கணக்கிட்டிருந்தார். அவ்வாறு செல்லும்போது ஆழமற்ற விடங்களில் கூட அவர் கலத்தைச் செலுத்த நேர்ந்தது. ஓரிடத்தில் அவருடைய கலம் செல்லும்போது அதனடிப் பாகத்திற்கும் கடல் நீர்ப்பகுதியின் அடிப் பாகத்திற்கும் இடையே இருந்த ஆழம் ஒரு முழத்தைவிடக் குறைவாகவே இருந்தது. அவ்வாறு பயணம் சென்றுகொண்டு இருக்கும்போது ஒருநாள் கடலில் **திமிங்கில வேட்டை** யாடுவோருடைய கலங்களைக் கண்டார். வட அமெரிக்காவின் வடக்கிலுள்ள [1] **அலாஸ்கா**வின் வடகரையிலுள்ள கடலைத் தாம் வந்தடைந்தது கண்டு அமண்சன் மகிழ்ந்தார். அவர் தேர்ந்தெடுத்த வழி நல்ல வழியாகவே அமைந்தது. அவ்வாறு வடமேற்கு வழிகண்டு தாய் நாடு திரும்பினர் அமண்சன்.

## நார்வே நாட்டினர் மகிழ்வு

நாடு திரும்பிய அமண்சன் தாம் கண்ட உண்மைகளை மக்களுக்கு அறிவித்தார். வடமேற்குப் பாதையை முதன் முதலில் கண்டறிந்த புகழ் அமண்சனைச் சேர்ந்தது. அறிஞர் பலர் அமண்சனைக் கண்டு அளவளாவினர். அமண்சன் அவர்களுக்குத் தாம் சென்ற பயணத்தைப் பற்றிக் கூறினர். எஸ்கிமோ மக்களைப் பற்றியும் அவர்களுடைய வாழ்க்கை விவரங்களைப் பற்றியும் கூறினர். தம் நாட்டினருக்குக் காட்டுவதற்காகத் தாம் கொண்டுவந்திருந்த எஸ்கிமோ மக்களுடைய ஈட்டி, வில், அம்பு போன்ற கருவிகளையும், கலைமான் தோலாற் செய்யப்பட்ட ஆடைகளையும் காண்பித்தார். அமண்சன் தமது நாட்டினர் என்று கூறுவதில் நார்வே நாட்டினர் மிகவும் பெருமை யடைந்தனர்.

## தென்முனைப் பயணம்

சில திங்கள் கழிந்தன. அமண்சன் நில உருண்டையினுடைய தென்முனை காண விரும்பினர். ஆண்டுச் சென்றால்

---

[1] Alaska

[1]அண்டார்டிகா எனப்படும் தென்முனைப் பரப்பைப் பற்றிய விவரங்களைக் கொண்டு வரலாம் என அவர் திட்டமிட்டார். 1910-ஆம் ஆண்டில் தெற்கு நோக்கிப் பயணமானார். செல்லும் வழியில் [2]ஸ்காட் என்பவரும் தென்முனை காண முயல்வதாக அறிந்தார். தாமும் தெற்கு நோக்கிச் செல்லுவதாக அமண்சன் அவருக்கு ஒரு செய்தி அனுப்பினார். அமண்சன் கோடை காலத்தில் தென்முனைப் பகுதியை நெருங்கினார். ஆங்காங்குத் தமக்கு வேண்டிய உணவுப் பொருள்களைச் சிறிது சிறிதாக வழியில் சேர்த்துவைத்து, அவ்வவ் விடங்களில் அடையாளமாகக் கொடிகளையும் ஊன்றி வைத்துவிட்டுத் தெற்கு நோக்கிச் சென்றார். 1911-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 14-ஆம் நாள் அமண்சன் தென்முனை சேர்ந்தார். சுற்றுப் புறங்களில் காணப்பட்ட பொருள்களை ஆராய்ந்துவிட்டு அமண்சன் நார்வே திரும்பினார்.

## வானூர்தியில் வடமுனைப் பயணம்

தம் நாட்டை யடைந்த அமண்சன் நில உருண்டையினுடைய வடமுனை காண விரும்பினார். அவருக்கு முன்னரே [3]பீயரி என்ற அமெரிக்கர் அதைக் கண்டுபிடித்தார். எனினும் தாம் சென்று வடமுனை கண்டறிய விரும்பினார். [4]வானூர்தி ஒன்றிலேறி அவர் வடமுனை சேர்ந்து ஆங்குள்ள நிலத்தினுடைய அமைப்பைக் கண்டு மீண்டார். வானூர்தியில் வடமுனை சென்றவருள் அமண்சனே முதல்வர்.

நில உருண்டையின் கிட்டாத பகுதிகளைக் கண்டறியப் பாடுபட்டு உழைத்து இரு முனைகளையும் அமண்சன் கிட்டினார். ஆதலால் அவர் உலக வரலாற்றில் சிறந்த இடம் பெற்றுள்ளார்.

---

[1] Antarctica. [2] Scott. [3] Peary. [4] Airship.

# 18. விஞ்ஞான முன்னேற்றம்*

[திரு. பே. நா. அப்புசாமி ஐயர், பி. ஏ., பி. எல்.]

நவீன விஞ்ஞானம் ஒவ்வொரு நிமிஷமும் ஓங்கி வளர்ந்து வருகிறது. ஆயினும், சிலர், 'விஞ்ஞானம் தீமை விளைவிப்பது, ஆதலால் அது தீது; அது முன்னேறுவதும் அவசியமேயன்று; தீயோர் நட்புப்போல் அதன் வளர்ச்சி நமக்கு என்றென்றும் தீங்கையே விளைவித்துக்கொண்டிருக்கும்' என்று குறை கூறுகிறார்கள். உண்மையில் விஞ்ஞானம் நன்றா? தீதா?

வலி மிக்க பஸ்மாசுரன் தவஞ்செய்தான். தெய்வம் மனமகிழ்ந்து 'நீ கேட்ட வரத்தை யளிப்பேன்' என்றது. 'யார் தலையில் நான் கையை வைத்தாலும் அவர் உடனே நீறாய்ப் போக வேண்டும்' என்று அவன் வரங்கேட்கவே, தெய்வமும் அவ் வரத்தை அருளிற்று. 'உன் தலையிலேயே கையை வைத்துச் சோதிப்பேன்' என்று பஸ்மாசுரன் கூறித் தனக்கு வரமளித்த தெய்வத்தையே அழிக்க முயன்றான். அத்தெய்வமும் அஞ்சி ஓட வேண்டியதாயிற்று. இறுதியில் தானே தன் தலையில் கையை வைத்துக்கொண்டு அவன் மடிந்தான்.

இராவணன், கும்பகருணன், விபீடணன் ஆகிய மூவரும் நற்குலத்தில் தோன்றியவர்கள்; கற்றுணர்ந்தவர்கள். மூவரும் தவஞ் செய்தார்கள். மனிதரை இகழ்ந்த இராவணன், தான் கேட்ட வரம் பெற்றான். நித்தியத்துவம் விரும்பிய கும்பகருணன், தன்னுடைய லட்சியம் தவறி நித்திரையைப் பெற்றான். அவர்கள் இருவரும் சில காலம் சிறந்து வாழ்ந்தார்கள்; இறுதியில் அழிந்துபோனார்கள். தெய்வ பக்தி ஒன்றையே நாடித் தவஞ்செய்த விபீடணனே அரசு பெற்றான்; சாகாமையும் பெற்றான்.

தவம் நன்றா? தீதா?

பஸ்மாசுரன், இராவணன், கும்பகருணன் போன்றவர்களைக் கொண்டு தவத்தைக் குறை கூறுபவர் யாருமில்லை. அவர்கள் தீயவழிச் சென்றது தவத்தின் குறையன்று; அவர்களுடைய மனநிலையின் குறையே யாகும்.

தவத்தைப் போன்றதே விஞ்ஞானமும். தவத்தைப்போல் விஞ்ஞானமும் ஆற்றல் அளிப்பது; வாழ்க்கையை மேன்மைப்

*சென்னை அகில இந்திய வானொலியில் பேசப்பெற்றது.

படுத்துவது. நம்முடைய மனநிலைக்கு ஏற்ப அதை நன்மைக்கோ தீமைக்கோ நாம் பயன்படுத்தலாம். நம்முடைய மனத்தை நாம் பண்படுத்திச் சீரிய மனநிலையை அடைவோமானால் விஞ்ஞானத்தால் நமக்குக் கிடைக்கும் சக்தியைக்கொண்டு இவ்வுலகத்தை நரகத்துக்கு ஈடாக்கும் வறுமையையும், பிணியையும் பெரும்பாலும் நீக்கிவிடலாம். ஊண் உடை உறைவிடம் ஆகிய மூன்றும் நமக்கு இன்றியமையாதவை. இம் மூன்று விஷயத்திலும் விஞ்ஞான முன்னேற்றம் நமக்கு மிக்க பயனளித்திருக்கிறது.

நம் முன்னோர்கள் ஒரு காலத்தில் காட்டில் கிடைத்ததைப் பொறுக்கி உண்டுவந்தார்கள். நாம் இப்பொழுது வேண்டிய செடி கொடி மரங்களைப் பயிராக்கி அவற்றின் விளைவுகளை உணவுப் பொருள்களாகக் கொள்ளுகிறோம். பூமியில் ஓரிடத்தில் வாழும் நாம் மற்றோரிடத்தில் விளையும் உணவுப் பொருள்களைப் பெறுகிறோம். வருடம் ஒருமுறை அல்லது இரண்டு முறை விளையும் உணவுப் பொருள்களை வருடம் முழுவதும் உபயோகித்து வருகிறோம். பயிராக்குதல், இடம் மாற்றுதல், சேமித்து வைத்தல் ஆகிய இம் மூன்று துறைகளிலும் நவீன விஞ்ஞான வளர்ச்சி உதவி புரிகிறது. பயிரின் வளர்ச்சிக்கு வேண்டியவாறு சீதோஷ்ண நிலைகளை வெப்பம் ஒளி மின்சாரம் முதலியவற்றால் மாற்றும் முறைகள் இப்போது அறியப்பட்டுள்ளன. குளிர் நாட்டுப் பயிர்களை உஷ்ண நாடுகளிலும் உஷ்ண நாடுகளில் வளரும் செடிகளைக் குளிர் நாடுகளிலும் விளைவிக்க முடிவதால் நமக்கு வேண்டிய பயிரைப் பல இடங்களிலும் பயிராக்க முடிகிறது.

புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்ட சில இரசாயனப் பொருள்களைச் செடிகளுள் புகுத்துவதால் அச் செடிகளை வேண்டியவாறு மெதுவாகவோ விரைவாகவோ வளரச் செய்ய முடிகிறது. மழை பனி வெயில்களால் சேதமுறாமல் உரிய பருவத்தில் அவற்றைப் பலன் கொடுக்கச் செய்ய முடிகிறது. மேலும் இம் மருந்துப் பொருள்களாலும், எக்ஸ்ரே கிரணங்கள் முதலியவற்றாலும் பயிர்களில் நமக்கு உதவும் பகுதியாகிய வேரையோ தண்டையோ இலையையோ பூவையோ காயையோ மிகப் பெரும் அளவில் வளருமாறு தூண்ட முடிகிறது; 'கரும்புபோல் வளர்ந்து ஒரு

தாளிற் படிநெல் காய்க்கும் நெல்லைப் பயிரிடுவது முடியாத காரியம்,' என்று சொல்வதற்கு இல்லை.

தாவர ஆராய்ச்சியாளர்களின் நுண்ணிய கருவிகளின் உதவியால் நூதனமான காய் கனி வகைகளை இயற்றல் முடிகிறது. விதை இல்லா ஆரஞ்சும், பன்னீர்மணங் கமழும் ஆப்பிளும் இவற்றுள் சில. ஓர் இடத்தில் விளையும் காய் கனி முதலியவை மற்றோரிடத்தில் விளைவதில்லை. ஒரு பருவத்தில் விளைபவை மற்றொரு பருவத்தில் விளைவதில்லை. இவற்றை உலக முழுதும் வருட முழுதும் உபயோகிப்பதற்கும் நவீன விஞ்ஞானம் உதவியிருக்கிறது. காய் கனிகளின் பெரும் பகுதி—நூற்றுக்குத் தொண்ணூறு பங்கு—தண்ணீராக உள்ளது. தக்க முறைகளால் காய் கனிகளைச் சுவறச் செய்தால், இவை சுவை கெடாத படியும் இவற்றிலுள்ள வைட்டமின் உணவுச் சத்துக்கள் அழியாதபடியும் பாதுகாக்கலாம். இவற்றிலிருக்கும் அதிகப் பயனற்ற நீர்ப்பகுதி மட்டும் நீங்கிவிடும். பிற யாவும் கெடாதிருக்கும். இந் நிலையில் இவற்றின் அளவும் எடையும் குறைந்து விடுமாதலால் இவற்றை ஓரிடம் விட்டு மற்றோரிடத்துக்கு எடுத்துச் செல்வது மிகவும் எளிதாகிறது.

காய் கனிகள் வெகு சீக்கிரம் அழுகிக் கெடுவதால் அவற்றைப் பறித்து அதிக நாளாகுமுன் உபயோகிக்க வேண்டியிருக்கிறது. நவீன விஞ்ஞானிகள் அவை அழுகுவதைக் குளிர்ச்சியால் தடை செய்கிறார்கள். குளிர்ச்சி மிக்க இரசாயனப் பொருள்களால் அவற்றை அப்படியே உறைந்து விறைத்துப் போகச் செய்கிறார்கள். வேண்டும்போது அவற்றைச் சீரான நிலைக்குக் கொண்டுவந்து உபயோகிக்க இயலுகிறது.

நவீன விஞ்ஞானிகள் மக்களது உடல்நிலை யறிந்து ஏற்றவையான புதுப்புது உணவுப் பொருள்களை இயற்றித் தருகிறார்கள். புதுச் சுவைகளையும் புது மணங்களையும் இவற்றிற் புகுத்துகிறார்கள். உடலுக்கு இன்றியமையா இரசாயனப் பொருள்கள் வைட்டமின்கள் முதலியவை இவற்றில் இருக்குமாறு நவீன முறைகளால் இவர்கள் செய்து தருதலால் பல்சுவை உண்டியை நாம் பயன்பட உண்ண இயலுகிறது.

பயிருக்குத் தக்கவாறு நிலத்தை மிக்க செம்மையாகப் பண்படுத்தி உரமிடும் முறைகளைக் கண்டுபிடித்தும், உழுதல்,

தண்ணீர் பாய்ச்சுதல் முதலியவற்றுக்கு வேண்டிய கருவிகளை மேன்மேலும் சிறந்த முறையில் அமைத்தும், செடிகளைப் பாழாக்கும் பலவகைப் பூச்சிகளை அழித்தும், துணை செய்யும் பூச்சிகளைப் பாதுகாத்தும், மண் இல்லா இடத்திலும் செடிகளை வளரச் செய்தும் வருகிற விஞ்ஞானிகள் விவசாயிகளுக்குச் செய்துள்ள உதவி கொஞ்சநஞ்சமன்று.

உதவாப் பொருள்களை உணவுப் பொருள்களாக அவர்கள் மாற்றுவது, நாம் எண்ணியெண்ணி வியத்தற்குரியது. மரத்தூளையும் துண்டுகளையும் விலங்குணவாக மாற்றல், குமட்டும் ஆமணக்கெண்ணெய், நாற்றம் வீசும் பருத்திவிதை யெண்ணெய் முதலியவற்றைச் சுவையும் மணமும் சத்தும் உள்ள நல்லுணவாக்கல் முதலியன நவீன விஞ்ஞானிகள் செய்துள்ள உதவிகளிற் சில.

ஆதிகாலத்தில் 'ஆடையின்றி வாடையின் மெலிந்து, கையது கொண்டு மெய்யது பொத்திக், காலது கொண்டு மேலது தழுவி' வாழ்ந்த நம் முன்னோர்கள் பல வகை மிருகங்களின் தோலையும் மரவுரியையும் ஆடையாக அணியக் கற்றூர்கள். பிறகு நாளடைவில் சணலும், பருத்தியும் பட்டும், கம்பளியும் நமது ஆடைக்கு உரிய பொருள்களாக இருந்துவந்தன. சிறிது காலத்திற்கு முன்பு செயற்கைப் பட்டை இயற்ற, இரசாயனிகள் கற்றுக்கொடுத்தார்கள். இவை, நீரில் நனைவன, நெருப்பில் எரிவன, பூச்சிகளால் உண்ணப்படுவன, நாளடைவில் மெருகிழந்து கந்தையாவன. இவ்வாறு ஆகாத பொருள் ஒன்று நமக்கு ஆடைப் பொருளாக இருந்தால் எவ்வளவு நன்ருக இருக்கும்! நவீன விஞ்ஞானிகள் இத்தகைய பொருளை இயற்றிவிட்டார்கள். அது என்னவென்று நினைக்கிறீர்கள்? அதுதான் கண்ணுடிப் பஞ்சு.

ஓர் இராத்தல் கண்ணுடியை இழையாகச் செய்தால் மூவாயிரம் மைல் நீளமுள்ள கண்ணுடி நூல் ஆகிறது. மயிரினும் பன்மடங்கு மெல்லிய கண்ணுடி இழைகள் இவ்வாறு செய்யப் படுகின்றன. கண்ணுடி நூல் நூற்கும் எந்திரசாலை யொன்றில் நாள்தோறும் ஆறு கோடி மைல் நீளமுள்ள நூல் நூற்கிறூர்களாம்! இந்தக் கண்ணுடிப் பஞ்சிழை தண்ணீரால் நனைவுறுது; அழுகாது; நெருப்பில் எரியாது; அதை அணைக்கவும் உதவும்.

பூச்சிகளும் இதை யணுகுவதே கிடையாது. இப் பஞ்சிழையை நூலாக நூற்று செய்த துணி மிகவும் பளபளப்புள்ளதாயும், நெருப்புப் பற்றாததாயும், கதகதப்புள்ளதாயும் இருக்கும். வேண்டிய நிறமுள்ளதாக இதைச் செய்வதும் எளிது. ஆனால் இது பட்டாடையைப் போல் வேண்டியவாறு சுருங்கி நீளாது. இஃது இதற்குள்ள ஒரு குறைதான். இந்தக் குறையை நீக்க முடியுமா? நித்தியப்படி உடுப்பதற்கு இக்கண்ணாடி ஆடை உதவுமா? யார் கண்டார்கள்? கண்ணாடியுடையை உடுத்தால் உடல் முழுதும் தெரியாதா? இதற்கு ஆடை உடுப்பானேன்? என்று கேட்கத் தோன்றும். வேண்டிய அளவு உடலை மறைக்கும்படியாகக் கண்ணாடியைச் செய்ய முடியும். மெல்லிய மஸ்லின் ஆடையைப் போலவோ அல்லது தடிக் கம்பளியைப் போலவோ கண்ணாடியைச் செய்துகொள்ள முடியும்.

ஆதிகாலத்தில் நம் முன்னோர்கள் மரப் பொந்துகளிலும் குகைகளிலும் வாழ்ந்தார்கள். இப்பொழுது தரத்துக்கேற்ற வாறு குடிசை முதல் மாளிகை வரையிற் கட்டி வாழ்கிறார்கள்; எனினும் இவை முற்றிலும் திருப்தியாக இன்னும் அமைய வில்லை. இவை நெருப்புக்கு இரையாகின்றன; பூகம்பங்களால் அதிர்ந்து விழுகின்றன; வெடி குண்டுகளால் தகர்த்து எறியப் படுகின்றன. காற்றுக்காக ஜன்னல் வைத்தால் வெயிலும் மழையும் உள்ளே நுழைகின்றன. உள்ளிருப்பவர்களுக்குப் போதிய மறைவும் இருப்பதில்லை.

இக்கால விஞ்ஞானிகள் கல்லினும் உறுதியான சிமெண்டை யும் இரும்பையும் உபயோகித்து அழியா வீடுகள் கட்டுகிறார்கள். இவற்றிலுள்ள கண்ணாடிக் கற்களால் ஆகிய சுவர்கள், வெளிச் சத்தை உள்ளே விடுகின்றன; மழையையும், காற்றையும், பிறர் பார்வையையும், வேண்டா ஒலிகளையும் தடுக்கின்றன. இவற்றின் உள்ளே வைத்திருக்கும் எந்திரங்கள் இங்குள்ள அறைகளை உடலுக்கு இதமான சீதோஷ்ண நிலையில் வைப்பதோடு தூசி யற்ற நல்ல காற்றையும் உள்ளே விடுகின்றன; கெட்ட காற்றை அகற்றுகின்றன. என்றும் பளபளப்புள்ள மங்காத உலோகங் களாற் செய்யப்பட்ட நாற்காலி மேஜை முதலிய தட்டுமுட்டுச் சாமான்களும், கண்ணுக்குச் சிறிதேனும் கெடுதல் செய்யாத வெள்ளொளி வீசும் விளக்குக்களும், அயல் நாட்டுச் செய்திகளைச்

சொல்லும் ரேடியோவும், அவற்றைக் கண்ணெதிரே காட்டும் அற்புதக் கருவிகளும் இவற்றில் அமைந்திருக்கின்றன.

இவ்வளவும் செய்துதரும் விஞ்ஞானம் மேன்மேலும் முன்னேற்றம் அடையத்தானே வேண்டும்? அமிர்தம் போன்ற உணவை உண்டு, ஒளி வீசும் மிக மெல்லிய ஆடை உடுத்து அழிவில்லா மாளிகைகளில் இன்பமாகவும், மன அமைதியோடும் நாம் வாழ்வோமானால் இவ்வுலகம் தேவலோகமாக ஆகிவிடுமன்றோ?

---

# 19. வீர வரிசைகள்

[யோகி திரு. சுத்தானந்த பாரதியார்]

நம் வீரரை நினைப்போம் :—இராமன், அருச்சுனன், கர்ணன், கண்ணன், பீமன், ப்ரதாபசிங், குருகோவிந்தன், துர்க்காதாஸ் முதலிய வீரர் நம் நரம்புகளுக்கு உணர்ச்சி தருகிறார்கள். இராஜபுத்திரர், மராட்டியர், சீக்கியர், தமிழர் முதலியோரின் வீர வாழ்வு நமது மனத்தில் வீரநாடகம் புரிகிறது. தேசத்திற்காகவும், தர்மத்திற்காகவும் போர் செய்து, உயிர் நீப்பதே மேலென வீரர் கருதுவர். வீர வேதமான பகவத்கீதை 'இறந்தால் சுவர்க்கமடைகிறாய், வென்றால் அரசையடைகிறாய், ஆதலால் எழுந்து போர் செய்; அது க்ஷத்திரியன் கடமை. தன் கடமையைச் செய்யாதவன் இகழப்படுவான், பாபம் அடைவான், பலனைக் கருதாது, இறைவழிபாடாக உன் கருமத்தைச் செய்' என்று சொல்வதை வீரர் நன்கு உணர்கின்றனர்.

நமது இந்திய ஹனிபாலான பிரதாப சிங்கன் தன் தந்தை சொல்லையே மந்திரமாகக் கொண்டு, அக்பரின் பெருத்த சேனையைத் தனியாக எதிர்த்தான். அவனது தந்தையின் அரசான சித்தூரை அக்பர் கைப்பற்றினான். தன்னைச் சேர்ந்தவர்களெல்லாம் உத்யோக மாயையில் ஈடுபட்டுத் தங்கள் பெண்களையும் அக்பருக்குக் கொடுத்து, வணக்கத்துடன் அவனுக்கு அடிமையாயினர். தன் உடன்பிறந்தவனான சக்திசிங்கனே அக்பர் பக்கம் சேர்ந்துகொண்டான். பிரதாப சிங்கன் சற்றும் மலைக்கவில்லை. தன்னோடு சேர்ந்த வீரர் பிரதாப சிங்கனுக்கு ஏகலிங்காலயத்தில் முடிசூட்டினர். சிங்கனுக்குத் தன் நாட்டின்

மீதே நினைப்பு. தன் வீரருடன் ஒரு விரத மெடுத்துக் கொண்டான்.

வீரரும் அவனோடு எல்லாத் துயர்களையும் பொறுத்தார்கள். பிரதாப சிங்கன் தன் குடும்பத்துடன் கோமல்மீரம் என்னும் மலையில் வசித்தான். அங்கிருந்த பில்லர்களையெல்லாம் இணையற்ற வீரராக்கித் தன் வலியைப் பெருக்கினான். பகைவர் பொருளைப் பற்றிக்கொணர்ந்து எல்லோரும் வாழ்ந்தனர். இராஜபுத்திரனாகப் பிறந்து, உத்தியோக மாயையிற்பட்டு, அக்பரிடம் படைத்தலைவனான ராஜா மான்ஸிங், ஒரு நாள் பிரதாப சிங் இருக்கு மிடத்திற்கு வந்தான். பிரதாபசிங் தன் வீரரைக் கொண்டு அவனுக்கு எல்லா மரியாதைகளையும் செய்வித்தான். ஆனால் தான் அவனோடு உட்கார்ந்து சாப்பிடவில்லை. "அக்கினி குலத்தவனாகியும் தேசத்தை மறந்து, தன் கடமையைத் துறந்து, அயலாரிடம் பொன்னுக்காக அடிமைப்பட்டவனுடன் நான் அருந்தேன்" என்றான் வீரன். மானசிங்கன் இதைக் கேட்டதும் வெகுண்டு அக்பரிடம் சொல்லி, பிரதாப சிங்கனை அடக்கப் பெரும்படையுடன் வந்தான். ஹல்திகட்டம் (இந்தியத் தெர்மாபலி) என்னுமிடத்தில் பகைவனுடன் பிரதாபசிங்கன் தனிப் போர் செய்தான். போரிடையில் தன் அருமையான குதிரை இறந்தது. பிரதாபசிங்கன் தன் இருப்பிடத்தை நோக்கி ஓடினான். வழியில் குடிக்கும் தண்ணீரிற் பகைவர் நஞ்சைக் கலந்தனர். இளைத்துக் களைத்துத் தன் மனைக்குவந்தான். அந்தோ அங்கு வறுமையின் கொடுமை! அப்போதுதான் மனைவி பசிப்பிணியால் வருந்திய தன் குழந்தைகளைத் தேற்றிக்கொண்டு ஏதோ உணவு தயார் செய்தாள். திடீரெனப் பகைவர் சூழ்ந்தனர். பிரதாப் மறுபடியும் பட்டினியோடு ஓடி ஒரு கணவாயில் குதித்தான். பில்லர்கள் அவன் குடும்பத்தைக் காத்தனர்.

ஒருமுறை பசியால் துடித்த குழந்தைகளுக்காகக் கீரையடை செய்து தாயார் கொடுத்தாள். அந்தோ! அதையும் ஒரு வெருகு பறித்துக்கொண்டு ஓடிற்று! குழந்தைகள் தாய்முகம் கண்டு அலறினர். தாய், தன்முகம் கண்டு வருந்தினபோது, வீரப் பிரதாப சிங்கனின் உள்ளம் கவலையால் வெடித்தது. ஆயினும், 'நம் தேசத்திற்காகவே இப்படித் துயர் பொறுக்கிறோம்' என்று எண்ணினான்; தன் மனைவி,மக்களை அமைதியாக்

கினுன் ; தன் வீரரை யழைத்துக்கொண்டு சிந்துநதிக் கரைக்குச் சென்றான். அச்சமயத்தில் பராசக்தி இவ்வீரனுக்கு இரங்கினுள்! தந்தை உதயசிங்கனிடம் மந்திரியா யிருந்து நாட்டன்பு மிகுந்த ஓர் இராஜபுத்திரன், பிரதாபசிங்கனை ஆதரித்துத் தன் பெருஞ் செல்வத்தை முழுதும் நம் வீரனுக்கு ஈந்தான். அதைக் கொண்டு நம் சிங்கன் மறுபடி படை திரட்டி அக்பருடைய படையை விரட்டித் தான் இழந்த அரசை மறுபடியும் வென் ருன் ; தான் இறக்கும்போது தன் மைந்தன் அமரசிங்கனுக்கும் அதே வீர மந்திரத்தை உரைத்தே தன் வினையை முடித்து வீர விண் அடைந்தான்.

* * *

ராவல்சாகி என்ற ஓர் அக்கினி குலத்து வீரன் நோய்ப் படுக் கையில் விழுந்து இறக்குந் தறுவாயில் இருந்தான்; அப்பொழுது, 'போரில் இறப்பதே தன் ஆண்மைக்குத் தகுந்தது; நோயால் இறப்பது தன் அக்கினிகுல மரபிற்கு இழிவு' என உணர்ந்தான். வீர மெழுந்தது. மூல்டான் தேசத்து மன்னனைத் தன்னோடு போராடச் சொன்னுன். இரண்டு மணி நேரம் அவனோடு தன் தோள்களின் தினவு தீரப் பொருது, இரண்டாயிரம் பேர்களை வீழ்த்தி இறந்தான் !

* * *

ஒந்தலாக் கோட்டை வாயிலை இடித்துக்கொண்டு உள்ளே செல்ல இரு சக்திவாய்ந்த இராஜபுத்திரர் தம் யானையை ஏவிக் கொண்டிருந்தார்கள். யானை போய்ப் போய்த் திரும்பியது. ஏனெனில் கதவுகளில் முளைகள் அறையப்பட்டிருந்தன. அவை தன் மண்டையில் பாயுமென யானை அஞ்சியது. உடனே அவர்க ளுள் மூத்தோன் மற்றொருவனிடம், 'தம்பீ ! தைரியமாக யானை யைச் செலுத்து' என்று சொல்லி அந்த முளைகளின்மேல் தன் உடலை மெத்தெனச் சாய்த்துக்கொண்டான். யானை முளைகளின் மேல் அச்சமின்றி மோதித் திடீரெனக் கதவைத் திறந்தது ; உடனே இராஜபுத்திரர் கோட்டையுள் நுழைந்து வெற்றி பெற் றனர்.

* * *

மேவாரின் அரசிளங் குமரனுன உதயசிங், குழந்தைப் பருவத்திலிருந்தான். அவன் பன்னு என்னும் ஒரு செவிலியின்

காப்பி லிருந்தான். உதயசிங் தக்க வயதடையும்வரையில் அவனுக்குக் காவலாக பான்பீர் என்பவன் நியமிக்கப்பட்டான். பேராசையுள்ள பான்பீர் உதயசிங்கைக் கொன்று அரசைக் கவர எண்ணினான். அவன் சூழ்ச்சிகளுக் கெல்லாம் பன்னா இடங் கொடாது அரசிளம் பிள்ளையைக் காத்தாள். ஒருநாள் வீரா வேசத்தோடு பான்பீர் உதயசிங்கனைக் கொல்ல, பன்னாவின் வீட்டை நோக்கி வந்தான். பன்னா உதயசிங்கனை ஒரு பழக் கூடையில் மறைத்து அப்புறப்படுத்தினாள்; தன் ஒரே குழந்தையைத் தொட்டிலிலிட்டாள். பான்பீரின் கத்தி பன்னாவின் குழந்தையைக் கொன்றது. தன் குழந்தையைப் பற்றிக் கவலாது, அரசன் குழந்தை தப்பியதைப் பற்றி மகிழ்ந்தாள் பன்னா!

* * *

துர்க்காதாஸின் அயர்வறு போர் வீரத்தை யாரே புகழாதார்! ஒருமுறை அவுரங்கசீப், சிவாஜி துர்க்காதாஸ் இவ்விருவரின் படத்தையும் நோக்கினான். சிவாஜி தன் படுக்கையில் சாய்ந்துகொண்டிருப்பதுபோல் எழுதப்பட்டிருந்தது. துர்க்காதாஸ் குதிரைமேல் ஏறித் தன் ஈட்டியால் ரொட்டி சுடுவது போல் வரையப்பட்டிருந்தது. ஔரங்சீப் வியந்து, 'சிவாஜியையாகிலும் தந்திரமாகப் பிடித்துவிடலாம். இந்தத் துர்க்காதாஸன் என் உயிரை வாட்டி விடுவான்போலிருக்கிறதே!' என்றான்.

* * *

ஒருமுறை ஹேமன் என்கிற பூந்தித் தலைவன் சித்தூர் மகாராணாவின் கோட்டைப் புறத்தில் தொல்லை செய்தான்; மகாராணா வெகுண்டு, 'நாளையே அந்தப் பூந்தியைப் பிடிக்காது நான் உண்பதில்லை' எனச் சபதஞ் செய்தான்; அப்படியே மறுநாள் பூந்தியை வென்றே உண்டான்.

இராஜபுதனத்தில் சண்டை நடந்துகொண்டிருக்கையில், ஒரு க்ஷத்திரிய வீரன் தாலிகட்டுந் தறுவாயில், மாங்கல்யத்தை எறிந்துவிட்டுத், தேசம் அழைத்ததும் வாளையெடுத்துப் போர் முனை சென்றான். எவ்வளவு தியாகம்!

* * * * *

முகுந்தன் என்னும் க்ஷத்திரியன் ஒருமுறை, ஔரங்க சீப்பை எதிர்த்துப் போராடினன். அதற்காக அவன் ஒரு கொடிய புலிக்கூட்டில் அடைக்கப்பட்டான். தைரியமுடன், முகுந்தன் அப்புலியைத் தீப்பொறி பறக்கப் பார்த்தான். புலியும் நடுங்கிப் பணிந்தது. இதைக் கண்ட முகல் மன்னன் வியந்து முகுந்தனுக்கு 'நாஹர்கான் - புலியரசன்' என்ற பட்டங் கொடுத்து மரியாதை செய்தான்.

* * * * *

## பெண் வீரம்

ஆண்கள் மட்டுமோ? நம்நாட்டு வீரப் பெண்களின் பெருமையைக் காண்போம்: நம் நாட்டில், பொயடீஸியா, பிரான்சு தேசத்திற்குச் சுதந்தரம் வென்று கொடுத்த ழூாந்தார்க் போன்று எண்ணிறந்த வீரப் பெண்கள் இருந்திருக்கின்றனர்.

சம்பராசுரப் போரில் தசரதனுடைய தேரின் அச்சு முறிந்த போது, தன் கையை அதற்குப் பதிலாகத் தந்து போரைக் காத்த கைகேயியை எண்ணுவோம்! கணவருடன் கொடிய இடர்களை யெல்லாம் வீரமுடன் பொறுத்த சீதை, திரௌபதி, சந்திரமதி. தமயந்தி, நளாயினி முதலியோரை எண்ணினல், மனத்தில் உணர்ச்சி துடிக்கும்.

**தாராபாய்** என்ற வீராங்கனை முகம்மதியரால் துரத்தப் பட்டு, தோங்க்தோடா என்ற இடத்தில் தங்கிப் போர்த் தொழில் பயின்று, பகைவனை எதிர்த்தாள். அச்சமயம் அவளுக்கு மணப் பருவமே. ஜெயமால் என்னும் வீரன் அவளை மணக்க விரும்பினன். தாராவோ, 'வீரனே, எனது சுதேசத்தைப் பகைவரிடமிருந்து விடுவித்தாலே உன் கையைத் தொடுவேன்' என்ருள். தாரா கடும்போர் செய்து பகைவரை முறியடித்துத் தன் அரசைப் பெற்ருள்.

**ராணி துர்க்காவதி** தன் மகனுடைய உரிமையைக் காக்க அக்பருடன் சிம்மம் போலப் போர் செய்தாள். ஆனல் தான் போரில் கீழே விழுந்தால் பகைவர் தன்னைப் பிடித்து அவமானம் செய்வார்கள் என்ற உணர்ச்சியால், தற்கொலை புரிந்து கொண்டாள்.

*     *     *     *     *

நாட்டிற்காக, குட்டுப்புதீனுடன் போர் செய்து மாண்ட **கூர்மதேவியையும்,** பஹதூர் ஷாவை எதிர்த்து, சித்தூரைக் காத்து வீழ்ந்த **ஜவஹர்பாயையும்,** அல்லாவுதீன் சித்தூரைப் பெரும்படை கொண்டு தாக்கியபோது தன் கணவனையும், போட்டி போட்டுப் போர்க்களம் சென்ற தன் பதினொரு வீர மைந்தரையும் தேசத்திற்காக ஈந்து முடிவில் தானும் கணவனுடன் தீக்குளித்துக் கற்பைக் காத்த அற்புத மனைவியான **பத்மாவதியையும்,** பதினாறே வயதுள்ள தன் மகன் **பட்டாவை** மஞ்சளுடுத்திப் போருக்கனுப்பிப் பின்னர், தன் பெண்ணையும் அப்படியே அனுப்பிய **ராஜபுத்திரத்தாயின் வீரத்தையும், ராணி லட்சுமிபாயின்** அற்புதமான போர்த்திறத்தையும், நாட்டன்பையும் உலகம் என்றும் மறவாது.

*     *     *     *     *

சீக்கியர் வீர ஜாதியினர். பாரத தர்மம் நிலவ அவர்கள் பட்டபாடும் செய்த தியாகமும் கொட்டிய குருதியும் கணக்கிலடங்கா. குருவின் ஆணையும் சுதந்திரத் தாயின் ஆவேசமும், சீக்கியராக உருக்கொண்டன. குரு நானகர் தைரியமாக இந்து முகம்மதியர் மதத்திலுள்ள தீய பழக்கங்களைச் சொல்லிப் பல சிஷ்யர்களைத் தயார் செய்து தம் வினை முடிந்ததும் வந்தவிடம் சென்றார். குரு அர்ஜுனன், பகைவர் காய்ந்த இருப்புச் சட்டியில் போட்டு எண்ணெய்விட்டு வருத்தியபோதிலும் தன் மதத்தைக் கடைப்பிடித்தான். குருதேக் பகதூர், அவுரங்கசீப்பிற்குத் தன் கழுத்தை ஈந்தானேயொழிய மானத்தைத் தரவில்லை. அவனுடைய தெய்வ மைந்தன் குருகோவிந்தன் அற்புதமான வேலைகள் செய்தான்; தன் தந்தையின் சொற்படி அந்த அவுரங்கசீப்புடன் போர் புரிந்தான்; ஒரு சண்டியாகம் செய்தான்; அதில் கோழையான இந்துக்கள் வெட்கும்படி செய்தான். தன் வாளை உயர்த்தி, இதுதான் சண்டியின் சக்தியெனச் சொல்லிப், பாரதநாட்டிற்கு அவர்கள் செய்யவேண்டிய கடமைகளையும் காட்டி, கோழைகளும் தேச தர்மத்தைக் காக்க வாளெடுக்கும்படி செய்தான். சாமானியமான ஐவர் தேச சக்திக்குப் பலியாகத் துணிந்து முன்வந்தனர். தேச பக்தித் தீயை அவர்கள் மனத்தில் பற்றவைத்து அவர்கள் நெஞ்சு வீரத்தால் துள்ளும்படி செய்தான் குருமணி. **சுந்தரி** என்ற பெண்

குரு கோவிந்தற்குத் துணையாகப் போர் புரிந்தாள். மாயிபாகோ என்பவள் வீர உடை போர்த்து, வாளேந்தி, குருகோவிந்தனின் படமாடத்தைக் காத்துவந்தனள். முன்னே ஊர்க்குருவிகளா யிருந்த இந்துக்களை வல்லூறுகள்போ லாக்கினன் குருமணி ; முன் வல்லூறுகள் போன்ற பகைவரை ஊர்க்குருவிகள் போல் நடுங்கியோடச் செய்தான்; தன் காப்பிற்காகப் பல கோட்டைகளைக் கட்டினான். முன்னே, சிங்கத்தோல் போர்த்த கழுதைபோன்று, பாரத வம்சத்தில் பிறந்து, அயலார்க்கு அடிமையான தன் நாட்டாரை உண்மையான சிங்கங்களாக்கினான். தன் கோஷ்டிக்குக் கால்சா என்று பெயரிட்டுச் சிஷ்யர்களுக்கு அகாலியர் எனத் திருநாம மிட்டான். இந்த அகாலிய ஜாதி இன்றைக்கும் தன் மதத்திற்காக அற்புதமான தியாகப் பணி செய்கிறது. அதன் பொறுமை பூமியின் பொறையினும் பெரிது. ஒரு முறை **அமரதாஸ்** என்னும் குருவை ஜபத்திலிருக்கும்பொழுது ஒரு குறும்பன் தன் காலால் உதைத்துக் கலைத்தான். அதற்குக் குரு, ‘ அப்பனே, என்னை உதைத்ததால் உன் கால்கள் நோவுமென அஞ்சுகிறேன்’ என்றார். வாலிபன் வெட்கிப் பணிந்தான். குரு ராமதாஸின் குமாரியிடம் ஓர் அன்பன் பக்தி செலுத்திவந்தான். ஒருநாள் அந்த அன்பன் ஒரு விலையுயர்ந்த சேலையை வாங்கித் தன் குரு புத்திரிக்குச் சமர்ப்பித்தான். கருணை யுருவான அப்பெண், ‘ அன்பனே, என்னைவிடக் கந்தலை உடுத்தித் துயருறும் பலகோடி ஏழைகள் இருக்கிறார்கள். இந்த இடம்பமான சாமானை விற்று அவர்களுக்குப் பங்கிடு’ என்றாள். என்ன அன்பு !

குருகோவிந்த சிங்கன் அனந்தபுரியில் சத்துருக்களால் நெருக்குண்டிருந்தபோது, சில சீக்கியர் குருவை விட்டுவிட்டுத் தங்கள் வீட்டிற்குச் சென்றார்கள். ஆனால் அவர்கள் பத்தினிகள், ‘ நீங்கள் புறங்காட்டி, பயங்கொள்ளிகள்போல் குருவையும் நீத்து வந்தது எங்களுக்கு அவமானமா யிருக்கிறது. ஆதலின் மறுபடி சென்று யுத்தம் செய்யுங்கள்’ என்று சொன்னார்கள். மாயிபாகோ என்ற வீரப் பெண் அவர்களை நடத்திக்கொண்டு யுத்த களத்திற்கு வந்து சண்டை செய்தாள் !

இன்றைக்கும் அகாலியர் தங்கள் சமயச் சீர்திருத்தத்திற்காக அரிய தியாகம் செய்துகொண்டிருக்கிறார்கள். ஒரு

முறை அகாலிய வீரருக்கு உணவு கொடுக்க ஆவிவண்டியைச். சற்று நிறுத்தச் சொல்லிச் சீக்கியர் அதிகாரிகளைக் கேட்டனர். அவர்கள் மறுத்துவிடவே, சீக்கியர் ஆவிப் பொறிமுன் (Engine) பெருந் திரளாக நின்றனர். ‘எங்கள்மேல் வேண்டுமாயின் வண்டியை விட்டுச் செல்லுங்கள். எங்கள் சகோதரருக்கு உணவளித்த பின்பே நாங்கள் நகருவோம்’ என்றனர். ஆவி வண்டி ஓட்டுவோன் திகைத்து, வண்டியை நிறுத்தினன். அகாலியரும் உண்டனர். பிறகே அன்பர் நகர்ந்து போயினர். சீக்கியரின் ஊக்கமும், அன்பும் உறுதியும் எழுத்திலடங்கா. அவர்களிடம் உள்ளது போன்ற ஒரு வேகம் அகிம்சா தர்மத்துடன் தமிழ் நாட்டில் பிறந்தால்தான் நம் நாடும் வீர நாடாகும்.

மராத்தியரின் வீரத்தை எண்ணினல்கூட நரம்புகள் வலியடைகின்றன. சிவாஜியைப்பற்றி அறியாதாரில்லை; பவானி தேவியினிடம் பரமபக்தி யுடையவன்; நல்ல தியாகி; இணையற்ற தேசாபிமானமும் தைரியமும் விடா முயற்சியுமுள்ளோன்; ஒருமுறை தன் குரு ராமதாசருக்காகப் புலிப்பால் கொணர்ந்தான்; மற்றொருமுறை இராமதாசருக்குத் தன் இராஜ்யத்தையெல்லாம் அர்ப்பணித்துவிட்டுத் தான் பிச்சை வாங்கித் தன் குருவுக்குப் பிச்சை செய்து வைத்தான். மறுபடி தன் குரு, ராஜ்யத்தைத் தரவே, தன் அரசிற்குக் காஷாயக் கொடி யமைத்தான். தன் மக்களிடையே ‘ராம், ராம்’ என்ற சொல்லைப் பரப்பினன். இன்னும் வீரரத்ன பாஜியை அறியார் யார்? பாலாஜி ராவ், நானாசாஹிப், தாதியாதோபே, இவர்கள் வீரத்தனம் கடலினும் பெரியதன்றோ!

இத்தகைய வீரம் நம் தமிழ் நாட்டில் இலதோ? உலக வீரரின் வீரத்தனத்தை யெல்லாம் சேர்த்துவைத்தால் அதனினும் பதின்மடங்கு வீரம் தமிழரது; தேசிங்குராஜன், திருமாவளவன், நெடுஞ்செழியன் முதலிய வீரர், பெரும்புகழ் பெற்றோர். ராஜராஜ சோழன் கப்பற் சண்டை செய்தான். வயது சென்று நரைத்துத் திரைத்த ஒரு தமிழ்த்தாயானவள், தன் மகன் போர்க்களத்தில் தைரியமாக இறந்ததை மெச்சி, சிறுவன் களிறெறிந்து பட்டன னென்று ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தாள்.

மற்றொரு தமிழன்னை நேற்றுத்தான் தன் கணவனைப் போர்க்களத்தில் இழந்தாள். அதைச் சற்றும் பாராட்டாது, இன்றும் செருப்பறை கேட்டு விருப்புற்றுத் தன் ஒரே மைந்தன் கையில் வேல் கொடுத்து, எண்ணெய் தடவிக், குடுமியைச் சீவி, அவனைப் போர்முகத்திற் கனுப்பினள்! என்னே தமிழ்த் தாய்மாரின் வீரத்தனம்! தமிழ் நாட்டின் வீரத்தனத்தின்மேல் இன்று ஒரு திரை மூடி இருக்கிறது. அதுவே தன்னம்பிக்கை இன்மை. துணைவீர்! அத்திரையைக் கிழித்தெறிந்து வீரராக வெளியில் வாரீர்!

சுந்தர காண்டத்தில் கம்பர் வானரப் படைகளை அடியில் வருமாறு புகழுகிறார் :—

"ஒடிக்கு மேல்வட மேருவை வேரொடு மொடிக்கும்!
இடிக்கு மேல்நெடு வானக முகட்டையு மிடிக்கும்!
பிடிக்கு மேற்பெருங் காற்றையுங் கூற்றையும் பிடிக்கும்!
குடிக்கு மேற்கட லேழையும் குடங்கையிற் குடிக்கும்!"

அத்தகைய மன உறுதியை நாம் அடைவோமாக. வீரத்தனமானது அக்காலத்தில் உயிரினும் மேலாகக் கருதப்பட்டது. வாலி, இராமரின் குறைகளைக் காட்டும்போது,

"வீர மன்று, விதியன்று, மெய்ம்மையின்
வார மன்று, நின் மண்ணினுக் கென்னுடல்
பார மன்று, பகையன்று பண்பொழிந்(து)
ஈர மன்றிது என்செய்த வாறுநீ?"

என்று முதலில் வீரத்தனத்திற்கு எதிரான காரியத்தை இராமர் செய்ததாகக் குற்றம் சாற்றுகிறான். வீரத்தனத்தை மிக்க அருமையாக மதித்தனர் முந்தையோர். நமது நாட்டிலும், மேல் நாடுகளிலும் ஒரு வீர யுகம் பிறந்திருந்தது. மத்திம நூற்றாண்டுகளில், குரூஸேது என்னும் மதப்போர் புரிவதே வீடெனக் கருதினர். அக் காலத்தில் வீர ஜாதியொன்று ஐரோப்பாவில் கிளம்பிற்று. தருமத்தையும், சத்தியத்தையும் அஃது ஆதரித்தது; அவற்றின் பகைவரைக் காய்ந்தது. அத்தகைய வீர யுகம் அகிம்சையெனும் மணமொடு மறுபடி மலருமாக!

பொறுமையும், அஞ்சாமையும், உண்மையும் கொண்ட வீரர்களைப் பாரதமாதா அழைக்கிறாள். தன்னல மற்ற அருட் பணியே துறவு என்று, பெரியோர் பலரும் புதுயுகத்திற்கு உழைக்க முன்வந்துள்ளார். மேல் நாட்டில் வாளே வீரனைக் காட்டுகிறது. நமது நாட்டில் முன்னே அறமே வீரனைக் காட்டியது. இன்றும் ஆத்ம சக்தியே உண்மையான வீரனைக் காட்டுகிறது. உலகிலுள்ள குறைகளை யெல்லாம் தீர்க்கும் மருந்து பாரத புத்திரரிடமே யுள்ளது. உலகின் விடுதலை நமது தர்ம வீரரிடமே யுள்ளது. நாகரிகம் மிக்கதெனப்படும் மேல்நாடு, போர், கொள்ளை, வாணிகம் முதலியவற்றிலேயே தன் மனத்தைச் செலுத்தி, ஆன்மாவினின்றும் தன் புலன்களைத் தூரத் தூரக் கொண்டுசெல்லுகிறது. மனிதனுக்குள்ள தெய்வ சக்தியைப் பாரதநாடு உள்ளடக்கித் திண்மைப்படுத்தி ஆற்றலைப் பெருக்கிப் பின்னரே காலமறிந்து வெளிவிடப் போகிறது. ஆத்மசக்தி வீரர், புதுயுக மணி அடிக்கின்றனர். அந்த வீரருடன் சேர்ந்து நாமும் நமது வாழ்வின் கடமையைச் செய்யப் பொறுமை, சத்தியம், அகிம்சை, நேர்மை முதலிய குணங்களை வளர்ப்போமாக!

---

# குறிப்புரை

## I கடவுள் வாழ்த்து

### 1. தேவாரம்

தேவாரம் என்பது தே+ஆரம் எனப் பிரிந்துநின்று கடவுளுக்கு அணியப்படும் பாமாலை எனப் பொருள்தரும். இதில் சைவத் திருமுறை பன்னிரண்டில் 1 முதல் 7-திருமுறைகள் அடங்கியுள்ளன. தேவாரம் செய்த பெரியார் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் என்னும் மூவரும் ஆவர். இவர்களில் இத் திருப்பாடலை இயற்றியவர் திருநாவுக்கரசர். இவர் திருமுனைப்பாடி நாட்டில் திரு ஆமூரில் வேளாளர் மரபில் பிறந்தவர். தந்தையார்—புகழனுர். தாயார்—மாதினியார். இவருடைய இயற்பெயர்—மருணீக்கியார். அப்பர், வாகீசர் என்னும் பெயர்களும் இவருக்கு உண்டு.

இவருடைய காலம் கி. பி. 7-ஆம் நூற்றாண்டு.

இனம் - கூட்டம். இமையவர் - தேவர். போது - மலர். கனம் - மேகம்.

### 2. நாலாயிர திவ்யப் பிரபந்தம்

திருமாலை

திருமாலின் அடியவர்களாகிய பன்னிரண்டு ஆழ்வார்களாலும் பாடப் பெற்ற பாடல்தொகுதி நாலாயிர திவ்யப் பிரபந்தமாகும். அதனுள் இத் திருப்பாடல் திருமாலை என்னும் பகுதியிலுள்ளது. இப்பகுதியை இயற்றியவர் தொண்டரடிப்பொடியாழ்வார். இவர் திருமண்டங் குடியில் மறையவர் குலத்தில் பிறந்தவர். இவர் இயற்பெயர் விப்பிரநாராயணர் என்பது. இவர் திருவரங்கத்தில் திருநந்தவனம் அமைத்து அரங்கநாதனுக்குத் திருமாலைத் தொண்டு செய்து அவனுல் ஆட்கொள்ளப் பெற்றவர். இவர் இயற்றிய வேறுநூல் திருப்பள்ளியெழுச்சி.

இவருடைய காலம் கி. பி. 8-ஆம் நூற்றாண்டு.

கமலம் - செந்தாமரை. அச்சுதன் - திருமால். அமரர் ஏறு - தேவர்களில் ஆண் சிங்கம் போன்றவன். ஆயர் - இடையர். அரங்கமாநகர் - திருவரங்கம்.

### 3. திருப்புகழ்

இது முருகக் கடவுளைக் குறித்துப் பாடப்பெற்ற நூலாகும். இதனை இயற்றியவர் அருணகிரிநாதர். இவர் திருவண்ணுமலையில் பிறந்தவர். பிரபுடதேவர் என்னும் அரசர் காலத்தில் இவர் இருந்தனர் என்று சொல்லப் படுவதாலும், அவ்வரசர் ஆட்சிக்காலம் கி. பி. 1450 என்று சொல்லப் படுவதாலும் இவர்காலம் ஏறக்குறைய 490 ஆண்டுகளுக்கு முற்பட்ட

தெனலாம். இவர் வாக்கு வன்மைக்கு 'வாக்குக் கருணகிரி' என்னும் பாடலே தக்க சான்றாம். தாயுமான அடிகளாலும் இவர் பாராட்டப் பெற்றுள்ளனர். இவர் இயற்றிய வேறுநூல்கள்: திருவகுப்பு, கந்தரந்தாதி, கந்தரலங்காரம், கந்தரநுபூதி என்பவைகளாம்.

அபகாரம் - தீமை. உழலாமல் - அலையாமல். குறியாது - நினையாமல். இப மாமுகன் - யானைமுகத்தையுடைய விநாயகன்; இபம் - யானை. இமவான் மடந்தை - இமயமலையரசன்மகளாகிய உமையம்மை. பாலன் - மகன். திரு ஆவினன்குடி - பழநி மலையின் அடியில் உள்ளது; இது முருகக்கடவுளின் ஆறு படைவீடுகளில் ஒன்று.

## 4. திருவருட்பா

திருவருட்பா என்பது கடவுளின் திருவருளால் பாடப்பட்ட பாக்களையுடைய நூல் எனப் பொருள்தரும். கடவுளின் திருவருளைப் பெறுதற்குப் பாடிய பாக்களையுடைய நூல் என்றும் இதற்குப் பொருள் கொள்ளலாம். இது இராமலிங்க அடிகளால் அருளிச் செய்யப்பட்டது. இவர் சிதம்பரத்திற்கு அண்மையிலுள்ள மருதூரில் கருணீக வேளாளர் மரபில் பிறந்தவர். தந்தையார்-இராமைய பிள்ளை. தாயார்-சின்னம்மை. இவருடைய பாக்கள் கற்றார் கல்லாதார் ஆகிய அனைவர் உள்ளத்தையும் கனிவிக்கும் இயல்புடையன. இவரால் சீவகாருணிய வொழுக்கம், மனுமுறை கண்ட வாசகம் முதலிய உரை நடை நூல்களும் எழுதப்பட்டுள்ளன.

இவருடைய தோற்றம் - 5-10-1823. மறைவு—1872.

முகில் - மேகம். என்உள் - என்மனம். மன்று—பொன்னம்பலம். எண்ணெலாங் கடந்து - கருதுவார் கருத்துக்களுக்கு அப்பாற்பட்டு. ஏழை - அறிவில்லாதவன்.

## 5. கலைமகள் வாழ்த்து

இவ்வெண்பா தண்டியலங்கார மேற்கோளாகும்.

மௌலி - முடி. இணை - இரண்டு. சமையம் - மதம். சிமைய மலை - சிகரங்களையுடைய இமயமலை. மலர் மடந்தை - திருமகள். எண்ணெண்கலை மடந்தை - அறுபத்துநான்கு கலைகளுக்குரிய இறைவி. நாவலோர்கண் - நா வன்மை படைத்த புலவர்க்குக் கண்ணுவாள்.

## 6. தமிழ்த்தாய் வாழ்த்து

இப்பாடல், திரு. நீ. கந்தசாமி பிள்ளை அவர்களால் 14-4-1915-இல், இயற்றப்பெற்ற 'தமிழ்த் தெய்வ நான்மணிமாலை'யின் காப்புச் செய்யுளாகும். திரு. பிள்ளை யவர்கள், தஞ்சையை அடுத்த பள்ளியக்கிரகாரம் என்னும் ஊரில் 9-6-1898-இல் தாயுமானவர் மரபில் பிறந்தவர். தந்தையார் பெயர் - நீலமேகம் பிள்ளை. தாயார் பெயர் - சௌந்தரத்தாச்சி. இவர் தமிழிற்

சிறந்த புலமை உடையவர். செய்யுள் இயற்றுதல், உரைநடை எழுதுதல், சொற்பொழிவு நிகழ்த்துதல் ஆகியவைகளில் திறம் படைத்தவர். பல்லாண்டுகள் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் செயலாளராய்ச் செந்தமிழ்த் தொண்டினைச் சீரிய முறையில் ஆற்றிவருகின்றார்.

தொன்மை - பழமை. உளத்தினை - மனத்தில் எண்ணிய கருத்துக்களை. கையினால் உரைத்தல் - கைக்குறிப்பினால் அறிவித்தல். இரிந்திட - போகும்படியாக. ஐயை - அன்னை.

# II அறவுரை

## 1. திருக்குறள்

இது, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகிய தலைசிறந்த பழந்தமிழ் நூலாகும். இது குறள் வெண்பாக்களால் ஆகியதால் குறள் என்னும் பெயர் பெற்றது. திரு என்பது சிறப்புக் கருதிச் சேர்க்கப் பெற்றது. இந்நூலில் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பால்களும், 133 அதிகாரங்களும், 1330 குறள் வெண்பாக்களும் உள்ளன. இதன்கண் கூறப்படும் பொருள்கள் குலம், மதம், முதலிய வேறுபாடு இன்றி எல்லார்க்கும் பொதுவாகும். இதற்குப் பின்னர்த் தோன்றிய தமிழ் நூல்களில் இதன் சொல்லும் பொருளும் அமையப் பெறாத நூல்கள் இல்லை எனலாம். இஃது ஆங்கிலம் முதலான வேறு பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்ட சிறப்புடையது.

இதனை இயற்றியவர் தெய்வப் புலமைத் திருவள்ளுவர். இவர் பிறப்பு முதலாயின பற்றிப் பலர் பலவாறு கூறுவர்.

இவர் காலம் கி. பி. 1800 ஆண்டுகளுக்கு முற்பட்டது.

### அறன்வலியுறுத்தல்

பொருள் இன்பங்களைக்காட்டிலும் அறமே சிறந்தது என வற்புறுத்திச் சொல்லுதல்.

1. ஒல்லும் வகை - இயலும் வகை. ஓவாது - இடைவிடாமல். செல்லும்வாய் - அறம் எய்தும் இடம் ; அவை - மனம் மொழி மெய்கள்.

2. அன்று - அக்காலம் (இறக்குங்காலம்.) மற்று, அசைநிலை. அது - அவ்வறம். பொன்றுங்கால் - உடலில் இருந்து உயிர் போகுங் காலத்து. பொன்றாத் துணை - அவ்வுயிருக்கு அழிவில்லாத துணையாம்.

### அடக்கமுடைமை

மெய் மொழி மனங்கள் தீயவழியில் செல்லாமல் அடங்கி இருத்தல்.

3. செல்வந்தகைத்து - வேறொரு செல்வமாகும் சிறப்பினையுடையது. செல்வத்தகைத்து என்பது மெலித்தல் விகாரம் பெற்றது.

4. யா - காக்கப்படுவன எல்லாவற்றையும். சொல் இழுக்கு - சொற் குற்றம். சோகாப்பர் - துன்புறுவர்.

## ஒழுக்கமுடைமை

5. விழுப்பம் - சிறப்பு. உயிரினும் ஓம்பப்படும் - உயிரைக்காட்டிலும் பாதுகாக்கப்படும்.

6. நன்றி - அறம். வித்து - இங்கே காரணம். இடும்பை - துன்பம்.

## அழுக்காறுமை

பொறாமை கொள்ளாதிருத்தல். அழுக்காறு என்பது ஒருசொல்; பொறாமை எனப் பொருள்படும்.

7. கொடுப்பது - கொடுக்கப்படுகின்றபொருளினிடத்து. அழுக்கறுப் பான் - பொறாமை கொள்ளுவான். சுற்றம் கெடும் எனவே அவன் கெடுவான் என்பதும் புலப்படும்.

8. அழுக்கற்று - பொறாமைகொண்டு. அகன்றாரும் - (செல்வத்தால்) பெரியரானவரும். அஃதில்லார் - அப்பொறாமை கொள்ளாதவர். பெருக் கம் - செல்வ மிகுதி. தீர்ந்தார் - நீங்கினர்.

## தீவினையச்சம்

பாவம் செய்வதற்கு அஞ்சுதல்.

9. தீயவை - தீவினைகள். தீய - துன்பம்.

10. தலை - தலைமையான அறிவு. தீய-தீவினைகள். செறுவார் - தம்மை அழிப்பார்; பகைவர்.

## அறிவுடைமை

கல்வி கேள்விகளால் உண்டாகிய அறிவோடு இயற்கை அறிவினை உடைய வனாக இருத்தல்.

11. இடத்தால் - இடத்தில். செல விடா - செல்ல விடாமல். தீது - தீய இடம். ஒரீஇ - நீக்கி. நன்றின்பால் - நல்லஇடத்தில். உய்ப்பது - செலுத் துவது.

12. என் உடையரேனும் - எல்லாம் உடையரானுலும்.

## பெரியாரைத் துணைக்கோடல்

நல்வழியில் செலுத்தும் பேரறிவுடையவர்களைத் துணையாகக் கொள் ளுதல்.

13. பேணி - மகிழுவனவற்றை அறிந்து செய்து. தமர் - தமக்குச் சிறந் தவர். அரியவற்றுள் - கிடைத்தற்கரிய பேறுகளுள்.

14. தக்கார் - அறிவு ஒழுக்கங்களால் தகுதியுடையார். செற்றார் - பகைவர்.

### ஊக்கமுடைமை

மனம், சோர்தலில்லாமல் தொழில் செய்வதில் கிளர்ச்சி யுடையதாயிருத்தல்.

15. ஆக்கம் - பொருள். அதர் வினய் - வழியைக்கேட்டுக்கொண்டு. அசைவு இலா - தளர்ச்சி யில்லாத.

16. உயர்வு உள்ளல் - உயர்ச்சியையே கருதுக. தள்ளினும் - கூடாதாயினும்.

### இடுக்கணழியாமை

தொழிலில் முயற்சி செய்பவன் துன்பம் வந்தபோது அதற்கு மனங் கலங்காமை.

17. இடுக்கண் - துன்பம். நகுக - உள்ளத்தில் மகிழ்ச்சி கொள்ளுக. அடுத்து ஊர்வது - மேன்மேல் நெருக்க வல்லது. அஃது ஒப்பது - அம்மகிழ்ச்சி போல்வது.

18. இன்னுமை - துன்பம். ஒன்னர் - பகைவர்.

### சொல் வன்மை

செய்ல் முடிதற்கேற்ற சொற்களைச் சொல்ல வல்லவ னுதல்.

19. பிறிதோர் சொல் - பகைவரது மறுத்துரைக்கும் சொல்.

20. காமுறுவர் - விரும்புவர். மன்ற, தெளிவுப் பொருளில் வந்தஇடைச் சொல். மாசு - குற்றம். தேற்ருதவர் - அறியாதவர்.

### நன்றியில் செல்வம்

தேடினவனுக்கும் பிறருக்கும் பயன்படுதல் இல்லாத செல்வத்தினது தன்மை.

21. துய்ப்பது - தான் நுகர்வது. இல் - ஒன்றும் இல்லை.

22. நச்சப்படாதவன் - (வறியவர்களால்)விரும்பப்படாதவன். நடுவூருள் என்பதை ஊர்நடுவுள் என மாற்றுக.

## 2. நாலடியார்

நான்கு அடிகளை யுடைய வெண்பாக்களால் ஆகிய நூலாதலின் இதற்கு நாலடி எனப் பெயர் வந்தது. ஆர் என்பது சிறப்புக் கருதிய விகுதி. இதுவும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. இஃது, அறம் முதலான பொருள் களைச் சிறந்த முறையில் எடுத்துரைப்பதில் திருக்குறளுக்கு அடுத்த நிலையில் வைத்து எண்ணத் தகுவது. இதுபற்றியே 'ஆலும் வேலும் பல்லுக் குறுதி, நாலு மிரண்டும் சொல்லுக் குறுதி' என்னும் பழமொழி வழங்கப்படுகின்றது. இதன்கண் 400 பாடல்கள் உள்ளன.

இதனை இயற்றியவர் சமண முனிவர்கள். இவர்கள் காலம் கி. பி. 5-ஆம் நூற்ருண்டின் இறுதி என்பர்.

## சினமின்மை

கோபம் கொள்ளா திருத்தல்.

1. ஓவாது - இடைவிடாமல். ஆய்ந்து - (நூல்களை) ஆராய்ந்து. அமைந்து - நிரம்பிய. கேள்வி அறிவுடையார் - நூற்கேள்வியோடு கூடிய இயற்கை அறிவினை யுடையவர். காய்ந்து அமைந்த - கொடுமையுள்ள சொற்களை. கறுத்து - கோபித்து.

## பொறையுடைமை

ஒருவன் தனக்குக் குற்றம் செய்தவிடத்துத் தானும் அவனிடத்துக் குற்றம் செய்யாமல் பொறுத்தல்.

2. தேற்ரு ஒழுக்கம் - நம்பத் தகாத தீய வொழுக்கம். ஆற்றும் துணையும் - பொறுக்கக்கூடிய அளவும். பொருன் ஆயின் - பொறுக்க இயலாமல் போனல். தூற்ருதே - (அவனது தீயொழுக்கத்தைப்) பலரும் அறிய வெளிப்படுத்தாமல். தூரவிடல் - (அவனது நட்பைத்) தூரத்தில் விடுக.

## பழவினை

முற்பிறப்புக்களில் செய்யப்பட்ட பழையனவாகிய நல்வினை தீவினைகள், தம்மைச் செய்த உயிர்க்கு இன்ப துன்பங்களைத் தவருமல் தரும் என்பது பற்றிச் சொல்லுதல்.

3. குழக் கன்று - இளங் கன்று. தாய் நாடிக் கோடலை வல்லதாம் என முடிக்க. தொல்லைப் பழவினை - மிகவும் பழமையாகிய வினை. கிழவனை - உரிமை யுடையவனை. கொளற்கு - கொள்ளுதலில், உருபு மயக்கம்.

## தாளாண்மை

இடைவிடாத மெய்ம் முயற்சியை ஆளுந் தன்மை.

4. ஆள்வினை - முயற்சி.

## மானம்

எப்பொழுதும் தம் நிலையில் தாழாமையும் ஊழ்வினையால் தாழ்வு வந்தவிடத்து உயிர் வாழாமையுமாகும்.

5. கடமா - காட்டுப் பசு. தொலைச்சிய - கொன்ற. இடம் வீழ்ந்தது - (தன்னுடைய) இடப் பக்கத்தில் விழுந்ததின் உடலை. கையுறினும் - கைவசமாகக் கிடைத்தாலும். வேண்டார் - விரும்பார். விழுமியோர் - பெரியோர். அழுங்க - கெட. இச் செய்யுளில், எடுத்துக்காட்டுவமை அணி அமைந்துள்ளது.

# 3. திரிகடுகம்

சுக்கு, திப்பிலி, மிளகு என்னும் இம் மூன்றும் திரிகடுகம் எனப்பெயர் பெறும். இவை உட்கொண்டால் மக்கள் உடல் நோயைப் போக்கும். இத்

திரிகடுகம் போல அறியாமை என்னும் நோயைப் போக்குதற்கு உரிய மும் மூன்று பொருளை விளக்கு பாக்களை யுடைய தாதலால் இந் நூல் இப் பெயர் பெற்றது. இதுவும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. இதன் ஆசிரியர் நல்லாதனார். இவர் காலம் கடைச்சங்க காலம்.

1. தாள் - முயற்சி. வேளாளன் - உதவியாளன். கோள் ஆளன் - பிறர் அறிந்த காரியங்களை மனத்திற் கொள்பவன். மறவாதான் - கேட்ட வற்றை மறவாதவன். கேள் - நட்பினர்.

2. நாடா - ஆராயாதபடி. எய்த - நிரம்ப. கோள் - கொள்கை.

3. கிளைஞர் - உறவினர். பைங்கூழ் - பயிர்.

## 4. நான்மணிக்கடிகை

நான்கு மணித் துண்டு போன்ற நான்கு உயர்ந்த பொருள்கள் ஒவ்வொரு பாடலிலும் சொல்லப்பட்டிருப்பதால் இந்நூல் இப்பெயர் பெற்றது. இதற்கு நான்கு மணிகளாலாகிய ஓர் அணி போல்வது என்றும் பொருள் கொள்ளலாம். (கடிகை - ஓர் அணி) இதுவும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. இதனை இயற்றியவர் விளம்பி நாகனார். இவருடைய காலம் கடைச்சங்க காலம்.

1. கண்ணின் - கண்ணைப் போல. கொண்டானின் - தன்னை மணம் செய்துகொண்ட கணவனைப் போல. துன்னிய கேளிர் - நெருங்கிய உறவினர். ஒண்மையவாய் - ஒளி உடையவாய். சான்ற - அமைந்த. ஈன்றாளோடு - தாய்க்கு ஒப்பாக. எண்ண - மதிப்பதற்கு.

2. மாசு - அழுக்கு. பூசிக் கொளினும் - கழுவி எடுத்துக்கொண்டாலும். கீழ்தன்னைப் பாசத்து ளிடினும் மாசுடைமை காட்டிவிடும் எனவும்,கீழ்தன்னை விளக்கினும் மாசுடைமை காட்டிவிடும் எனவும் இரு வகையாகப் பொருள் கொண்டு இப் பாடலில் நான்கு பொருள் இருத்தல் காண்க.

கீழ்தன்னை - கீழ்மகனை. பாசம் - விலங்கு. விளக்கினும் - அறிவுரை கூறி விளக்கினாலும்.

3. இன்னாமை - இழிவு. இரவு - இரத்தல். இசை - புகழ்.

## 5. சிறுபஞ்சமூலம்

இதுவும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. இதனை இயற்றியவர் காரியாசான் என்பவர். இவர் காலம் ஏறக்குறைய கி. பி. 6-ஆம் நூற்றாண்டு எனலாம்.

1. பூதர் - பூதங்களை ஒப்பர். முன் - முதுமைப் பருவம் வருதற்கு முன்பு. ஆதர் - அறிவில்லாதவர். எருது - மாடுகட்கு நிகராவர்.

2. இல் - குடி. கருதற்பாடு - மதிக்கப்படுதற்குரிய செய்கைகளை.

3. மூவார் - அறிவினால் முதிரார். தேற்றாதார் - தெளியாதவர். நாறாத - முளைக்காத. உணர்வு - அறிவு. செல்லாது - தோன்றாது.

### 6. நீதிநூல்

பல வகை நீதியை விளக்கிக் கூறும் நூலாதலின் இது நீதிநூல் எனப் பெயர் பெற்றது. இதனை இயற்றியவர் வேதநாயகம் பிள்ளை. இவர் எழுதிய வேறு நூல்கள் சர்வசமய சமரசக் கீர்த்தனை, பெண்மதிமாலை, பிரதாப முதலியார் சரித்திரம், குணசுந்தரி சரித்திரம் முதலியன.

இவருடைய காலம் கி. பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதி.

1. மார்ச்சாலம் - பூனை. சரண் புகுதல் - அடைக்கலமாக அடைதல்.

2. பாங்கர் - பக்கம். அவா - ஆசை. தாவி - குதித்து.

## III தொடர்நிலைச் செய்யுள்

### 1. நளவெண்பா

இது நளனுடைய வரலாற்றைப் பற்றி வெண்பாவினால் செய்யப்பட்ட நூல் என்று பொருள்படும். நளன், நிடத நாட்டு மன்னன். இந் நூலை இயற்றியவர் புகழேந்திப் புலவர். இவர் தொண்டை மண்டலத்திலே, பொன் விளைந்த களத்தூரில் வேளாள மரபில் பிறந்தவர். இவர் வெண்பாப் பாடுதலில் வல்லவர் என்பதை "வெண்பாவில் புகழேந்தி" என்னும் தொடரால் அறியலாகும். இவர் தம்மை ஆதரித்த மள்ளுவநாட்டு வேந்தன் சந்திரன் சுவர்க்கியை இந்நூலில் பல இடங்களில் பாராட்டி யுள்ளார். இவர் காலம் கி. பி. 12-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதி.

1. வதனமதி - முகமாகிய சந்திரன். குவளை பூ காடு இடையே - குவளை மலர்க் காட்டின் நடுவில். தேம் - இனிமை; மணம் என்றும் கொள்ளலாம். நீர்நாடன் சோலை புகக் காட்டிடையே போயினான் என முடிக்க. நளன், பெண்களின் கண்கள் தன் அழகைப் பார்த்துக்கொண்டிருக்கப் பூங்காவனத்துக்குப் போனான் என்பதாம்.

2. மாண் நிறத்தான் - மாட்சிமை பொருந்திய மார்பை யுடைய நளன். அப்பு உள் - நீரில். முளரி - தாமரை.

3. பேதை - அண்மை விளி. மேதிக் குலம்-எருமைக் கூட்டம். நாடன், பேதையே பிழையாமல் பிடித்துத் தா என்றான் என முடிக்க.

4. நாடி - விரும்பி. வல்லியர் - கொடி போன்ற மகளிர். கோ - அரசன். தாழ்ந்து - வணங்கி.

5. மலங்கிற்று - வருந்திற்று. வான் கிளை - சிறந்த சுற்றம்.

6. அஞ்சல் - அஞ்சாதே. வஞ்சி அனையார் - கொடி போன்ற மகளிர். மணி - அழகு. விஞ்சியது - சிறந்தது. காண், முன்னிலை அசை. பிடித்த - கட்டப்பெற்ற. தார் - மாலை.

7. எழு அடு - தூணை ஒத்த. இலங்கு இழை - விளங்குகின்ற அணியை யுடைய தமயந்தி. ஏர் - கலப்பையிற் கட்டிய எருதுகள்; ஆகுபெயர். மாடு -

வயல்பக்கம். விதர்ப்பன் - விதர்ப்பநாட்டரசனுன வீமன். கொம்பு - பூங் கொம்பு போல்வாள் ; ஆகுபெயர்.

8. செம்மை + மனம் = செம்மனம் ; செம்மை - ஒழுங்கு. தண் அளி - குளிர்ந்த இரக்கம். மேல்நிலம் - விண்ணுலகம். நால்நிலம் - மண்ணுலகம். உனக்கு வேந்தன் உளன் எனக் கூட்டுக. என்பான் - அசைநிலை.

9. கொற்றவன் - நளன். அவள்தான் உற்றதுவும் - அத்தமயந்தி அடைந்த காதலையும். முற்றும் - முழுவதும். உள்ள அறிவு அழிந்தது என்க.

10. சடைச் செங்நெல் - சடைச்சம்பா என்னும் செந்நெற் பயிர். தன் நாடு - தன்னுடைய நிடதநாடு. அடற்கு அமைந்த - போருக்குப் பொருந்திய. தாமம் - மாலை. நகர் - குண்டினபுரம்.

11. முற் காலத்தில் திருமணத்திற்கு எழு நாள் முன் தொடங்கி முரசறைதல் வழக்கம். முற்றியபின் - முடிந்தபின். வரை செறிந்த - மலை போன்ற. விரை - மணம். தயங்க - விளங்க. வால் வளை - வெண்மையான சங்கொலி.

12. விழித் தாமரை - கண்களாகிய தாமரை மலர். பொன்னின் - திருமகள் போன்ற. மின் - மின்னல்.

13. குலம் - மரபு. பரிசு - தன்மை. இயலணங்கு - நாமகள் ; இங்கே ஆகு பெயராய் அவளுக்கு ஒப்பான சேடி ஒருத்தியைக் குறித்தது. தனிக் கொடி - ஒப்பற்ற பூங்கொடி போல்வாள் ; தமயந்தி.

14. காவலர் - அரசர். தேவர் ஈரிருவர் நளனுருவாய்ச் சென்றிருந்தார் என்க. ஈரிருவர் - வருணன், இந்திரன், யமன், அக்கினி ஆகிய நால்வர். பூ வரைந்த - பூவைக் கொண்ட.

15. மெய்ம் மரபு - அழிவில்லாத குலம். கடி மாலை - மணமாலை. சூழ் விதியின் - தன்னைப் பற்றிய விதிவசத்தால். மன்னவன்—நளன். விதியின் மன்னவன் - விதிக்குத் தலைவணுகிய கடவுள் எனவும் கூறலாம்.

16. காசினி - நிலம். தாமரை விரும்பும் நன்னுதல் - திருமகள். கண்ணிமையாமை, அடிகள் நிலத்தில் படாமை, மாலை வாடாமை முதலியன தேவர் இயல்பு.

17. சுளிக்க - வருந்த. கண்ணகன் - இடமகன்ற. வன் மாலை சூட - மிகுந்த மயக்கத்தைக் கொள்ள ; மால் - மயக்கம். வய வேந்தை - வலிய நளனுக்கு, உருபு மயக்கம்.

## 2. வில்லிபுத்தூரார் பாரதம்

### பழம் பொருந்து சருக்கம்

இது வில்லிபுத்தூராராற் செய்யப்பட்ட பாரதம் என விரியும். பாரதம் என்பதற்குப் பரதன் வழி வந்தவரைப் பற்றிய நூல் என்பது பொருள். பரதன் வழியினர் பாரதர் எனப்படுவர். அவர் பாண்டவரும் துரியோதனன் முதலானவரும். இங்குக் குறித்த பரதன் துஷ்யந்தனின் மகன்.

வில்லிபுத்தூரார் திருமுனைப்பாடி நாட்டில் சனியூர் என்னும் ஊரில் அந்தண மரபில் பிறந்தவர். முத்தமிழ்ப் புலமையுடன் வட மொழியிலும்

மிக்க தேர்ச்சி யுடையவர் ; வக்கபாகையி லிருந்த சிற்றரசனாகிய வரபதியாட் கொண்டானால் ஆதரிக்கப் பெற்றவர். இதனால் இவனைப் பற்றி இவர் இந் நூலில் பல இடங்களில் பாராட்டி யுள்ளார்.

இவருடைய காலம் கி. பி. 14-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதி. 15-ஆம் நூற்றாண்டு என்பாரும் உண்டு.

1. கன்னல் - கரும்பு. கயிரவம் - செவ்வாம்பல்.

2. மை களவு கனி - கரிய களாப் பழம். மானும் - உவமவுருபு. முக் கனி - வாழை, பலா, மா இவற்றின் கனிகள். முகில் - மேகம். நாடன் - பாஞ் சால நாட்டை யுடையவனாகிய துருபதன். பாவை - திரௌபதி, ஆகுபெயர்.

3. முனி - அமித்திர முனிவன். ஆமலகம் - நெல்லிக் கனி. ஏ - அம்பு. இறுத்தல், ஈண்டு வீழ்த்தல்.

4. கடவுளர் கோமான் - தேவர் தலைவனாகிய இந்திரன். அழற் பாவை - வேள்வித் தீயிற் பிறந்த திரௌபதி. திதி மைந்தர் - திதியின் புதல்வராகிய அசுரர்.

5. மூலம் - கிழங்கு. இடையூறு - துன்பம்.

6. எரி - நெருப்பு. செம்மை + உரை=செவ்வுரை.

7. மேலிடா ஐம்புலத்தினன் - ஐம்புலன் அடங்கியவன். துலை என்பது துலாக் கோலின் நாவை உணர்த்தும். துலையோடு ஒப்பான் - நடுவுநிலை உடை மையால் துலாக் கோலின் நாவோடு ஒப்பானாகிய தருமன். தெவ் - பகைவர்.

8. மாந்த - உண்ண. தேவர் நாள் ஒன்று எனப்படுவது மக்களுக்கு ஓர் ஆண்டாகும். கைதவம் - வஞ்சனை ; கைதவம் இல்லாமை—உள்ளும் புறமும் ஒத்திருத்தல். கைதவம் இல்லா - துன்பமில்லாமைக்குக் காரணமாகிய என்றும் கூறலாம். வெருவுதல் - அஞ்சுதல். கொல்—அசை.

9. வேந்தன் - தருமன். ஓராது - ஆராயாமல். மடங்கல் - சிங்கம்.

10. அம் முனி - துருவாச முனிவர். வந்த ஆபத்து - விருந்துண்ண வந்த துன்பம். வெரீஇ - அஞ்சி. வெம் முனிவு - (அமித்திர முனியின்) கொடிய கோபம். தெவ் + முனி=தெம்முனி. திகிரியான் - சக்கரப் படையை யுடைய கண்ணன்.

11. அவன் - அக் கண்ணன். கிளை - மரக் கிளை. கேழுறு - நிறம் மிக்க. உளைவு - வருத்தம். இளையவன் - சகாதேவன். தம்முன் - நகுலன்.

12. பட்டாங்கு - உண்மை. கோடு - மரக்கிளை. ஒன்றும் - பொருந்தும்.

13. மேக மேனியன் - கருமேகம் போன்ற நிறத்தை யுடைய கண்ணன். தயித்தியர் - அசுரர். அல் - இரவு. அலகையாம் அன்னை - பூதனை என்னும் பேயாகிய தாய். முரசங் கோட்டிய - முரசின் உருவம் எழுதப்பட்ட.

14. எட்டி - காஞ்சிரங் காய் ; ஆகுபெயர். இறுதி - சாவு. மறலி - யமன். மல் - மற்போர்.

15. ஊனம் - குற்றம். ஊன் - உடம்பு. மானம், தன்னிலையில் தாழா மையும் தாழ்வு வந்தால் உயிர் வாழாமையும்.

16. எழில் - அழகு. முருக்கு - முருங்கை மரம். தாரை - நேரே ஓடல் ; குதிரையின் நடை வகைகளில் ஒன்று. மா - குதிரை.

17. உற்பவ காரணன் - தந்தை ; உற்பவம் - பிறப்பு. தாரம் - மனைவி. இளையோன் - சகாதேவன்.

18. மறு - திரு என்னும் மறு. ஓதனம் - உணவு. இச்செய்யுளில் வேற்றுப் பொருள் வைப்பணி அமைந்துள்ளது.

## 3. குசேலோபாக்கியானம்

### குசேலரும் கண்ணனும்

குசேலோபாக்கியானம் என்பது குசேலருடைய வாழ்க்கையைப் பற்றிக் கூறும் நூலாகும். குசேலர் உபாக்கியானம் என விரியும். உபாக்கியானம் - கிளைக் கதை. இது பாகவதத்துள் கூறப்பட்டது. இந் நூலை இயற்றியவர் தேவ ராசப் பிள்ளை என்பர். இவர் பங்களூரில் வாழ்ந்த பெருஞ் செல்வர். கருணீக மரபினர். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களிடம் இலக்கிய இலக்கண நூல்களை வரன்முறையாகக் கற்றவர். இவருடைய காலம் கி. பி. 19-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதி.

குசேலர் வடமதுரைக்கு அண்மையிலுள்ள அவந்தி நகரில் அந்தண மரபில் பிறந்தவர். இளம் பருவத்தே சாந்தீப முனிவரிடத்துக் கண்ணனுடன் கல்வி பயின்றார். இவர் வறுமை மிக்க வாழ்க்கை உடையரா யிருந்தார். இவர் மனைவியார் நற்குணம் நிரம்பப் பெற்றவர். இவருக்கு இருபத்தேழு புதல்வர்கள் பிறந்தனர். இப் புதல்வர்கள் வறுமையால் அடையும் வாட்டங் கண்ட இவருடைய மனைவியார் கண்ணனிடம் பொருள் பெற்று வருதல் வேண்டும் என இவரை வேண்டிக்கொண்டார். பலவாறு இவர் முதலில் மறுத்தும் முடிவில் அவர் வற்புறுத்தலுக்கு உடன்பட்டுக் கண்ணனிடம் பொருள் பெறுதற்குப் புறப்பட்டு மேற்றிசைக் கடல் நடுவில் உள்ள துவாரகையை அடைந்து கண்ணன் அருள் பெற்றுத் திரும்பிய பகுதி இங்கே கூறப்படுகின்றது.

1. காமர் - விருப்பம் ; அழகுமாம். தரியலர் - பகைவர். ஏறு - ஆண் சிங்கம் போன்றவன். தோம் - குற்றம்.

2. ஆதிநாள் - இளமைக் காலத்தில். போதவும் - மிகவும். கந்தை - கிழிந்த ஆடை. நீரான் - தன்மையுடையான். கோது - குற்றம்.

3. என்பு - எலும்பு. பற்று - விருப்பம். கழல் - வீரர் அணியும் ஒருவகைக் காலணி.

4. விம்ம - மிக. பொன்றல் - கெடுதல்.

5. நிருபன் - அரசன் ; கண்ணன். பன்னரும் - சொல்லுதற் கரிய. நன்னர் - நன்மை. இச் செய்யுளில் வேற்றுப் பொருள் வைப்பணி அமைந்துள்ளது.

6. நேயம் - அன்பு. பூப்ப - உண்டாக. இச் செய்யுளில் போயழைத்திடு மினின்னே என மூன்று முறை வந்துள்ளது விரைவுப் பொருளைக் குறிப்பதாகும். இன்னே - இப்பொழுதே.

7. மிடியன் - வறுமையுடையோன். சேமவைப்பு - புதையல். பரிந்து - வருந்தி. வெப்பு உழல்வோன் - வெம்மையால் வருந்துவோன். சரிந்த பற்றினன் - பற்றில்லாதவன்.

8. எண் அனைக்கு - யாவராலும் மதித்தற்கு உரியதாயாகிய திரு மகளுக்கு. திகிரி - சக்கரப் படை; சக்கரத்தை வலக் கையிலும் சங்கை இடக் கையிலும் கொண்டவன் என்க. கள் - தேன். தாமம் - மாலை.

9. மன் - நிலைபெறுதல். பெறலரும் - பெறுதற்கரிய.

10. மனைக் கிழத்தி - மனைவி. நீர்மையள் - தன்மை யுடையவள். உஞற்றுவள் - செய்வாள். ஏகாரம் நான்கும் வினைப் பொருளில் வந்துள்ளன.

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்" என்னும் குறள் இங்கே நினைக்கத் தக்கது.

11. பைங்குதலை - இனிய மழலைச்சொல். செயல் - கல்வி கற்பித்தல். சிங்கல் - குறைவு.

12. இவர்கின்ற - விரும்புகின்ற. உவர் - உப்பு. உவர் - சுட்டுப் பெயர். ஏகாரம் இரண்டும் வினைப்பொருளில் வந்துள்ளன.

"மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்" என்னும் குறள் இங்கே நினைக்கத் தக்கது.

13. பந்தனை - பிறப்புக் கேதுவாகிய பாசக் கட்டு. பக்கணம் - பக்ஷணம்; சிற்றுண்டி.

14. வாளா - சும்மா.

15. மலிதரும் - மிகும். பொதி - முடிப்பு. வலிதரு மவற்றுள் - சொல்லப் படுவனவற்றில்; வலித்தல் - சொல்லுதல்.

16. செறிதரு - நிறைந்த. விலைப் பால் - விலைக்கு வாங்கும் இடம். அளை - தயிர்.

17. முட்டை - பக்குவப்படாத அவல். கொன் - பெருமை. அம்ம - வியப்பிடைச்சொல். குளம் - வெல்லம்.

18. எழீஇ - எழுந்து. முற்றி - முடித்து. மதிகுலத்து மன்னவன் - சந்திரன் மரபில் தோன்றிய கண்ணன். நிதியம் மிகப் பெற்றவனுய் நினைந்து - (கண்ணனைக் கண்டமையால்) மிகுந்த செல்வம் பெற்றவனாக எண்ணிக்கொண்டு.

## 4. இரட்சணிய யாத்திரிகம்

### ஆத்தும வேதனை

இஃது, ஆன்ம ஈடேற்றத்தை விரும்புவோர் வேதநெறி யொழுகிச் செல்லுங்கால் அவர்க்கு நிகழும் செய்திகளையும், அநுபவங்களையும் விளக்குவதாகும். இந்நூல் John Bunyan என்னும் ஆங்கிலப் புலவர் இயற்றிய 'Pilgrim's Progress' என்னும் நூலைத் தழுவிச் செய்யப் பெற்றது. இதனை இயற்றியவர்

H.A. கிருஷ்ண பிள்ளை. இவர் பாளையங்கோட்டைக்கு அண்மையில் உள்ள ரெட்டியார்பட்டி என்னும் ஊரில் வேளாளர் மரபில் கி. பி. 1827 - ஆம் ஆண்டில் பிறந்தவர். இவர் செய்த வேறு நூல்கள் இரட்சணிய மனோகரம், இரட்சணியக் குறள், இரட்சணிய சமய நிர்ணயம் என்பன.

இரட்சணிய சரிதம் இந்நூலில் வரும் படலங்களில் ஒன்று. இப் படலத்தில் ஒரு பகுதி ஆத்தும வேதனை என்பது. ஆத்துமா - உயிர். வேதனை - துன்பம். இஃது உலக மக்களின் பாவச் செயல்களுக்கு இயேசுநாதர் மிக இரக்கங்கொண்டு மனம் வருந்தி அவர்களின் ஈடேற்றத்திற்காகப் பட்ட துன்பங்களைக் கூறுவது.

1. இறும்பு - மலை. பாங்கர் - பக்கம். பொலன்கெழு - அழகு பொருந்திய. அனகன் - பாவ மில்லாதவன்.

2. சினை - கிளை. முகை - அரும்பு. ஆன்மக் கழிதுயர்க்கு - ஆத்தும வேதனைக்கு. தாரை - ஒழுக்கு.

3. மூன்று தாசர், பேதுரு, யோவான், யாக்கோபு என்னும் மூன்று அடியார். இவர்கள் முன்னொருகால் மலைமீது இயேசுவைக் கடவுளாகக் கண்டனர் என்பது முன்னிரண்டடிகளால் பெறப்படும். சிறை - பக்கம். நர சுபாவம் - மக்கள் இயல்பு. பாடு - துன்பம்.

4. வாக்கினுக்கு அதீதம் - சொல்லளவைக் கடந்தது. கன்னி - மரியம்மை; தாய். பழங்கண் - துன்பம். ஆக்கம் - செல்வம். அவியாது - அடங்காமல். குளித்தல் - மூழ்குதல்.

5. தாபம் - வெப்பம். சுந்தரக் குமரன் - இயேசுநாதர். நாப்பண் - நடு. ஏது - காரணம்.

6. முருகு - மணம். அலங்கல் - மாலை. திரை - அலை. திரணம் - துரும்பு. பரிவுறீஇ - துன்பமுற்று. மாநுவேல் - இயேசுநாதர். ஆல் - அசை.

7. காலிணை - இரண்டு கால்களையும். அந்தக் கரணங்கள் - மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பன. கஞ்சம் - தாமரை. கோலம் - அழகு. தீன தயாளர் - ஏழைகளுக்கு இரங்கும் கடவுள். இப் பாடலில் கிறிஸ்துவர்களின் வணக்க முறை காணப்படுகின்றது.

8. கைப்புறு பாத்திரம் - வெறுக்கத் தக்க பாத்திரம் போன்ற உடல்.

9. இரத்த வேர் - இரத்தமாகிய வியர்வை. திறம்பா - தவறாத. முனிவு - வெறுப்பு. முறைபாடு - முறையிடுதல். ஈசன் - இயேசுநாதர்.

10. அத்தன் - கடவுள். தராதலம் - நிலம். புனிதம் - தூய்மை. விமலன் - குற்றம் இல்லாதவனாகிய இறைவன்.

## 5. மனோன்மணீயம்

### நாராயணன் தனி உரை

இது மனோன்மணி என்னும் நங்கையின் வாழ்க்கையை விளக்கிப் புதுவதாகப் புனைந்துரைக்கப்பட்ட ஒரு நாடக நூலாகும். இதனை இயற்றியவர் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை. இவர் ஆலப்புழை என்னும் ஊரில் பிறந்தவர்.

தந்தையார் - பெருமாள் பிள்ளை. இவர் ஆங்கிலம் தமிழ் இரண்டிலும் சிறந்த புலமை யுடையவர். ஆங்கிலத்தில் M. A. பட்டம் பெற்றுத் திருவனந்தபுரம் அரசினர் கல்லூரியில் வரலாற்றாசிரியராகவும், தத்துவ ஆசிரியராகவும் இருந்து பணி புரிந்து வந்தவர்.

இவருடைய தோற்றம் கி. பி. 1855. மறைவு கி. பி. 1898.

வரி. 4. ஓரான் - அறியான். 17. நோற்று - தவம் செய்து. 20. கருப்போ - கரும்போ ; வலித்தல் விகாரம். 25. காலும் - வெளிப்படுத்தும். விடம் - நஞ்சு. 27. பாரார் - பார்க்காதவர். பார் - நிலம். 34. படிறு - வஞ்சகம். 40. வரை - கோடு.

## 6. ஆசிய ஜோதி

இது புத்தர்பெருமான் வரலாற்றை விளக்குவது. இதனை இயற்றியவர் கவிமணி திரு. தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள். இவர் திருவாங்கூர் ஸம்ஸ்தானத்தைச் சேர்ந்த சுசீந்தரத்திற்கு அண்மையிலுள்ள தேரூர் என்னும் சிற்றூரில் கி. பி. 1876 - ஆம் ஆண்டில் பிறந்தவர். தந்தையார் - சிவதாணுப் பிள்ளை. தாயார் - ஆதிலட்சுமி அம்மாள். இவர் ஆங்கிலமும் தமிழும் நன்கு கற்றவர். பல ஆண்டுகள் அரசினர் அலுவலிலும், ஆசிரியத் தொழிலிலும் அமர்ந்து வேலை செய்து, 1931 - ஆம் ஆண்டுமுதல் ஓய்வு பெற்று வருகின்றனர். இவர் பாடல்கள் தெளிவும் இனிமையும் வாய்ந்து சிறந்து விளங்குவன.

வரி. 5. தனயன் - மகன்.

கண்ணி. 5. அம்மா - வியப்பிடைச்சொல்.

## 7. பாஞ்சாலி சபதம்

இப்பகுதி தேசியகவி சுப்பிரமணிய பாரதியாரால் இயற்றப் பெற்றது. இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் எட்டயபுரத்தில் அந்தண மரபில் பிறந்தவர். தந்தையார்—சின்னசாமி ஐயர். தாயார்—இலக்குமி அம்மையார். இவர் இளம்பருவத்தே செய்யுள் இயற்றும் திறனுடையவராய் விளங்கினார். தம் பலவகையான அருமைப் பாடல்களால் மக்கள் உள்ளத்தில் நாட்டுப் பற்று, தாய்மொழிப் பற்று, உரிமைஉணர்ச்சி முதலிய நற்பண்புகள் ஊன்றச் செய்தவர்.

இவர் தோற்றம்—கி. பி. 1882. மறைவு. கி. பி. 1921.

### பாண்டவர்க்கு அத்தினமா நகரத்தார் அளித்த வரவேற்பு

அத்தின மாநகரம் - அத்தினபுரி. எண்ணரும் - அளவிட முடியாத. சந்தி- தெருமுனைகள் கூடுமிடம். எங்கண் இருந்தனர் - எவ்விடத்தில் இருந்தனர். இத் தினம்மட்டும் - இந்நாள் வரையும். என வியப்பு எய்துற - என்று ஆச்சரியம் அடையும்படி. வன் தடந்தோள் - வலிய பெரிய தோள். வெந்திறல் யானை - கொடிய வலிமையுடைய யானை. வந்தியர் - அரசன் புகழ் பாடுவோர்.

# IV சிறு நூல்கள்

## 1. அழகரந்தாதி

இஃது அழகரைப் பற்றிய அந்தாதி என விரியும். ஒரு செய்யுளின் இறுதியில் நின்ற எழுத்தாவது அசையாவது சீராவது அடியாவது அடுத்த செய்யுளுக்கு முதலாக வருவது அந்தாதியாகும். அழகர் என்பது திருமாலிருஞ் சோலைமலையில் கோயில்கொண்டருளிய திருமாலின் பெயர். இந் நூல் பிள்ளைப் பெருமாள் ஐயங்காரால் செய்யப் பெற்றது. இவர் சோழ நாட்டில் திருமங்கை என்னும் ஊரில் பிறந்தவர். இவர் இயற்றிய திருவரங்கத்தந்தாதி முதலான எட்டு நூல்கள் அடங்கிய தொகுதிக்கு அட்டப்பிரபந்தம் என்பது பெயர்.

இவருடைய காலம் ஏறக்குறைய 700 ஆண்டுகளுக்கு முற்பட்டது.

1. சரணம் - திருவடி. அரவிந்தம் - தாமரை. நெஞ்சு என்னும் செம்பில் - மனமாகிய செப்பேட்டில். பொறித்தேன் - எழுதினேன். பம்பி - நெருங்கி. தேசு எரிக்கும் - ஒளி வீசும். பதம் - பரமபதம். சோலைமலை - திருமாலிருஞ் சோலைமலை ; அழகர் மலை.

2. துஞ்சல் - தூங்குதல். இரா வணன் - இருள் போன்ற கருநிறத்தையுடைய•கும்பகருணன் ; வண்ணன் என்பது வணன் என இடைக்குறைந்து நின்றது. அணன் - அண்ணன், இதுவும் இடைக்குறை. வினை முற்ற இரா வணம் - நல்வினை, தீவினை முழுவதும் இராதபடி.

3. தத்தை - கிளி. அலங்காரன் - திருமால். முன் - முன்பு. நூற்றுவர் - துரியோதனன் முதலிய நூற்றுவர். அத்தை மைந்தர் - அத்தையாகிய குந்தியின் மக்கள் ; தருமன் முதலிய ஐவரும். அடிநாள் - ஆதிகாலம். என் வழி - என்னிடத்து. தத்தை - துன்பத்தை. கழித்தத்தை - கழித்ததை ; ஒழித்தருளியதை ; விரித்தல் விகாரம்.

4. கால் அம் அலைக்கும் - ஊழிக் காற்றின் துணையால் கடல்நீர் பொங்கி மேல்வரப் பெற்ற ; கால் - காற்று. அம் - நீர். உதிரம் கால - இரத்தம் வெளிப்பட. மலைக் குமைத்தாய் - மல்லர்களை அழித்தவனே ; மலை—இடைக் குறை. பஞ்சார் கால் - செம்பஞ்சுக் குழம்பு ஊட்டப்பெற்ற அடி. அமலைக்கும் - குற்றம் இல்லாதவளான திருமகளுக்கும். புவிக்கும்-நிலமகளுக்கும். காயம் - உடல். மலைக்கும் - போர் செய்யும்.

5. அருள வந்து ஆளினும் ஆம் இகழினும் ஆம் என முடிக்க. கருளன் - கருடன். கஞ்சன் நெஞ்சத்து - கம்சனுடைய நெஞ்சிலுள்ள. உருள் அக்கு - திரண்ட எலும்பு.

## 2. திருவாரூர் நான்மணிமாலை

நான்கு வகை மணிகளால் ஆகிய மாலை போல நான்கு வகைப் பாக்களால் அந்தாதித் தொடை அமையச் செய்யப்படுவது நான்மணிமாலையாகும். இந் நூல் திருவாரூர்த் தியாகராசரைப் பற்றி இயற்றப் பெற்றது. இதனை

இயற்றியவர் குமர குருபர அடிகள். இவர் பொருநையாற்றங் கரையிலுள்ள ஸ்ரீவைகுண்டத்தைச் சார்ந்த கைலாசபுரம் என்னும் ஊரில் வேளாளர் மரபில் சைவசிகாமணிக் கவிராயருக்கும் சிவகாமசுந்தரி அம்மையாருக்கும் புதல்வராகத் தோன்றினர். செந்திற்பெருமான் திருவருளாற் கல்வியும் செய்யுள் இயற்றும் திறனும் பெற்றார். தருமபுர ஆதீனத்தலைவர் மாசிலாமணித் தேசிகரால் ஞான உபதேசம்செய்யப் பெற்றுத் துறவு நிலையை எய்திக் காசியை அடைந்து மடம் ஒன்று அமைத்துப் பல ஆண்டுகளுக்குப்பின் அங்கே சிவபிரான் திருவடி நீழலில் கலந்தனர். இவர் இயற்றிய நூல்கள் பலவாம்.

இவர் காலம் ஏறக்குறைய 350 ஆண்டுகளுக்கு முற்பட்டது.

1. இது அம்மை அப்பர் வடிவத்தைக் குறித்தது.

தான மால் களிறு - மதத்தையுடைய பெரிய யானை. ஈகுநர் - கொடுப்பவர். நலம்பாடு - நன்மையுண்டாதல். ஒரீஇ - நீங்கி. இலம்பாடு அலைப்ப - வறுமை வருத்த. ஏற்குநர் - இரப்போர். அதான்று - அவ்வாறு அல்லாமல். இடப் பால் - அம்மையின் இடப்பாகம். வலப்பால் - சிவபிரானின் வலப் பாகம். மதி அகடு - சந்திரனின் நடு இடம். நிலா—எழுவாய். ஆற்றுபு - தணித்து. கொடியார் - கொடியவர் எனவும், துகில் கொடிகள் எனவும் பொருள்படும். மதியார் - அறிவுடையோர் எனவும், சந்திரன் எனவும் பொருள் தரும். இவ்விரண்டும் சிலேடை. கமலை - திருவாரூர். வைப்பு - இடம்.

2. இது சிவபிரானைக் கண்ட தலைவியின் கூற்றாகச் செய்யப்பட்டது.

பெம்மான் - பெருமான். கைம்மான்—கையிலுள்ள மான். கருமான் உரி அதள் - யானையை உரித்த தோல். கச்சு - இடையில் கட்டப்படுவது. ஒரு மான் - ஒப்பற்ற மான் போன்றவளாகிய உமை அம்மை. சங்கம் - சங்கினாலாகிய குழை. அவா அங்கத்து அடங்காது எனக் கூட்டுக. அங்கம் - மனம்.

3. வாவியில் அம்போருகம் சூழ்ந்த என்க. அம்போருகம் - தாமரை. புள்வாய் கிழித்த தூவி அம்போர் - பகாசுரனாகிய புள்ளின் வாயைக் கிழித்த சிறகு பொருந்திய அம்பை உடையவர். உகம் தோறும் நின்றோர் - எல்லா யுகங்களிலும் அழிவில்லாமல் நிலைபெற்று நின்றவர். ஆவி - உயிர்; இது விளி. அம்போர் உகந்து ஆயிரம் கூற்று உடன்றாலும் எனப் பிரிக்க. கூற்று - யமன். அவர் நாமங்களை நாவே இயம்புக, நெஞ்சமே ஒருக எனக் கொள்க. ஒருதல் - நினைத்தல்.

4. நாமம் - அச்சம். கடவுள் - முருகக்கடவுள். பயந்தருள் - பெற்றருளிய. நங்கை - உமை. வாமபாகம் - இடப் பாகம். நீர் மங்கை - கங்கை. தாம நீற்றொளி - விளக்கத்தையுடைய திருநீற்றின் ஒளி; தாமம் - விளக்கம். தன்னிறம் - கங்கையின் நிறம். வெண் தலை நிரை - வெண்ணிறமான தலைகளின் வரிசை. காமர் - அழகு. மதர் விழிக் கயல் - செருக்கிய கண்களாகிய கயல்மீன். அவை உலாவருதல் என்பது மகளிர் இறைவன் மேனியை நோக்குதல்.

## தனிச் செய்யுட்டிரட்டு

### என் தாய்

இச்செய்யுள் ராவ்ஸாஹிப் வெ. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்களால் இயற்றப்பெற்றது. இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் வெள்ளகால் என்னும் ஊரில் தொண்டைமண்டல வேளாளர் மரபில் பிறந்தவர். தந்தையார் பழநியப்பமுதலியார். தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் சிறந்த புலமையுடையவர். யமகம், திரிபு முதலான செய்யுட்களை எளிதாகப்பாடும் ஆற்றல் படைத்தவர். அகலிகை வெண்பா முதலிய பல நூல்களும் வேறு பல தனிச் செய்யுட்களும் இவரால் இயற்றப்பட்டுள்ளன. இவர் எண்பது ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்து அண்மையில் இவ்வுலக வாழ்வை நீத்தனர்.

பரித்திடும் - தாங்கும்.

## தமிழ் நாடு

இப்பாடல் உரிமை வேட்கை அல்லது நாட்டுப் பாடல் என்னும் நூலில் உள்ளது. இது, திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களால் இயற்றப்பெற்றது. இவர் திருவேற்காட்டுக்கு அண்மையிலுள்ள துள்ளம் என்னும் ஊரில் கி.பி.1883-ஆம் ஆண்டில் சைவ வேளாளர் மரபிற் பிறந்தவர். தந்தையார்—விருத்தாசல முதலியார். தாயார்-சின்னம்மாள். இவர் சொன்னலம் பொருள் நலம் நிறைந்த பல பாடல்களையும் பல கட்டுரைகளையும் இயற்றியவர். தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் பல்லாற்றானும் தொண்டு புரிந்துவரும் இவரைத் தமிழுலகம் நன்கறியும்.

வரி. 1. கேளிர் - சுற்றத்தார். 2. ஒக்கும் உயிர் பிறப்பு - எல்லா உயிர்களுக்கும் பிறப்பு ஒக்கும். 3. அன்பு முதலியன நாதனே என்ற நாடு என்க. 4. செந்தண்மை - அருள்.

## தமிழன் இதயம்

### ஜவஹர்லால் நேரு

இந்நூலை இயற்றியவர் நாமக்கல் கவிஞர் வே. இராமலிங்கம் பிள்ளையவர்கள். உணர்ச்சியூட்டும் எளிய இனிய பாடல்களை இயற்றுவதில் இவர் வல்லவர். இவர் இப்போது ஆத்தான கவியாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளார்.

# V புனைந்துரை

## 1. நாடு

இச் செய்யுள் முத்தொள்ளாயிரத்தில் உள்ளது. இது சேர சோழ பாண்டியர் மூவரையும் பற்றித் தனித்தனி தொள்ளாயிரம் பாடல்களால் பாடப்பெற்ற பழைய நூலாகும். இப்போது மிகச் சில பாடல்களே காணப்படு

கின்றன. இப் பாடல்கள் சொன்னயம் பொருணயங்களில் தலைசிறந்தன. இந் நூலை இயற்றியவர் பெயர் தெரியவில்லை.

அள்ளல் - சேறு. பழனம் - பொய்கை. அரக்காம்பல் - செவ்வாம்பல். வெரீஇ-அஞ்சி. பார்ப்பு - குஞ்சுகள். கவ்வை - ஆரவாரம். அரோ—அசைநிலை. நச்சு இலை வேல் - நஞ்சு பூசப் பெற்ற இலை வடிவமான வேற்படை; நச்சு. வலித்தல் விகாரம். கோதை - சேரன். இச் செய்யுளில் மயக்க அணி அமைந்துள்ளது.

## 2. நகர்

இது தண்டி யலங்காரத்தில் மேற்கோளாகக் காட்டப்பெற்ற பழம் பாடலாகும்.

முன்னை - முன்பு. கடலோதம் - கடல் வெள்ளம். பேர்தல் - ஓடுதல். தயங்கு - விளங்குகின்ற. கானல் - கடற்கரைச் சோலை. எய்ப்ப - ஒப்பாக. பேதுறுக்கும் - மயங்கச் செய்யும். புகார் - காவிரிப்பூம் பட்டினம்.

## 3. கொடி

இச் செய்யுள் கம்பராமாயணப் பால காண்டத்தில் மிதிலைக்காட்சிப் படலத்தில் உள்ளது. இஃது இராமன் மிதிலையை அணுகியபோது அந்நகரத்து மாளிகையில் கட்டப்பெற்ற கொடிகள் அவனை வரவேற்பதாகக் கம்பரால் புனைந்துரைக்கப்படும் பாடல்.

கம்பர் சோழ நாட்டில் திருவழுந்தூரில் உவச்சர் மரபில் பிறந்தவர். திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலின் ஆதரவு பெற்றவர். இவரது காலம் கி. பி. 9-ஆம் நூற்றாண்டு என்று ஒரு சாராரும், 12-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி என்று மற்றொரு சாராரும் கருதுகின்றனர்.

மையறு மலர் - குற்றமற்ற செந்தாமரை மலர். செய்யவள் - திருமகள்; சீதை. கடி - காவல்; விளக்கமும் ஆம். ஒல்லை - விரைவு. அம்மா - வியப்பிடைச்சொல்.

## 4. தென்றல்

இப்பாடல் திருவிளையாடற் புராணத்தில் தருமிக்குப் பொற்கிழி யளித்த படலத்தில் உள்ளது. இப் புராணத்தை இயற்றியவர் பரஞ்சோதி முனிவர். இவர் சோழ நாட்டில் வேதாரணியம் எனப்படும் திருமறைக்காட்டில் சைவ வேளாளர் மரபில் பிறந்தவர். தந்தையார் - மீனாட்சி சுந்தர தேசிகர்.

இவரது காலம் 300 ஆண்டுகளுக்கு முன் என்பர்.

பொங்கர் - சோலை. வாவி-குளம். பங்கயம் - தாமரை. துழாவி - கலந்து. பசுமை+கடி=பைங்கடி. கடி - நறுமணம். மயிலை - இருவாட்சி. பந்தர்-பந்தல்; இறுதிப் போலி. கொங்கு - தேன். தேரும் - ஆராயும்.

### 5. மலர்கள்

இவைகளைப் பற்றிய பாடல்கள் மலரும் மாலையும் என்னும் தொகுப்பில் உள்ளவை. இவற்றை இயற்றியவர் தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள். இவரைப் பற்றி ஆசிய ஜோதியின் குறிப்பில் காண்க.

## VI பல் சுவை

முதல் இரண்டு பாடல்களும் காளமேகப்புலவரால் பாடப் பெற்றவை. இவர் கும்பகோணத்திற்கு அண்மையில் உள்ள நந்திக் கிராமத்தில் அந்தணர் மரபில் பிறந்தவர். விரைந்து பாடல் இயற்றும் ஆற்றல் வாய்ந்த புலவர். இவர் பல தனிப் பாடல்கள் பாடி யுள்ளார். இவருடைய காலம் கி. பி. 17-ஆம் நூற்றாண்டு.

### சிலேடை

சிலேடை - இருபொருள் தருவது.

1. பாம்புக்கு: ஆடி - படம் எடுத்தாடி. இரையும் - ஒலிக்கும். ஓடி மண்டை பற்றிப் பர்பரெனும் - (கடித்தால் அதன் நஞ்சானது) மண்டையில் ஓடிப் பற்றிப் பரபர என்னும் நமை உண்டாகும். பிள் நாக்கும் உண்டாம் - (அதற்கு) இரண்டாகப் பிளவுபெற்ற நாக்கும் இருக்கும்.

எள்ளுக்கு: மூடித் திறக்கின் - (அதன் சாரமாகிய எண்ணெயைக் குடத்திற் பெய்து) மூடிவைத்துத் (அதன் நுரை அடங்கிய பின்னர்த்) திறந்து பார்த்தால். முகம் காட்டும் - அவ் எண்ணெய் பார்த்தவருடைய முகத்தின் நிழலைக் காட்டும்.

### சிவன் அரைக் கண்ணன்

2. சிவபிரானை முக்கண்ணன் என்றல் பொருந்தாது அவனுக்கு அரைக் கண்ணே உள்ளது எனப் புலவர் நகைச்சுவைபடக் கூறுகிறார்.

அரன் - சிவபெருமான். அக் கண்ணற்கு - அம் மூன்று கண்களை யுடைய சிவபிரானுக்கு. ஊன் வேடன் - ஊன் உணவைப் படைத்த கண்ணப்பன். இப் பாடல் அம்மையப்பர் வடிவத்தைக் குறித்தது.

### நாகதேவன் இட்ட உணவைக் குறித்துச் சொன்னது

3. இப்பாடல் அந்தகக்கவி வீரராகவ முதலியார் இயற்றியது. இவர் செங்கற்பட்டு மாவட்டத்தில் பொன்விளைந்த களத்தூருக்கு அண்மையிலுள்ள பூதூரில் பிறந்தவர். இவர் தந்தையார் - வடுகநாத முதலியார். இவர் புறக் கண் இழந்தவராயினும், அகக் கண்ணாகிய கல்வி யறிவு சிறக்கப் பெற்றவர். இவர் இயற்றிய நூல்கள் - திருக்கழுக்குன்றப் புராணம், திருவாரூருலா, சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ், சேயூர்க் கலம்பகம் முதலியன. இவருடைய காலம் 280 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பர்.

## சீட்டுக் கவி

4. இச் சீட்டுக் கவி சீகாழி அருணாசலக் கவிராயரால் இலிங்கப்ப செட்டியார் புதல்வர் தேப்பெருமாள் செட்டியார் என்பவருக்குத் தமது இராம நாடகக் கீர்த்தனையை அரங்கேற்றுவித்தற் பொருட்டு எழுதப்பட்டது. அருணாசலக் கவிராயர் மாயூரத்தை அடுத்துள்ள தில்லையாடி என்னும் சிற்றூரில் வேளாளர் மரபில் நல்லதம்பிப் பிள்ளைக்கும் வள்ளியம்மைக்கும் புதல்வராய்த் தோன்றினார். இவர் தருமபுர ஆதீனத்து அம்பலவாணக் கவிராயர் என்னும் பண்டாரச் சந்நிதிகளிடம் தமிழ் பயின்றவர்; தமிழ் தெலுங்கு வடமொழி இம்மூன்று மொழிகளிலும் வல்லவர். இவரால் இயற்றப் பெற்ற இராம நாடகக் கீர்த்தனை தமிழ்மக்களால் மிகவும் பாராட்டப்படுகின்றது.

இவர் காலம் இற்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முற்பட்டது.

பஞ்சலட்சணம் - எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐவகை இலக்கணம். காழி - சீகாழி. இலிங்கப்பன் - இலிங்கப்ப செட்டியார். சுதன் - மகன்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம் ★ சென்னை-600 008.
136885

R 772/948